ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மயர்வறமதிநல மருளப்பெற்ற

ஸ்ரீகுலசேகரப் பெருமாளருளிச்செய்த

பெருமாள் திருமொழி.

இதற்கு

பரமகாருணிகரான

பெரியவாச்சான்பிள்ளை

அருளிச்செய்த

வ்யாக்யாநமும், பதவுரையும், அரும்பதமும்

ஸபா பண்டிதரான

ஸ்ரீமான், புதுப்பட்டு - திருவேங்கடாசாரியரால்

நன்ருகப் பரிசோதிக்கப்பட்டு,

ஸ்ரீ வைஷ்ணவ கிரந்த முத்ராபக சபையாரால்

சென்னை

ஸ்ரீநிகேதன முத்ராக்ஷரசாலையில்

அச்சிடப்பட்டு,

ப்ரசுரம் செய்யப்பட்டது.

ருதிரோத்காரிஹு

1924.

இச்சபையில் தமிழ் லிபியில் அச்சிட்ட க்ரந்தங்கள்.

		ரூ.	அ.	ப.
1	பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் (தாத்பர்யஸஹிதம்)	0	2	6
2	துஷ்கரஸ்லோக டிப்பணி	0	1	0
3	ஷண்மத தர்பிநி	0	0	6
4	யதிதர்மஸமுச்சயம்	0	3	0
5	இராமாநுச நூற்றந்தாதி (உரையுடன்)	0	3	0
6	முதல் திருவந்தாதி வ்யாக்யாநம் (அரும்பத ப்ரதிபதிஸஹிதம்)	0	4	6
7	இரண்டாம் திருவந்தாதி வ்யாக்யாநம்	0	3	0
8	மூன்றும் திருவந்தாதி வ்யாக்யாநம்	0	3	0
9	நான்முகன் திருவந்தாதி வ்யாக்யாநம்	0	3	6
10	திருவிருத்தம் வ்யாக்யாநம் (அரும்பத ப்ரதிபத தாத்பர்யம்)	0	15	0
11	திருவாசிரியம் வ்யாக்யாநம்	0	1	6
12	பெரியதிருவந்தாதி வ்யாக்யநம் (ப்ரதிபத ஸஹிதம்)	0	3	0
13	சிறியதிருமடல் வ்யாக்யாநம்	0	2	3
14	பெரியதிருமடல் வ்யாக்யாநம்	0	2	6
15	திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யாநம்	0	1	6
16	திருக்குறுந்தாண்டகம் வ்யாக்யாநம்	0	1	3
17	திருநெடுந்தாண்டகம் வ்யாக்யாநம்	0	8	0
18	பெரியதிருமொழி வ்யாக்யாநம் 1 முதல் 11 பத்துக்கள்	4	0	0
19	ராமசரமஸ்லோகம்	0	1	6
20	பாரதாதி தனிஸ்லோகம்	0	2	6
21	திருச்சந்தவிருத்தம் ஸவ்யாக்யாநம்	1	6	0
22	திருப்பல்லாண்டு	0	7	6
23	ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்	2	5	0
24	பெருயாழ்வார் திருமொழி ஸ்வ்யாக்யாநம் 1 முதல் 5 பத்துகள்	5	5	0
25	திருமாலை ஸவ்யாக்யாநம்	0	14	0
26	அமலனாதிபிரான்	0	7	6
27	திருப்பள்ளியெழுச்சி	0	3	0
28	உபதேசரத்தினமாலை	1	0	0
29	ஞானஸாரம் ப்ரமேயஸாரம் ஸவ்யாக்யாநம்	0	8	0
30	திருவாய்மொழி நூற்றந்தாதி	0	15	0
31	ஸப்தகாதை	0	3	6
32	ரகஸ்யார்த்த ப்ரதீபிகையென்கிற பரகாலநல்லான் ரகஸ்யம்	1	3	6
33	ஆர்த்திபிரபந்த வ்யாக்யாநம்	0	6	0
34	தத்வத்ரய வ்யாக்யாநம்	0	12	6
35	நாச்சியார் திருமொழி	1	6	0
36	கண்ணிநுண்சிறுத்தாம்பு	0	15	0
37	பெருமாள் திருமொழி	0	10	0

A. SESHACHARI, *Secretary & Treasurer.*

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



பரமகாருணிகரான பிள்ளைலோகஞ் ஜீயரருளிச்செய்த

பெருமாள் திருமொழித் தனியன் வ்யாக்யாநாவதாரிகை.

அவ.—(இன்னமுதமூட்டுகேன்) இதில் - திவ்யதேசத்திலே வர்த்திக்கும் திர்யக்குக்கள்தான் திருநாமங்களைச் சொல்லவற்றாயிறேயிருப்பது. ஆகையால் (க) "ஶுகாநாநிஷிதஸ்வஸ்வொஷா - ஶுகாநாநுதிதப்ரஹ்மகோஷாம்" என்றும், (உ) "பூமருவிப் புள்ளினங்கள்புள்ளரையன் புகழ்குழறும்புனலரங்கமே" என்றும், (ங) "அறுகால்வரிவண்டுகளா யிரநாமம்சொல்லிச் சிறுகாலைப்பாடும்" என்றும், (ச) "எல்லியம்போதிருஞ் சிறைவண்டெம்பெருமான் குணம்பாடி" என்றும், (ரு) "அள்ளியம்பொழில்வாயிருந்து வாழ்குயில்கள் அரியரியென்றவை யழைப்ப" என்றும், (சூ) "செவ்வாய்க்கிளி நான்மறைபாடும்" என்றும் சொல்லுகையாலே ராமபக்தரான குலசேகரர் ராமன்திருநாமத்தை அவற்றுக்குக் கற்பித்துக் கேட்குமாபோலே குலசேகர பக்தரானவர்களும் அவர்திருநாமங்களை அவற்றின்வாயாலேகேட்க இச்சிக்கிறபடியைச் சொல்லுகிறதாகவுமாம்.

அன்றிக்கே, (எ) "ராமாயணமென்னும் பக்தி வெள்ளம்குடிகொண்ட கோயிலிராமாநுசன்" என்றும், (அ) "பொன்னரங்கமென்

(க) ர - ஸ்தோ. (உ) பெரி - தி - ச - சூ - ரு.
(ங) பெரி - தி - ச - உ - அ. (ச) பெரி - தி - ச - அ - அ.
(ரு) தி - மொ - ச - க0 - எ. (சூ) தி - மொ - ங - உ - சூ.
(எ) இரா - நூ - ஙஎ. (அ) இரா நூ - ஙரு.

ணில் மயலேபெருகுமிராமாநுசன்" என்றுமிறே ஸ்ரீராமாயணத்திலும் ஸ்ரீரங்கதாமத்திலும் எம்பெருமானார் மண்டியிருப்பது; ஸ்ரீகுலசேகரப்பெருமாளும், (க)"எல்லையில் சீர்த்தயரதன்றன் மகனாய்த்தோன்றிற்றதுமுதலாத் தன்னுலகம்புக்கதீறா" என்றும், (உ) "எம்பெருமான்றன் சரிதை செவியால் கண்ணால் பருகுவோம் இன்னமுத மதியோமின்றே" என்றும், (ங) "ராஜ்யாத்ராஷிநேஷி நே-ரங்கயாத்ராதிநே திநே" என்றும், (ச) "அணியரங்கன் திருமுற்றம்" என்றும், (ரு) "அரங்கனடியிணைத் தங்குசிந்தைத் தனிப்பெரும்பித்தனும்" என்றும் இரண்டையுமாதரித்துக்கொண்டிறே போருவது. ஆகையால்,(சு)"கொல்லிகாவலன்சொல்பதிக்கும் கலைக்கவி பாடும் பெரியவர்பாதங்களே துதிக்கும் பரமனிராமாநுசன்" என்னும்படி ராஜாவான ஸ்ரீகுலசேகரப்பெருமாளிடத்திலே யதிராஜரான எம்பெருமானார் மடுவிட்டிருப்பது; அற்றபத்தாபிமாநத்திலேயொதுங்கிப்போருகிற ஆழ்வான்போல்வாரையாய்த்து " இன்னமுதமூட்டுகேன் இங்கேவாபைங்கிளியே " என்கிறாரகவுமாம். கிளியும்கற்பித்ததே சொல்லும்; இவரும் * கற்பியாவைத்தமாற்றமிறே சொல்லுவது; மேல்சொல்லுமவரன்றே. சொன்னத்தைச் சொல்லுமவரிறே; ஆகையால், கூரத்தாழ்வான்போல்வாரைக் கொண்டு குலசேகராழ்வார் வைபவத்தைக் கூறுவிக்கிறார். "இன்னமுதமூட்டுகேன் - கூறு" என்கிறது.

எம்பெருமானார் அருளிச்செய்தது.

இன்னமுதமூட்டுகேனிங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம்பாடவல்லசீர்ப்பெருமாள் - பொன்னின்
சிலைசேர் நுதலியர்வேள்சோலர்கோன்
எங்கள்குலசேகரனென்றேகூறு.

பதவுரை - பை - பசுநிறத்தையுடைய, கிளியே - மடக்கிளியே!. இன்னமுதம் - போக்யமான அம்ருதத்தை, ஊட்டுகேன் - உண்ணக்கொடுக்கிறேன். இங்கேவா - என்னருகேவா, தென்னரங்கம் - தெற்குதிக்கிலுள்ள திருவரங்கம் விஷயமாக, பாடவல்ல - கவிபாடுகையில் சதுரராய், சீர் - பக்த்யாதிகுணபரி

(க) பெரு - தி - க௦ - கக. (உ) பெரு - தி - க௦ - அ.
(ங) முகுந்தமாலை. (ச) பெரு - தி - க - க௦.
(ரு) பெரு - தி - ங - சு. (சு) இரா - நூ - கச.

பூர்ணராய், பெருமாள் - 'பெருமாள்" என்று திருநாமத்தையுடையராய், பொன்னின் - ஸ்ப்ருஹணீயமான, சிலை - சிலைபோன்ற புருவத்தை, சேர் - முகத்திலே சேர்ந்துடைய, நுதலியர் - ஸ்த்ரீகளுக்கு, வேள் - மந்மதன்போல் ரஞ்ஜநீயராய், சேரலர் - சேரவம்சத்திலவர்களுக்கு, கோன் - நிர்வாஹகராய், எங்கள்குலம் - ப்ரபந்நரான எங்கள் குலத்துக்கு, சேகரன் - சிரோரத்நமான குலசேகரப்பெருமாள், என்றே கூறு - என்கிற திருநாமத்தையே சொல்லிப் போரு. (க)

வ்யா.—(இன்னமுதமூட்டுகேன்) (க) "இன்னடிசிலொடு பாலமுதூட்டியெடுத்தவென்கோலக்கிளியை" என்னக்கடவதிறே. இங்கு * தேனும்பாலுமமுதுமாய திருமால் திருநாமத்தையிறே ஊட்டி வளர்த்தது; அதுதோன்ற ஆழ்வான் வலத்திருச்செவியிலே முன்பு ப்ரஸாதித்த த்வயத்தை மீளவும் ப்ரஸாதித்தருளிற்று. (இங்கேவா)என்று-"திருநாமம்சொல்"என்றத்தால் வடிவில்பிறந்த ஹர்ஷத்தைக்கண்டு வரவழைக்கிறது. (பைங்கிளியே) பசுத்து மரதகம்போலேயிருக்கிற மடக்கிளியே!. இத்தால் (உ) "என்னுருயிர்க்காகுத்தன் நின்செப்பவாயொக்கும் வாயன்கண்ணன் கைகாலினன் நின்பசும்சாம நிறத்தனன்" என்னும்படியான ரூபஸாம்யத்தைச் சொல்லுகிறது. * ஸமஸ்ஸாஸ்ரீ-வெதி - பரமம் ஸாம்யமுபைதியிறே.

எதுக்காக வென்னை யழைக்கிறதென்னில்; (தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் பொன்னின் சிலைசேர் நுதலியர் வேள் சேரலர்கோனெங்கள் குலசேகரனென்றே கூறு) என்கிறது. தென்னரங்கம்பாடவல்ல சீர்ப்பெருமாளாவது (ந)"இருளிரிய" (ச)"தேட்டருந் திறல்தேன்" (ரு)"மெய்யில்வாழ்க்கை" என்கிற மூன்று திருமொழியிலும் பாடி, முடிவிலும் (சு)"யாவரும் வந்தடிவணங்க வரங்கநகர்த்துயின்றவனே" என்றும், மற்றும் திருமலை முதலாயிருக்கிற ஆராமங்களான திருப்பதிகளையும் (எ)"காகுத்தாகண்ணனே" என்றும் அர்ச்சாவதாரத்துக் கடியான அவதாரங்களையுமருளிச்செய்து தலைக்கட்டுகையாலும், அவர் தாம், * செருவிலே

(க) நா - தி - ரு - ரு. (உ) தி - வாய் - கூ - ரு - சு.
(ந) பெரு - தி - க - க. (ச) பெரு - தி - உ - க.
(ரு) பெரு - தி - ந - க. (சு) பெரு - தி - அ - கo.
(எ) தி - வாய் - எ - உ - ந.

யாக்கர்கோனைச்செற்ற நம்சேவகனாரானகையாலும், வெண்ணெயுண்டவர்பனானகையாலும், எல்லாம்திருவரங்கத்திருப்பதி விஷயமாகலாமிறே. * பொன்னின்சிலைசேர் நுதலியர் வேளானகையாவது- ஸ்வருஹணீயமானவில்லுக்கு ஸத்ருஶமான புருவத்தை முகத்திலேசேர்ந்துடைய ஸ்த்ரீகளுக்கு ரஞ்ஜநீயரா யிருக்கிறவர். வேள் - காமன். (க) "கந்தர்ப்ப இவமூர்த்திமாந் - கந்தர்ப்ப இவமூர்த்திமாந்" (உ) "காமர்மானேய்நோக்கியர்க்கு" என்னக்கடவதிறே. இத்தால் - ஜ்ஞாநத்துக்கு மேலான ஸ்வரூபதாந்தியை யுடையவர்களுக்கு தர்ஶநீயரா யிருக்குமவரென்றபடி.

(சோலர்கோன்) சோவம்ஶத்திலவர்கட்கெல்லாம் ராஜாவென்கை. (ங) "ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் - ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம்" கோன் - ராஜா. குடிக்குநிர்வாஹகரென்றபடி. (எங்கள் குலசேகரன்) ப்ரபந்நகுலஶேகரனென்கை. (ச) "இராமாநுசனெங்குலக்கொழுந்து" என்னுமாபோலே. (குலசேகரனென்றே கூறு) *நான்வளர்த்த சிறுகிளிப்பைதலே! இன்குரல் நீமிழற்றாதே, குலஶேகரனென்றே கூறு; கூறினவாய்க்கு * அமுதமாய திருமால் திருநாமமான * இன்னமுதமூட்டுகேன்; ஆகையாலே குலசேகரனென்றே கூறு. "வக்தவ்யமாசார்யவைபவம் - வக்தவ்யம் ஆசார்யவைபவம்" என்னக்கடவதிறே.

அவ;—(ஆரங்கெட) இதில் - அவர், ஸ்ரீவைஷ்ணவர்கள் திறத்தில் பக்ஷபதித்திருக்கிறபடியைச் சொல்லுகிறது.

ஆரங்கெடப்பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே
வாரங்கொடுக் குடப்பாம்பிற்கையிட்டவன் மாற்றலரை
வீரங்கெடுத்தசெங்கோற் கொல்லிகாவலன்வில்லவர்கோன்
சேரன்குலசேகரன் முடிவேந்தர்சிகாமணியே.

ப - ரை. ஆரங்கெட - (மந்திரிகள் க்ருத்ரிமத்தால்) தம்முடைய முக்தாஹாரம் காணாமல்போக, பரனன்பர் - பரவஸ்துவிலே பக்திபண்ணுமவர்கள், கொள்ளாரென்று - பாருடைய வஸ்துவைக்களவு கொள்ளாரென்று, அவர்களுக்கே - மந்திரிகளால் களவுசெய்தார்களென்று சொல்லப்பட்ட அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயத்திலேயே, வாரங்கொடு - பக்ஷபதித்து, குடப்பாம்

(க) ரா - ஸு. (உ) தி - வாய் - மு - அ - கக.
(ங) (ச) இரா - நூ - சு0.

பில்-பாம்புக்குடத்தில் பாம்பின்படம் படும்படி, கையிட்டவன்-கையையிட்டவர், மாற்றலரை - சத்ருக்களுடைய, வீரம் - வீர்யத்தை. கெடுத்த - நிர்வீர்யமாகப் பண்ணின. செங்கோல் - ஆஜ்ஞையையுடையராய் கொல்லிகாவலன் - கொல்லி யென்கிற நகரத்துக்கு நிர்வாஹகராய், வில்லவர் - மற்றுமுள்ள க்ஷத்ரியர்களுக்கு, கோன் - அதிராஜாவாய், சேரன்குலசேகரன் - சேரகுலத்துக்கு சிரோபூஷண பூதராய், முடிவேந்தர் - மூர்த்தாபிஷிக்தரான அரசர்களுக்கு, சிகாமணியே-சிரோபூஷண பூதரான குலசேகரப்பெருமாள். ஏ - "இவருமொருவரே" என்று கொண்டாட்டம். (௨)

வ்யா.—(ஆரங்கெடவென்றுதொடங்கி) ஸ்ரீவைஷ்ணவர்கள் திறத்தில் அவர்க்குண்டான ப்ராவண்யத்தைக் குலைக்கவேணு மென்று மந்த்ரிகள் அவர் திருவாரத்தை யெடுத்துமறையவைத்து அவர்கள்பேரிலே ஆரோபிக்க; அத்தைக்கேட்டு (பரனன்பர் கொள்ளாரென்று) பரவஸ்துவிலே பக்திபண்ணுமவர்கள் பரவஸ் துவைக் கொள்ளாரென்று ப்ரதிஜ்ஞைபண்ணி. பரனன்பரல்லாத வர்களிறே * பிறர் நன்பொருள் தன்னை நம்புவது. இப்படி யாகையால் (அவர்களுக்கே வாரங்கொடு) அவ்வளவன்றிக்கே அவர்கள்விஷயத்திலேபக்ஷபதித்து. (க)"பாம்பார்வாய்க்கைநீட்டல் பார்த்தி" என்கிறபடியே பாம்புக்குடத்திலே அதின்படத்திலே படக் கையிட்டவர் "அவர்கள் ஆபரணமெடார்கள்" என்று பணத்திலே கையிட்டவர்.

அப்படி செய்தவர்தான் அல்பரோவென்னில்; ஶத்ருக்களை நிரஸிக்கும் ஸார்வபௌமரென்கிறது (மாற்றலரைவீரங்கெடுத்த) என்று. ஶத்ருக்கள் வீர்யத்தை நிர்வீர்யமாகப் பண்ணினவிது எத்தாலே யென்னில்; செங்கோல்-ஆஜ்ஞையாலே. (௨) "இருளார் வினை கெடச்செங்கோல் நடாவுதிர்." (கொல்லிகாவலன்) "குருகைக்காவலன்" என்னுமாப்போலே. "கொல்லி" என்கிற நகரத்துக்கு நிர்வாஹகரென்கை. (வில்லவர்கோன்) அவாந்தராராஜர்களுக்கும் அதிராஜரென்கை. அன்றிக்கே, "வில்லவர்கோன்" என்று-வில்லவரென்றுபேர். (௩) "கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்" என்றாரிறே. கோழி - உறையூர். உறையூருக்கும் இறையவரென்கிறது. அது சோழன் ராஜதானி.

(க) பெரி - திருவ - கச. (௨) திருவி - ௩௩.
(௩) பெரு - தி - ௨ - ௧0.

(சேரன்குலசேகரன்) சேரனுடைய குலத்துக்கு ஶேகரன். குலஶேகரர் - திருநாமம். இப்படி ராஜாதிராஜராகையாலே (முடிவேந்தர்சிகாமணி) என்கிறது. முடிவேந்தர் ஶிகாமணியாவது - * மணிமகுடந்தாழத் தாழ்ந்து நீண்முடியரசர் அடியிலே வணங்குகையாலே. (க) "மாலடி முடிமேல் கோலமாம்குலசேகரன்" என்று தமக்கிருக்குமாப்போலே தாமும் அவர்களுக்கு ஶிகாமணிபோலே ஶேகரிக்குமவராய் அலங்காராவஹராயிருக்கை. (உ) "பெருமணிவான வருச்சிவைத்த" (ங) "ஈச்வராணாம் ஸ்ரீமத்கிரீடதட பீடிதபாதபீடம் - ஈஶ்வராளும் ஸ்ரீமத்கிரீடதடபீடிதபாதபீடம்" என்னக்கடவதிறே இவர் பெருமாளை. குலஶேகரப்பெருமாளான விவர்பெருமையும் அப்படியே. இப்படி முடிவேந்தர் சிகாமணியான இவரும் ஒருவரே யென்னுதல்; "இப்படி பெரிய வேண்டப்பாட்டை யுடையவர் குடப்பாம்பில் கையிடுவதே!" என்று ஈடுபாடாதல். இத்தால் - "அரங்கன் மெய்யடியார்கள் தம் எல்லையி லடிமைத்திறத்தினிலென்று மேவுமனத்தனும்" என்றத்தை அநுஷ்டாந பர்யவஸாயியாம்படி அநுஷ்டித்த ப்ரகாரத்தைச் சொல்லிற்றாய்த்து.

பெருமாள்திருமொழித் தனியன் வ்யாக்யாநம் முற்றிற்று

பிள்ளைலோகம்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

(க) பெரு தி - எ - கக. (உ) தி - மொ - கூ - ௫ - ச. (ங.)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மயர்வற மதிநல மருளப்பெற்ற

குலசேகரப் பெருமாளருளிச்செய்த முதலாயிரம்

பெருமாள் திருமொழிக்குப் பரமகாருணிகரான

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்.

அவ.—ஸ்ரிய:பதியாய் ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய் ஸமஸ்த கல்யாணகுணாத்மகனாய் உபயவிபூதியுக்தனாய் ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேஶ்வரனடியாகப் பெருமாள் பெற்றது பக்திரூபாபந்ந ஜ்ஞாநமாகையாலே, க்ரமத்தாலே காண்கிறோமென்று ஆறியிருக்கலாவது தந்தலையாலே வந்ததாகிலிறே; அவன்றானே காட்டக் காண்கிறவராகையாலே அப்போதே காணவேண்டும்படி விடாய் பிறந்தது. பரமபதத்திலும் அநுபவிப்பது குணாநுபவ மாகையாலே அந்த ஶீலாதிகுணங்கள் பூர்ணமான கோயிலிலே யநுபவிக்க ப்ரார்த்திக்கிறார். இங்கநுபவிக்கக் குறையென்? ப்ரார்த்தனை யென்னென்னில்; ஸ்வாதந்த்ர்யம் பிறப்பேயுடைய ராகையாலே, மநுஷ்யர் நிரோதிப்பார் பலருமுண்டாகையாலே, இங்கு வந்நநுபவிக்க மாட்டாதே (க) "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்று கொலோ" என்றும், (உ) "அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை" என்றும்-நம்மாழ்வார் ப்ரார்த்தித்துப் பெற்ற பேற்றை இங்கே யநுபவிக்க வாசைப்படுகிறார். ... *

அவ ;—முதற்பாட்டு. (இருளிரியவித்யாதி) பர்யங்கவித்யை யிற் சொல்லுகிறபடியேயிறே முமுக்ஷு மநோரதிப்பது; அத்தை யிங்கே திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்துகிடக்கிற விடத்திலே

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

அரு:—(ஸ்வாதந்த்ரயம் பிறப்பேயுடையராகையாவது) ராஜாவாகையாலே ஸ்வாதந்த்ர்யம் பிறப்பேயுடையராய் மநுஷ்யரால் நிரோதிக்கப்பட்டிருப்பர்.

(க) தி - வாய் - உ - ௩ - ௧௦. (உ) தி - வாய் - ௧௦ - ௯ - ௧௧.

யநுபவிக்க மநோரதிக்கிறார். ஸம்ஸாரிமுக்தனாய்ச் சென்றால் (க) "வாஜெநாயஹ்ராணோஹதி - பாதேநாத்யாரோஹதி" இத்யாதிப்படியே - எழுந்தருளியிருக்கிற பர்யங்கத்திலே மிதித்தேறினால் "நீயார்" என்றால், "நான் ராஜபுத்ரன்" என்பாரைப் போலே; (உ) "ஃஹம்ப்ரஹ்மாஸ்மி - அஹம்ப்ரஹ்மாஸ்மி" என்றிறே இவன்சொல்லுவது.

இருளிரியச்சுடர் மணிகளிமைக்கும் நெற்றி
இனத்துத்தியணிபண மாயிரங்களார்ந்த
அரவரசப்பெருஞ்சோதி அநந்தனென்னும்
அணிவிளங்குமுயர் வெள்ளையணையைமேவி
திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி
திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளும்
கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டென்
கண்ணிணைகளென்றுகொலோகளிக்குநாளே. (க)

ப-ரை. திருவரங்கப்பெருநகருள் - திருவரங்கமாகிற மஹாநகரத்திலே, இருள் இரிய - இருள் சிதறிப்போம்படியான, சுடர் - ஜ்யோதிஸ்ஸையுடைத்தான, மணிகள் - மாணிக்கங்கள், இமைக்கும் - விளங்காநின்றுள்ள, நெற்றி- நெற்றியையும், இனத்துத்தி அணி - இரண்டாய்ச்சேர்ந்த திருவடிநிலையென்று சொல்லுகிறவற்றை உடைத்தான, பணங்களாயிரம் - ஆயிரம்பணங்களையும், ஆர்ந்த - பூர்ணமாகவுடையனாய், அரவரசன் - நாகராஜாவென்னும், பெருஞ்சோதி - மஹாதேஜஸ்ஸையுடையனாய், அநந்தனென்னும் - திருவநந்தாழ்வானாகிற, அணிவிளங்கும் - அழகுமிக்கு, உயர் - ஒக்கத்தையுடைத்தாய், வெள்ளை - வெளுத்த, அணையை- திருப்படுக்கையை, மேவி - பொருந்தி, தெள்- தெளிந்த, நீர் - நீரையுடைத்தான, பொன்னி- காவேரியானது, திரை - அலைகளாகிற, கையால் - கைகளாலே, அடி - திருவடிகளை, வருட - தடவ, பள்ளிகொள்ளும் - கண்வளர்ந்தருளுகிற, கருமணியை - நீலரத்நம்போன்றவராய், கோமளத்தை - நிரதிஶய ஸௌகுமார்யத்தையுடைய பெரிய பெருமாளை, என் கண்ணிணைகள் - என்னுடையகண்களானவை, கண்டுகொண்டு - இடைவிடாமல் ஸேவித்து, களிக்குநாள் - ஆநந்திக்குங்காலம், என்றுகொலோ - என்றோ வென்கிறார். (க)

வ்யா —(இருளிரியச் சுடர்மணிகளிமைக்கும் நெற்றி) இருள் சிதறிப்போம்படி ஜ்யோதிஸ்ஸையுடைய மணிகள் விளிக்கிற நெற்றியையும்.

அரு:—முதற்பாட்டு. (இருளிரியவித்யாதி) பர்யங்கவித்யையின் க்ரமமே தென்னவருளிச்செய்கிறார் (ஸம்ஸாரிமுக்தனையித்யாதி) (அஹம்ப்ரஹ்மாஸ்மி என்றது - ப்ரகாரப்ரகாரி பாவஸம்பந்தத்தால்வந்த ஸாமாநாதிகரண்யம்.

(க) கௌஷீ. (உ) கௌஷீ.

(இனத்துத்தி யணிபணமாயிரங்களார்ந்த) இனமான துத்தி; அதாவது - இரண்டாய்ச்சேர்ந்த திருவடி நிலையென்று சொல்லுகிறவற்றையுடைத்தான பணங்களாயிரத்தையும் பூர்ணமாகவுடையனாய். (அரவரசப்பெருஞ்சோதி) நாகராஜாவென்னும் மஹாதேஜஸ்ஸையுடையவனாய். (அநந்தனென்னும்) எல்லாவற்றையும் வ்யாபித்து நிற்கிற ஸர்வேஸ்வரனை விளாக்குலை கொள்ளுகிற ஸ்வரூபகுணங்களை யுடையனாகையாலே அநந்தனென்று சொல்லப்படுகிற. (என்னும்) ஸுமுகன், வாஸுகி, தக்ஷகன் என்றுமுண்டிறே; அவர்களிற் காட்டில் பகவத்ப்ரத்யாஸத்தியையுடையனென்னும் ப்ரஸித்தியையுடையவன். (அணிவிளங்குமுயர் வெள்ளையணையைமேவி) அழகுமிக்கு ஓக்கத்தையுடைத்தாய் மறுவற்ற வெள்ளைப்படுக்கையாகிற திருவநந்தாழ்வானைமேவி.

(திருவரங்கப்பெருநகருள்) (க) "வைகுண்ணேது பரேலோகே - வைகுண்டேது பரேலோகே" என்று சொல்லுமதுவும் இங்கேகாணும் இவர்க்கு; இத்திருவரங்கமாகிற மஹாநகரத்திலே. (தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருட) தெளிந்த நீரையுடைய காவேரி, திரைகளாகிறகைகளாலே திருவடிகளைவருட. (பள்ளிகொள்ளும் கருமணியை) திருவநந்தாழ்வான்மேலே ஒரு நீலரத்நம் சாய்ந்தாப்போலே கண்வளர்ந்தருளுகிறவனை. (கோமளத்தை) கண்ணால் துகைக்கவொண்ணாத ஸௌகுமார்யமுடையவனை. (கண்டுகொண்டு) கலியர், "சோற்றைக்கண்டுகொண்டு" என்னுமாப்போலே. (என் கண்ணிணைகள்) பட்டினிவிட்ட வென்கண்கள். (என்று கொலோகளிக்கும் நாளே) அங்கேகண்டு - (உ)"ஹாவு ஹாவு ஹாவு - அஹமந்நம் அஹமந்நம் அஹமந்நம்" என்று களிக்கும் களிப்பை இங்கேகண்டு களிப்பதென்றோ. (க)

(துத்தி) திருமண்; அத்தை - திருவடிநிலை யென்கிறது;

திருவனந்தாழ்வான் ஸர்வேஸ்வரனை மடியிலே வைத்துக்கொண்டிருக்கையாலே, (ஸ்வரூபம்) என்று - திருமேனியைச்சொல்லுகிறது.

(க) வாயுபுராணம். (உ) தை - ப்ருகு - ௧௦ - ௬.

வாயோரீரைஞ்ஞூறு துதங்களார்ந்த
வளையுடம்பிலழல் நாகமுமிழ்ந்தசெந்தீ
வீயாதமலர்ச்சென்னி விதானமேபோல்
மேன்மேலும்மிகவெங்கும் பரந்ததன்கீழ்,
காயாம்பூ மலர்ப்பிறங்கலன்ன மாலைக்
கடியரங்கத் தரவணையிற் பள்ளிகொள்ளும்
மாயோனை மணத்தூணேபற்றிநின்றென்
வாயாரவென்றுகொலோ வாழ்த்துநாளே. (உ)

ப - ரை.—துதங்கள் - ஸ்தோத்ரம்பண்ணுகைக்கீடாக, ஆர்ந்த - பொருந்தின, ஓர் ஈரைஞ்ஞூறுவாய் - ஆயிரம்வாயையும், வளை - வெளுத்த, உடம்பில்- திருமேனியையுமுடைய,(சத்ருக்கள் அணுகவொண்ணாதபடி)அழல்-அழலாநின்றுள்ள நாகம் - திருவநந்தாழ்வான், உமிழ்ந்த - வாயால் இடைவிடாதே உமிழுகிற, எங்கும் - மேற்பக்கமெங்கும், மேன்மேலும் மிகப்பரந்த - மிகவும் அதிகமாகப்பரந்த, விதானமேபோல் - மேற்கட்டியையொத்த, செம்தீக்கீழ் - அக்நிஜ்வாலைகளின் ஜ்யோதிஸ்ஸின்கீழே, மலர்வீயாத - பூமாறாத, சென்னி-திருமுடியையுடையனுமாய், காயா - காயாவின், பூ - அழகிய - மலர் - மலர்களாலாகிய, பிறங்கலன்ன - மாலைபோலேயிருக்கிற, மாலை-ஸர்வேஶ்வரனாய், கடி - அரணைப்போரும் மதிளையுடைய, அரங்கத்து - கோயிலிலே, அரவணையில் - திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே, பள்ளிகொள்ளும் - கண்வளர்ந்தருளுகிற, மாயோனை - ஆஶ்சர்யபூதனை, மணத்தூணே பற்றிநின்று - ஆமோதஸ்தம்பத்வயங்களைப் பற்றி நின்று, என் - என்னுடைய, வாயார—, வாழ்த்தும்நாள்- ஸ்தோத்ரம்பண்ணுங்காலம், என்றுகொலோ - என்றோ. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வாயோரீரைஞ்ஞூறு துதங்களார்ந்த) யஶோதைப்பிராட்டி க்ருஷ்ணஸ்பர்ஶத்தால்வந்தஸுகத்துக்குப் போக்குவிட்டேதுமாப்போலே, பகவதநுபவஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே வந்த ப்ரீதிக்குப் போக்குவிட்டேத்துகைக்காக ஆயிரம் வாயையும்; துதங்களாவது - ஸ்தோத்ராதிகளைப் புறப்படவிடுகை; ஸ்துதமிறே. (வளையுடம்பிலழல்நாகம்) வெளுத்த நிறத்தையுடையனுமாய், ப்ரதி பக்ஷத்துக்கு வந்தணுகவொண்ணாதபடி

அரு ;—இரண்டாம் பாட்டு. (வாயோரித்யாதி) துதமென்றால் - ஸ்தோத்ரத்தைக்காட்டுமோ வென்ன வருளிச்செய்கிறார் (ஸ்துதமிறே) என்று, வடதிரிச்சொல் - ஆரியச்சிதைவென்றபடி. "விதானமே போல்மிகவெங்கும் பரந்

அநபிபவநீயனு யிருக்கிற திருவநந்தாழ்வான். (உமிழ்ந்தசெந்தீ வீயாதமலர்ச் சென்னி விதாநமேபோல் மேன்மேலும் மிகவெங்கும் பரந்ததன்கீழ்) அவன்வாயாலே யிடைவிடாதே யுமிழ்கிற அக்நி ஜ்வாலைகளின் ஜ்யோதிஸ்ஸாகிற மேற்கட்டியின் கீழே, (வீயாதமலர்ச்சென்னி) பூமாறாத திருமுடியை யுடையனுமாய்.

(காயாம்பூமலர்ப் பிறங்கலன்னமாலை) காயாவின் அழகிய பூவாலே செய்யப்பட்டமாலைபோலே யிருக்கிற ஸர்வேஶ்வரனை. (கடியரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும்) அரணாகப்போரும் மதிளையுடைய கோயிலிலே அப்படி பரிவனான திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளுகிற. (மாயோனை) (க) "வஸயாவொயி தஸ்ரீரநு-ஸமயாபோதிதஸ் ஸ்ரீமாந்" என்னும்படி கண்வளர்ந்தருளுகிறஆஶ்சர்யபூதனை. (மணத்தூணேபற்றிநின்று) ஆமோதஸ்தம்பத்வயங்களைப்பற்றி நின்று, அழகிலே அகப்பட்ட ஹர்ஷத்தாலே தள்ளுண்டாமே இரண்டு ஸ்தம்பங்களைப்பற்றி நின்று. (வாயாரவென்றுகொலோவாழ்த்துநாளே) கண்டால்கொள்வது வேறொரு ப்ரயோஜநமில்லையிறே; "பல்லாண்டு பல்லாண்டு" என்றுமித்தனையிறே. ... ... (உ)

எம்மாண்பிலயன் நான்குநாவினும்
எடுத்தேத்தி யீரிரண்டுமுகமுங்கொண்டு
எம்மாடுமெழிற்கண்கள் எட்டினோடும்
தொழுதேத்தி யினிதிறைஞ்சநின்றசெம்பொன்,
அம்மான்றன்மலர்க்கமலக் கொப்பூழ்தோன்ற
அணியரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்
அம்மான்றனடியிணைக்கீழ லர்களிட்டங்
கடியவரோடென்றுகொலோ வணுகுநாளே. (ந)

திருக்கிற அழல்நாகம் - மேன்மேலும் உமிழ்ந்த செந்தீயாகிற அதன்கீழே" என்றந்வயித்தருளிச் செய்கிறார் (அவன்வாயாலேயித்யாதி). வீயாதமலர்ச்சென்னி - பெருமாள் திருமுடி ; அன்றியே, "அழல்நாகம் மேன்மேலும் உமிழ்ந்தசெந்தீயினுடைய விதானம்போலேமிகவெங்கும் பரந்ததேஜஸ்ஸின் கீழே" என்று இங்ஙனேயும் யோஜிப்பது. பிறங்கல் - மாலை. கடியென்று - கட்டாய், அத்தாலே அரணமதிளைச்சொல்லுகிறது; ஆமோதம். பரிமளம்.(உ)

(க) ரா-ஸு-ந-அ-உக.

ப - ரை.—எம்மாண்பில் - எப்படிப்பட்ட மாட்சிமையையுடைய, அயன்- ப்ரஹ்மாவானவன், நான்குநாவினுலும்-ஸ்தோத்ராதிகளுக்குப் பரிகரமான நாலு நாக்காலும், எடுத்து - தன்ஸ்ரத்தைக்குத்தக்கபடி யெடுத்து, ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி, ஈரிரண்டு முகமுங்கொண்டு - நாலுவேதத்துக்கும் சமைந்த நான்கு முகங்களைக்கொண்டு, எம்மாடும் - நாற்புறத்திலும், எழில் - அழகிய, கண்களெட்டினேடும் - எட்டுக்கண்களோடே, தொழுது - அஞ்சலிபத்தனுய்க் கொண்டு, ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி, இனிது - ஸாஷ்டாங்கமாக, இறைஞ்சநின்ற-ஸேவிக்கும்படி நின்றவனுய், செம்பொன்-ஸ்ப்ருஹணீயனுய், அம்மான்றன் - இவ்வருகுண்டான கார்யவர்க்கத்துக்கெல்லாம் காரணபூதனுனவனுடைய தாய், கமலமலர் - தாமரைப்பூவையுடைய, கொப்பூழ்தோன்ற - திருநாபிதோன்றும்படி, அணி - ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான, அரங்கத்து - கோயிலிலே, அரவணையில் - திருவநந்தாழ்வான்மேலே, பள்ளிகொள்ளும் - கண்வளர்ந்தருளுகிற, அம்மான்றன் - ஸர்வேஸ்வரனுடைய, அடியிணைக்கீழ் - திருவடிகளின் கீழே, அலர்களிட்டு - புஷ்பம்முதலியவைகளைப் பணிமாறி, அங்கு - அங்கே, அடியவரோடு - அந்தரங்கவ்ருத்திபண்ணு மவர்களோடே, அணுகும்நாள் - கிட்டும்காலம், என்றுகொலோ - என்றே. (ங)

வ்யா.—மூன்றும்பாட்டு. (எம்மாண்பில் அயன்) எப்படிப் பட்ட மாட்சிமையுடைய ப்ரஹ்மா. அதாவது - ஸ்தோத்ராதிகளைப்பண்ணுந் தன்மை குறைவற்றிருக்கை (நான்குநாவினுலும்) ஸ்தோத்ராதிகளுக்குப்பரிகரமான நாலுநாக்காலும்.(எடுத்தேத்தி) தன் ஸ்ரத்தைக்குத் தக்கபடி எடுத்தேத்தி. (ஈரிரண்டு முகமுங்கொண்டு) நாலுவேதத்துக்குச் சமைந்த நாலுமுகமுங்கொண்டு. (எம்மாடும்) பின்னும் முன்னும் மட்டங்களுமாகிற பர்யந்தங்களெங்கும். (எழில் கண்களெட்டினேடும்) அழகை யநுபவிக்கைக்குப் பல கண்படைத்த ப்ரயோஜநம்பெற்றன். (தொழுதேத்தி யினிதிறைஞ்சநின்ற) ப்ரீதி ப்ரேரிதனுய்க் கொண்டுதொழுது ஸ்தோத்ராதிகளைப் பண்ணுவது தண்டனிடுவ தாம்படி நின்ற.

அரு ;—மூன்றும் பாட்டு. (எம்மாண்பிலித்யாதி). எப்படிப்பட்ட, எல்லா வகையாலும் ; மாட்சிமை - அழகு ; மலர்க்கமலம் - மலரானது அலர்ந்திக்கு மதாகையாலே மஹத்த்வம் சொல்லுகிறது. (ங)

(செம்பொனம்மான்றன் மலர்க்கமலக் கொப்பூழ்தோன்ற) ஸ்ப்ருஹணீயமாய் இவ்வருகுண்டான கார்யவர்க்கத்துக்கெல்லாம் காரணமென்னும் மஹத்வம் தோற்றும்படியா யிருக்கிற தாமரைப் பூவையுடைய தன் திருநாபிதோன்ற. (அணியாங்கத்தரவணையில் பள்ளிகொள்ளுமம்மான்றன்) ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான கோயிலிலே திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய. (அடியிணைக்கீழலர்களிட்டு) அவன் திருவடிகளின்கீழே புஷ்பாத்யுபகரணங்களைப் பணிமாறி. (அங்கடியவரோடென்றுகொலோ வணுகுநாளே) அங்கு அந்தரங்க வ்ருத்தி செய்யுமவர்களோடே ஸஜாதீயனாய் நானும் கிட்டுவதென்றோ. (க) "அடியார்கள் குழாங்கள்" இத்யாதி. ... ... (ங)

மாவினைவாய் பிளந்துகந்தமாலைவேலை
வண்ணனையென்கண்ணனை வன்குன்றமேந்தி
ஆவினையன் றுய்யக்கொண்ட வாயரேற்றை
அமரர்கடந்தலைவனை யந்தமிழின்பப்
பாவினை அவ்வடமொழியைப்பற்றற்றார்கள்
பயிலரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்
கோவினைநாவுறவழுத்தி யென்றன்கைகள்
கொய்மலர்தூயென்றுகொலோ கூப்புநாளே. (ச)

ப - ரை.—மாவினை - கேசியென்னுமஸுரனுடைய, வாய் - வாயை, பிளந்து - பிளந்துபொகட்டு, உகந்த - ஆஶ்ரிதவிரோதிபோகப் பெற்றோமென்று உகந்த, மாலை - ஆஶ்ரிதவ்யாமுக்தராய், வேலைவண்ணனை - கடலோடொத்த திருநிறத்தையுடையராய், என்கண்ணனை - எனக்குபவ்யனான க்ருஷ்ணனாய், அன்று - இந்த்ரன் கல்மழை பெய்வித்த அக்காலத்திலே, வல் - பலிஷ்டமாயிருப்பதொரு, குன்றம் - கோவர்த்தநபர்வதத்தை, ஏந்தி - கையால்தாங்கி, ஆவினை - பசுக்களை, உய்யக்கொண்ட - ரக்ஷித்தவராய், ஆயர் ஏற்றை - * தன்னேராயிரம் பிள்ளைகளிற்காட்டில் மேனாணித்திருக்குமவராய், அமரர்தம் - நித்யஸூரிகளுக்கு, தலைவனை - ப்ரதாநரானவராய், அம் - அழகிய தமிழ் - தமிழாலாகிய, இன்பப்பாவினை - பாட்டுப்போலே யினியராய், அவ்வடமொழியை - ஸ்ரீராமாயணம்போலே இனியவராய், பற்றற்றார்கள் - தன்னையே பற்றிப் புறம்புள்ளவற்றை விட்ட அநந்யப்ரயோஜநர்கள், பயில் - நித்யவாஸம் பண்ணுகிற, அரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்—, கோவினை - நாதரை,

---

(க) தி - வாய் - உ - ங - கo.

நாவுற - நாத்தழும் பேறும்படி, வழுத்தி - ஸ்தோத்ரங்களைப்பண்ணி, என்றன் கைகள் - என்னுடைய கைகளானவை, கொய் - காலத்தில் பறிக்கப்பட்ட, மலர் - புஷ்பங்களை, தூய் - பணிமாறி, கூப்பும்நாள் - அஞ்சலிபண்ணும்காலம், என்றுகொல் - என்றோ. (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (மாவினை வாய்பிளந்து கந்தமாலே) கேஸியை அநாயாஸேநப்பிளந்து, "ஆஸ்ரிதவிரோதி போகப்பெற்றோம்" என்று உகந்த ஆஸ்ரித வ்யாமுக்தனை. (வேலைவண்ணனை) ஆஸ்ரித விரோதிகளை வளர்த்தாலும் விடவொண்ணாத வடிவழகையுடையவனை. (என் கண்ணனை) வெறும் வடிவழகேயன்றியே எனக்கு பவ்யனானவனை. (வன்குன்றமேந்தி யாவினையன்றுய்யக்கொண்டவாயரேற்றை) இந்த்ரன் வர்ஷிக்கிற கல்வர்ஷத்துக்குச் சலியாத மலையையென்னுதல்; ஸ்ரமஹரமான குன்றமென்னுதல். (ஆவினையன்றுய்யக்கொண்ட) உபகாரஸ்ம்ருதியுமில்லாத பசுக்களைரக்ஷித்த (ஆயரேற்றை) தன்பருவத்தில் பிள்ளைகளைக்காட்டில் தான்மேனாணிப்புடையவனை. (அமரர்கள் தந்தலைவனை) தன்னோடு ஸாம்யாபத்தி பெற்றிருக்கிற நித்ய ஸூரிகளைக்காட்டில் தலைவனானவனை.

(அந்தமிழின்பப்பாவினை) * இருளிரியச்சுடர்மணி களிமைக்கும் நெற்றிபோலே இனியவனை. (அவ்வடமொழியை) ஸ்ரீ ராமாயணம்போலே இனியவனை. (பற்றற்றார்கள் பயிலரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளுங்கோவினை) தன்னையேபற்றிப் புறம்புள்ளவற்றைவிட்ட அநந்ய ப்ரயோஜநர் நித்யவாஸம் பண்ணுகிற கோயிலிலே திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந் தருளுகிறநாதனை. (நாவுறவழுத்தி) நாத்தழும்பேறும்படி ஸ்தோத்ரங்களைப் பண்ணி. (என்றன் கைகள் கொய்மலர் தூயென்று கொலோ கூப்புநாளே) கைதழும் பேறும்படி புஷ்பாத்யுபகரணங்களைப் பணிமாறி அஞ்சலி பண்ணப் பெறுவதென்றோ. ... ... (ச)

அரு;—நாலாம் பாட்டு. (மாவினையித்யாதி) வண்ணம் - அழகு. இருட்சியால்வந்தவழகாதல், குளிர்த்தியால் வந்தவழகாதல். அந்தமிழின்பப்பாவுக்கு அர்த்தம் தெரியாது. வடமொழிக்குப்ரதிகோடியாக அர்த்தமாகவுமாம். (ச)

இணையில்லா வின்னிசை யாழ்கெழுமியின்பத்
தும்புருவும் நாரதனுமிறைஞ்சியேத்தத்
துணையில்லாத்தொன்மறை நூற்றோத்திரத்தாற்
றொன்மலர்க்கணயன் வணங்கியோவாதேத்த,
மணிமாடமாளிகைகள் மல்குசெல்வ
மதிளரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்
மணிவண்ண னம்மானைக்கண்டுகொண்டென்
மலர்ச்சென்னியென்றுகொலோ வணங்குநாளே. (ரு)

ப - ரை.—இன்பம் - பாட்டால்வந்த ஆநந்தத்தையுடைய, தும்புருநாரதன், தும்புருநாரதனென்பவர்கள், இணையில்லா - உபமாநரஹிதமான, இன் - இனிய - இசை - இசையையுடைய, யாழ் - வீணையை, கெழுமி - மீட்டி, இறைஞ்சி - திருவடிகளிலேவிழுந்து, ஏத்த - ஸ்தோத்ரம்பண்ண, துணையில்லா - ஒப்பில்லாததாய், தொல் - பழையதான, மறைநூல் - வேதசாஸ்த்ரமாகிற, தோத்திரத்தால் - ஸ்தோத்ரத்தாலே, தொல் - அநாதிஸித்தமான, மலர்க்கண் - திருநாபீகமலத்தினிடத்திலிருக்கிற, அயன் - ப்ரஹ்மாவானவன், வணங்கி - திருவடிகளிலே ப்ரணாமம்பண்ணி, ஓவாது - இடைவிடாதே, ஏத்த - ஸ்தோத்ரம்பண்ணும்படி, மணி - ரத்நமயமான, மாடமாளிகைகள் - மாடமாளிகைகளையும், மல்குசெல்வம் - மிக்க ஐஸ்வர்யத்தையு முடைத்தாய், மதிளரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்—, மணி - அழகிய, வண்ணன் - வடிவையுடையனான, அம்மானை - ஸர்வேஸ்வரனை, கண்டுகொண்டு - இடைவிடாமல் ஸேவித்து, என் - என்னுடைய, மலர் - பூமுடிசூடின, சென்னி - தலை, வணங்கும்நாள் - அவன் திருவடிகளிலே வணங்குங்காலம், என்றுகொலோ—. (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (இணையில்லா வின்னிசை யாழ் கெழுமி) உபமாநரஹிதமான இனிய இசையையுடைய யாழை நெருங்கி. (இன்பத்தும்புருவும் நாரதனு மிறைஞ்சியேத்த) பாட்டால் வந்த ஆநந்தத்தையுடைய தும்புருவும் நாரதனும் திருவடிகளிலே விழுந்து ஸ்தோத்ரங்களைப்பண்ண. (துணையில்லாத் தொன் மறைநூல் தோத்திரத்தால்) ஒப்பில்லாத பழைய வேதசாஸ்த்ரமாகிற ஸ்தோத்ரத்தாலே. (தொன்மலர்க்கணயன் வணங்கி யோவாதேத்த) திருநாபீகமலத்தினிடத்திலே யிருக்கிற ப்ரஹ்மா, திருவடிகளிலேப்ரணாமம்பண்ணி விடாதேஸ்தோத்ரம்பண்ண.

(மணிமாட மாளிகைகள் மல்கு செல்வம்) மணிமயமான மாடங்களையும் மிக்க ஐஶ்வர்யத்தையுமுடைய. (மதிளரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும்) மிக்க அரணான பெரிய மதிளையுடைய பெரியகோயிலிலே திருவனந் தாழ்வான் மேலே பள்ளி கொண்டருளும். (மணிவண்ண னம்மானைக் கண்டுகொண்டு) அழகிய வடிவையுடைய ஸர்வேஶ்வரனைக் கண்டுகொண்டு. (என் மலர்ச்சென்னியென்று கொலோ வணங்குநாளே) நான் பூமுடி சூடினதலை என்றோ அவன் திருவடிகளிலே வணங்குவது. ... ... (ரு)

அளிமலர்மேல யனரணிந்திரனோடேனை
அமரர்கள்தங்குழவு மரம்பையரும்மற்றும்
தெளிமதிசேர்முனிவர்கள் தங்குழவுமுந்தித்
திசைதிசையின்மலர் தூவிச் சென்றுசேரும்,
களிமலர்சேர்பொழி லரங்கத்துரகமேறிக்
கண்வளரும்கடல்வண்ணர் கமலக்கண்ணும்
ஒளிமதிசேர்திருமுகமும் கண்டுகொண்டென்
னுள்ளமிகவென்றுகொலோ வுருகுநாளே. (சு)

ப-ரை.—அளி - வண்டுகள் படிந்திருந்துள்ள, மலர்மேல் - திருநாபீகமலத்திலிருக்கிற, அயனோடு - ப்ரஹ்மாவும், அரனோடு - ருத்ரனும், இந்திரனோடு - இந்த்ரனும், ஏனை - மற்ற, அமரர்கள் தம்குழவும் - தேவஸமூஹங்களும், அரம்பையரும் - ரம்பைமுதலான அப்ஸரஸ்ஸுக்களும், மற்றும் - இன்னும், (நாராயணனே ஸர்வஸ்மாத்பரனென்று) தெளிமதிசேர் - தெளிந்தஜ்ஞானத்தையுடையரான, முனிவர்கள் தம்குழவும் - ஸநகாதிபரமருஷிகளின் ஸமூஹமும், உந்தி - ஒருவர்க்கொருவர் நெருக்கித்தள்ளி, திசைதிசையில் - பார்த்த பார்த்த விடமெல்லாம், மலர்தூவி - புஷ்பவ்ருஷ்டியைப் பண்ணிக்கொண்டு, சென்று சேரும் - சென்று கிட்டும், களி - தேன்மாறாத, மலர்சேர் - மலர்களையுடைத்தான, பொழில் - பொழிலையுடைய, அரங்கத்து - கோயிலிலே, உரகம்ஏறி - திருவனந்தாழ்வான்மேலே யேறி, கண்வளரும் - பள்ளிகொண்டருளுகிற, கடல் வண்ணர் - நீர்வண்ணருடைய, கமலக்கண்ணும் - தாமரைமலர்போன்ற கண்களையும், ஒளி - புகரையுடைத்தான, மதிசேர் - சந்த்ரனையொத்த, திருமுகமும் - திருமுகத்தையும், கண்டுகொண்டு—, என்உள்ளம் - என்மநஸ்ஸானது, மிகவுருகும்நாள் - மிகவும் உருகுங்காலம் என்றுகொலோ—. (சு)

வ்யா.—ஆறாம்பாட்டு. (அளிமலர்மேலயனரனிந்திரனோடு) வண்டுகள்படிந்த அரவிந்தத்தின் மேலேயிருக்கிற ப்ரஹ்மாவும், அவன் மகனான ருத்ரனும், அவர்களோடே ஸஹபடிக்கப்பட்ட இந்த்ரனும் இவர்களுடனே. (ஏனையமரர்கள்தங் குழுவும்) அவர்கள் மூவரையும் ஒழிந்த தேவர்கள் திரளும். (அரம்பையரும்) ரம்பை முதலான அப்ஸரஸ்ஸுக்களும். (மற்றும் தெளிமதிசேர் முனிவர்கள்தங் குழுவும்) ப்ரஹ்ம பாவனையாய்ச் செல்லும் ஸநகாதிகள் திரளும். (உந்தி) ஒருவர்க்கொருவர் நெருக்கித்தள்ளி. (திசை திசையில் மலர்தூவிச் சென்றுசேரும்) பார்த்தபார்த்த விடமெல்லாம் புஷ்ப வ்ருஷ்டியைப்பண்ணிக்கொண்டு சென்றுகிட்டும்.

(களிமலர் சேர்பொழி லரங்கத்து ரகமேறி) மதுமலரையுடைத்தான பொழிலையுடைய அரங்கத்திலே திருவநந்தாழ்வான் மேலே யேறி. (கண்வளருங் கடல்வண்ணர் கமலக்கண்ணும்) பள்ளி கொள்ளுகிற நீர்வண்ணர் கமலக்கண்ணும். (ஒளிமதிசேர் திருமுகமும் கண்டுகொண்டு) குளிர்த்திமிக்குப் புகரையுடைய சந்த்ரனை யொப்புச்சொல்லலான அழகிய திருமுகத்தையும் கண்டு கொண்டு. (என்னுள்ள மிகவென்றுகொலோ வுருகுநாளே) என் நெஞ்சு குளிர்ந்து உருகுவதென்றோ. ... ... (௬)

மறந்திகழுமனமொழித்து வஞ்சமாற்றி
ஐம்புலன்களடக்கி யிடர்ப்பாரத்துன்பம்
துறந்து இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத்
தொன்னெறிக் கண்ணிலைநின்றதொண்டரான,

அறந்திகழுமனத்தவர்தம் கதியைப்பொன்னி
அணியரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்
நிறந்திகழுமாயோனைக் கண்டென்கண்கள்
நீர்மல்கவென்றுகொலோ நிற்குநாளே. (எ)

ப-ரை.—மறம் - கொலை முதலியவற்றால், திகழும் - விளங்காநின்றுள்ள மநம் - மநஸ்ஸை, ஒழித்து - வாஸநையோடேபோக்கி, வஞ்சம் - பொய்யை, மாற்றி -, போக்கி, ஐம்புலன்கள் - ஐம்புலன்களையும், அடக்கி - விஷயங்களில் புகாமே அடக்கி, இடர் - து:கத்தை விளைப்பதான, பாரத்துன்பம் - *பாரமான பழவினையை, துறந்து-பற்றறுத்து, இருமுப்பொழுது - ஐந்துகாலங்களிலும்,

ஏத்தி-ஸ்தோத்ரம்பண்ணி, எல்லையில்லாத் தொல்நெறிக்கண் - அப்பழையமர்யாதையிலே, நிலைநின்ற—, தொண்டரான-தாஸபூதராய், அறம்திகழும்-ஆந்ருஶம்ஸ்யத்தாலே விளங்குகின்ற, மனத்தவர்தம்-மநஸ்ஸையுடையரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, கதியை - பரமப்ராப்யனானவனை, பொன்னி - காவேரியால் சூழப்பட்டு, அணி - லீலாவிபூதிக்காபரணமான, அரங்கத்து - கோயிலிலே, அரவணையில்-திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே, பள்ளிகொள்ளும்-கண்வளர்ந்தருளுமவனை, நிறந்திகழும் - அழகுவிளங்கா நின்றுள்ள, மாயோனை - ஆஶ்சர்யபூதனானவனுடைய வடிவழகை, என் கண்கள்—, கண்டு - கண்டுகளித்து, நீர்மல்க - ஆநந்தாஶ்ரு ப்ரவஹிக்கும்படி, நிற்கும்நாள் - நிற்குங்காலம், என்றுகொலோ—. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (மறந்திகழு மனமொழித்து) மறம் - கொலையும், சினமும், கொடுமையும். இவற்றால் விளங்காநின்ற மநஸ்ஸை வாஸனையோடே போக்கி. (வஞ்சமாற்றி) பொய்யைப்போக்கி. (ஐம்புலன்களடக்கி) *வன்புலச் சேக்களைப்பட்டி புகாமே கட்டி. (இடர்ப்பாரத் துன்பந்துறந்து) மிக்க து:கத்தை விளைப்பதான *பாரமாய பழவினையைப் பற்றறுத்து (இருமுப்பொழுதேத்தி) பஞ்சகாலமென்னுதல்; பெரியமுப்பொழுதென்னுதல். இக்காலங்களிலேயேத்தி. (எல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரான) அளவிறந்த பழையமர்யாதையிலே சிலவரால் கலக்கவொண்ணாதபடி நிலைநின்ற வைஷ்ணவர்களான.

(அறந்திகழும் மனத்தவர் தங்கதியை) ஆந்ருஶம்ஸ்யப்ரதாநராயிருக்குமவர்களுக்கு பரமப்ராப்யனானவனை. (பொன்னியணியரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்) *பொன்னி சூழரங்கத்திலே திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளும். (அணி அரங்கம்) லீலாவிபூதிக்கு ஆபரணமான கோயில். (நிறந்திகழுமாயோனைக்கண்டு) அழகுவிளங்காநின்ற ஆஶ்சர்யபூதனைக்கண்டு. (என்கண்கள் நீர்மல்கவென்று கொலோநிற்குநாளே) அவனுடைய வடிவழகைக்கண்டு களித்து ஆநந்தாஶ்ரு ப்ரவஹிக்கநிற்கும் நாள் என்றோ. ... ... (எ)

கோலார்ந்தநெடுஞ் சார்ங்கங்கூனற்சங்கம்
கொலையாழிகொடுந்தண்டு கொற்றவொள்வாள்
காலார்ந்தகதிக்கருடனென்னும்வென்றிக்
கடும்பறவையிவையனைத்தும் புறஞ்சூழ்காப்ப,
சேலார்ந்தநெடுங்கழனி சோலைசூழ்ந்த
திருவரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்
மாலோனைக்கண்டின்பக் கலவியெய்திவல்
வினையேனென்றுகொலோ வாழுநாளே. (அ)

ப - ரை.—கோல் ஆர்ந்த - திருச்சரங்களோடுகூடி, நெடும் - பெரிதாயிருந்துள்ள, சார்ங்கம் - ஸ்ரீசார்ங்கமும், கூன் - பகவதநுபவத்தாலே வளைந்திருக்கிற, நல் - நன்ஞேசையாலே ஆஶ்ரிதவிரோதிகளைப்போக்கும் நன்மையையுடைத்தான, சங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யமும், கொலை - சத்ருக்களைக் கொல்லுமவனான‘ ஆழி - திருவாழியாழ்வானும், கொடும் - பார்க்கும்போதே பகைவர்மண்ணுண்ணும்படியிருக்கிற, தண்டு - ஸ்ரீகௌமோதகீயென்னும் கதையும், கொற்றம் - ஜயத்தைத் தருமதாய், ஒள் - ப்ரகாசம் மிகுந்த, வாள் - ஸ்ரீநந்தகமென்னும் வாளும், கால் - காற்றின் வேகம்போலே, ஆர்ந்த - பொருந்தின, கடும்கதி - மிகவும் வேகமானசெல்லுகையையுடைய, கருடனென்னும் - பெரிய திருவடியென்கிற பேரையுடையனாய், வென்றி - ஜயப்ரதனான, பறவையிவையனைத்தும் - பக்ஷிராஜனும் ஆகிய இவர்களெல்லாரும், புறம்சூழ் - நாற்புறமும் சூழ்ந்து, காப்ப - காத்துக்கொண்டிருக்க, சேல் - சேல் மத்ஸ்யங்களாலே, ஆர்ந்த - நிரம்பின, நெடும் - பெரிய, கழனி - கழனிகளும், சோலை - சோலைகளும், சூழ்ந்த - சூழ்ந்திருக்கிற, திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும் மாலோனை—, வல்வினையேன் - மஹாபாபியானநான், கண்டு - கண்ணாரக்கண்டு, இன்பம் நிரதிசய ஆநந்தயுக்தனும்படி, கலவியெய்தி - ஸம்ஶ்லேஷித்து, வாழும்நாள் - அநுபவித்து வாழப்பெறுங்காலம், என்றுகொலோ—. (அ)

வ்யா —எட்டாம்பாட்டு. (கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம்) திருச்சரங்களோடேகூடின ஸ்ரீஶார்ங்கம். (க) “எப்போதுங்கைகழலாநேமியான்” என்னுமாப்போலே, எப்போது வினையுண்டாமென்றறியாமையாலே திருச்சரங்களைத்தொடுக்கபடியேயாய்த்து ஸ்ரீஶார்ங்கமிருப்பது (கூன்நல்சங்கம்) பகவதநுபவத்தால் வந்த செருக்காலே கூனியாய்த்து ஸ்ரீபாஞ்சஜந்யமிருப்பது. (கொலை

(க) பெரியதிருவ - அஎ.

யாழி) இவர்களநுபவத்தில் இழியப்போதின்றியே ப்ரதிபக்ஷத்தை இருதுண்டமாகவிடுகை பணிப்போருமாய்த்து திருவாழியாழ்வானுக்கு. (கொடுந்தண்டு) பிடித்தபிடியிலேஉகவாதார் மண்ணுண்ணும்படியா யிருக்கிறகதை. (கொற்றவொள்வாள்) ஐஶ்வர்ய ப்ரகாஶகமான திருக்கொற்றவாள். கொற்றம் - வெற்றி. (காலார்ந்த கதிக்கருடனென்னும் வென்றிக்கடும் பறவை) காற்றினுடைய மிக்கவேகம்போலே யிருக்கிற கதியையுடையனாய், பெரியதிருவடியென்கிறபேரையுமுடையனாயிருக்கிற கடும்பறவை. (இவையனைத்தும் புறஞ்சூழ்காப்ப)(க) "ராமலக்ஷ்மண கு்ப்தாஸா" என்னுமாப்போலே கடற்கரைவெளியில் ஸ்ரீஸேனையெல்லாம் குழைச்சரக்காய், தாமும் தம்பியாருங் காக்குமாப்போலே, பெரிய பெருமாள் கண்வளர்ந் தருளுகையாலே பெரிய திருவடி முதலாக ஸ்ரீபஞ்சாயு தாழ்வார்கள் சுற்றும் காத்துக் கொண்டாய்த்து நிற்பது.

(சேலார்ந்த நெடுங்கழனிசோலை சூழ்ந்த திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும் மாலோனை) சேலாலே நிரம்பின கழனிகளும் சோலைகளும் சூழ்ந்தகோயிலிலே திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந் தருளுகிற ஸர்வாதிகனை. (கண்டின்பக் கலவியெய்தி) கண்டு நிரதிஶயாநந்தயுக்தனும்படி ஸம்ஶ்லேஷித்து. (வல்வினையேனென்று கொலோவாழுநாளே) லோகாந்தரத்திலே போய்க்காணவேண்டும் வஸ்து இங்கேஸந்நிஹிதமா யிருக்கச்செய்தே அநுபவிக்கவொண்ணாத மஹாபாபத்தைப்பண்ணின நான் அநுபவித்து வாழப்பெறுவ தென்றோ, பகவதநுபவத்துக்கு விரோதியாயுள்ளவை யெல்லாம் பாபமாயிருக்குமிறே. ... ... (அ)

அரு ;—எட்டாம் பாட்டு. (கோலார்ந்தவித்யாதி). (இவர்களித்யாதி) திருவாழிமுதலான திவ்யாயுதங்களுக்கு விரோதிநிரஸநத்துக்கொழிய ஸ்ரீபாஞ்சஜந்யம் போலே அநுபவத்திலிழியப் போதில்லை யென்றபடி.

ராஜத்வத்தாலேயன்றோ வரக்கூடிற்றில்லை; அதுபாபபலமோ வென்ன வருளிச்செய்கிறார் (பகவதநுபவத்துக்கித்யாதி). (அ)

(க) ரா - யு - உ௫ - ௩௩.

தூராதமனக்காதற்றொண்டர் தங்கள்குழாங்
குழுமித்திருப்புகழ்கள்பலவும்பாடி
ஆராதமனக்களிப்போடழுதகண்ணீர்
மழைசோரநினைந்துருகியேத்திநாளும்,
சீரார்ந்தமுழவோசைபரவைகாட்டுந்
திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும்
போராழியம்மானைக்கண்டு துள்ளிப்
பூதலத்திலென்றுகொலோ புரளுநாளே. (கூ)

ப-ரை.—தூராத - ஒருக்காலும் ஆராதிருக்கிற, காதல் - ஆசையையுடைத்தான, மநம் - மநஸ்ஸை யுடையராய், தொண்டர்தங்கள் குழாம் - தாஸபூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய குழாத்திலே, குழுமி - கலந்து, திருப்புகழ்கள் பலவும்பாடி - அவனுடைய குணங்களுக்கு வாசகமான திருநாமங்கள் பலவற்றையும்பாடி, அத்தாலே, ஆராத - ஆராதிருக்கிற, மநக்களிப்போடு - மநக்களிப்பாலே, அழுத—, கண்-கண்களினின்றும், நீர்-ஆநந்தாஸ்ருக்கள், மழை-மழைபோலே, சோர-ப்ரவஹிக்க, நினைந்து-அவனைநினைத்து, உருகி-அத்தாலேயுருகி, எத்தி - ஸ்தோத்ராதிகளைப்பண்ணி, நாளும் - நாள்தோறும், சீர்ஆர்ந்த - ஐச்வர்ய ப்ரகாசகமான, முழவோசை - வாத்யகோஷங்கள், பரவை காட்டும் - ஸமுத்ர கோஷத்தைக்காட்டி நின்றுள்ள, திருவரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்—போராழி - யுத்தோந்முகமான திருவாழியைக்கையிலேயுடைய, அம்மானை - ஸர்வேஸ்வரனை, கண்டு -ஸேவித்து, துள்ளி - ஸஸம்ப்ர மநருத்தம் பண்ணி, பூதலத்தில் - பூமியிலே, புரளும்நாள் - புரளும்காலம், என்றுகொலோ- என்றோ. (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (தூராதமனக்காதல் தொண்டர் தங்கள்குழாங்குழுமி) (க) "தூராக்குழி தூர்த்தெனைநா ளகன்றிருப்பன்" என்று-ஸம்ஸாரிகள் ஶப்தாதிவிஷயங்களைப்பலநாள் அநுபவித்தாலும் இந்த்ரியங்களை த்ருப்தியாக்கப் போகாதாப்போலே, பகவதநுபவம் ஒருகாலும் ஆராதிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் குழாத்திலே யென்னையுங்கூடக் கலசி. (திருப்புகழ்கள் பலவும் பாடி) அவனுடைய கல்யாண குணங்களுக்கு வாசகமான திருநாமங்கள் பலவற்றையும்பாடி. (ஆராதமனக்களிப்போ டழுதகண்

(க) தி - வாய் - இ - அ.

ணீர்மழைசோர) திருநாமங்களைச் சொன்னபடியாலே மநஸ்ஸுக்கு ஆர்த்ரமையாலே ஹ்ருஷ்டனாய் அத்தாலே ஆநந்தாஶ்ருப்ரவஹிக்க.

(நினைந்துருகியேத்தி) இவர்கள் திரளிலே கூடி திருநாமத்தைச் சொன்னபடியாலே திருநாமத்வாராவிஷயத்தை நினைத்து அத்தாலேயுருகி, "உருகிவழிந்து புறப்பட்டசொல்" என்னும்படி ஸ்தோத்ராதிகளைப்பண்ணி, (நாளும் சீரார்ந்த வித்யாதி) ஐஶ்வர்யப்ரகாஶகமான வாத்யகோஷங்கள் ஸமுத்ரகோஷத்தைக் காட்டாநிற்கிற கோயிலிலே திருவநந்தாழ்வான்மேலே நித்யவாஸம் பண்ணுகிற யுத்தோத்முகமான திருவாழியைக் கையிலேயுடைய ஸர்வேஶ்வரனை, (துள்ளி) ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணி, (பூதலத்தி லென்றுகொலோ புரளுநாளே) ஸிம்ஹாஸநத்திலே இருமாந்திருக்கு மிருப்பொழிந்து ஹ்ருஷ்டனாய் பூமியிலே புரளுவதென்றுகொலோ. ... ... (கூ)

வன்பெருவானகமுய்ய வமருய்ய
மண்ணுய்ய மண்ணுலகின்மனிசருய்யத்
துன்பமிகுதுயரகலவயர்வொன்றில்லாச்
சுகம்வளரவகமகிழுந்தொண்டர்வாழ,
அன்பொடுதென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும்
அணியரங்கன்திருமுற்றத்தடியார்தங்கள்
இன்பமிகுபெருங்குழவு கண்டியானும்
இசைந்துடனே யென்றுகொலோ விருக்குநாளே. (க0)

ப - ரை.—வல் - நைமித்திகப்ராளயத்திலழியாததாய், பெரு - பெருமை ஸத்யலோகம் தங்கிய, வானகம்-முதலிய லோகங்கள், உய்ய-உய்யும்படியாகவும், அமரர் - தேவர்கள், உய்ய - உஜ்ஜீவிக்கும்படியாகவும், மண் - பூலோகம், உய்ய - உய்யவும், மண்ணுலகில் - பூலோகத்திலுண்டான, மனிசர் - மநுஷ்யர், உய்ய - உஜ்ஜீவிக்கவும், மிகுதுன்பம் - மிக்க துஃகத்தைவிளைப்பதான, துயர் - பாபங்கள், அகல - நீங்கவும், அயர்வொன்றில்லா - துஃகம்கலவாத, சுகம் - நித்யமான ஸுகமானது, வளர - வளரவும், அகம்மகிழும் - நிரதிசயாநந்தயுக்தரான, தொண்டர் - ஸ்ரீவைஷ்ணவர்கள், வாழ - வாழவும், அன்பொடு - ஸ்ரீவிபீஷணாழ்வான் பக்கலுண்டான அன்பாலே, தென்திசைநோக்கி - "தென்திசையிலங்கை நோக்கி" என்கிறபடியே - லங்கையைப்பார்த்தவண்ணமாக, பள்ளிகொள்

ளும் - கண்வளர்ந்தருளுகிற, அணியரங்கன் - பெரியபெருமாளுடைய, திரு முற்றத்து - உள்ளில் திருமுற்றத்திலே, மிகுஇன்பம் - நிரதிசயாநந்தயுக்தரா யிருக்கிற, அடியார் தங்கள் பெருங்குழவுகண்டு - ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பெரியதிரளைக்கண்டு, யானும் - நானும், இசைந்து - அவர்களிலே ஒருவனாக விசைந்து, இருக்கும்நாள் - இருக்குங்காலம், என்றுகொலோ—. (கO)

வ்யா.—பத்தாம்பாட்டு. (வன்பெருவானகமுய்ய வமரருய்ய) நைமித்திகப்ரளயாபத்துக்கு இளையாக ப்ரஹ்மலோகம் முதலாக மேலுண்டான லோகங்களுய்ய. அங்குண்டான ப்ரஹ்மாதிகளுஜ்ஜீவிக்க வாய்த்து ப்ரஹ்மலோகத்தில் கோயிலாழ்வார் எழுந்தருளியிருந்தபடி. (மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய) ஸ்ரீ விபீஷணாழ்வானுக்காக அங்கு நின்றும் இங்கேற வெழுந்தருளுகையாலே பூமியும் பூமியிலுண்டான சேதநரு முஜ்ஜீவிக்க. (துன்பமிகு துயரகல) நித்யதுக்கத்தை விளைப்பிப்பதான பாபங்கள் அகல. (அயர்வொன்றில்லாச்சுகம் வளர) துக்கம் மிஶ்ரியாத நித்யமான ஸுகம் வளர. (அகமகிழுந்தொண்டர்வாழ) பகவதநுபவத்தாலே நிரதிஶயாநந்தயுக்தரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் வாழ.

(அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கன் திருமுற்றத்து) ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து அத்திக்கைப்பார்த்துக் கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாளுடைய உள்ளில் திருமுற்றத்திலே (அணியரங்கன்) அழகியவரங்கத்தைத் தனக்கு வாஸஸ்தாநமாகவுடையவன் (அடியார் தங்கள் இன்பமிகு பெருங்குழவுகண்டு) நிரதிஶயாநந்தயுக்தரா யிருக்கிற ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளைக்கண்டு (யானுமிசைந்து) "அபிஷிக்தக்ஷத்ரியன்" என்று என்னை நினையாதே அவர்களிலே யொருவனாகவிசைந்து. (உடனே யென்றுகொலோ இருக்குநாளே) என்னைச்சிலர் ஸேவிக்க நான் நியாமகனாயிருக்கு மிருப்பையொழிந்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளிலே ஸேவித்திருப்பதென்றோ.(கO)

அரு ;—பத்தாம் பாட்டு. (வன்பெருவித்யாதி) அயர்வு - அஜ்ஞாநமாய், அவித்யாஸ்மிதைமுதலான பஞ்சக்லேஶமின்றிக்கே யிருக்கை. (கO)

திடர்விளங்குகரைப் பொன்னிநடுவுபாட்டுத்
திருவரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும்
கடல்விளங்கு கருமேனியம்மான்றன்னைக்
கண்ணாரக்கண்டு கக்குங்காதல்தன்னால்,
குடைவிளங்கு விறற்றானைக்கொற்றவொள்வாள்
கூடலர்கோன் கொடைக்குலசேகரன் சொற்செய்த
நடைவிளங்குதமிழ்மாலை பத்தும்வல்லார்
நலந்திகழ்நாரண னடிக்கீழ்நண்ணுவாரே. (கக)

ப - ரை.—விளங்கு - விளங்காநின்ற, திடர் - மேடான, கரை - திருக்கரையையுடைத்தான, பொன்னி - காவேரிசூழ்ந்த, நடுவுபாட்டு - மத்ய ப்ரதேசத்திலே, திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்—, கடல்-கடல்போலே, விளங்கு - ப்ரகாசிக்குமதாய், கரு - ஶ்யாமளமான, மேனி - திருமேனியையுடைய, அம்மான் றன்னை - ஸர்வேச்வரனை, கண் ஆர - கண்கள் நிறையும்படி, கண்டுகக்கும் காதல் தன்னால் - கண்டநுபவிக்க வேணுமென்னு மாசையாலே, விளங்கு - விளங்குகிற, குடை - வெண்கொற்றக் குடையையும், வில் - வெற்றியையுடைய, தானை - ஸேனையையும், கொற்றம் - ஜயப்ரதமான, ஒள் - ஒளிபொருந்திய, வாள் - வாளையுமுடையராய், கூடலர் - மதுரையிலுள்ளார்க்கு, கோன் - நிர்வாஹகருமாய், கொடை - கொடையையுடையரான, குலசேகரன் - ஸ்ரீ குலசேகரப்பெருமாள், சொற்செய்த - அருளிச்செய்ததாய், நடைவிளங்கு - நடையால் விளங்குகிற, தமிழ்மாலைபத்தும் வல்லார் - தமிழ்த்தொடையான இப்பத்துப்பாட்டையும் சொல்லவல்லவர்கள், நலம்திகழ்-சீலாதிகுணபூர்ணராய், நாரணனடிக்கீழ்-வத்ஸலராயிருக்கும் பெரியபெருமாள் திருவடிகளின்கீழே, நண்ணுவார் - கிட்டப்பெறுவர்கள். ... (கக)

அவ ;—பதினோராம் பாட்டு. "ஸர்வோத்க்ருஷ்டே ஸத்ஸஞ்சாரம் ஸந்தஸம்ஸாரணாம்ஹிதோத்பஸர்வேது ஶ்ரேயஸேதைவதாநாம் | ஶ்ரீரங்கேசராஜ்ஞாம் ... குப்த்யை ஶ்ரேயஸேதைவதாநாம் | ஶ்ரியைராஜ்ஞாம் சோளவம் ஶோத்பவாநாம் ஸ்ரீமத்ரங்கம் ஸஹ்யஜாமாஜகாம."

வ்யா —(திடர்விளங்குகரைப் பொன்னிநடுவுபாட்டு) விளங்காநின்ற திருக்கரையை யுடைத்தாய்க் கரையையுமுடைத்தான

அரு ;—பதினோராம்பாட்டு (திடரித்யாதி) (குறை) திருமுடிக்குறை. தானை - ஸேனை. கொற்றம் - வெற்றி. (கக)

முதல்திருமொழி அரும்பதம் முற்றிற்று.

காவேரிசூழ்ந்த. (திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும் கடல் விளங்கு கருமேனியம்மான்றன்னை) கோயிலிலே திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற கடல்போலே ஶ்ரமஹரமான திருமேனி நிறத்தையுடைய ஸர்வேஶ்வரனை. (கண்ணாரக்கண்டு உகக்கும் காதல்தன்னால்) கண்ணாலே கண்டநுபவிக்க வேணுமென்னும் ஆசைப்பாட்டோடே.

(குடைவிளங்கு விறல்தானைக் கொற்றவொள்வாள் கூடலர் கோன்) விளங்குகிற வெண்கொற்றக்குடையையும் வெற்றியையுடைய ஸேனையையும், † ஐஶ்வர்யப்ரகாஶகமானவாளையு முடையராய் மதுரைக்கு நிர்வாஹகருமான. (கொடைக்குலசேகரன் சொற்செய்த) கொடைமாறாதே கொடுக்கும் பெருமாள் அருளிச்செய்த. (நடைவிளங்கு தமிழ்மாலை பத்தும்வல்லார்) உள்ளில் அர்த்தத்திலிழியவேண்டாதே, பதங்கள் சேர்ந்த சேர்த்திகள் பார்க்கவும்வேண்டாதே, இதுதானே ஆகர்ஷகமாயிருக்கிற தமிழ்த்தொடை பத்தும்வல்லார். (நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே) ஶீலாதிகுணபூர்ணராய், ஸர்வஸ்வாமியாய், வத்ஸலராயிருக்கும் பெரியபெருமாள் திருவடிகளின்கீழே யநுபவிக்க ஆசைப்பட்டாப்போலே கிட்டப்பெறுவர்கள். ... (கக)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

முதல் திருமொழி முற்றிற்று.

இரண்டாந்திருமொழி தேட்டரும் ப்ரவேசம்.

(o)

அவ.—பகவத்விஷயத்திலே கைவைத்தார்க்கு ஸம்பவிப்பன சில ஸ்வபாவங்களுண்டு; ஆநுகூல்யஸங்கல்பாதிகள். (க) "𑌆𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍂𑌲𑍍𑌯𑌸𑍍𑌯𑌵𑌰𑍍𑌜𑌨𑌮𑍍- ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்யவர்ஜநம்." ஆநுகூல்யமாவது - பாகவத விஷயத்திலும் பகவத்விஷயத்திலும் பண்ணுமாநுகூல்யம். பகவத்விஷயம் பூர்ணமாகையாலே இவனுக்கு ஆநுகூல்யம் பண்ணுகைக்குத் துறையில்லையிறே. இப்படி துறையில்லையென்று இவன்

அரு;—தேட்டரும் ப்ரவேஶம். (துறையில்லை) இறங்கவழியில்லை.

† (பா) அழகிய.

(க) அஹி-ஸம்ஹி-௩௭-௩௨.

கைவாங்காமைக்கிறே இவனுகந்தத்ரவ்யமே தனக்குத் திருமேனியாகவும் இவன் திருமஞ்சநம் பண்ணினபோது திருமஞ்சனம் பண்ணியும், அமுதுசெய்யப் பண்ணினபோது அமுதுசெய்தும் அல்லாதபோது பட்டினியுமாம்படியிறே அவர்களுக்குத் தன்னை யமைத்துவைப்பது; இப்படியாய்த்ததில்லையாகில் பரிபூர்ண விஷயத்தில் இவனுக்கு கிஞ்சித்கரிக்கைக்குத் துறையில்லையிறே. (க) '𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍-ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்'என்றும் (உ) "𑌮𑌮 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌹𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌃 - மமப்ராணாஹிபாண்டவா:" என்றும், (௩) "பத்தராவி" என்றிருக்குமவனுகையாலே, ததீய விஷயத்திலே பண்ணும் ஆநுகூல்யமும் பகவத்விஷயத்திலே பண்ணிற்றுமிறே. ஆகையாலே இவருக்குத் தமக்கு இவை யிரண்டும் பிறந்ததென்கிறார். பகவத்விஷயத்தில்பிறந்த ஆநுகூல்யம் சொன்னார்-கீழில் திருமொழியில்; ததீயவிஷயத்தில் ஆநுகூல்யம் பிறந்தபடி சொல்லுகிறார் - இத்திருமொழியில். ... ... *

அவ.—முதற்பாட்டு. (தேட்டருமித்யாதி) முடியபாகவத விஷயமுத்தேஶ்யமாகிறது பகவத்குணங்களிலே அவகாஹித்தாரென்னுமதிறே. "இன்னான் அர்த்தமுடையவன், க்ஷேத்ரமுடையவன்" என்று ஆஶ்ரயிப்பாரைப்போலே, பகவத்ப்ரத்யாஸத்தியுடையாரென்றிறே இவர்களைப்பற்றுகிறது. பகவத்விஷயத்திலே ஸ்தோத்ரம்பண்ண இழிந்தவர் ஆசார்யவிஷயத்தை ஸ்தோத்ரம் பண்ணப்புக்கு அவர்க்கு நிறமாகச்சொல்லிற்று பகவத்விஷயத்தில் ஜ்ஞாநபக்திகளையிறே; (௪) "𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌰𑌾𑌶𑌯𑍇 - ஜ்ஞாநவைராக்யராஶயே."

அரு;—முதற்பாட்டு (தேட்டருமித்யாதி). பாகவதவிஷயத்தில் தமக்குப் பிறந்தவாநுகூல்யம் சொல்லுகிறாராகில் பகவத்ப்ரத்யாஸத்தியையிட்டுச் சொல்லுவானென் னென்னவருளிச்செய்கிறார் (முடிய பாகவதவிஷய மித்யாதி). பாகவதவிஷயத்தை ஸ்தோத்ரம்பண்ணப்புக்கு பகவத்ப்ரத்யாஸத்தியை அவர்களுக்கு ஏற்றமாகச் சொன்னபேருண்டோவென்ன வருளிச்செய்கிறார் (பகவத் விஷயத்திலித்யாதி). (க)

(க) கீதை-எ-க௮. (௩) தி-மொ ௧௰-௧-௮
(உ) பார-உத்யோ-௯௰-௩௨ (௪) ஸ்தோ-ரத்ந-௧.

தேட்டருந்திறற்றேனினைத் தென்னரங்கனைத் திருமாதுவாழ்
வாட்டமில்வனமாலைமார்பனை வாழ்த்தியால்கொள்சிந்தையராய்,
ஆட்டமேவியலர்ந்தழைத்தயர்வெய்துமெய்யடியார்கள்தம்
ஈட்டங்கண்டிடக்கூடுமேலது காணுங்கண்பயனாவதே. (க)

ப-ரை.—தேட்டு - ஸ்வயத்நத்தால் தேடுகைக்கு, அரும் - அரிதாய், திறல் - தன்னை அநுபவிக்கைக்குத் தக்க பலத்தைக்கொடுக்கும், தேனினை - தேன்போலே பரமபோக்யனாய், தென் - ஸ்ப்ருஹணீயமான, அரங்கனை-திருவரங்கத்திலே நித்ய வாஸம் பண்ணுமவனாய், திருமாது - பெரியபிராட்டியார், வாழ் - நித்யவாஸம் பண்ணுமதாய், வாட்டம் இல் - ஒருகாலும் வாடாமல், வனம் - அழகுபெற்றிருக்கிற, மாலை - திருமாலை சாத்தியருளின, மார்பனை - திருமார்புடையவனை, வாழ்த்தி - அவனும் அவளுமானசேர்த்திக்கு மங்களாசாஸநம் பண்ணி, மால்கொள் சிந்தையராய் - பித்தேறின மநஸ்ஸையுடையராய், அத்தாலே, ஆட்டம்மேவி-ஆடுகையிலே ஒருப்பட்டு, அலர்ந்து - ஆடலின் மிகுதியால் வருந்தி, அழைத்து - வாய்படைத்த ப்ரயோஜநம் பெறக்கூப்பிட்டு, அயர்வு எய்தும்-மெய்ம்மறந்துநிற்கிற, மெய் - அநந்யப்ரயோஜநரான, அடியார்கள் தம் ஈட்டம் - அடியார்கள் குழாங்களை, கண்டிடக்கூடுமேல் - காணக்கூடுமாகில், கண்பயனாவது - கண்படைத்த ப்ரயோஜநமாகிறது, அதுகாணும் - அதுவே யாம். (க)

வ்யா.—(தேட்டரும்) தானேவந்து ஸுலபனாமித்தனை யல்லது ஸ்வயத்நத்தால் காணவொண்ணா ‡ தென்கை. (திறல்தேனினை) (க) "ய ஆத்மதா பலதா" என்னுமாப்போலே தன்னையுங்கொடுத்துத் தன்னை யநுபவிக்கைக் கீடானபலத்தையுங் கொடுக்குந்தேன். (தேனினைத்தென்னரங்கனை யித்யாதி) ஸ்ப்ருஹணீயமான திருவரங்கத்திலே நித்யவாஸம்பண்ணுமவனாய், திருமேனியின் ஸ்பர்ஶத்தாலே ஒருகாலைக்கொருகால் செவ்விபெறுமாய்த்து இட்ட திருமாலை. (வாழ்த்தி) (உ) "வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்கிறபடியே அவளும் இவனும் சேர்ந்த சேர்த்திக்கு மங்களாஶாஸநம் பண்ணி. (மால்கொள் சிந்தையராய்) பித்தேறின மநஸ்ஸையுடையராய்.

---

‡ (பா) தேன். (க) (உ) திருப்பல்லாண்டு.

(ஆட்டமேவி) ஆடவேணுமென்னும் கார்யபுத்யாவன்றியிலே ப்ரேமம் ஓட்டாமையாலே ஆட்டமேவி. (அலர்ந்தழைத்து) அலமாந்து கார்யப்பாடறக் கூப்பிட்டு. (அயர்வெய்தும் மெய்யடியார்கள்தம்) க்ரமப்ராப்தி பொறாமையாலே அறிவுகுடிபோய் பரவஶரான அநந்யப்ரயோஜநருடைய. (ஈட்டம்) இப்படியிருப்பார் உமக்கு எத்தனைபேர் வேணுமென்ன ; * அடியார்கள் குழாங்களைக் காணப்பெறில். (கூடுமேல் அதுகாணுங் கண்பயனாவதே) இது கூடிற்றாகில் ப்ரயோஜநங் கண்ணுக்கிதல்லதில்லை. த்ருஷ்டப்ரயோஜநமிது. ... ... (க)

தோடுலாமலர் மங்கைதோளிணைதோய்ந்ததுஞ்சுடர் வாளியால்
நீடுமாமரஞ்செற்றதும் நிரைமேய்த்ததுமிவையேநினைந்து,
ஆடிப்பாடியரங்கவோ என்றழைக்கும் தொண்டரடிப்பொடி
ஆடநாம்பெறில் கங்கைநீர்குடைந்தாடும்வேட்கை யென்னாவதே.

ப - ரை.—தோடு உலாம் - இதழ்மிக்கிருந்துள்ள, மலர் - தாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடைய, மங்கை - பெரியபிராட்டியாருடைய, தோள்இணை, திருத்தோள்களோடு, தோய்ந்ததும் - அணைந்தருளினதும், சுடர் - புகரையுடைய, வாளியால் அம்பாலே, நீடு-உயர்ந்த, மாமரம்-மராமரங்களேழையும், செற்றதும் - ஒருக்காலே துளையாம்படி எய்ததும், நிரைமேய்த்ததும் - பசு நிரையை மேய்த்ததும், ஆகிய, இவையேநினைந்து - இந்த சீலாதிகுணங்களையே நினைத்து, ஆடி - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே இருந்தவிடத்திலிருக்க மாட்டாதேயாடி, பாடி - அதுக்குப்போக்குவிட்டுப்பாடி, ஓ அரங்க என்று அழைக்கும் - ஓ அரங்கனே என்று கூப்பிடுகிற, தொண்டர் - தாஸபூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, அடிப்பொடி - பாதரேணுக்களிலே, நாம்—, ஆடப்பெறில் - அவகாஹிக்கும்படியான பாக்யத்தைப்பெற்றால், கங்கைநீர் - கங்காஜலத்திலே, குடைந்து - அவகாஹித்து, ஆடும் - நீராடுதலில் உண்டாகும், வேட்கை - ஆசையானது, என் ஆவது - என்னப்ரயோஜநத்தை யுடையது. (உ)

வ்யா.—இரண்டாம் பாட்டு. (தோடுலாமலர் மங்கைதோளிணைதோய்ந்ததும்) இதழ்மிக்கிருந்த தாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடைய பெரியபிராட்டியார் திருத்தோள்களிரண்டையும்

தோய்ந்ததும்; தனியன் பெருவள்ளத்திலேயிழிந்து அநுபவிக்கத் தேடினாப்போலே தோய்ந்ததும். (சுடர்வாளியால்) புகரையுடைய அம்பாலே. (நீடுமாமரம்செற்றதும்) ஓக்கத்தையுடைத்தான மராமரங்களேழும்எய்ததும், பண்டே துளையானவற்றிலே ஓட்டினாப்போலேயாய்த்து, அநந்தமாய் பலவத்தரமான ஸப்தஸாலத்தை நிரஸித்ததும். ஆஶ்ரிதரை விஶ்வஸிப்பிக்கும் செயலிறே. (நிரைமேய்த்ததும்) உபயவிபூதிநாயகனா யிருந்துவைத்து கையிலே யொருகோலைக்கொண்டு பசுமேய்த்ததும். (இவையே நினைந்து) இந்த ஶீலாதிகுணங்களையே நினைந்து. இவற்றை நினைக்குமதொழிய வேறொரு ப்ரயோஜநத்தையும் கணிசியாதே.

(ஆடிப்பாடி) ப்ரீதிப்ரகர்ஷத்தாலே யிருக்கமாட்டாதே ஆடிப்பாடி. (அரங்கவோ என்றழைக்கும்) பெருமாள் திருநாமத்தைச் சொல்லி யாற்றமாட்டாதே கூப்பிடும். (தொண்டரடிப்பொடியாடநாம்பெறில்) பகவத்குணவித்தரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பாதரேணுக்களிலே அவகாஹிக்கப்பெறில். எப்போதும் மொக்க பகவத் ஸம்பந்தமுடைய ராகையாலே தீர்த்த பூதரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பாதரேணுக்களிலே அவகாஹிக்கப்பெறில் (கங்கை நீர்குடைந்தாடும் வேட்கை யென்னாவதே) காதாசித்கஸம்பந்தமேயாய்ப்பலசிக்கத்தலைகளிலே புக்கு உபஹதிப்பட்டகங்கையாடினால் என்ன ப்ரயோஜநமுண்டு. (க) [நலந்திகழ்சடையான்] (இத்யாதி) பொதுவானதிறே அது. ... ... (உ)

ஏறடர்த் ததுமேனமாய் நிலங்கிண்டதும் முன்னிராமனாய்
மாறடர்த்ததும் மண்ணளந்ததும் சொல்லிப்பாடி வண்பொன்னிப்பேர்,
ஆறுபோல்வருங் கண்ணநீர்கொண்டு அரங்கன்கோயிற்திருமுற்றம்
சேறுசெய்தொண்டர் சேவடிச்செழும் சேறென் சென்னிக்கணிவனே. (ங)

அரு ;—இரண்டாம்பாட்டு (தோடுலாமித்யாதி). (பலசிக்கத்தலை) பல ஜடையையுடைய ருத்ரன்தலை. (உ)

(க) பெரி-தி-௫-எ.உ.

ஸ்நேஹத்துக்கு அவதியுண்டாகிலிறே கோபத்துக்கு அவதியுண்டாவது. (ஆய்ச்சிகண்டு) வாயதுகையதுவாகக்கொண்டியோடே கண்டு பிடித்தாளாய்த்து. (ஆர்த்ததோளுடை யெம்பிரான்) கண்டவாறே கையைப்பிடித்துக் கட்டினாள். (எம்பிரான்) ஆஸ்ரித ஸ்பர்ஶமுள்ள த்ரவ்யத்தா லல்லது செல்லாமையைக் காட்டி என்னை யநந்யார்ஹனாக்கினவன். (என்னரங்கனுக்கடியார்களாய்) அவதாரகாலத்தில் இழந்தாரிழவுதீரவந்து ஸுலபரான பெரிய பெருமாளுடைய செயலாலே யெழுதிக்கொடுத்தவர்களாய்த்து.

(நாத்தழும்பெழ) நாவானது தழும்பேறும்படி. (நாரணவென்றழைத்து) "அம்மே" என்பாரைப்போலே திருநாமத்தை அடைவுகெடச்சொல்லி. (மெய்த்தழும்பத்தொழுது) ப்ரணமம் பண்ணினபடி தோற்ற உடம்பெல்லாம் தழும்பாக; சிறியாத்தானைப்போலே (ஏத்தி) இப்படிப்பட்ட சொல்களைச் சொல்லி யேத்தி. (இன்புறுந்தொண்டர் சேவடி) மநஸ்ஸிலே வைத்தேத்துகையாலே விஷயத்தைக் கிட்டினால் பிறக்கும் நிரதிஶயாநந்தயுக்தாயிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்ரீ பாதங்களை. (தொண்டர் சேவடியேத்தி வாழ்த்து மென்னெஞ்சமே) அவர்கள் தாங்கள் அகப்பட்ட நவநீதசௌர்யத்தில் போகாது என்னெஞ்சு; அதிலே யகப்பட்டவர்கள் தங்களை ஏத்திவாழ்த்து மித்தனை. (ஏத்திவாழ்த்தும்) இச்செயலுக்கு இவர்கள் நிலவராவதே! என்று ஸ்தோத்ரத்தைப்பண்ணி, இது நித்யமாக வேணுமென்று மங்களாஶாஸநம் பண்ணுநிற்கும் என்னெஞ்சு. ... ... (௪)

பொய்சிலேக்குரலேற்றெருத்த மிறுத்துப்போரரவீர்த்தகோன்
செய்சிலேச்சுடர்சூழொளித் திண்ணமாமதிள்தென்னரங்கனாம்
மெய்சிலேக்கருமேகமொன்றுதன்னெஞ்சில் நின்றுதிகழப்போய்
மெய்சிலிர்ப்பவர் தம்மையேநினைந்தென்மநம்மெய்சிலிர்க்குமே. (ரு)

ப - ரை.—பொய் - க்ருத்ரிமமாய், சிலே - கோபத்தையுமுடைத்தான, குரல் - த்வநியையுடைய, ஏறு - ரிஷபங்களினுடைய, எருத்தம் - கழுத்துக்களை, இறுத்து - முறித்தும், போர் - யுத்தோந்முகமான, அரவு - காளியனென்கிற ஸர்ப்பத்தை, ஈர்த்த - நிரஸிக்கையாலே, திருவாய்ப்பாடியிலுள்ளார்க்கு, கோன் -

---

அரு ;—நாலாம்பாடு. (தோய்த்ததயிர்த்யாதி) ஸ்நேஹம் - சாடு. (கொண்டி) களவு. (௪)

நாதனானவனாய், சிலை - கல்லினாலே, செய் - செய்யப்பட்டு, சுடர் ஒளி - மிக்க ஜ்யோதிஸ்ஸையுடைத்தாய், திண் - திண்மையையும், மா - உயர்த்தியையுமுடைய, மதிள் - மதிள்களாலே. சூழ் - சூழப்பட்டு, தென்-ஸ்ப்ருஹணீயமான அரங்கன் ஆம் - ஸ்ரீரங்கத்தில் நித்யவாஸம் பண்ணும் அழகியமணவாளராகிய; மெய் - சரீரத்தில், சிலை - இந்த்ரதநுஸ்ஸோடுகூடின, கரு - கறுத்த, மேகம் ஒன்று - ஒருமேகமானது, தம்நெஞ்சுள்-தங்கள்மநஸ்ஸில், நின்று-நிலைபெற்று, போய்த்திகழ - மிகவும் விளங்கும்படி, மெய்சிலிர்ப்பவர்தம்மையேநினைந்து - புளகிதகாத்ரராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களையே நினைத்து, என்மநம் - என் மநஸ்ஸானது, மெய் - மெய்யே, சிலிர்க்கும்-புளகியாநின்றது என்கிறார். (ரு)

வ்யா.—அஞ்சாம் பாட்டு. (பொய்சிலைக் குரலேற்றெருத்த மிறுத்து) பொய் - க்ருத்ரிமம். சிலை - கோபம். அஸுராவேஶத்தாலே க்ருத்ரிமமாய் கோபத்தையுமுடைத்தாயிருந்துள்ள ஏறு மிறுயப்பொருது. நப்பின்னைப் பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு விரோதியானவையுமாய்ப் பொருகிறவையுமாய்ச் சிலைபோலே கோரமான த்வநியையுடைத்தாயிருந்துள்ள ரிஷபங்களின் கழுத்தை முறித்து. (போரரவு ஈர்த்தகோன்) திருவாய்ப்பாடியில் பசுக்களும் இடையரும் தண்ணீர் குடிக்கவொண்ணாதபடி ஜலத்தை தூஷித்துக்கிடந்த காளியன், யுத்தோந்முகனாய்ப் புறப்படும்படி கலக்கிப் பொய்கையில்நின்றும் போகவிட்டு, அத்தாலே திருவாய்ப்பாடியிலுள்ளார்க்கு நாதனானவனை. (செய்சிலைச் சுடர்சூழொளித் திண்ணமாமதிள் தென்னரங்கனாம்) கல்லாலே செய்யப்பட்டுப்பிறரால் அபிபவிக்கவொண்ணாதபடியான மதிப்பையுடைத்தாய் திண்மையையும் ஒக்கத்தையுமுடைத்தான திருமதிள்கள் பலவுஞ் சூழ்ந்திருக்கிற கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற.

(மெய்சிலைக் கருமேகம்) உடம்பிலே வில்லையுடைய மேகமென்னுதல்; மெய்யேவில்லோடே கூடின மேகந்தானென்னுதல். (ஒன்று தம்நெஞ்சில் நின்று திகழப்போய்) (க "ஸாக்ஷாத் ஊநகாரணாநீ - ஸோபயந் தண்டகாரண்யம்" என்னு

அரு ;—அஞ்சாம்பாட்டு. (பொய்சிலையித்யாதி). பொய் - அஸுராவேஶமாகையாலே பொய்யான ரிஷபமென்கிறது. சிலைக்குரல் - இடிபோலேயிருக்கை.

(க) ரா - ஆ.

மாப்போலே மாணிக்கக் குப்பியில் உள்ளுநின்றநிலே புறம்பே தெரியுமாப்போலே பெரியபெருமாளைத் தங்கள் நெஞ்சிலே எழுந்தருளுவித்து வைக்கையாலே நிழலிடாநிற்குமிறே. (மெய்சிலிர்ப்பவர்) உள்ளே யெழுந்தருளி யிருக்கிறபடியை யநுஸந்தித்து புளகித காத்ரராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் (தம்மையே நினைந்து என்மநம் மெய்சிலிர்க்குமே) பெரியபெருமாளை யநுபவித்து அவர்களுடம்பு படும்பாட்டை, அவர்களை யநுபவித்து என்னெஞ்சுபடாநின்றது. ஸ்பர்ஶத்ரவ்யம் பட்டதெல்லாம் படாநின்றது அமூர்த்த த்ரவ்யம். ... ... (ரு)

ஆதியந்தமநந்தமற்புதமான வானவர்தம்பிரான்
பாதமாமலர்சூடும் பத்தியிலாதபாவிகளுய்ந்திடத்
தீதில்நன்னெறிகாட்டியெங்கும் திரிந்தரங்கனெம்மானுக்கே [மே.
காதல்செய்தொண்டர்க்கெப்பிறப்பிலுங் காதல்செய்யுமென்னெஞ்ச

ப - ரை.—ஆதி - ஜகத்காரணபூதனாய், அந்தம் - ப்ரளயகாலத்திலும் ஓரசை வின்றியிருக்குமவனாய், அநந்தம் - காரணகார்யங்க ளிரண்டிலும் வ்யாபித்து நிற்குமவனாய், அற்புதம் - ஆச்சர்யபூதனாய், ஆன - எப்போதுமொக்க உளராயிருக்கும், வானவர்தம்பிரான் - நித்யஸூரிகளுக்கு நாதனான ஸர்வேஶ்வரனுடைய, பாதம் - திருவடிகளாகிற, மா - ஶ்லாக்யமான, மலர்-தாமரைமலர்களை, சூடும்-ஶிரோபூஷணமாகக்கொள்ளும், பத்தி இலாத-பக்தியில்லாத, பாவிகள்-பாபிகளானவர்கள், உய்ந்திட-உஜ்ஜீவிக்கும்படி, எங்கும்-தேசமெங்கும்புக்கு, திரிந்து - ஸஞ்சரித்து, தீது இல் - குற்றமில்லாத, நல்நெறி - நல்வழியேபோம்படி - காட்டி - தாங்க ளநுஷ்டித்துக் காட்டி, எம்மான் - என்னை அநந்யார்ஹனாக்கின, அரங்கனுக்கு-பெரியபெருமாள் திருவடிகளிலே, காதல்செய் - பக்தியையுடையராயிருக்கிற, தொண்டர்க்கு-ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, என்நெஞ்சம்-என் மநஸ்ஸானது, எப்பிறப்பிலும் - அநேக ஜந்மங்களிலே, அவர்களுக்கு அடிமைசெய்யவேணும் என்று, காதல்செய்யும் - ஆசைப்படாநின்றது என்கிறார்.

வ்யா.—ஆறாம் பாட்டு. (ஆதி) ஜகத்காரணபூதன். (அந்தம்) ப்ரளயகாலத்திலும் ஸதவஸ்தனாய் நிற்குமவன். (அநந்தம்) காரணாவஸ்தையிலும் கார்யாவஸ்தையிலு மொக்க வ்யாபித்து

ஸ்பர்ஶத்ரவ்யம் - ஶரீரம். (ரு)

அரு ;—ஆறும்பாட்டு. (ஆதியித்யாதி) காரணாவஸ்தை - ஸ்ருஷ்ட்யுந்முகனாயிருக்கிறவவஸ்தை. (சு)

நிற்குமவன். (அற்புதம்) கார்யாவஸ்தையோடு ஸதவஸ்தனுய் நிற்குமத்தோடு வாசியற நிற்கும்நிலைகள் வேறேரிடத்தில் காண வொண்ணுதென்னும்படியிருக்கும் ஆஸ்சர்யபூதன். (ஆனவானவர் தம்பிரான்) ஆனபோதும் அமிழ்ந்தபோதும் எப்போது மொக்க உளராயிருக்கும் நித்யஸூரிகளுக்கு நாதன். உபயவிபூதிநாத னென்றபடி. (பாதமாமலர்சூடும்பத்தியிலாத) அவன் திருவடிக ளாகிற செவ்வித்தாமரையைச்சூடும் பக்தியையுடையரா யிருக்கை யாய்த்து கர்த்தவ்யம்; அதில்லாத. (பாவிகளுய்ந்திட) பக்தியில் லாதபடி மஹாபாபத்தைப்பண்ணி, (க)"அஸந்நேவ - அஸந்நேவ" என்னும்படி யிருக்கிற தேஸமெங்கும் புக்குஸஞ்சரித்து அவர்களை பக்தியுண்டாக்கி யுஜ்ஜீவிப்பிக்கைக்காக.

(தீதில்நன்னெறிகாட்டி) தீமையோடே கூடின நெறியன் றிக்கே, சேதநர் நல்வழிபோம்படி தாங்களாசரித்துக் காட்டி (எங்குந்திரிந்து) புகக்கடவ தேஸமெங்கும் புக்கு ஸஞ்சரித்து. (அரங்கனெம்மானுக்கே காதல்செய்தொண்டர்க்கு) என்னை யநந் யார்ஹமாக்கின பெரியபெருமாள் திருவடிகளிலே பக்தியுண் டாயிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு. (எப்பிறப்பிலுங் காதல் செய்யு மென்னெஞ்சமே) அநேகஜந்மங்கள் பிறந்து அவர்களுக் கடிமைசெய்யவேணுமென்று ஆசைப்படாநின்ற தென்னெஞ்சு.

மூ;—காரினம்புரைமேனிநற்கதிர் முத்தவெண்ணகைச்செய்யவாய்
ஆரமார்பனரங்கனென்னு மரும்பெருஞ்சுடரொன்றினைச்
சேருநெஞ்சினராகிச்சேர்ந்து கசிந்திழிந்தகண்ணீர்களால்
வாரநிற்பவர்தாளிணைக்கோர் வாரமாகுமென்னெஞ்சமே. (எ)

ப - ரை.—கார் இனம்புரை - மேகஸமூஹத்தையொத்த, மேனி - திரு மேனியையும், நல் - நல்ல, கதிர் - ஒளியையுடைய, முத்தம் - முத்துக்களை யொத்த, வெள் - வெளுத்த, நகை - திருமுத்துக்களையும், செய்ய - சிவந்த, வாய் - திருப்பவளத்தையும், ஆரம் - முக்தாஹாரம்பூண்ட, மார்வன்-திருமார்பை யுமுடையராய், அரங்கனென்னும் - பெரியபெருமாளென்னும் திருநாமத்தை யுடைய, அரும்பெருஞ்சுடர் - நிரவதிகதேஜோரூபராய், ஒன்றினை - அத்வி தீயரானவரை, சேரும் - கிட்டவேணுமென்கிற, நெஞ்சினராகி - மநஸ்ஸை

(க) தை - ஆநந்த.

யுடையராய்க்கொண்டு, சேர்ந்து - அவனைக்கிட்டி, கசிந்து இழிந்த—கண்ண நீர்கள்வாரநிற்பவர்-கண்ணீர் ப்ரவஹிக்கும்படி நிற்பவர்களுடைய, தாளிணைக்கு- திருவடிகளுக்கு, என்னெஞ்சம் - என்மநஸ்ஸானது, ஓர்வாரமாகும் - ஒப்பற்ற பக்தியடையாநின்றது. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (காரினம்புரைமேனி) (க) "தொக்க மேகப்பல்குழாங்கள்" என்றும், (உ) "கார்த்திரளனையமேனி" என்கிறபடியே அழகிய திருமேனியையு முடையராய். (நல்கதிர் முத்த வெண்ணகைச்செய்யவாய்) கண்டாரைப் போகாமல் துவக்க வல்ல வெண்மையையுடைய முத்துநிரைபோலே யிருக்கும் ‡ தந்த பங்க்தியையும், இதுக்குப் பரபாகமான திருவதரத்தில் பழுப்பையுமுடையராய். (ஆரமார்பன்) (ங) "பெரியவரைமார்வில் பேராரம்பூண்டு" என்று ஐஶ்வர்ய ப்ரகாஶகமாம்படி இட்டுப் பூண வேண்டும்படியுள்ள ஹாரத்தையும் திருமார்பிலேயுடையரா யிருக்கிற. (அரங்கனென்னும், அரும் பெருஞ்சுடரொன்றினை) பெரிய பெருமாளென்று உபயவிபூதியிலும் ப்ரஸித்தராய் நிரவதிகதேஜோ ரூபராய் அத்விதீயரானவரை.

(சேரும்நெஞ்சினராகி) அவர்வந்து கிட்டும்போது விலக்காமை யடியாகப்பிறந்த பக்தியையுடையராய். (சேர்ந்து கசிந்திழிந்த கண்ணீர்களால் வாரநிற்பவர் தாளிணைக்கு) அவனைக் கிட்டி நிரதிஶய பக்தியுக்தராய்க் கண்ணுங் கண்ணீருமாய் நிற்குமவர்களுக்கு பக்திபாரவஶ்யத்தாலேயிறே யென்று அங்குத்தைக்கும் இவர்களுக்கு மாய் நில்லாதே இவர்களுடைய திருவடிகளுக்கு.

அரு ;—ஏழாம்பாட்டு. (காரினமித்யாதி) வெண்மையுமென்கிற சகாரத்தாலே ஒளியையும் சொல்லுகிறது. ஆரம் - முத்துமாலே.

(பக்திபாரவஶ்யத்தாலே) பகவத்பக்தி பாரவஶ்ராயிருக்கையாலன்றோ இவர்களுக்கு இந்தவதிஶய முண்டாய்த்தென்று தாமும் இவர்களை ஆதரிக்கிறதென்று அவனையுமிவர்களையும் கலசிஆதரியாதே இவர்களை ஆதரியாநின்றது.

---

‡ (பா) முறுவலேயும். (க) தி - வாய் - அ - ៰ - அ.
(உ) திருமாலே - உஉ. (ங) ங - திருவ - ௫௫.

(ஓர் ஸ்வாரமாகு மென்னெஞ்சமே) அநந்யப்ரயோஜநமாய் நில்லா நின்றதென்னெஞ்சு. ... ... (எ)

மாலையுற்றகடற்கிடந்தவன் வண்டுகிண்டுநறுந்துழாய்
மாலையுற்றவரைப் பெருந்திருமார்பனை மலர்க்கண்ணனை
மாலையுற்றெழுந்தாடிப்பாடித் திரிந்தரங்கனெம்மானுக்கே
மாலையுற்றிடுந்தொண்டர் வாழ்வுக்குமாலையுற்றதென்னெஞ்சமே.

ப - ரை.—‡ மாலை உற்ற - அலையெறிகிற, கடல் - திருப்பாற்கடலிலே, கிடந்தவன் - கண்வளர்ந்தருளுமவனும், வண்டு - வண்டுகள், கிண்டு - குடையாநின்றுள்ள, நறு - நல்ல, துழாய்மாலையுற்ற - திருத்துழாய்மாலைசேர்ந்து, வரை - மலைபோலே, பெரு - விசாலமான, திருமார்வனை - திருமார்பையுடையராய், மலர் - செந்தாமரை மலர்போன்ற, கண்ணனை - திருக்கண்களையுடைய பெரிய பெருமாள் விஷயத்திலே, மாலையுற்று - பக்தியையுடையராய், எழுந்து ஆடி - இருந்தவிடத்தில் இருக்கவொட்டாமையாலே எழுந்து ஆடி, பாடி-ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடிக்கொண்டு, திரிந்து - ஸஞ்சரித்து ; அரங்கன் - கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிற, எம்மானுக்கு - என்னுடையஸ்வாமிக்கு, மாலையுற்றிடும் - பித்தேறித்திரியும், தொண்டர் - தாஸபூதரான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய, வாழ்வுக்கு - வைஷ்ணவலக்ஷ்மிக்கு, என்னெஞ்சம் - என்மநஸ்ஸானது, மாலுற்றது - பித்தேறுநின்றதென்கிறார். ‡ மலை - என்பது மாலை என நீட்டிக்கிடக்கிறது. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (மாலையுற்ற கடல்கிடந்தவன்) ஸ்வஸ்பர்ஶத்தாலே அலையெறிகிற திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறவன். (வண்டுகிண்டு நறுந்துழாய் மாலையுற்றவரைப் பெருந்திருமார்பனை) வண்டுகள் நெருங்கியிருக்கிற செவ்வித்திருத்துழாய் மாலைசேர்ந்து, வரைபோலே யிருக்கிற பெருந்திருமார்வையுடையவரை. (க) "மைபோல் நெடுவரைவாய்த்தாழ மருவிபோல் கார்கிடப்ப" என்னக்கடவதிறே. (மலர்க்கண்ணனை) செவ்வித்தாமரைப்பூப்போலே மலர்ந்த திருக்கண்களையுடையவரை.

அரு ;—எட்டாம்பாட்டு. (மாலையித்யாதி) மாலையுற்றகடல் - உகளிப்பையடைந்த கடல். (அ)

(க) ஙு - திருவ - டுசு.

(மாலையுற்றெழுந்தாடிப் பாடித்திரிந்து) பக்தியையுடையராய் இருந்தவிடத்தி லிருக்கவொட்டாமையாலே எழுந்தாடுவது பாடுவதாய்ப்ரீதிப்ரேரிக்க இருக்கமாட்டாதே ஸஞ்சரித்து. (அரங்கனெம்மானுக்கே மாலையுற்றிடுந் தொண்டர்வாழ்வுக்கு) கோயிலிலே ஸுலபரானபடியைக்காட்டி என்னை யெழுதிக்கொண்ட பெரிய பெருமாளுக்கே பக்திகார்யமான பித்தேறித்திரியும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய வைஷ்ணவலக்ஷ்மிக்கு, (மாலையுற்றதென்னெஞ்சமே) பித்தேறாநின்றதென்னெஞ்சு. ... ... (அ)

அவ ;—ஒன்பதாம் பாட்டு. பித்தேறித்திரிவார்க்கோ நீர் பித்தேறுவதென்ன ; ப்ராப்தவிஷயத்தில் பித்தேறுமவர்கள் பித்தரன்றென்கிறார்.

மொய்த்துக்கண்பனிசோரமெய்கள்சிலிர்ப்பவேங்கியிளைத்துநின்று
எய்த்துக்கும்பிடு நட்டமிட்டெழுந்தாடிப்பாடி யிறைஞ்சியென்
அத்தனச்சனரங்கனுக் கடியார்களாகியவருக்கே
பித்தராமவர்பித்தரல்லர்கள் மற்றையார்முற்றும்பித்தரே. (கூ)

ப - ரை.—கண் - இரண்டு கண்களினின்றும், ஆநந்தக்கண்ணீரானது, பனி - மழைத்தாரைபோலே, மொய்த்துச்சோர - இடைவிடாதே சொரிய, மெய்கள் - சரீரங்கள், சிலிர்ப்ப - மயிர்க்கூச்செறியவும், ஏங்கி-அவனை நினைத்து ஏங்கி, இளைத்துநின்று - இளைத்துச் சிதிலராய், எய்த்து - அசைவற்றுநின்று, கும்பிடுநட்டமிட்டாடி - ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணி, பாடி - ப்ரீதிக்குப்போக்கு விட்டுப்பாடி, இறைஞ்சி - தீர்க்கப்ரணாமம்பண்ணி, என் - எனக்கு, அத்தன் - தந்தையாய், அச்சன் - நாதரான, அரங்கனுக்கு - பெரியபெருமாளுக்கு, அடியார்கள் - தாஸபூதரான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு, ஆகி - அடியார்களாகி, அவருக்கே - அவர்கள் விஷயத்திலே, பித்தராமவர் - பித்தேறித்திரியுமவர்கள், பித்தரல்லர்கள்—; மற்றையார்முற்றும்-அவனுடைய தாஸபூதரிடத்தில் பக்தி பண்ணாதாரெல்லாம், பித்தர் - பித்தராவர்களென்கிறார். (கூ)

வ்யா.—(மொய்த்துக் கண்பனிசோர) $ இரண்டு கண்ணாலே வர்ஷதாரைபோலே சொரிய. (மெய்கள் சிலிர்ப்ப) புளகிதகாத்ரராய் (ஏங்கி யிளைத்துநின்று எய்த்துக்கும்பிடு நட்டமிட்டெழுந்தாடிப்பாடி இறைஞ்சி) விஷயத்தை நினைத்தேங்கி யிளைத்து ஶிதில

$ (பா) திரண்டு.

ராய், அவ்வளவன்றியிலே ஸ்தப்தராய் நின்று. அந்நிலையும் நில்லாதே (கும்பிடு நட்டமிட்டு) ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணி. (இறைஞ்சி) தீர்க்கப்ரணாமத்தைப் பண்ணி.

(என்னத்தனச்சன்) எனக்கு ஜநகனுமாய் ஸ்வாமியுமானவன். அரங்கனுக்கடியார்களாகி) பெரியபெருமாளுக் கநந்யப்ரயோஜநரா யிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக் கடியாராகி. (அவருக்கே பித்த ராமவர் பித்தரல்லர்கள்) அவர்க்கு பக்திமான்களாய் பக்திகார்ய மான பித்தேறித்திரிகிறவர்கள் பித்தரல்லர்கள். (மற்றையார் முற்றும்பித்தரே) இந்த பக்திகார்யமான பித்தரல்லாதவர்களுடைய பித்தரே. இக்கலக்கமில்லாதே தெளிந்திருக்கும் ஸநகாதிகளே யாகிலும் அவர்கள் பித்தர். ... ... (கூ)

அல்லிமாமலர்மங்கைநாத னரங்கன்மெய்யடியார்கள்தம்
எல்லையிலடிமைத்திறத்தினி லென்றுமேவுமனத்தனும்
கொல்லிகாவலன்கூடல்நாயகன் கோழிக்கோன்குலசேகரன்
சொல்லினின்றமிழ்மாலைவல்லவர் தொண்டர்தொண்டர்களாவரே.

குலசேகரப்பெருமாள் திருவடிகளேஶரணம்.

ப - ரை.—அல்லி - அகவிதழையுடைத்தாய், மா - ஶ்லாக்யமான, மலர் மங்கை - செந்தாமரைமலரைப் பிறப்பகமாகவுடைய பெரியபிராட்டியார்க்கு, நாதன் - வல்லபரான, அரங்கன் - பெரியபெருமாளுடைய, மெய் - மெய்யான, அடியார்கள்தம் - தாஸபூதரான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய, எல்லையில் - அளவில்லாத, அடிமைத்திறத்தினில் - தாஸ்யத்திலே, என்றும் - என்றும் ஒருபடிப்பட, மேவும் - பொருந்தின, மநத்தனும் - திருவுள்ளத்தை யுடையராய், கொல்லி-கொல்லிநகருக்கு, காவலன்- தலைவராய், கூடல்-மதுரைக்கு, நாயகன்- நாயகராய், கோழி - உறையூர்க்கு, கோன் - ராஜாவான, குலசேகரன்-குலசேகரப் பெருமாள் அருளிச்செய்ததாய், இன்-இனிதான, சொல் - ஶப்தங்களையுடைய, தமிழ்மாலைவல்லவர்-தமிழ்த்தொடையை வல்லவர்கள். தொண்டர் தொண்டர்களாவர் - அவனடியார்க்கு அடியாராவரென்கிறார். (கo)

வ்யா.—பத்தாம்பாட்டு. (அல்லிமாமலர் மங்கைநாதன் அரங்கன்) ஶ்ரிய:பதியான பெரியபெருமாளுடைய. (மெய்யடியார்கள்

தம்) அநந்யப்ரயோஜநரா யிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய. (எல்லையி லடிமைத்திறத்தினிலென்று மேவுமநத்தனும்) * ஆத்ம தாஸ்யத்திலேயொன்று மொக்கப்பொருந்தின திருவுள்ளத்தை யுடையராம்.

(கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன்) கொல்லிக்கும் மதுரைக்கும் உறையூர்க்கும் நாயகரான பெருமாள். பெரிய வுடையாருடைய இழவால்வந்த வெறுப்பாலே (க) "வநவாஸோ மஹோதய: - வநவாஸோமஹோதய:" என்று வநத்துக்குப்போந்தது ப்ரியமாயிருந்தவர்க்கு (உ) "ராஜ்யாத்ப்ரம்ஸோவநேவாஸ: - ராஜ்யாத்ப்ரம்ஸோவநேவாஸ:" என்று இவ்விழவாலே அடியில் போந்தவையும் எல்லாம் தமக்கு வெறுப்புக்குடலானுப் போலே. (ந) "ஊனேறுசெல்வத்துடற்பிறவியான் வேண்டேன்" என்றும், "இவ்வரசும்யான்வேண்டேன்" என்றும் சொல்லுகிற விவர்க்குத் ததீயசேஷத்வத்தைத்தந்த ஜந்மமென்று ராஜஜந்மந் தன்னையுங் கொண்டாடுகிறுரிறே. (சொல்லினின்தமிழ்மாலை வல்லவர்) இனிதான ஶப்தங்களையுடைய தமிழ்த்தொடை வல்லவர்கள். (தொண்டர் தொண்டர்களாவரே) இவராசைப்பட்டுப்போந்த பாகவதஶேஷத்வ பர்யந்தமாகிற புருஷார்த்தத்தை லபிப்பர்கள். (கO)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

பெருமாள்திருமொழி இரண்டாம்திருமொழி முற்றிற்று.

அரு ;—பத்தாம்பாட்டு. (அல்லியித்யாதி). கொல்லிகாவலனித்யாதியாலே த்யாஜ்யமான ஜந்மத்தையிட்டுத் தம்மைக்கொண்டாடலாமோவென்ன, (பெரிய வுடையாரித்யாதி. "வநவாஸோமஹோதய:" என்று ரஸாவஹமானகாடு பெரியவுடையாருடைய விஶ்லேஷத்தாலே "வநேவாஸ:" என்று துக்க ஹேதுவானுப்போலேத் யாஜ்யமான ஜந்மமும் ததீயவிஷயத்தைப்பற்றுகைக்கு ஹேதுவாகையாலே கொண்டாடலாமென்றபடி. (கO)

இரண்டாம் திருமொழி அரும்பதம் முற்றிற்று.

(க) ரா - அயோ - உஉ - உசு. (உ) ரா - ஆர - சுஎ - உச.
(ந) ச.

மூன்றாந் திருமொழி மெய்யில் ப்ரவேசம்.

———(ㅇ)———

அ.—(க) "பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேன்" என்று - பகவத்ப்ராவண்யம் ததீயஶேஷத்வ பர்யந்தமாய், அவர்களல்லது செல்லாமை பிறக்குமளவுமுண்டான து சொல்லிற்று - கீழில் திருமொழியில்; (உ) "எண்ணுதமானிடத்தை யெண்ணுதபோதெல்லாமினியவாறே" (௩) "மானிடவரல்லரென்றென்மநத்தே வைத்தேனே" என்றும், (ச) "பித்தரென்றேபிறர் கூற" என்றும் பிறந்த மவஸ்தையுண்டு; - பகவத்ப்ராவண்யத்தாலே முன்பிலதுக்கு ஸங்கல்பமாத்ரமேயாய்த்து வேண்டுவது; அடிமை அவர்கள் கொள்ளக்கொள்ளவிறேசெய்வது. ப்ராதிகூல்யத்தில் வர்ஜித்தே நிற்கவேணும்; பகவத்குணங்களோபாதிவிபூதியும் ததீயத்வாகாரத்தாலே அநுபாவ்யமென்று சொன்ன ஶாஸ்த்ரந்தானேயிறே இத்தை த்யாஜ்யமென்றதும். ஜ்ஞாநகார்யமாயிறே ததீயருக்குத்தேஶ்யமாகிறதும்; தமோகுண ப்ரசுரரோடு ஸஹவாஸம் பொருந்திற்றுகில் அஜ்ஞாநகார்யமிறே.

(ரு) "அதஸ்ஸர்வமஹம் - மத்தஸ்ஸர்வமஹம்" என்று -

அரு;— மெய்யில்வாழ்க்கை ப்ரவேஶம் - "ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்" என்கிறபடியே ஆநுகூல்யஸங்கல்பம் சொலிற்றுக்கீழ், ப்ராதிகூல்யவர்ஜநம் சொல்லுகிறது இத்திருமொழியில், இவற்றையருளிச்செய்கிறார் (பேராளனித்யாதி வாக்யத்வயத்தாலே) கீழ் ஆநுகூல்யஸங்கல்பத்தைப்பாரித்து இங்கு வர்ஜநமென்று - நன்றாகவிட்டபடி சொல்லுகிறதுக்குக் கருத்தென்னென்னில், (பகவத்ப்ராவண்யேத்யாதி). குணங்களோபாதிவிபூதியும் ததீயத்வாகாரத்தாலே உத்தேஶ்யமன்றோவென்ன (பகவத்குணங்களித்யாதி). த்யாஜ்யமானல் சிறிதுபேர் உத்தேஶ்யராய் சிறிதுபேர்த்யாஜ்யராகிற தென்னென்ன (ஜ்ஞாநகார்யமித்யாதி).

அஜ்ஞாநஹேது வென்றுவிட்டபேருண்டோவென்ன (மத்தஸ்ஸர்வமித்

(க) தி - மொ - எ - ௪ - ச. (உ) தி - மொ - கக - ௬ - எ.
(௩) தி - மொ - கக - எ - ௬. (ச) திவாய் - ௩ - ரு - அ.
(ரு) வி - பு - க.

ஸாமாந்ய புத்திபண்ணின ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான் பூர்வாவஸ்தை யில், "உதிதஃ - மத்பிதுஃ" என்று - அவனை ரக்ஷிக்கப்பார்த்த வன் ப்ராதிகூல்யத்திலே விஞ்சினவாறே அவனை விட்டுக்காட்டிக் கொடுத்தானிறே. ஸ்ரீ விபீஷணாழ்வான் ஆந்தனையும் ஹிதம்சொல் லிப்பார்த்துத் தன் ஹிதத்துக்கு மீளாத அவஸ்தையானவாறே, நெருப்புப் பட்டவிடத்தில் விலக்க வொண்ணாதபோது தன்னைக் கொண்டு தான் தப்புவாரைப்போலே, ப்ராதிகூல்யம் அகலவிட்டுத் தன்னளவும் வருமென்று தன்னைக்கொண்டு தான் தப்பினானிறே. ப்ராதிகூல்யமாகிறது - தேஹாத்மாபிமாநிகளாகையும், விஷய ப்ரவணரா யிருக்கையும், தேஹாத்வ்யதிரிக்தம் வேறொரு வஸ்து வுண்டென்றறியா திருக்கையுமிறே. இப்படி இருப்பாரோடு எனக்குப் பொருந்தாதென்கிறார் - இத்திருமொழியில். *

மூ.—மெய்யில்வாழ்க்கையை மெய்யெனக்கொள்ளுமிவ்
வையந்தன்னொடுங் கூடுவதில்லையான் ;
ஐயனே! அரங்கா! என்றழைக்கின்றேன் ;
மையல்கொண்டொழிந்தே னென்றன்மாலுக்கே. (க)

ப - ரை.—மெய்யில் - பொய்யான, வாழ்க்கையை-இஹலோகஸுகத்தை, மெய் எனக்கொள்ளும் - நித்யமென்று நினைக்கிற, இவ்வையந்தன்னொடும் - இந்தலோகத்தாரோடே, யான் - தேஹாத்மாபிமாந மற்றயான், கூடுவதில்லை - சேருவதில்லை ; ஐயனே என்று - ஸர்வஸ்வாமியானவனே என்றும், அரங்கா என்று-கோயிலிலேவந்து ஸர்வஸுலபனானவனே என்றும், அழைக்கின்றேன்- கூப்பிடாநின்றேன், என்றன்மாலுக்கு - என்விஷயத்தில் வ்யாமுக்தனான அழகியமணவாளன் விஷயத்திலே, மையல்கொண்டொழிந்தேன் - பித்தேறா நின்றேன் என்கிறார். (க)

வ்யா.—முதற்பாட்டு. (மெய்யில்வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்) மெய்யென்றும் பொய்யென்றும் - நிலையில்லாமையை யும், நிலைநிற்குமத்தையும் சொல்லுகிறது. நிலைநில்லாததிலே. நித்ய மான ஆத்மவஸ்துவில் பண்ணும் ப்ரதிபத்தியைப் பண்ணுமென்னு

யாதி). ஸமுத்ரத்தில் தன்னைப்பொகட்டபோது ஸர்வேஶ்வரனைக்கண்டு தன் பிதாபண்ணினபாபத்தைப் பொறுக்கவேணுமென்று வேண்டிக்கொண்டா னென்றதைப்பற்ற (மத்பிதுஃ - ரக்ஷிக்கப்பார்த்தவ னென்கிறது).

தல்; மெய்யிலேயுண்டான வாழ்க்கை யென்னுதல். அதாகிறது - ப்ராக்ருதியைப் பற்றிவரும் ப்ராக்ருதபோகங்களிறே. (இவ்வையந்தன்னொடுங்கூடுவதில்லையான்) தேஹாத்மாபிமாநிகளாயிருப்பாரோடு எனக்கொரு சேர்த்தியில்லை.

(ஐயனித்யாதி) தேஹாத்வ்யதிரிக்தம் வேறொருவருண்டென்றறிந்தவனென்கிறார். (ஐயனே) நிருபாதிகபந்துவே. (அரங்கா) அநுஷ்டாநபர்யந்தமாக்கின; முதலித்தாப்போலே கோயிலிலே வந்து ஸுலபனானவனே. (என்றழைக்கின்றேன்) காரியப்பாடறக் கூப்பிடாநின்றேன். (மையல்கொண்டொழிந்தேன் என்றன் மாலுக்கே) அவன் எனக்குப் பித்தேறினபடியைக்கண்டு நானும் அவனுக்குப் பித்தனானேன். ... ... (௧)

மூ.—நூலினேரிடையார் திறத்தேநிற்கும்
ஞாலந்தன்னொடுங் கூடுவதில்லையான்;
ஆலியாவழையா வரங்காவென்று
மாலெழுந்தொழிந்தே னென்றன்மாலுக்கே. (௨)

ப-ரை.—நூலின்நேர் - நூல்போல் நுண்ணிதான, இடையார்திறத்து - இடையையுடையரான ஸ்த்ரீகளவயவத்திலே, நிற்கும் - வைத்தசிந்தைவாங்கமாட்டாதேநிற்கிற, ஞாலந்தன்னொடும் - லோகத்தாரோடே, யான் கூடுவதில்லை—; ஆலியா-ப்ரீதிப்ராகர்ஷத்தாலே ஸஸம்ப்ரமநர்த்தநம்பண்ணி, அரங்கா என்று - பெரியபெருமாள் திருநாமங்களைச்சொல்லி, அழையா அடைவுகெடக் கூப்பிட்டு, என்றன்மாலுக்கு—, மாலெழுந்து ஒழிந்தேன்-பித்தேறுநின்றேன் என்கிறார். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (நூலினேரிடையார் திறத்தே நிற்கும்) நூல்போலே நுண்ணிய இடையையுடையராயிருக்கும் ஸ்த்ரீகள் திறத்திலேநிற்கும். ஒரு அவயவத்தை யநுபவிக்கப்புக்கால் மற்றைய அவயவத்தில் போகமாட்டாதேநிற்கும். (ஞாலந்தன்னொடுங் கூடுவதில்லை யான்) ப்ராப்தவிஷயத்திலிருக்கக்கடவ விருப்பை அப்ராப்தவிஷயத்தேயிருக்கு மவர்களோடு எனக்கொரு ஸம்பந்தமில்லை.

(ஆலியாவித்யாதி) இவர்கள் அப்ராப்தவிஷயத்திலே படும்பாடெல்லாம்ப்ராப்தவிஷயத்தே படுமவன் நானென்கிறார். (ஆலியா

வளையா வரங்காவென்று) ப்ரீதிப்ரகர்ஷத்தாலே யிருக்கமாட்டாதே ஆலியா, பெரியபெருமாள் திருநாமத்தைச் சொல்லி, அடைவுகெடக் கூப்பிட்டு. (மாலெழுந்தொழிந்தே னென்றன் மாலுக்கே) (க) "தேநதேதஸ்நத்வாந்தா: - தேநதேதமநுவ்ரதா:" என்னுமாப்போலே அவன் என்பக்கல் வ்யாமுக்தனானபடி கண்டு நானும்பித்தேறினேன். ... ... (உ)

மூ.—மாரனுர்வரிவெஞ்சிலைக் காட்செய்யும்
பாரினுரொடுங் கூடுவதில்லையான் ;
ஆரமார்பன ரங்கனநந்தன் நல்
நாரணன்நாகாந்தகன் பித்தனே. (௩)

ப - ரை.—மாரனுர்-மன்மதனுடைய, வரி-தர்ஸநீயமாய், வெம்-யாவரையும் தன்வசமாக்கவல்ல, சிலை - வில்லுக்கு, ஆள்செய்யும் - அடிமை பண்ணிப் போருகிற, பாரினுரொடும்-பூலோகத்தாரோடே, யான்கூடுவதில்லை—; ஆரம் - முக்தாஹாரம் சாத்தியருளின, மார்வன் - திருமார்பையுடையரான, அரங்கன் - அழகியமணவாளராய், (இங்கேவந்து ஸுலபராயிருக்கச்செய்தேயும்) அநந்தன்- இப்படிப்பட்டவரென்று பரிச்சேதிக்கவொண்ணுதவராய், நல்நாரணன்-குற்றங் களைக்குணமாகக்கொள்ளுமவராய், நரகாந்தகன் - ஆஶ்ரிதர்நரகத்தில் வீழாதபடி காக்குமவரான பெரியபெருமாள் விஷயத்தில், பித்தன் - நான் பித்தனுனேன் என்கிருர். (௩)

வ்யா.—மூன்ரும்பாட்டு. (மாரனுர் வரி வெஞ்சிலைக் காட்செய்யும்) காமனுடைய தர்ஸநீயமாய்த் தப்பவொண்ணுதபடி கொடிதாயிருக்கிற வில்லுக்குக் குடிமகனுய்த்திரியும் பாரினுரொடுங் கூடுவதில்லையானென்னுதல்; பாரிலாரொடுங்கூடுவதில்லையானென்னுதல். * சார்ங்கமென்னும் வில்லாண்டான் றனக்காட்செய்யுமவன் நான்.

அரு —மூன்ரும்பாட்டு. (மாரனுரித்யாதி). பாரிலாரென்று பாடாந்தரம் பாரில்லாதவரென்ருய், ஒருநத்தமில்லாத க்ஷுத்ரரென்றபடி. அன்றிக்கே, அர்த்தமின்றியே ஶப்தபேதமாத்ரமாய்-பாரிலாரென்று - பூமியிலுள்ளாரென்று ஏகார்த்தமாகவுமாம், (நரகாந்தகன்) நரகாஸுரனுக்கு நாஶகன். (௩)

(க) ரா.

(ஆரமார்வனரங்கன்) ஆகர்ஷகமான வொப்பனையையுடைய பெரியபெருமாள். (அநந்தன்) மநுஷ்யத்வே பரத்வம் போலே இங்கேவந்து ஸுலபராய்க்கிடக்கச்செய்தே, பரிச்சேதிக்கவொண்ணாதபடியிருக்கிறவர். (நன்னாரணன்) தன்னுடைமையை விடமாட்டாமையாலே அழுக்கை விரும்புமவன். (நரகாந்தகன் பித்தனே) அவன் தன் வாத்ஸல்யத்தாலே மேல்விழாநிற்க நடுவேவிரோதியும் போய்க்கொடு நிற்குமிறே. இப்படியிருக்கிறவனுக்குப் பித்தனே.

மூ.—உண்டியேயுடையே யுகந்தோடுமிம்
மண்டலத்தொடுங் கூடுவதில்லையான்;
அண்டவாணனரங்கன் வன்பேய்முலை
உண்டவாயன்றனுன் மத்தன்காண்மினே. (௪)

ப - ரை.—உண்டி - ஆஹாரத்தையும், உடை - வஸ்த்ரத்தையும், உகந்து - விரும்பி, ஓடும் - கண்டவர்காற்கீழ் தலைமடுக்கிற, இம்மண்டலத்தொடும் - இந்த லோகத்தாரோடே, யான்கூடுவது இல்லை—; அண்டம் - அண்டாந்தர்வர்த்திகளான தேவர்களுக்கு, வாணன் - நிர்வாஹகராய், வல் - கடிநசித்தையான, பேய் - பூதனையுடைய, முலை - விஷத்தோடு கூடிய முலைப்பாலை, உண்ட - தாய் முலை போலே அமுதுசெய்த, வாயன் - திருப்பவளத்தையுடையரான, அரங்கன்தன் - அழகிய மணவாளன் விஷயத்திலே உன்மத்தன் - பெரும்பித்தேறுநின்றேன் என்கிறார். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (உண்டியேயுடையே யுகந்தோடும்) உபாஸநத்துக்கு ஶரீரம் வேண்டுகையாலே அது தரிக்கவேண்டுமளவன்றியிலே எல்லாவற்றையும் அழியமாறி உண்டியுமுடையுமாக்கும். (இம்மண்டலத்தொடுங் கூடுவதில்லையான்) (௧) "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றிருக்க ஒருவிபூதியுண்டானாப்போலே ப்ராக்ருத போகங்களை விரும்புகைக்கொரு விபூதியிறே யிதுவும்.

அரு:—நாலாம்பாட்டு. (உண்டியேயித்யாதி). (எல்லாவற்றையுமழியமாறுகை) வர்ணாஶ்ரமதர்மங்களையழியமாறுகை (ஔஷதஸேவை) ஸ்த்ரீவிஷயங்களிலேபற்றுகைக்கு மருந்திடுகை. (௪)

---

(௧) தி - வாய் - ௬ - ௭ - ௧.

(அண்டவாணன்) அண்டாந்தர்வர்த்திகளுக்கு நிர்வாஹகன். (அரங்கன்) இதுக்கு நிர்வாஹகனாயிருக்கு மிருப்பொழிய இதினுள்ளே புகுந்து ஸௌலப்யத்துக்கேற்றயிலே ஸந்நிஹிதனானவன். (வன்பேய் முலையுண்டவாயன் உன்மத்தன் காண்மினே) இங்கே வந்தவதரித்து ப்ரதிபந்தகங்களைத் தானே போக்குமவனுக்குப் பித்தன் நான். (தன் உன்மத்தன் காண்மினே) ஔஷதஸேவை பண்ணினாரை மீட்கவொண்ணாதாப்போலே அவனுடைய குண சேஷ்டிதங்களிலே யகப்பட்டுப் பித்தனான வென்னைக் கேவல ஶரீரபரரோடே சேரவிடவொண்ணுமோ. ... ... (௪)

மூ.—தீதில்நன்னெறிநிற்க வல்லாதுசெய்
நீதியாரொடுங் கூடுவதில்லையான்;
ஆதியாய னரங்கனந்தாமரைப்
பேதைமாமணவாளன்றன் பித்தனே. (௫)

ப - ரை.—தீதில் - குற்றமற்ற, நல்நெறி - ஸன்மார்க்கமானது, நிற்க - இருக்கச்செய்தே, அல்லாது செய் நீதியாரோடும் - க்ஷுத்ர புருஷார்த்தங்களை விரும்புகையைத்தொழிலாக வுடையவர்களோடே, யான் கூடுவதில்லை—, ஆதி - ஜகத்காரணபூதராய், ஆயன் - க்ருஷ்ணனாய்வந்தவதரித்து ஸர்வஸுலபராய், அம் - அழகிய, தாமரை - செந்தாமரைமலரை இருப்பிடமாகவுடைய, பேதை - பெரியபிராட்டியாருக்கு, மாமணவாளன் - வல்லபரான, அரங்கன் தன் - அழகிய மணவாளன் விஷயத்திலே, பித்தன் - நான் பித்தனானே னென்கிறார்—. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தீதில் நன்னெறிநிற்க) தீமையோடு விரவாத நல்வழிநிற்க. இவனையொழிந்த பலங்களுக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ணிப் பெறும்பேற்றில் இழவே நன்றென்னும்படியிறேயிருப்பது. (அல்லாதுசெய் நீதியாரொடுங் கூடுவதில்லையான்) இதர புருஷார்த்தங்களை யாசைப்படுகையே யாத்ரையாயிருப்பாரோடு கூடுவதில்லையான்.

(ஆதி) ப்ரமாணங்களால் உபாஸ்ய வஸ்துவென்று சொல்லப்படுகிறவன். (ஆயன்) உபாஸ்ய வஸ்துதான் அரியதென்ன வொண்

அரு;—அஞ்சாம்பாட்டு. (தீதிலித்யாதி). மற்றைவழிபொல்லாததோவென்ன (இவனையொழிந்த வித்யாதி). (௫)

ணுதபடி யவதரித்து ஸுலபனானவன். (அரங்கன்) அவதாரம் போலே தீர்த்தம்ப்ரஸாதித்துப் பிற்பாடரிழவாமே கோயிலிலே வந்து ஸந்நிஹிதரானவர். (அந்தாமரைப்பேதை மாமணவாளன் தன் பித்தனே) அழகிய தாமரைப்பூவைத் தனக்கிருப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியாருக்கு வல்லபரானவர்க்குப் பித்தனானேன் நான். ஓரடி இவன் புகுராநின்றால் அத்தைக்குவாலாக்கி, அவன் நெஞ்சிலே புண்படும்படி இவன் பண்ணின அபராதத்தை அவன் காணாதபடி யிருக்கிற புருஷகாரபூதை. (மாமணவாளன்) (௧) [ஸுஷேயம் ஹிதகீர்த்தஜ - அப்ரமேயம்ஹிதத்தேஜ:] இவளுக்கு வல்லபனாகை யாலே வந்த பெருமையையுடையவன். பித்தன்நான். ... (௫)

மூ.—எம்பரத்தரல்லாரொடுங் கூடலன்;
உம்பர்வாழ்வை யொன்றாகக்கருதிலன்;
தம்பிரானமரர்க்கரங்கநகர்
எம்பிரானுக்கெழுமையும் பித்தனே. (௬)

ப-ரை.—எம்பரத்தரல்லாரொடும் - என்னைப்போலே அடிமைசெய்ய விரதவர்களோடே, கூடலன் - யான் கூடமாட்டேன்; உம்பர்வாழ்வை - ஸ்வர்க்காதிலோக ஸுகங்களை, ஒன்றாக - ஒருபொருளாக, கருதிலன் - நினைக்க மாட்டேன்; அமரர்க்கு தம்பிரான்-* அயர்வறு மமரர்களதிபதியாய், அரங்கநகர் - கோயிலிலே வந்து, எம்பிரானுக்கு - எனக்கு உபகாரகரான பெரியபெருமாள் விஷயத்திலே, எழுமையும் - காலமுள்ளதனையும், பித்தன் - பித்தனாய்த் திரியு மவன் என்கிறார். (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (எம்பரத்த ரல்லாரொடுங் கூடலன்) என் பரத்தரைப்போலே பரத்வையா யிராதாரை நாக்கு வளைத்திருப்பன். (௨) "இந்நின்ற நீர்மை யினியாமுறாமை" என்றும், (௩) "வழுவிலா வடிமைசெய்யவேண்டும் நாம்" என்றும் இராதாரோடு ஸம்பந்தமில்லை. (உம்பர் வாழ்வை யொன்றாகக் கருதிலன்) ஸம்ஸாரத்தில் அருசியும் கைங்கர்யத்தில் ருசியுமில்லையாகில், ப்ரஹ்மாதிகள் ஸம்பத்தே யாகிலும் த்ருணவத்கரிப்பன்.

---

(௧) ரா - ஆ - ௩௭ - ௧௮. (௨) திருவி - ௧.

(௩) தி - வாய் - ௩ - ௩ - ௧.

(தம்பிரானமரர்க்கு) * அயர்வறு மமரர்களதிபதி. (அரங்க நகரெம்பிரானுக்கு) நித்ய ஸூரிகளெல்லாம் அநுபவிக்குமாப் போலே ஸம்ஸாரிகளெல்லா மிழவாதபடி கோயிலிலே வந்து ஸுலபரானவர். (எழுமையும் பித்தனே) இச்செயலுக்கென்றும் பித்தனாய்த் திரியுமவன். ... ... (௬)

அ.—ஏழாம்பாட்டு. இதரரோடு கூடாத நன்மை உமக்கு வந்தபடி யென்னென்ன; நானடியாக வந்ததல்ல, ஸர்வேஶ்வர னடியாக வந்ததென்கிறார்.

மூ.—எத்திறத்தி லுமியாரொடுங்கூடுமச்
சித்தந்தன்னைத் தவிர்த்தனன்செங்கண்மால்
அத்தனே யரங்காவென்றழைக்கின்றேன்
பித்தனாயொழிந்தே னெம்பிரானுக்கே. (௭)

ப-ரை.—எத்திறத்திலும் - எப்படிப்பட்டபொருள்கள் கிடைக்குமென்னிலும், யாரொடும் - அபாகவதரோடே, கூடும் - பொருந்தத்தக்க, அச்சித்தந் தன்னை - அப்படிப்பட்ட மநஸ்ஸை, செங்கண்மால் - புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரன், தவிர்த்தனன்-நீக்கினான்; அத்தனே என்று - ஸர்வஸ்வாமியே என்றும், அரங்கா என்று - அழகியமணவாளனே என்றும், அழைக்கின்றேன் - கூப்பிடாநின்றேன்; எம்பிரானுக்கு - இதரவிஷய ப்ராவணரோடு பொருந்தாத படி எனக்குபகரித்த பெரியபெருமாளுக்கு, பித்தனாய் ஒழிந்தேன்—. (௭)

வ்யா.—(எத்திறத்திலும்) அபாகவதரோடு ஸம்பாஷிக்க அபிமத புருஷார்த்தங்களை யெல்லாம் லபிக்கலாமென்னிலும் அத்தையும் நாக்குவளைப்பன். (யாரொடுங்கூடும்) புருஷார்த்தங்களை லபியாதொழிந்தாலும் அவரோட்டைச் சேர்த்தியாலே யல்லா மேன்மையுண்டாமென்னிலும் அத்தையுங் காற்கடைக் கொள்ளும் படியானேன். (அச்சித்தந்தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்) கண்ணாலே குளிரநோக்கி தன் வ்யாமோஹத்தைக்காட்டிப் பிறரோடு மநஸ்ஸு பொருந்தாதபடி பண்ணினான்.

(அத்தனை) எனக்கு ஸ்வாமியானவனை. (அரங்காவென்றழைக்கின்றேன்) அந்தஸ்வாமித்வத்தை நிர்வஹித்துக்கொடுக்கைக்காக கோயிலிலேவந்து ஸுலபனானவனை யென்று கூப்பிடாநின்றேன். (பித்தனாயொழிந்தேனெம்பிரானுக்கே) இதரவிஷய ப்ராவண்யத்தோடு பொருந்ததாபடி பண்ணின வுபகாரகனுக்குப் பித்தனானேன். (௭)

அ.—எட்டாம்பாட்டு. எல்லாரும் விட்டாலும் ஒருவரல்லா ஒருவர் பற்றுவர்களிறே; அவர்களெல்லாரும் விடும்படியானே னென்கிறார்.

மூ.—பேயரேயெனக்கியாவரும் யானுமோர்
பேயனேயெவர்க்கு மிதுபேசியென் ;
ஆயனே யரங்காவென்றழைக்கின்றேன்
பேயனாயொழிந்தே னெம்பிரானுக்கே. (அ)

ப - ரை.—யாவரும் - அஸ்திரமான புருஷார்த்தங்களை விரும்புமவர்களெல்லாம், எனக்கு-பரமபுருஷார்த்தத்தை விரும்பிப் போருமெனக்கு, பேயர்-பேயரா யிராநின்றார்கள் ; யானும் - அவர்கள் நிலையில் நில்லாதயானும், எவர்க்கும் - எவர்களுக்கும், ஓர்பேயன் - ஒப்பற்ற பேயனாயிராநின்றேன் ; இது - இவ்விஷயத்தை, பேசி - விஸ்தரிக்கப்பேசுவதினால், என்-என்னப்ரயோஜநம் ; ஆயனே என்றும் - க்ருஷ்ணனா யவதரித்து ஸுலபனானவனே என்றும், அரங்கா என்றும் - பெரியபெருமாளே என்றும், அழைக்கின்றேன் - கூப்பிடா நின்றேன் ; எம்பிரானுக்கு - எனக்குபகாரகனான அழகியமணவாளன் விஷயத்திலே, பேயனாயொழிந்தேன் - பித்தேறா நின்றேன் என்கிறார். (அ)

வ்யா.—(பேயரே யெனக்கு யாவரும்) நிலைநின்ற புருஷார்த்தத்தைவிட்டு அஸ்திரமான ப்ராக்ருத போகங்களை விரும்புவர்கள்! பேயராயிருந்தார்களென்று விட்டேன்நான். (யானுமோர் பேயனே யெவர்க்கும்) கண்ணால் காண்கிறதொழிய வேறே யொன்றுண்டென்று ப்ரமியாநின்றான், பித்தனாயிருந்தானென்று விட்டார்கள் இவர்களும் என்னை. (இது பேசியென்) இத்தைப் பரக்கச்சொல்லுகிறதென்.

(ஆயனே) கண்ணாற் காண்கிறது பொய்யென்றிராதபடி வந்தவதரித்துத் தன்படிகளை எனக்குக் காட்டினவன். (அரங்காவென் றழைக்கின்றேன்) அவதாரத்துக்குப் பிற்பாடரிழவோடே தலைக்கட்டாதபடி கோயிலிலே கண்வளர்ந்தருளின பெரியபெருமாள் திருநாமத்தைச்சொல்லி அடைவுகெடக் கூப்பிடாநின்றேன். (பேயனாயொழிந்தேனெம்பிரானுக்கே) "ஒருவிஷயத்திலே பித்தே

அரு ;—எட்டாம்பாட்டு. (பேயரித்யாதி). (கண்ணால்காண்கிறது) கண்ணென்று - ஜ்ஞாநமாய், ஜ்ஞாநத்தாலேகாண்கிறவஸ்து பொய்யென்றிராதபடி அவதரித்தென்றபடி. (அ)

றின்வன் நமக்கினியாகான் காண், விடாய்" என்று இதார் என்னை உபேக்ஷிக்கும்படி யானேன். ... ... (அ)

மூ.—அங்கையாழி யரங்கனடியிணைத்
தங்குசிந்தைத் தனிப் பெரும்பித்தனாய்
கொங்கர்கோன் குலசேகரன்சொன்னசொல்
இங்குவல்லவர்க்கேத மொன்றில்லையே. (௯)

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

ப-ரை.—அம் - அழகிய, கை - வலத்திருக்கையிலே, ஆழி - திருவாழியாழ்வானை யுடையரான, அரங்கன் - அழகிய மணவாளப்பெருமாளுடைய, அடியிணை - திருவடிகளிலே, தங்கு - பொருந்திய, சிந்தை - மநஸ்ஸையுடையராய், தனிப்பெரும் பித்தனாய் - மிகவும் பித்தேறினவராய்க்கொண்டு, கொங்கர் - மேற்றிசையிலுள்ளார்க்கு, கோன் - தலைவரான, குலசேகரன் - ஸ்ரீ குலசேகரப் பெருமாள், சொன்ன-அருளிச்செய்த, சொல் இவ்வொன்பது பாட்டுக்களையும் வல்லவர்க்கு - அப்யஸிக்கவல்லவர்களுக்கு, இங்கு - இந்தலோகத்திலே, ஏதம் ஒன்று - அபாகவத ஸ்பர்ஶத்தால்வரும் துக்கம், இல்லை - உண்டாகாது. (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (அங்கையாழி யரங்கனடியிணை) அழகிய மணவாளப்பெருமாள் திருவடிகளிலே. (தங்குசிந்தை) பெருமாள் திருவடிகளுக்கவ்வருகு கந்தவ்யபூமியில்லாமையாலே அங்கே தங்குசிந்தையையுடைய. (தனிப்பெரும்பித்தனாய்) பகவத் விஷயத்தில் இவரோபாதி பித்தேறினார் வேறொருவரில்லாமையும், சிலவரால் மீட்க வொண்ணாமையுமான பித்தனாய்.

(கொங்கர்கோன் - குலசேகரன் சொன்னசொல்) மேலைத் திக்குக்கு நிர்வாஹகரான ஸ்ரீ குலசேகரப்பெருமாளருளிச்செய்த. (இங்கு வல்லவர்க்கேத மொன்றில்லையே) இவற்றை வல்லவர்களுக்கு இங்கேத மொன்றில்லையே. ஏதமாவது-அபாகவத ஸ்பர்ஶமாதல், பகவத் ப்ராவண்யத்தில் குறைபாதல்; இவற்றால்வரும் து:கமொன்றும் இஸ்ஸம்ஸாரத்தி லிருக்கும் நாளிலில்லை. இத்து:கப்ரஸங்கமுள்ள திவ்விடத்தேயிறே. இவை கற்றவர்களுக்கு இப்ரஸங்கமுள்ள தேஶத்திலே யில்லை. ... ... (௯)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

மூன்றாம்திருமொழி முற்றிற்று.

நாலாந்திருமொழி ஊனேறுசெல்வ ப்ரவேசம்.

———(०)———

அவ.—பகவத்ஜ்ஞாநமும் பிறந்து, இதர விஷயத்யாகமும் பிறந்து, குணாதிகவிஷயத்தை யநுபவிக்கவேணுமென்னும் ருசியும் பிறந்து, அந்த குணம் பூர்ணமாக அநுபவிக்கலாமிடத்தே யநுப விக்கவேணுமென்னு மாசையும்பிறந்து, (க) "அடியார்கள் குழா ங்களையுடன் கூடுவதென்று கொலோ" என்னுமாப்போலே, (உ) "அடியார்கள் தமீட்டங் கண்டிக்கூடுமேல்" என்னுமதுவும்பிறந்து;

இப்படி பகவத்விஷயத்திலும் பாகவதவிஷயத்திலும் ஆநு கூல்யமும் இதரவிஷயத்யாக பூர்வகமாகக் கண்ணழிவறப் பிறக்கச் செய்தே விரோதியும்போய் அநந்தரம் பகவல்லாபமாகவும் காணு மையாலே, (ந) "யதிவாராவணஸ்ஸ்வயம்-யதிவா ராவணஸ்ஸ்வயம்" என்றும், (ச) "ஆள்பார்த்துழிதருவாய்" என்றும் மேல்விழக்கடவ வவன்பக்கல் குறையில்லை; இதுக்கு வேறேயொரு ஹ்ருதயமுண் டாகவேணுமென்று பார்த்து, ஶரீரஸமநந்தரம் பகவல்லாபமாகில் பரிக்ரஹித்த ஶரீரம் க்ஷத்ரிய ஶரீரமாய் போகங்களில் குறை வற்றிருந்தபின்பு ஶரீராவஸாநத்தளவும் போகங்களை புஜித்து, பின்னை க்ரமத்தாலே பகவத்ப்ராப்தி பண்ணுகிறோமென்று நினைத் திருக்கிறேனென்று நினைத்து ஆறியிருந்தானாக வேணுமென்னு மத்தைத் திருவுள்ளத்திலேகொண்டு, தமக்கு க்ரமப்ராப்தி பொறு மைதோன்ற (ரு) "ஒன்றியாக்கைப் புகாமலுய்யக்கொள்வான்நின்ற வேங்கடம்" என்றும், (சூ) "மந்திப்பாய் வடவேங்கடமாமலை வான வர்கள் சந்திசெய்ய நின்றான்" என்றும் - கீழநுபவித்த பெரிய பெருமாள் தாமே ஸம்ஸாரஸம்பந்தமறுத்துக் கொடுக்கைக்கும் கைங்கர்யம் கொள்ளுகைக்கும் திருமலையிலே நிற்கிறானாகையாலே திருவேங்கடமுடையான் திருவடிகளிலே விழுந்து விரோதியில் அருசியும் கைங்கர்யத்தில் ருசியும் பிறந்த த்வரையையுமாவிஷ்க ரிக்கிறார். ... ... *

(க) தி - வாய் - உ - ந - கா. (ச) ச - திருவ - கூ௦.
(உ) உ - க. (ரு) தி - வாய் - க - ந அ.
(ந) ரா - யு - கஅ - நரு. (சூ) அமல - ந.

அ.—முதற்பாட்டு. (ஊனேறித்யாதி) ப்ரக்ருதி புருஷவிவேகம் பண்ணுகைக்கு யோக்யதையுள்ள மநுஷ்யஜந்மமாய், அதிலே பாரக்ஷணத்துக் குறுப்பான க்ஷத்ரியஜந்மம் வேண்டா, கைங்கர்யத்தில் எல்லை நிலத்துக்குறுப்பான திர்யக்காய்ப் பிறக்கவமையும் நானென்கிறார்.

ஊனேறுசெல்வத்துடற் பிறவியான்வேண்டேன்
ஆனேறேழ்வென்று னடிமைத்திறமல்லால்;
கூனேறுசங்கமிடத்தான்றன் வேங்கடத்துக்
கோனேரிவாழுங் குருகாய்ப்பிறப்பேனே. (க)

ப - ரை.—யான்-அவனை ஶேஷியென்றறிந்த யான், (நப்பின்னைப்பிராட்டிக்காக, ஆன் ஏறு ஏழ் - ரிஷபங்களேழையும், வென்றான்-நிரஸித்த திருவேங்கடமுடையான் விஷயத்திலே, அடிமைத்திறம் அல்லால் - கைங்கர்யம் பண்ணுகையொழிய, ஊன் ஏறு - நாள்செல்ல நாள் செல்ல மாம்ஸம்வளர்ந்து வருமதாய், செல்வம் - அநித்யமான செல்வத்தோடுகூடின, உடல்பிறவி - மநுஷ்யஜந்மத்தை, வேண்டேன் - இச்சியேன் என்ன ; பின்னை நீர்விரும்பியிருப்பது என்னென்ன, கூன் ஏறு-ஶேஷத்வத்தால் வளைந்திருக்கிற, சங்கம்-ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, இடத்தான் தன் - இடத்திருக்கையிலே யுடையவனுடைய, வேங்கடத்து - திருமலையிலே, கோனேரி - திருக்கோனேரியில், வாழும் - வர்த்திக்கிற, குருகு ஆய் பிறப்பேன்-நாரையாகவாகிலும் பிறப்பேன் என்கிறார். (க)

வ்யா.—(ஊனேறுசெல்வத்துடல் பிறவி யான்வேண்டேன்) இந்த ஶரீரத்துக்குச் சொல்லுகிற குற்றமென்னென்ன ; நாள் செல்ல நாள்செல்ல மாம்ஸப்ரசுரமாய் வருகைபாலே ஶரீரந்தடித்து ஆத்மா இளைக்கு மித்தனை ; அத்தாலே வேண்டேனென்கிறார். தர்மமுடைய ஸ்வரூபமும் நித்யமாயிருக்கச்செய்தே (க) "அஸ ஶுவ - அஸந்நேவ" என்கிறது ஜ்ஞாநஸங்கோசத்தைப் பற்றவிறே ; அப்படியே ஜ்ஞாநஸங்கோசத்தைப் பிறப்பிக்குமது வாகையாலே வேண்டேனென்கிறார். (யான் வேண்டேன்) தலைபறுத்துக்

அரு ;—முதற்பாட்டு. (ஊனேறுசெல்வமித்யாதி) அங்கே வர்த்திக்கைதானேகைங்கர்யத்திலெல்லை. அணுவாய் நித்யமாயிருக்கிற வாத்மாவுக்கு இளைப்புண்டோவென்ன, (தர்மமித்யாதி).

(க) தை - ஆநந்த.

கொள்ளுமவர்கள் சந்தநம் பூசித்திரியுமாப்போலே விழுக்காடறியாதான் வேணுமேயென்றிருந்தானு மத்தனே; விவேகஜ்ஞாநமுடைய நான் வேண்டேன். ஶரீரத்தினுடைய ஹேயதையும், ஆத்மாவினுடைய வைலக்ஷண்யத்தையும், இதுதான் தனக்கே ஶேஷமென்னு மிடத்தையும் அவன்றானே யறிவிக்கவறிந்த நான் வேண்டேன்.

(ஆனேறேழ்வென்றானடிமைத் திறமல்லால்) அவன்தானே விரோதியைப்போக்கி கைங்கர்யத்திலே அந்வயிப்பிக்கு மவனுஞன். (ஆனேறேழ்வென்றான்) நப்பின்னைப் பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு இடைச்சுவரான ரிஷபங்களேழையும் வென்றவன். மாதாவின் பக்கலிலே ஸ்நேஹத்தைப்பண்ணின பிதாவையநுவர்த்திக்கும் புத்ரனைப்போலே (அடிமைத்திறமல்லால்) அடிமையிடையாட்டமென்னுதல்; (க) "கு ஹம்ஸவ - ஃ - அஹம் ஸர்வம்" என்றும், (உ) "வழுவிலாவடிமை" என்னுஞ் சொல்லுகிறபடியே அடிமைத்திறமென்னுதல்.

(கூனேறுசங்கமிடத்தான்) கைங்கர்ய ருசியுடையாரை நித்ய கைங்கர்யங் கொள்ளுமவன். (கூனேறு சங்கமிடத்தான்) (ங) "ஊ ராஜஸிம் ஊ ஹரோவீநடி - ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம்" என்னுமாப்போலே பகவதநுபவச் செருக்காலே இளையபெருமாளைப்போலே காட்சிக்கு நோக்காயிருக்கிற ஸ்ரீ பாஞ்சஜந்யாழ்வான். (சங்கமிடத்தான்) இடக்கையிலேகாணில் "சங்கமிடத்தான்" என்கிறார்; வலக்கையிலே திருவாழியாழ்வானைக் கண்டவராகையாலே (ச) "வலக்கையாழி" என்கிறார்; திருமார்விலே பிராட்டியைக்கண்டவாறே (ரு) "நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கை" என்கிறார். இவர்படியிதிறே. (தன்வேங்கடத்து) அங்கேயடிமை கொள்ளுகைக்குப் பாங்கானதேஶ மாகையாலே என்னதென்று அவன் விரும்பின திருமலையில்.

கீழ்ப்பதத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மாதாவினித்யாதி).

இடக்கையிலே யிருக்கை ஸ்வபாவமன்றோ. இடத்தானென்று விஶேஷிப்பானென்னென்ன, (இடக்கையிலே காணிலித்யாதி). (க)

(க) ரா - அ - ருக - உரு. (உ) தி-வாய் ங-ங - க. (ங) ரா - அ - ச - சஉ. (ச) தி - வாய் - சு - ச - கூ. (ரு) திருப்பல்லாண்டு - உ.

(கோனேரிவாழுங் குருகாய்ப்பிறப்பேனே) விரஜையைப் பற்றி அமாநவ வஸ்த்திலே வர்த்திக்குமாப்போலே, திருக்கோனேரியைப்பற்றி வர்த்திக்குங் குருகாய்ப்பிறப்பேனென்கிறார். (வாழும்) கோயில் வாஸம்போலேகாணும் திருக்கோனேரியில். வர்த்திக்குமென்கிறவிடத்துக்கு வேறே வாசகஸப்தங்க ளுண்டாயிருக்கச் செய்தே "வாழும்" என்கிற ஸப்தத்தை யிட்டபடியாலே அங்குத்தைவாஸந்தானே போக ரூபமாயிருக்குமென்கை. (குருகாய்ப் பிறப்பேனே) ப்ரக்ருதி புருஷவிவேகம்பண்ணுகைக் குறுப்பான மநுஷ்ய ஜந்மமுமாய் அதிலே பராகூஷணத்துக் குறுப்புமாகையாலே புண்யஸரீரமான க்ஷத்ரியஜந்மம் வேண்டாவென்கிறார். அது துர்மாநஹேதுவாகையாலே; ப்ரக்ருதி புருஷவிவேகம் பண்ணவும் மாட்டாதே பராகூஷணத்துக் குறுப்புமின்றிக்கே பாப யோநியுமாயிருக்கிற திர்யக்காய்ப்பிறக்கவமையும் திருமலை யெல்லைக்குள்ளே பிறக்கப்பெறிலென்கிறார். "உடல்பிறவியான்வேண்டேன்" என்கிறார். "குருகாய்ப்பிறப்பேனே" என்கிறார். பிறவியன்றுபோலே காணும் அங்கேபிறக்கை. ... ... (க)

அ—இரண்டாம்பாட்டு. இங்குத்தை போகங்களிற் காட்டில் நிலைநின்ற போகங்களுமாய் இதுபோலே ஸாவதியன்றியே நிரவதியுமா யிருக்குமிறே ஸ்வர்க்கத்தில் போகம்; அவைபெற்றால் செய்வதென் நீரென்ன; அவையும் கீழில்கழித்த பூமியில் போகமும் இரண்டுங் கூடக்கிடக்கிலும் வேண்டாவென்கிறார்.

ஆனாதசெல்வத்தரம்பையர்கள் தற்சூழ
வானாளுஞ்செல்வமும் மண்ணரசும்யான்வேண்டேன்;
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடச்சுனையில்
மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே. (உ)

ப - ரை.—ஆனாத - அழியாத, செல்வத்து - யௌவநமாகிற ஸம்பத்தையுடையரான, அரம்பையர்கள் - ரம்பைமுதலான அப்ஸரஸ்ஸுக்கள், தன் - தன்னை, சூழ - சூழ்ந்துநிற்க, வான் ஆளும் செல்வமும் - ஸ்வர்க்கத்தை ஆளுகையாகிற செல்வத்தையும், மண்ணரசும் - பூலோகத்தை ஆளுகையையும். யான் வேண்டேன்—; தேன் ஆர் - தேன்மிக்கிருந்துள்ள, பூ - புஷ்பங்களையுடைய, சோலை - சோலைசூழ்ந்த, திருவேங்கடம் - திருமலையிலுண்டான, சுனை

யில் - சுனைகளிலே, மீனாய்ப்பிறக்கும் விதியுடையன் ஆவேனே - மீனாகவாவது பிறக்கத்தக்க விதியுடையவனாக ஆவேனென்கிறார். (௮)

வ்யா.—(ஆனாத செல்வத்தரம்பையர்கள்) கெடாதஸம்பத்து. அதாவது - அழியாதவெளவந ஸ்ரீயையுடைய அப்ஸரஸ்ஸூக்கள். (தற்சூழ) இவன்தான் தப்பநினைத்தாலும் தப்பவொண்ணாதபடி அவர்கள் பேல்விழ (வானாளுஞ் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்) ஸ்வர்க்காதிக ளநுபவிக்கும் ஸம்பத்தோடேகூட கீழில்கழிந்த ராஜ்யஸ்ரீயையும் கூட்டினாலும் வேண்டேன். வேண்டேனென்கிறது - இவற்றுக்குக் குறையுண்டாயன்று, தாம்நினைத்த புருஷார்த்தமல்லாமையாலே வேண்டேனென்கிறார்.

நீர் வேண்டியிருப்பதென்னென்ன (தேனார்பூஞ்சோலை திருவேங்கடச்சுனையில்) தேன்மிக்கிருந்துள்ள பொழிலென்னுதல்; வண்டுகள்மிக்க பொழிலென்னுதல். பொழில் சூழப்பட்டிருக்கிற திருமலையில் சுனைகளிலே. (மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே) கீழ்ச்சொன்ன குருகாய்ப்பிறக்கில் அதுக்குச் சிறகுண்டாகையாலே திருமலையிலெல்லையைக் கழியப்பறக்கைக்கு யோக்யதையுண்டிறே; அப்படியு மொன்றன்றியே உத்பத்தி ஸ்திதிலயங்களும் திருமலையிலே யாம் மீனாய்ப்பிறப்பேன் என்கிறார். (பிறக்கும் விதியுடையேன் ஆவேனே) இப்போது மீனாய்ப்பிறக்கவும் வேண்டா, ஒரு ஸூக்ருதத்தாலே அந்தஜந்மம் மேல்வருமென்னும் திண்மைபெறவு மமையுமென்கிறார். ... ... (௨)

அ.—மூன்றும்பாட்டு. பாரதந்த்ர்யத்துக் குறும்பாகப்பெறில் கீழில்கழிந்த மநுஷ்யஜந்மமேயாகிலு மமையுமென்கிறார்.

பின்னிட்டசடையானும் பிரமனுமிந்திரனும்
துன்னிட்டுப்புகலரிய வைகுந்தநீள்வாசல்
மின்வட்டச்சுடராழி வேங்கடக்கோன்றானுமிழும்
பொன்வட்டிற்பிடித்துடனே புகப்பெறுவேனாவேனே. (௯)

ப-ரை.—பின்னிட்ட - பின்னப்பட்ட, சடையானும் - ஜடையையுடைய ருத்ரனும், பிரமனும் - ப்ரஹ்மாவும், இந்திரனும் - இந்த்ரனும், முன்னேபோக வேணுமென்கிற இச்சையால், துன்னிட்டு - ஒருவர்க்கொருவர் நெருக்கி, புகல் அரிய - ப்ரவேசிக்கவொண்ணாதிருக்கிற, வைகுந்தம் - பரம

பதத்துக்கொப்பான, நீள் - பெருமை தங்கிய, வாசல் - திருவாசலிலே, மின் - மின்னலை, வட்டம் - வளைத்தாப்போலிருக்கிற, சுடர் - ஜ்யோதிஸ்ஸை யுடைத்தான, ஆழி-திருவாழி யாழ்வானையுடைய, வேங்கடக்கோன் தான் - திருவேங்கடமுடையான், உமிழும் - திருப்பவளமாற்றுகிற, பொன் - பொன்னூற்செய்த, வட்டில் - வட்டிலை, பிடித்து - கையிலே பிடித்துக்கொண்டு, உடனே புகப்பெறுவேனாவேனே-கர்ப்பக்ருஹத்திலேபுக்கு அருகு நிற்கத்தக்க பாக்யத்தைப் பெறுவேனாகவேணு மென்கிறார் (௩)

வ்யா.—(பின்னிட்ட சடையானும்) பின்னப்பட்ட சடையானென்னுதல்; பின்னே நாலப்பட்ட சடையானென்னுதல். பின்னே வர்த்திக்கக்கடவனிறே புத்ரன்; அப்படியே ப்ரஹ்மாவின்பின்னே நிற்கும் சடையானென்னுதல். (பிரமனும்) இவனுக்கு ஜநகனான ப்ரஹ்மாவும். (இந்திரனும்) (க) "ஸப்ரஹ்மாஸஶிவஃ - ஸப்ரஹ்மாஸஶிவஃ" என்றால் இவர்களோடொக்க, (க) "ஸெஒந்த்ரஃ - ஸேந்த்ரஃ" என்னும்படியான இந்த்ரனும். (துன்னிட்டுப்புகலரிய வைகுந்தநீள்வாசல்) ஒருவர்க்கொருவர் முன்புபோகவேண்டி நெருக்குகையாலே புகவரிதாயிருக்கிற வைகுந்தநீள்வாசலிலே.

(மின்வட்டச்சுடராழி) மின்னைவளைத்தாப்போலே ஜ்யோதிஸ்ஸையுமுடைத்தாய்ச் சுற்றும் வாயையுமுடைத்தாயிருக்கிற திருவாழியாழ்வானையுடைய. (வேங்கடக்கோனூனுமிழும் பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேனாவேனே) ப்ரஹ்மருத்ராதிகள் நெருக்கிப்புகப்பெறாதேநிற்க, "பணிக்குக்கடவன் இவனைப் புகுரவிடு" என்று உள்ளே அந்தரங்கவ்ருத்திக்குக் கடவவர்களோடே நானும் ஸஜாதீயனாய்ப் புகவேணும். ... (௩)

அ—நாலாம்பாட்டு. மநுஷ்யஶரீரம் ராஜாவாகைக்கும் பொதுவாகையாலே அது வேண்டா, திருவேங்கடமுடையானுக் குறுப்பாம்படி திருமலையிலே நிற்பதொரு ஸ்தாவரமாக வமையும் நானென்கிறார்.

ஒண்பவளவேலை யுலவுதண்பாற்கடலுள்
கண்டுயிலுமாயோன் கழலிணைகள்காண்பதற்குப்
பண்பகரும்வண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்துச்
செண்பகமாய்நிற்குந் திருவுடையேனாவேனே. (௪)

(க) தை - நாராயணம்.

ப - ரை.—ஒண் - ஒள்ளிய, பவளம் - பவளங்களை, வேலை - கரையிலே கொடுவந்து, உலவு - கொழிக்கிற, தண் - குளிர்ந்த, பாற்கடலுள் - திருப்பாற் கடலிலே, கண் துயிலும் - கண்வளர்ந்தருளுகிற, மாயோன் - ஆஶ்சர்யபூதனை திருவேங்கடமுடையானுடைய, கழலிணைகள் - திருவடிகளை, காண்பதற்கு - ஸேவிக்கைக்காக, பகரும் - தாங்கள் பாடுகிற, பண் - இசைக்கு அநுகுணமாக, வண்டினங்கள் - வண்டுகளானவை, பண்பாடும் - பண்களைப்பாடாநின்றுள்ள, வேங்கடத்து - திருமலையிலே, செண்பகமாய்நிற்கும் - செண்பகமரமாய் நிற்கத்தக்க, திருவுடையேனாவேனே-ஸம்பத்துடையவனாகவாகிலும் ஆவேனோ வென்கிறார். (ச)

வ்யா.—(ஒண்பவளவேலை யுலவுதண்பாற்கடலுள்) ஒள்ளிய பவளத்தைக் கரையிலே கொடுவந்து கொழிக்கிற பாற்கடலென்னுதல்; ஒள்ளிய பவளங்களைக்கொண்டு உலாவுகிற திரைகளையுடைய ஶ்ரமஹரமான திருப்பாற்கடலிலே யென்னுதல். (கண்துயிலுமாயோன்) திருப்பாற்கடலிலே, (க) "கிடந்ததோர் கிடக்கை" என்று சொல்லும்படி கண்வளர்ந்தருளுகிற ஆஶ்சர்யபூதனானவன். (கழலிணைகள் காண்பதற்கு) அங்குச்சென்று கிட்டிக்காணவொண்ணாத அருமைதீரக்காணலாந் தேஶத்திலே காண்கைக்காக.

(பண்பகரும்) இயலைக்கற்று ஶிக்ஷாபலத்தாலே இசைவருமதின்றியே வார்த்தை சொல்லும்போதும் பண்ணாயிருக்கை. (வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து) தாங்கள் பாடுகிற பாட்டுக்குச் சேர்ந்து வண்டினங்களானவை பண்பாடுகிற திருமலையிலே. (செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே) திருமலையிலே செண்பகமாய் நிற்கும் ஸம்பத்துண்டாகவேணும். அதாவது - பகவத்ப்ரத்யாஸத்தியிறே ப்ராப்யம்; அது கிட்டுமானபின்பு ஸ்தாவரமாய் நிற்கவும் அமையும்; மேலேஏறின சைதந்யத்தாலே கார்யமில்லை யென்கிறார். ... ... (ச)

அரு;—நாலாம்பாட்டு. (ஒண்பவளமித்யாதி) (தாங்கள் பாடுகிற) என்றது-வ்யாக்யாதாவின் வார்த்தையாய், தாங்களென்று ஆழ்வார்களைச் சொல்லுகிறது. ஆழ்வார்கள் பாசுரத்துக்குச் சேரவண்டுகள் கானம்பண்ணுகிறதென்றபடி. அன்றியே வண்டுகளான தாங்களென்றாய், தாங்கள் பாட்டுக்குச்சேரத் தாங்களே கானம்பண்ணுகிறதென்னவுமாம். (ச)

(க) திருமாலை - உ௩.

அவ.—அஞ்சாம்பாட்டு. செண்பகமானால் பரிமளத்துக்காக உள்ளேகொண்டு புகுவர்களென்று ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசித்ததாமிறே; அப்படியு மொன்றுமில்லாத தம்பகமாக வுமமையு மென்கிறார்.

கம்பமதயானைக் கழுத்தகத்தின்மேலிருந்து
இன்பமருஞ்செல்வமு மிவ்வரசும்யான்வேண்டேன் ;
எம்பெருமானீசனெழில் வேங்கடமலைமேல்
தம்பகமாய்நிற்குந் தவமுடையேனாவேனே. (ரு)

ப - ரை —கம்பம் - கண்டவர்களெல்லாரும் நடுங்கும்படியான, மதம் - மதத்தையுடைய, யானை - யானையுடைய, கழுத்தகத்தின்மேல்-கழுத்தின்மேலே' இருந்து - ராஜாதிராஜன் என்னும் பெருமைதோன்றவிருந்து, இன்பு அமரும் - ஸகலபோகங்களையும் புஜிக்கத்தக்க, செல்வமும் - ஸம்பத்தையும், இவ்வரசும் - இந்த்ராஜ்ய மாளுகையையும், யான் - என்னை அத்தலைக்கு சேஷபூதனென்றறிந்த நான், வேண்டேன் - விரும்பமாட்டேன் ; எம்பெருமான் - எனக்கு உபகாரகனாய், ஈசன் - ஸர்வஸ்வாமியானவனுடைய, எழில் - அழகிய, வேங்கடமலைமேல் - திருமலையிலே, தம்பகமாய்நிற்கும் - தம்பகமாமாய்நிற்கும், தவமுடையேனாவேன் - தபஸ்ஸையுடையவனாக ஆவேன். (ரு)

வ்யா.—(கம்பமதயானைக் கழுத்தகத்தின்மேலிருந்து) கண்டாரெல்லாம் நடுங்கும்படி மதிப்பையுடையவானை யென்னுதல் ; மதத்தாலே கம்பத்தினின்றும் விடவொண்ணாதபடி நிற்கும் யானையென்னுதல். ஒருவராலும் மேற்கொள்ள வொண்ணாதாகிலும் ராஜாக்களை மேற்கொள்ள வொட்டுமிறே யானைகள். எல்லார்க்கும பயாவஹமான யானையைமேற்கொண்டு தன் கருத்திலே நடத்தி. (இன்பமருஞ்செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்) அங்கேயிருந்து எல்லாபோகங்களும் புஜிக்கும் ஸம்பத்தும் அதுக்கடியான ராஜதர்மமும் யான் வேண்டேன்.

நீர் வேண்டுவதென்னென்னில் (எம்பெருமானீசன்) * ஈவிஷ ஜமத்ஸ்வாமி ஈஷஸ்வாமி - அகிலஜகத்ஸ்வாமி அஸ்மத்ஸ்வாமி. (எழில் வேங்கடமலைமேல்) எல்லார்க்கும் ஸ்வாமியாயிருந்துவைத்து என் பக்கலிலே விசேஷ கடாக்ஷத்தைப்பண்ணின என்னுடையனதான

எழிலுடைய திருமலையிலே. (தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே) ஒரு ப்ரயோஜநத்துக்காகாதே அங்கே முளைத்துத் தீய்ந்துபோவதொரு ஸ்தாவரமாவேன். (தவமுடையேனாவேனே) அநேகஜந்ம ஸாத்ய தப꞉பலமென்றிருக்கிறார்காணு மிதுதன்னை.

அ.—ஆறாம்பாட்டு. ஸ்தாவரமானால் ஒருநாள் உண்டாய் ஒருநாள் இன்றியே போமிறே; அங்ஙனன்றியே என்று மொக்க வுண்டாயிருந்த திருமலையில் ஏகதேசமாகவேணும் நானென்கிறார்.

மின்னனைய நுண்ணிடையா ருற்பசியும்மேநகையும்
அன்னவர்தம்பாடலொடு மாடலவையாதரியேன் ;
தென்னவெனவண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்துள்
அன்னனையபொற்குவடா மருந்தவத்தனாவேனே. (௬)

ப-ரை.—மின் அனைய - மின்போலே, நுண் - நுண்ணிய, இடையார் - இடையை யுடையரான, உற்பசியும் - ஊர்வசியையும், மேநகையும் அன்னவர் தம் - மேநகையையுமொத்த ஸ்த்ரீகளுடைய, ஆடலொடு - நர்த்தநமும், பாடலவை - பாட்டுமாகிற வவைகளை, ஆதரியேன் - விரும்பமாட்டேன்; வண்டினங்கள் - வண்டுக்கூட்டங்களானவை, தென்ன என - தெனதெனவென்று ஆளத்திவைத்து, பண்பாடும் - பண்கள் பாடுகிற, வேங்கடத்துள் - திருமலையிலே, அன்னனைய - உபமாநரஹிதமான, பொற்குவடாய் - ஸ்ப்ருஹணீயமான சிகரமாயிருக்கத்தக்க, அருந்தவத்தனாவேனே - அரிய தபஸ்ஸையுடையவனாக ஆவேனென்கிறார். (௬)

வ்யா.—(மின்னனைய நுண்ணிடையா ரித்யாதி) மின்போலே நுண்ணிய இடையையுடையரான தேவஸ்த்ரீகளைப்போலே அழகியராயிருக்கிற ஸ்த்ரீகளுடைய ஆடல்பாடல்களில் எனக்கு ஆதரமில்லை (தென்னவெனவண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துள்). "தெனதென" என்று ஆளத்திவைத்து வண்டினங்கள் பண்பாடுகிற திருமலையிலே (அன்னனைய பொற்குவடாம் அருந்தவத்தனாவேனே) அப்படிப்பட்ட பொற்குவடென்னுமத்தனை; வேறு உபமாநமில்லை. (அருந்தவத்தனாவேனே) திருவேங்கட முடையான்தனக் கவ்வருகாகிறதிறே ; ஆகையாலே, " அருந்தவத்தன் " என்னக் குறையில்லையிறே. ... ... (௬)

அ.—ஏழாம்பாட்டு. திருமலையில் ஸிகரமானால் ஏறவல்லார் அநுபவித்து, மாட்டாதார் இழக்குமதா யிருக்குமிறே; அப்படியின்றியே, எல்லார்க்கும் அநுபவ யோக்யமாயிருக்குங்காறாக வேணும் நானென்கிறார்.

வானாளும்மாமதிபோல் வெண்குடைக்கீழ்மன்னவர்தம்
கோனாகிவீற்றிருந்து கொண்டாடுஞ்செல்வறியேன் ;
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல்
கானாறாய்ப்பாயுங் கருத்துடையனாவேனே. (எ)

ப - ரை.—வான் - ஆகாசப்பரப்பையெல்லாம் - ஆளும் - ஆளுகிற, மா - பெருமைதங்கிய, மதிபோல் - சந்த்ரனையொக்க, வெண்குடைக்கீழ் - வெண்கொற்றக்குடைநிழலிலே, மன்னவர்தம்கோனாகி - ராஜாதிராஜனாய், வீற்றிருந்து - பெருமைதோன்ற விருந்து, கொண்டாடும் - எல்லாஜநங்களும் கொண்டாடத்தக்க, செல்வு - ஸம்பத்தை, அறியேன் - மநஸ்ஸாலும் ஒருபொருளாக நினைத்தறியேன் ; தேன் ஆர் - தேன்மிகு, பூ - பூத்திருந்துள்ள, சோலை - சோலையையுடைய, திருவேங்கடமலைமேல் - திருமலையிலே, கானாறாய் - காட்டாறாய், பாயும் - நிலத்தில் சுவறவேணுமென்கிற, கருத்துடையனாவேன் - கருத்தையுடையவனா யிராநின்றேன். (எ)

வ்யா.—(வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ்) ஆகாசப்பரப்புக்கெல்லாம் சந்த்ரன் ஒருவனுமே யானாப்போலே, லோகமெல்லாம் தன் வெண்கொற்றக் குடைக்கிழே யொதுங்கும்படியாக. (மன்னவர்தம்கோனாகி) நக்ஷத்ரதாரகணங்கள் சந்த்ரனை ஸேவித்திருக்குமாப்போலே, ராஜாக்களெல்லாம் வந்து ஸேவித்திருக்கும்படி ராஜராஜனாய். (வீற்றிருந்து கொண்டாடுஞ்செல்வறியேன்) வேறுபட விருந்துகொண்டாடும் ஸம்பத்து எனக்கு ப்ராதிபத்திவிஷயமா யிருக்கிறதில்லை.

(தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல்) தேன்மிக்கிருந்துள்ள சோலையையுடைய திருமலைமேல். (கானாறாய்ப்பாயுங் கருத்துடையனாவேனே) ஸஹ்யம் பற்றினதாகில் கீழே போமிறே; அங்கே சுவறிப்போம் காட்டாறுகளாமபிஸந்தியையுடையேனாக வேணும். ... ... (எ)

பிறையேறுசடையானும் பிரமனுமிந்திரனும்
முறையாயபெருவேள்விக் குறைமுடிப்பான்மறையானன்;
வெறியார்தண்சோலைத் திருவேங்கடமலைமேல்
நெறியாய்க்கிடக்கும் நிலையுடையேனாவேனே. (அ)

ப - ரை.—பிறையேறு - மூன்றாம்பிறையைதரித்த, சடையானும் - ஜடையையுடைய ருத்ரனும், பிரமனும் - அவனுக்குத் தமப்பனான ப்ரஹ்மாவும், இந்திரனும் - இந்த்ரனும், முறையாய - தந்தாமுடைய அதிகாராநுகுணமாகப் பண்ணும், பெரு - ஶ்லாக்யமான, வேள்வி - யாகங்களினுடைய, குறைமுடிப்பான் - குறையைத் தீர்க்குமவனாய், (பலத்தைத்தருமவனாய்) மறையானன் - வேதப்ரதிபாத்யனானஸர்வேச்வர னெழுந்தருளியிருக்கிற, வெறி ஆர் பரிமளம் மிக்கு, தண் -குளிர்ந்திருந்துள்ள, சோலை - சோலைசூழ்ந்த, திருவேங்கடமலைமேல் - திருமலைமேலே, எப்போதும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பாதரேணுபடும்படி நெறியாய்க்கிடக்கும் - வழியாய்க்கிடக்கும், நிலையுடையனாவேனே - துணிவுடையனாவேனென்கிறார். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (பிறையேறுசடையானும்) ஸாதக வேஷம் தோற்றும்படி ஜடையோடே யிருக்கச்செய்தே ஸுக ப்ரதானனென்று தோற்றும்படி பிறையை தரித்துக்கொண்டிருக்கிற ஹரனும். (பிரமனும்) அவனுக்கு ஜநகனான ப்ரஹ்மாவும், (இந்திரனும்) (க) "ஸைஂத்ரஃ - ஸேந்த்ரஃ" என்னும்படியான இந்த்ரனும். (முறையாய பெருவேள்விக் குறைமுடிப்பான்) தந்தாமுடைய அதிகாராநுகுணமாகப்பண்ணும் யஜ்ஞபலமான அதிகாரங்களைக் கொடுக்குமவன். (மறையானன்) ப்ரஹ்மாதிகளுக்கு ஆஶ்ரயணீயமென்னும் வேதைகஸமதிகம்யனானவன்.

(வெறியார்தண்சோலைத் திருவேங்கடமலைமேல் நெறியாய்க் கிடக்கும் நிலையுடையனாவேனே) பரிமளம் மிக்குக் குளிர்த்தியை யுடைய திருமலைமேலே; அருவல் ஒருகால் பெருகினால் வீதி போகப்பட்டு, வற்றினால் வீதிபோகப்படாநின்றதே; அங்ஙனன்றியே, எப்போதுமொக்க ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸஞ்சரிக்கையாலே அவர்கள் பாதரேணு படும்படி வழியாய்க்கிடக்கும் துணிவுடையனாவேனே. (உ) "தொண்டரடிப்பொடி யாடநாம்பெறில்" என்றிருக்குமவரிறே. ... ... (அ)

(க) தை - நாராயணம். (உ) உ - உ.

செடியாயவல்வினைகள் தீர்க்குந்திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின்வாசல்
அடியாரும்வானவரு மரம்பையருங்கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்துன் பவளவாய்காண்பேனே. (கூ)

ப - ரை.—செடியாய - பாபபலமான, வல்வினைகள் - ஸம்ஸாரஸம்பந்தத்தை, தீர்க்கும் - அறுக்குமவனாய், திருமாலே - ஶ்ரிய:பதியாய், நெடியானே - ஸர்வாதிகனாய், வேங்கடவா - திருமலையிலெழுந்தருளி யிருப்பவனே, நின் - தேவரீருடைய, கோயிலின் - கோயிலினுடைய, வாசல் - திருவாசலிலே, அடியாரும் - சேஷபூதரும், வானவரும் - தேவதைகளும், அரம்பையரும் - ரம்பா ஸ்த்ரீகளும், கிடந்து - கூடி, இயங்கும் - ஸஞ்சரிக்கிற, படியாய்க்கிடந்து - படியாகக்கிடந்து, உன் - தேவரீருடைய, பவளம் - பவளம்போன்ற, வாய் - திருவதரத்தை, காண்பேன் - காணவேணுமென்கிறார். (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (செடியாய வல்வினைகள்தீர்க்கும்) தன்திருவடிகளிலே தலைசாய்த்தாருடைய பாபபலமான ஸம்ஸார ஸம்பந்தத்தை அறுத்துக்கொடுக்குமவனுமாய்த்து. செடி - பாபம். (திருமாலே) அதுக்கு நிபந்தநம் கூடவிருந்து செய்விப்பாருண்டாகை. (நெடியானே) அவள்தானும் "என்னாலும் பொறுக்கப் போகாது" என்றபோது (க) "என்னடியாரது செய்யார்" என்று-ஆஶ்ரிதவிஷயத்திலோரம் எல்லைகாண வொண்ணாதவன். (வேங்கடவா நின்கோயிலின்வாசல்) தேவரீருடைய திருவாசலிலே.

(அடியாரும்வானவரு மரம்பையரும்கிடந்தியங்கும்படியாய்க்கிடந்து) அநந்யப்ரயோஜநரும் ப்ரயோஜநாந்தரபரரும் அந்யபரருங் கிடந்து ஸஞ்சரியாநின்றால் ஒருநினைவற்று அசேதநவத் கிடக்க வேணும். (உன்பவளவாய் காண்பேனே) பாரதந்த்ர்யத்துக்கு அசேதநஸமாதியாகவும் வேணும், அது புருஷார்த்தமாகைக்குக் காணவும்வேணும். ... ... (கூ)

அ.—பத்தாம் பாட்டு. கிட்டுமளவும் வேண்டாவென்கிறீர், கிட்டினவாறே அநுபவிக்கிறீரென்ன; அவைகிட்டினாலும் வேண்டா வென்கிறார்.

(க) பெரி - திரு - ச - அ - உ.

உம்பருலகாண்டொரு குடைக்கீழுற்பசிதன்
அம்பொற்கலையல்குல் பெற்றாலுமாதரியேன் ;
செம்பவளவாயான் திருவேங்கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேலேதேனுமாவேனே (கo)

ப - ரை.—உம்பர் உலகு - மேலுலகங்களை யெல்லாம், ஒரு குடைக்கீழ்- தன்னுடைய ஓர்முத்துக்குடை நிழலின்கீழே, ஆண்டு - அரசுசெலுத்தி, உற்பசிதன் - ஊர்வசியுடைய, அம் - அழகிதாய், பொன்கலை - மேகலாபரணமணிந்த, அல்குல் - அல்குலை, பெற்றாலும் - லபித்தாலும், ஆதரியேன் - அவற்றை விரும்பமாட்டேன் ; செம் - சிவந்த, பவளவாயான் - பவளம்போன்ற வாயையுடையனாய், எம்பெருமான் - என்நாதனுடைய, பொன் - ஶ்லாக்யமான, வேங்கடமென்னும் மலைமேல் - திருமலையிலே, ஏதேனும்ஆவேன் - யாதேனுமொரு பதார்த்தமாக ஆவேனென்கிறார். (கo)

வ்யா.–(உம்பருலகாண்டொருகுடைக்கீழ்) உபரிதநலோகங்களெல்லாம் தன்னொருமுத்தின் குடைக்கீழே செலுத்தி. (உற்பசிதன் அம்பொற்கலையல்குல்பெற்றாலு மாதரியேன்) அவற்றைக் கிட்டுவித்தாலும் எனக்கு ஆதரம் பிறவாது.

(செம்பவளவாயான்) உற்பசியைக்கண்டால் அநாதரிக்கும்படியாய்த்து உள்ளுநிற்கிற விஷயத்தன்படி. (திருவேங்கடமென்னும் எம்பெருமான் பொன்மலைமேல்) என்னையனுடைய ஶ்லாக்யமான திருமலையிலே. (ஏதேனுமாவேனே) அநந்தாழ்வான் இவ்விடத்துக்கு "திருவேங்கடமுடையான் ருசிகவுமமையும்" என்னும்; அதுக்கு ஹ்ருதயமென்னென்னில்; ஶேஷபூதர் திரளுக்குப் புறம்பான ஶேஷியாகிலுமமையுமென்கை. அங்ஙனன்றிக்கே பட்டருளிச்செய்யும்படி ;- "நானுமறியவேண்டா, திருவேங்கடமுடையானு மறியவேண்டா, கண்டாருமறிந்து ஶ்லாகிக்கவும் வேண்டா, திருமலைமேலே யுள்ளதொரு பதார்த்தமாக வமையும்', என்பர். ... ... (கo)

மன்னியதண்சாரல் வடவேங்கடத்தான்றன்
பொன்னியலுஞ்சேவடிகள் காண்பான்புரிந்திறைஞ்சிக்
கொன்னவிலுங்கூர்வேல் குலசேகரன்சொன்ன
பன்னியநூல்தமிழ்வல்லார் பாங்காயபத்தர்களே. (கக)

குலஶேகராழ்வார் திருவடிகளே ஶரணம்.

ப - ரை.—கொல்நவிலும் - சத்ருக்களை நிரஸிக்கையையே தொழிலாக வுடைய, கூர் - கூரிய, வேல் - வேலையுடையரான, குலசேகரன் - ஸ்ரீ குலசேகரப்பெருமாள் ; மன்னிய - மாறாத, தண் - குளிர்த்திபொருந்திய, சாரல் - தாழ்வரையை யுடைய, வடவேங்கடத்தான்றன் - வடக்குத்திருமலையை யுடையவனுடைய, பொன் இயலும் - ஶ்லாக்யமாய், சேவடிகள் - செந்தாமரைமலரையொத்த திருவடிகளை, காண்பான் - ஸேவிக்கைக்காக, புரிந்து - ஆசைப்பட்டு, இறைஞ்சி - தலையாலேவணங்கி, சொன்ன - அருளிச்செய்ததாய், பன்னிய - பரம்பின, நூல் - லக்ஷணோபேதமான, தமிழ் - தமிழ்த்தொடையை, வல்லார் - வல்லவர்கள், பாங்காய - அவன்றிருவுள்ளத்துக்குப் பாங்கான, பத்தர்கள் - பக்தர்களாவரென்கிறார். (௧௧)

வ்யா.—பதினோராம்பாட்டு. (மன்னியதண்சாரல் வடவேங்கடத்தான்றன் பொன்னியலுஞ்சேவடிகள் காண்பான்) கண்டால் கால்வாங்கமாட்டாதே பிணிப்படும்படி ஶ்ரமஹரமான பர்யந்தத்தையுடைய தமிழுக்கெல்லையான திருமலையை யுடையவனுடைய ஶ்லாக்யமான திருவடிகளைக் காண்கைக்காக. (புரிந்திறைஞ்சி) காணவேண்டும்படி பக்தியையுடையராய்த் தலையாலே வணங்கிக் கவிபாடினாராய்த்து.

(கொன்னவிலுங்கூர்வேல் குலசேகரன் சொன்ன) ப்ரதிபக்ஷத்தை வெல்லவல்லரானாப்போலேயாய்த்துக் கவிபாடுகைக்கும்படியும். (பன்னியநூல்தமிழ்வல்லார்) பரம்பின லக்ஷணோபேதமான தமிழ்த்தொடையை வல்லவர்கள். (பாங்காயபத்தர்களே) இங்கேயிருந்து "அதுவாகவேணும், இதுவாகவேணும்" என்னாதே அவனுக்கு இஷ்டவிநியோகார்ஹமாவர்கள். ... ... (௧௧)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

நாலாந்திருமொழி முற்றிற்று.

அரு ;—பதினோராம்பாட்டு. (மன்னியவித்யாதி). (அதுவாக இதுவாக) அதுவாய்ப்பிறக்க, இதுவாய்ப்பிறக்க. (௧௧)

அஞ்சாந்திருமொழி தருதுயரம் ப்ரவேசம்.

———(ο)———

அ—(தருதுயரம்) திருமந்த்ரத்தால் சொல்லிற்றாய்த்து அநந்யார்ஹ ஶேஷத்வமிறே; இந்த அநந்யார்ஹ ஶேஷத்வப்ரதிபத்திக்கு விரோதிதான் "நான் என்னது" என்றிருக்கும் அஹங்கார மமகாரமிறே; * அநாத்மந்யாத்மபுத்தியும் அஸ்வேஸ்வத்வ புத்தியுமிறே ஸம்ஸாரமாகிற வ்ருக்ஷத்துக்கு பீஜமென்று ப்ரமாணங்கள் சொல்லுகிறன; அது சேதநர்க்கும் பொதுவானதிறே. அப்படியன்றியே, ராஜாக்களாகையாலே அஹங்கார மமகார வஶ்யராயிறேயிருப்பது. "நிலா, தென்றல், சந்தநம்" என்று சொல்லுகிற விவை பாரார்த்தமாகாதபோது ஸ்வரூபஸித்தியில்லை யாமிறே. அப்படியேயிறே பாரார்த்தமானவஸ்துவுக்கும் அஹங்கார மமகாரத்தாலே ஸ்வரூபஸித்தி யழியுமிறே.

இப்படி பாரார்த்தமென்னும்படிக்கு ப்ரமாணமுண்டோ வென்னில்; இவனை (க) "யஸ்யாஸ்மி - யஸ்யாஸ்மி" என்றும் ஓதி, அவனை (உ) "பதிம்விஶ்வஸ்ய-பதிம்விஶ்வஸ்ய" என்றும் ஓதுகையாலே இவனொன்றுக்குங் கடவனல்லன்; உடையவனானவவன் எல்லாவற்றுக்குங் கடவனென்றதிறே; அப்படி ப்ரமாணங்களால் சொன்ன ஶேஷத்வப்ரதிபத்தியாவது - ததீயஶேஷத்வ பர்யந்தமான அநந்யார்ஹ ஶேஷத்வமிறே. அப்படி தமக்குப் பிறந்திருக்கச்செய்தே அது பலப்ரதமாகக் கண்டிலர்; தான் தன்கருமம்

அரு;-தருதுயாம் ப்ரவேஶம். ஶேஷத்வஜ்ஞாநம் பிறந்திருக்கச் செய்தேயும் தமக்கு உதவாமையாலே அநந்யகதித்வாதிகள் தமக்கில்லையாக நினைத்திருந்தாராகவேணுமென்று, தம்முடைய அநந்யகதித்வாதிகளை ஆவிஷ்கரிக்கிறார். இத்திருமொழியில்; ப்ரதமத்தில் ஶேஷத்வத்தின்க்ரமத்தை ஶிக்ஷிக்கிறார் திருமந்த்ரத்தாலித்யாதி) அஹங்காராதிகள் விரோதிகளாகிறது என்தவாகாரத்திலே என்னவருளிச் செய்கிறார் (நிலாத்தென்ற லித்யாதி)

(க) (உ) தை - நாராயணம்.

செய்கிறானென்றாதல்; நாம் க்ரமத்தால் செய்கிறோமென்றாறியிருந்தானாதல்; நம்முடைய த்வரைக்கடியான ருசியுமறியுமவனாகையாலே ருசிபாகமானால் செய்கிறோமென்று ஆறியிருந்தானாமித்தனை.

நம்மைப்போலன்றியே, செய்தது அறிந்திருக்கும் ஸர்வஜ்ஞனாகையும், நினைத்தது தலைக்கட்டவல்ல ஸர்வஶக்தியாயிருந்து வைத்து ஆறியிருக்கும்போது சிலஹேதுக்களுண்டாக வேணுமிறே என்று பார்த்து, எனக்கு நானுமில்லை, பிறருமில்லை. பேற்றில் த்வரையாலே துடிக்கிறேனித்தனையல்லது ஸாதநாநுஷ்டாநக்ஷமனுமல்லேனென்னுமிடத்தை அநந்யகதிகளாயிருக்கும் பதார்த்தங்களை நிதர்ஶநமாக விட்டுத் தம்முடைய அநந்யகதித்வத்தை திருவித்துவக்கோட்டு நாயனார் திருவடிகளிலே விண்ணப்பஞ் செய்கிறார். ... ... *

தருதுயரந்தடாயேலுன் சரணல்லால்சரணில்லை;
விரைகுழவுமலர்ப்பொழில் சூழ்வித்துவக்கோட்டம்மானே!;
அரிசினத்தாலீன்றதாயகற்றிடினும்மற்றவள்தன்
அருள்நினைந்தேயழுங்குழவியதுவேபோன்றிருந்தேனே. (க)

ப-ரை.—விரைகுழவு - பரிமளம்மிக்க, மலர் - மலர்களையுடைய, பொழில்சூழ் - பொழிலாலே சூழப்பட்ட, வித்துவக்கோடு - திருவித்துவக்கோட்டிலெழுந்தருளியிருக்கிற, அம்மானே - ஸர்வேஶ்வரனே, தரு - நீயேதருகிற, துயரம் - துக்கத்தை, தடாயேல் - நீயேபோக்காயாகில், உன்சரணல்லால் - தேவரீர் திருவடிகளே உபாயமல்லது, சரண் இல்லை - வேறே உபாயமில்லை; ஈன்றதாய் - பெற்றதாயாரானவள், அரி - அரிந்து போகடவேண்டும், சினத்தால் - கோபத்தாலே, அகற்றிடினும் - தள்ளிவிட்டாலும், அவள்தன் - அந்தத்தாயாருடைய, அருள் - அருளையே, நினைந்து - நினைந்துகொண்டு, அழும் - அவள்காலைக் கட்டிக்கொண்டழுகிற, குழவியதுவேபோன்று இருந்தேன் - குழந்தையையொத்திருந்தேனென்கிறார். (க)

வ்யா.—முதற்பாட்டு. (தருதுயரந்தடாயேல்) நீயே தருகிற துக்கத்தை நீயே மாற்றாயாகில்; தன்னாலே தனக்கு விரோதி வந்ததென்றும் தானே ஸாதநாநுஷ்டாநத்தாலே அதுபோக்கிச்

கொள்வானென்றும் ஶாஸ்த்ரங்கள் சொல்லிக் கிடக்கச்செய்தே, இவர் அவனை துயர்தந்தானென்பானென்னென்னில் ; ப்ராப்தா ப்ராப்த விவேகம்பண்ணி யிருப்பாரொருவ ராகையாலே சொல்லுகிறார். தானே கர்மம் பண்ணினவன் தானே ஸாதநாநுஷ்டாநம் பண்ணித் தவிர்த்துக் கொள்ளுகிறானென்று நம்மைப் பழியிட்டுத் தள்ள நினைத்தானாகிலும் நானும் தன்னைக் குறித்துப் பரதந்த்ரனே, நான்செய்த கர்மமும் பரதந்த்ரம், நான் பண்ணும் ஸாதநாநுஷ்டாநத்துக்கு பலப்ரதன் தானாகையாலே அதுவுந் தன்னைக் குறித்துப் பாரதந்த்ரமாகையாலே (தருதுயரம்) என்கிறார்.

முதலிகளெல்லாருங் கூடப் பெரிய திருமண்டபத்துக்குக் கீழாகவிருந்து ரஹஸ்யார்த்தங்கள் விசாரித்து எழுந்திருப்பார்களாய்த்து; ஒருநாள், நித்யஸம்ஸாரியாய்ப் போந்தவனுக்கு பகவத் விஷயத்தில் ருசி பிறக்கைக்கு அடியென்னென்று விசாரிக்கச்செய்தே, யாத்ருச்சிக ஸுக்ருதமடியென்ன, அஜ்ஞாத ஸுக்ருதமென்னப் பிறந்தது : அவ்வளவில் கிடாம்பிப் பெருமாளிருந்தவன் நமக்கு பகவத ஸமாஶ்ரயணம்பாமேல் ஸுக்ருதமேதவரான் ஒருவருண்டோ ஆஶ்ரயணீயன என்றான்; பிள்ளை திருநறையூரரையர், ஸுக்ருதமென்று சொல்லுகிற நீர் தாம் நினைத்திருக்கிறது எத்தைக் காணென்றார். அதாவது - ஒன்றை ஆராயப்புக்கால் அதுக்கவ்வருகு மேலொருன்றின் நிருப்பதிறே - அடியாவது ; யாதொன்று பலப்ரதமாகிறதே உபாயமாவது ; அல்லது நந்மேல அநேகாவஸ்

அரு;—முதல்பாட்டு. (கருதுபரமித்யாதி) (ஶாஸ்த்ரம்) “ஸாதுகாரீஸாது பவதி. பாபகாரீ பாபீபவதி” என்றும், (க) “[illegible] ஊதி - தர்மேணபாபமபநுததி” என்றும் சொல்லுகிறவை.

கர்மம் அவனிட்டவழக்கென்றுமதுக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்யமருளிச் செய்கிறார். (முதலிகளித்யாதி) யாத்ருச்சிகம் அஜ்ஞாதஸுக்ருதமென்று விவக்ஷை. (ஒன்றையாராய்கை) ஒருஹேதுவையாராய்கை. கர்மத்தையுண்டாக்குமத்தாலன்றியே பலப்ரதத்வத்தாலும் அவனை உபாயமென்கிறார். (யாதொன்றித்தியாதி) (அநேகாவஸ்தை) அத்வேஷாதிகள்.

(க) தை - நாரா - ருo.

தை பிறந்தால் அவற்றினளவில் பர்யவஸியாதிறே. இளைப்பாறுவது இதிலே சென்றிறே; நடுவு இளைப்பாறுதிறே; அத்தாலே தருதுயரமென்னலாமிறே.

(தடாயேல்) நீ விளைத்த துக்கம் நீயே போக்காயாகில், (க) "ஐஐாயாஉ-ஊஈ தூயா - மமமாயாதுரத்யயா" என்றும்; "ஓாெஜ வயெஷுவஉ௱ஹெ ஓயாஒஜதாம தாஈநிதெ - மாமேவயேப்ரபத்யந்தே மாயாமேதாந்தரந்திதே" என்றும் - நம்முடைய மாயை யொருவரால் கடக்கவொண்ணுதாகா ணென்றும், இது கடக்கவேண்டியிருந்தவன் நம்மைப்பற்றிக் கழித்துக் கொள்வானென்றும் நீயே சொல்லி வைக்கையாலே நீயே துயர்தந்தா யென்னும்படி தோற்றப்படுகிறதிறே. துக்கத்தை விளைப்பானொருவனும் போக்குவா னொருவனுமாயன்றிறே யிருப்பது. பண்ணினவன் றானே போக்கு மித்தனையிறே; பிள்ளை திருநறையூரரையர், "ஒரு குருவி பிணைத்த பிணையல் ஒருவரால் அவிழ்க்கவொண்கிறதில்லை; ஒரு ஸர்வஶக்தி பிணைத்த பிணையை எலியெலும்பனானவன் அவிழ்க்கவென்று ஒருகார்ய மில்லையிறே; அவன் றனனையே கால்கட்டிப்போக்கு மித்தனையிறே" என்றார். (உன் சரணல்லால் சரணில்லை) இவ்வளவாக விளைத்துக்கொண்ட நான் எனக்கில்லை; பிறர் ரக்ஷகருண்டாகிலும் நான் அவர்களை ரக்ஷகராகக் கொள்ள மாட்டாமையாலே அவர்களுமில்லை; நான் பண்ணும் ஸாதநா நுஷ்டாநமும் எனக்குக் கழுத்துக் கட்டியாகையாலே தேவரீர் திருவடிகளல்லது வேறுபாயமில்லை.

(விரைகுழவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்டம்மானே) பரிமளப்ரசுரமான சோலையை யுடைத்தான திருவித்துவக்கோட்டிலே எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனே. (விரைகுழவுமலர்ப்பொழில்சூழ்) (உ) "ஸவ-ஃமஂயஃ - ஸர்வகந்தஃ" என்கிற ப்ராப்யவஸ்து வந்துகிட்டின விடமென்று தோற்றியிருக்கு மாய்த்து. (வித்துவக்கோட்டம்மானே) உபாயமாம்போது ஸுலபமாக வேணுமிறே. (அம்மானே) ப்ரஜை உறங்குகிறதொட்டிற்கீழே கிடக்

தம்முடைய விவேகாதிஶயத்தாலே கர்மம் அவனதீநமென்றது - கீழ்; அவனுக்தியாலும் அவநதீநமென்கிறார். (மமமாயா இத்யாதி).

(க) கீதை-எ-கச. (உ) சாந்தோ-௩-ச-ச.

கும் தாயைப்போலே இங்கேவந்து கிட்டினவனே. தம்முடைய பாரதந்த்ர்யத்தாலே தம்முடைய ரக்ஷணத்துக்கு தமக்கு அநந்வயம் சொன்னார்; ஶேஷியாகையாலே தம்முடைய ரக்ஷணத்துக்கு ப்ராப்தன் அவனென்கிறார் - இப்போது; ஒருவன் பேற்றுக்கு ஒருவன் ஸாதநமாம்போது இத்தனைப்ராப்தியுண்டாநுலல்லது ஆகாதிறே. ப்ரஜையுடைய நோய்க்குத்தாயிறே குடிநீர் குடிப்பாள். மேல் தாயை நிதர்ஶநமாகச் சொல்லப் புகுகிறவராகையாலே இப்போது "அம்மானே" என்று ப்ராப்திதோன்றச் சொல்லுகிறார்.

(அரிசினத்தாலித்யாதி) அவனே ரக்ஷகனென்னும் அத்யவஸாயமுண்டானாலும் பேறுதாழ்த்தால் அவனைவெறுக்கவேண்டும் ப்ராப்தியுண்டிறே சேதநனாகையாலே. (க) "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்று - அசித்ஸமாநமாக பாரதந்த்ர்யத்தைச் சொல்லிவைத்து, "எனக்கேகண்ணனை யான்கொள்சிறப்பு" என்கிறது புருஷார்த்தஸித்தி சேதநனுக்கு ஆகவேண்டியிறே. அவனைக்குறித்து சேதநாசேதநங்களிரண்டுக்கும் பாரதந்த்ர்யம் அவிஶிஷ்டமாயிருக்கச்செய்தே புருஷார்த்தஸித்தி இவனுக்குண்டாகிறது சேதநனாகையாலேயிறே.

(அரிசினத்தால்) அரிந்துபொகடவேண்டுஞ் சினத்தையுடையளாய்க் கொண்டு. (ஈன்றதாய்) "வளர்த்ததாய்" என்னாதே "ஈன்றதாய்" என்றத்தாலே - ப்ராப்தி சொல்லிற்று. (அகற்றிடினும்) "அகற்றிடினும்" என்கையாலே - அகற்றுகை அஸம்பாவிதமென்கிறது. "ஈன்றதாய்" என்கையாலே - பெறுகைக்கு நோன்பு நோற்கையும் பத்துமாஸம் சுமக்கையும் ப்ரஸவவேத

தருதுயரமென்று - அவன் தந்தானாகச் சொல்லியிருக்க, இங்கேவிளைத்துக் கொண்டவென்றது - ப்ரதமப்ரயத்நம் தம்மதாகையாலே, "சரணல்லால் சரணில்லை" என்று ஆகிஞ்சந்யம் தோற்றச்சொல்லிவைத்து அம்மானேயென்று ப்ராப்தியைக் கைம்முதலாகச்சொல்லலாமோவென்ன வருளுகிறார். (தம்முடையவித்யாதி)

அன்றிக்கே, த்ருஷ்டாந்தத்துக் கநுகுணமாகச் சொல்லுகிறாரென்கிறார். (மேல்தாயையித்யாதி) அரிசினத்தாலென்று த்ருஷ்டாந்தத்தில்சொன்ன சினம் தார்ஷ்டாந்திகத்திலுமேறும் ந்யாயத்தாலே இப்படி அரிசினமென்று வெறுக்கலாமோவென்ன (அவனே ரக்ஷகனித்யாதி) அவனும் ஶேஷியாய்தானும் பாரதந்த்ரனானால் அவன்செய்தபடி கண்டிருக்கையொழிய ப்ரார்த்திக்கலாமோவென்ன (சேதநனாகையாலே யித்யாதி) புருஷார்த்தம் சேதநனுக்கொழிய மற்றவைக்கில்லையென்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன (அவனைக்குறித்தித்யாதி).

(க) தி-வாய்-உ-கூ-ச.

ணை படுக்கையுமென்கிற இவையெல்லா முடையவளென்கை. (அக ற்றிடினும்) இப்படி பெறுவதுக்கு முன்புள்ள வெல்லா துக்கமும பட்டவளாகையாலே வருகிறத்தை நினைக்குமதொழிய அகற்ற நினையாளிறே; அவள் தானே அகலவிடினும். இத்தால் சொல்லிற் றாய்த்து-நிருபாதிக பந்துவான தேவரீர் கைவிடினும் வேறெனக் குப் புகலில்லை யென்கிறார்.

(மற்றவள் தன் அருள்நினைந்தேயழுங்குழவி) இவள் கோபித் துவிட்டாலும் வேறொருவருடைய அருளை அபேக்ஷியாதிறே ப்ரஜை. அதுக்கடியான ப்ரேமத்துக்கவதி யுண்டாகிலிறே கோப த்துக் கவதியுள்ளது; ஸ்நேஹமில்லாமையாலே கோபமில்லையிறே பிறர்க்கு;-

நம்பி திருவழுதிவளநாடுதாஸரை முதலியாண்டான் கோபி த்து, கையாலுங்காலாலுந் தகைத்து இழுக்கவாறே திண்ணை யிலே பட்டினியே யொருநாள் போகாதே கிடந்தார்; ஆண்டான் மற்றைநாள் அமுதுசெய்யப்புகுகிறார்; "அவன் செய்ததென" என்று கேட்டவாறே, "பட்டினியே வாசலிலேகிடந்தான்" என்று கேட்டு அழைத்து, "நீ போகாதே கிடந்ததென்" என்ன; "ஒரு நாள் ஒருபிடி சோறிட்டவன் எல்லாப்படியாலும் நிந்தித்தாலும் வாசல்விட்டுப் போகிறதில்லை, நாய்; நான் அங்கேபோவது" என்றார்.

(அழுங்குழவியதுவே போன்றிருந்தேனே) வேறுசிலரால் ஆற்றவொண்ணாதிறே; முன்னாள் முலைகொடுத்த வுபகாரத்தை நினைத்திருக்குமதாகையாலே அவள்தானே ஆற்றவேணுமே. (க) "ஶிஶு-லல நம்யய: - ஶிஶுஸ்ஸ்தநந்தய:" (உ) "அனாவில் பிள்ளைமை" என்று சொல்லுகிறபடியே. அதாவது - ரக்ஷகப்ராப முடையாரெல்லாரையு மறியாதே மாதா வொருத்தியையு மறிய மளவேயாய்த்து அபிப்ராயம்; அப்படியே எம்பெருமானைக் குறி த்து இவ்வாத்மாவுக்கு நித்ய ஸ்தநந்தயமாயாய்த்திருப்பது - ஆகை யாலிறே இவன் பேற்றுக்கு அவன் உபாயமாகிறது. (க)

தன்னையொழிய வறியாத பிள்ளையை அருளுடையதான் கோபிக்கலாமோ வென்ன (அதுக்கடியித்யாதி). (அதுக்கடி) கோபத்துக்குஹேது. தள்ளிறு லும் புறம்புபோகாமைக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்யமருளிச் செய்கிறார் (நம்பி திருவழுதிவளநாடு தாஸரித்யாதி)

(க) ஸ்தோ - ர - உக. (உ) ர - ச.

கண்டாரிகழ்வனவே காதலன்றான்செய்திடினும்
கொண்டானையல்லாலறியாக் குலமகள்போல் ;
விண்டோய்மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டம்மாநீ
கொண்டாளாயாகிலுமுன் குரைகழலேகூறுவனே. (௨)

ப - ரை.—கண்டார் - பார்த்தவர்களெல்லாம், இகழ்வனவே-இகழத்தக்க கார்யங்களையே, காதலன்றான் - தன்கணவனானவன், செய்திடினும் - செய்தாலும், கொண்டானையல்லால் - தன்னைக்கல்யாணம் செய்துகொண்ட புருஷனையொழிய, அறியா - வேறொருபுருஷனை மநஸ்ஸாலும் நினைத்தறியாத, குலமகள்போல் - பதிவ்ரதையைப்போலே, விண் - ஆகாசத்தை, தோய்-அளாவிய, மதிள் - திருமதிள்கள், புடைசூழ் - நாற்புறமும் சூழப்பட்டிருப்பதான, வித்துவக்கோட்டம்மா—, நீ - தேவரீர், கொண்டு - அடியேனை சேஷபூதனாகக் கொண்டு, ஆளாயாகிலும் - அடிமைகொள்ளாவிட்டாலும், உன் - உன்னுடைய, குரை - ஶப்தியாநின்றுள்ள, கழலே-வீரக்கழலணிந்த திருவடிகளையே, கூறுவன் - ஸ்துதிப்பேனென்கிறார். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கண்டாரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும்) தானும் அவனுமறிந்ததாகப்பிறக்கும் ப்ரணயகலஹங்களுக்கும் பரிஹாரங்களுக்கும் அவதியில்லையிறே. அப்படியன்றியே, இவர்கள் கார்யங்கொண்டு கார்யமில்லாத உதாஸீநரும் இகழும்படிக்கீடான அஸஹ்யங்களை அவன்பண்ணினாலும் (காதலன்) ப்ரேமத்தை யிட்டு நிரூபிக்கவேண்டி யிருக்குமவன்.

(கொண்டானை யல்லாதறியாக் குலமகள்போல்) இவ்வருகு அவன்பண்ணும் அபகாரங்களைக் காற்கடைக்கொண்டு ஸம்பந்தத்தில் முதலடியிலே நினைத்திருக்குமவளைப்போலே. (கொண்டானை யல்லாலறியாக் குலமகள்போல்) அக்நிக்கு அந்தர்யாமியான ஸர்வேஶ்வரனை ஸாக்ஷியாகக்கொண்டவனையல்லதறியாதவளைப்போலே. "கொண்டானை யல்லாலறியா" என்கையாலே - பாதிவ்ரத்

அரு;—இரண்டாம்பாட்டு. (கண்டாரித்தியாதி) கொண்டானையல்லாதறியாவென்று பாடமாதல், கொண்டானையல்லாலறியாவென்று பாடமாதல். அவனையொழிய அவன் பண்ணுமுபகாரமறியாதவளென்னுதல்; அவனையொழிய அந்யபுருஷனையறியாதவளென்னுதல்.

யஞ் சொல்லிற்று; "குலமகள்" என்கையாலே - ஆபிஜாத்யம் சொல்லிற்று.

(விண்டோய்மதிள் புடைசூழ் வித்துவக்கோட்டம்மா) பிராட்டி ஸ்வயம்வரத்துக்கு ஸ்ரீமிதிலையில் புறச்சோலையிலே விட்டிருந்தாப்போலே, இவரை ஸ்வயம்வரிக்கைக்காகவிறே திருவித்துவக்கோட்டிலேவந்து நிற்கிறது. (நீகொண்டாளாயாகிலும்) இவ்வளவாக உபகாரகனை நீ குறையுந் தலைக்கட்டாதே உபேக்ஷிந்தாலும் (உன்குரைகழலே கூறுவனே) உன் திருவடிகளல்லது எனக்கு வேறு புகலில்லை. உபகாரகனை நீ உபேக்ஷித்தாயென்று கைவாங்குமவனன்று நான்; (க) "எனதாவியார் யானார்?" என்று - நீபண்ணின உபகாரத்துக்குத் தலைசீய்க்கு மவன் நானென்கிறார். ... ... (உ)

மீனேக்குநீள்வயல்சூழ் வித்துவக்கோட்டம்மா! என்
பால்நோக்காயாகிலுமுன் பற்றல்லால்பற்றிலேன்;
தானேக்காதெத்துயாஞ் செய்திடினுந்தார்வேந்தன்
கோல்நோக்கிவாழுங்குடி போன்றிருந்தேனே. (ங)

ப - ரை.—மீன் - பலவகைப்பட்ட மத்ஸ்யங்களும், நோக்கும் - நித்யவாஸம் பண்ணத்தேடுகிற, நீள் - ஜலஸம்ருத்தியை யுடைய, வயல்சூழ் - வயலாலே சூழப்பட்ட, வித்துவக்கோட்டம்மா—, என்பால்-என்விஷயத்தில், நோக்காயாகிலும் - கடாக்ஷியா திருந்தாயேயாகிலும், உன்பற்றல்லால் - உன்னைத் தஞ்சமாகப் பற்றுகையொழிய, பற்றிலேன் - வேறொருவரைத் துணையாகப் பற்றமாட்டேன், தார் - ரக்ஷணத்திலே தீக்ஷித்துத் தனிமாலையிட்டிருக்கிற, வேந்தன்றான் - ராஜாவானவன், நோக்காது - ப்ரஜைகளை ரக்ஷியாமல், எத்துயரம் செய்திடினும்-எவ்வகைப்பட்ட துன்பங்களைச் செய்தாலும், கோல்நோக்கி- அவனுடைய ஆஜ்ஞையைப் பின்சென்று, வாழும் - வர்த்திக்கிற, குடிபோன்றிருந்தேன் - குடிகளைப்போ லிருந்தேனென்கிறார். (ங)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (மீன்நோக்கும் நீள்வயல்சூழ்) மத்ஸ்யமென்றுபேர்பெற்றவையடையக் கடாக்ஷிக்குந்தேசமாய்த்து; கடலில்மத்ஸ்யம், "கடல்வற்றினால் நமக்குப்புகலிடம" என்று நினைத்திருக்கும் தேசமாய்த்து. (வித்துவக்கோட்டம்மா) பரம

(க) தி - வாய் - உ - உ - ச.

பதத்திலுள்ளாரும் ஶீலகுணமநுபவிக்குந் தேஶமாய்த்து. உத்கர்ஷம் தர்மிப்ரயுக்தமென்று ப்ரமாணத்தாலே நாம் கேட்டறியுமாப்போலே ஶீலாதிகள் தர்மிப்ரயுக்தமென்றிருக்கு மித்தனையிறே பரமபதத்தில்; கண்டநுபவிக்கலாவது இங்கேயிறே.

(விற்றுவக்கோட்டம்மா என்பால்நோக்காயாகிலும்) பரமபதமாகிற வொருநாடாக நீ நோக்குகிற நோக்கை என்னையொருவனையுமே நோக்கிவந்திருந்து இப்போது என்னைக் கடாக்ஷியாதிருந்தாயாகிலும் (உன்பற்றல்லால்பற்றிலேன்) என்னுடைய ரக்ஷையிலும் யுக்தனான வென்னைவிட்டு பாதகராக ஸம்ப்ரதிபந்நராநவரைப் பற்றுவேனோ; நித்யஸம்ஸாரியாய் இவ்வளவாகச் சூழ்த்துக்கொண்ட வென்னைப்பற்றவோ; என்னுடைய ரக்ஷணத்தில் என்னோபாதியும் ப்ராப்தியில்லாத பிறரைப்பற்றவோ.

(தான் நோக்காதெத்துயரஞ் செய்திடினும் தார்வேந்தன்) ப்ரஜைகளுடைய ரக்ஷணத்திலே தீக்ஷித்துத் தனிமாலையிட்டிருக்கிற ராஜாவானவன், ரக்ஷணத்திலே நெகிழ்நிற்குமளவன்றிக்கே, எல்லாத்துக்கங்களையும் விளைக்கிலும். (கோல்நோக்கி வாழுங்குடிபோன்றிருந்தேனே) ரக்ஷகனாயிருந்துவைத்து பாதகனானாலும் அவனுடைய ஆஜ்ஞாநுவர்த்தநம் பண்ணுங்குடி போலேயிருந்தேன். ப்ரியத்தைப் பெரியதின்றுமல் ரக்ஷிக்கத்தான் மாட்டான்; செங்கற்சீரைகட்டி ரக்ஷிப்பித்துக்கொள்ளும் ப்ராப்தி அவனுக்குண்டு; என்ரக்ஷணத்தில் எனக்கு அந்வயமில்லாதாப்போலே. ஸம்பந்தமுடைய நீயே ரக்ஷிக்குமித்தனை. நான் செய்யலாவதுமில்லை, நீ மாட்டாததுமில்லை. ... (௫)

அ.—நாலாம்பாட்டு. "ஒருவனைமேலஹிதம்" என்றும், "பதத்திலே அவ்வயம் ஒருதலைக்கே" என்றும் அத்யவஸித்தால், அஹிதங்களையே ப்ரவர்த்திப்பா நின்றானென்று தோற்றினாலும் அவனே

அரு;—மூன்றாம்பாட்டு. (மீனித்யாதி) (தான்மாட்டான்) குடியான தான் மாட்டான். ராஜாவைக்கொண்டு ரக்ஷிப்பித்துக்கொள்ளும் முறை குடியானவனுக்குண்டென்றபடி. (௫)

அரு;—நாலாம்பாட்டு. (வாளாலித்யாதி). ஹிதபரனானவன் அஹிதங்களைப் பண்ணி நின்றபோதும் அவனே ரக்ஷகனென்று அத்யவஸித்திருக்கவேணு

ரக்ஷகனென்று கிடக்கவிறே கடவது. பிள்ளை திருநறையூரரையரை, பிள்ளைகள் "புகைசூழ்ந்தபடி ஸஹிக்கப்போகிறதில்லை" என்ன; "சற்றுப்போதன்றோ வ்யஸநப்படுவது, ஸ்ரீ வைகுண்டநாதன் திருவடிகளிலே ஸுகமேயிருக்கவன்றோ புகுகிறது" என்றாரிறே. தான் தஞ்சமாகப் பற்றினவிஷயத்துக்கு அந்யதாஸித்தி பிறந்ததோவென்று மீளும்படியிருக்கிற தசையிலே, ஹேத்வந்தரமது; அவ்வருகில்பேற்றில் குறையில்லையென்னும் அத்யவஸாயமிருந்தபடியிறே; இதிறே மஹாவிச்வாஸமாகிறது; தோற்றுகிற ஆபாதப்ரதீதியைக்கண்டு மீளாதே யிருக்குமதிறே.

வாளாலறுத்துச்சுடினும் மருத்துவன்பால்
மாளாதகாதல்நோயாளன்போல்; மாயத்தால்
மீளாத்துயர்தரினும் வித்துவக்கோட்டம்மா! நீ
ஆளாவுனதருளே பார்ப்பனடியேனே. (ச)

ப - ரை.—வாளால் - கத்தியாலே, அறுத்து—, சுடினும் - ஊசியைக்காய்ச்சிச்சுட்டாலும், மருத்துவன்பால் - வைத்யனிடத்தில், மாளாதகாதல் - நீங்காத ப்ரேமத்தையுடைய, நோயாளன்போல் - நோயாளியைப்போலே; வித்துவக்கோடு-திருவித்துவக்கோட்டிலெழுந்தருளியிருக்கிற, அம்மா-ஸர்வஸ்வாமியான, நீ—, மாயத்தால்-உன்மாயையாலே, மீளா - ஒருக்காலும் நீங்காத, துயர்தரினும் - துக்கத்தை விளைத்தாலும், அடியேன் - சேஷபூதனான நான், ஆளா - அடிமை செய்கைக்காக, உனதருளே - உன்னுடைய க்ருபையையே, பார்பபன் - புத்தி பண்ணியிருப்பேனென்கிறார். (ச)

வ்யா — (வாளாலறுத்துச்சுடினும்) ஹிம்ஸாஸாதநத்தைக் கொண்டு அறுப்பது சுடுவதானாலும். (மருத்துவன்பால்மாளாதகாதல்நோயாளன்போல்) அஹிதங்களை மேல்மேலன ப்ரவர்த்திப்பிக்கச்செய்தேயும் பிஷக்கு, "அவன்நமக்கு ஹிதகாமன்" என்று

மென்னுமதுக்கு ஸம்வாதமாக ஒரைதிஹ்ய மருளுகிறார். (பிள்ளை திருநறையூரரை யரித்யாதி). அந்யதாஸித்தியாவது - ஸர்வஜ்ஞத்வாதிகளுண்டென்றிருந்தோம். அஜ்ஞத்வாதிகளுண்டாய்த்தென்று நினைக்கை. (ஹேத்வந்தரம்) மத்பாபம்.

அவனுக்குத் தன் ஸர்வஸ்வத்தையுங்கொடுத்து அவன் பக்கலிலே ஸ்நேஹத்தைப்பண்ணும் வ்யாதியாளரைப்போலே.

(மாயத்தால் மீளாத்துயர்தரிலும்) (க) "தைவீஹ்யேஷா-மமமாயா" என்னும்படியே உன்னுடையதான ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே அபுநராவ்ருத்தி லக்ஷணமே துக்கத்தை விளைக்கிலும் (சித்துவக்கோட்டம்மாநீ - மீளாத்துயர்தரிலும்) எனக்கு த்யாஜ்யமான ஸம்ஸாரத்திலே என்னுடைய ரக்ஷணத்துக்காகக் குடியேறியிருக்கிற நீ நித்யதுக்கத்தை விளைக்கிலும். பெற்றதாய் ப்ரஜைக்கு அஹிதஞ் செய்யிலிறே நீ செய்வது; அப்படியிருக்கிற நீ செய்யிலும்.

(ஆளா) ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பெறுகைக்காக. (உனதருளே பார்ப்பன்) இப்போது தோற்றுகிற வ்யஸநங்களை புத்திபண்ணாதே உன் க்ருபையையே புத்திபண்ணியிருப்பன். இப்படி யிருக்கைக்கு நிபந்தநமென்னென்னில்; (அடியேனே) அடியேனாகையாலே. என் ஸ்வரூபத்தையும் உன் ஸ்வரூபத்தையும் நேராகவறிந்தவனாகையாலே.

அன்று கண்டாப்போலே கையும்வில்லுமாய் நிற்பர்; அவனுக்கு அச்சத்தாலே; தனக்கு உருவு வெளிப்பாட்டாலே முன்னே நிற்பர்; தீரக்கழிய அபராதஞ்செய்த வெனக்கு அவர் க்ருபை பண்ணுவரோ வென்று அவனுக்கு நினைவாகக்கொண்டு; (உ) [வ்யாக்ஷேஷ்ஹ்ஸ - புருஷர்ஷப:] நீ அநுகூலனாய் ஓரடிவர நின்றால் அத்தையே நினைத்து நீ பண்ணின அபகாரமெல்லாம் புத்திபண்ணுவரோ. அவர் புருஷோத்தமன்காண். (ரு) [முன்பூழி காணான்] குற்றத்தைமறக் குமதன்றியே, "குற்றம்செய்தநாளை நினைக்கில் குற்றந்தோற்றுமென்று அந்நாளையும் மறக்குமவர்காண்" என்று பிராட்டி ராவணனுக் கருளிச்செய்தபடியே இனி நீரல்லது புகலில்லை யென்கிறார். ... ... (௬)

எந்தவவஸ்தையிலும் நீயல்லதில்லையென்கிறது எப்படியிருக்கிறதென்ன, "அஸௌ" என்றத்தைப்பற்ற வருளுகிறார் (அன்று கண்டாப்போலே யித்யாதி).

(க) கீ - எ - கச.   (உ) ரா - ஸு - உக - கக.

(ரு) க - திருவ - எஉ.

வெங்கட்டிண்களிறடர்த்தாய்! வித்துவக்கோட்டம்மானே!
எங்குப்போயுய்கேனுன் னிணையடியேயடையலலால்;
எங்கும்போய்க்கரைகாணா தெறிகடல்வாய்மீண்டேயும்
வங்கத்தின்கூம்பேறுமாப் பறவைபோன்றேனே. (ரு)

ப-ரை.—வெம் - வெவ்விய, கண் - கண்ணையும், திண் - திண்ணிய நெஞ்சையுமுடைத்தான, களிறு - குவலயாபீடத்தை, அடர்த்தாய் - கொன்றவனே, வித்துவக்கோட்டம்மானே—, உன் - உன்னுடைய, இணையடியே - திருவடிகளே, அடையலலால் - தஞ்சமாமதொழிய, எங்குப்போய் - வேறு யாரிடத்திலேபோய், உய்கேன் - உஜ்ஜீவிக்கப்போகிறேன்; எங்கும்போய் - நாலு திக்கிலும் போய்ப்பார்த்து, கரைகாணாது - கரைகாணாமையாலே, எறி - அலையெறிகிற, கடல்வாய் - ஸமுத்ரத்திலே, மீண்டு - திரும்பிவந்து, ஏயும் - அங்கு வர்த்திக்கிற, வங்கத்தின் - கப்பலினுடைய, கூம்பு ஏறு - கம்பத்தில் ஏறியிருக்கிற, மா - பெரிய, பறவைபோன்றேன் - பக்ஷியை யொத்திருந்தேனென்கிறார். (ரு)

வ்யா.—அஞ்சாம் பாட்டு. (வெங்கட்டிண்களிறடர்த்தாய்) வெவ்வியகண்ணையும் திண்ணியநெஞ்சையுமுடைத்தான குவலயாபீடத்தைக் கொன்றவனே. ப்ரபலப்ரதிபந்தகங்களுண்டென்றிருக்கவேணுமோ தேவரீருள்ளீராயிருக்க. (வித்துவக்கோட்டம்மானே) ப்ரதிபந்தகம் போக்கிற்று அவதாரகாலத்திலேயிறே; அது தீர்த்தம் ப்ரஸாதித்ததிறேயென்று பிற்பாடர்க்கு இழக்க வேண்டாதபடி திருவித்துவக்கோட்டிலே வந்து ஸந்நிஹிதனானவனே. பரமபதம் கலவிருக்கையாக ஸ்வாம்யத்தை நிர்வஹிக்கைக்காகவன்றோ இங்கு வந்தெழுந்தருளியிருக்கிறது.

(வித்துவக்கோட்டம்மானே எங்குப்போயுய்கேன்) ப்ராப்தனுமாய்ப் பசியனுமானவன் வாசலிலே வந்து "சோறு சோறு" என்றிருக்க, அபராய் நிரபேக்ஷரானவர்களை புண்ணை வழைப்பாரைப்போலே, உன்னைவிட்டுப்பரமபதத்திலேயிருக்கிற அவாப்த ஸமஸ்தகாமனைப்பற்றவோ. (எங்குப்போயுய்கேன்) உஜ்ஜீவனமொதுவாகப் போமிடமில்லை, விநாசஹேதுவாகப் போகில்போமித்தனை

அரு;—அஞ்சாம் பாட்டு. (வெங்கணித்யாதி) (எங்குப்போய்) பரமபத வ்யாவ்ருத்தியாதல். தேவதாந்தர வ்யாவ்ருத்தியாதல்.

யிறே. உகந்தருளின தேசங்களைவிட்டு தேவதாந்தரங்களைப் பற்று கையாவது - விஜாதீயமாயிறே. (உன்னிணையடியே அடையலல்லால்) அத்யவஸாயமாவது - புக்பர்த்தமிறே. அவன்றானே வந்து கிட்டச்செய்கை. இழக்கிறார் இழக்கிறதும் பெறுகிறார் பெறுகிறதும் - அப்ராப்தியாலும் ப்ராப்தியாலுமிறே.

(எறிகடலித்யாதி) பெரிய விக்ஷோபத்தையுடைய கடலிலே ஒரு மரக்கலமாவது, அதின் கொம்பிலே யிருந்ததொருபக்ஷி நாலுதிக்கிலும் போக்கிடந்தேடப் பறந்தாலும் கரைகாணவொண்ணுதிறே; மீண்டுவந்து கால்பாவலாவது இம்மரக்கலத்திலேயிறே. அப்படியே ஸம்ஸாரஸாகரத்தைக் கடக்கும்போது உகந்தருளின தேசமான திருவித்துவக்கோட்டைப்பற்றிக் கடக்கலாமத்தனையல்லது வேறு பாயமில்லையிறே கடக்கைக்கு: உகந்தருளின தேசத்தை யொழிந்ததெல்லாம் அக்கடல்போலேயிறே (மாப்பறவைபோன்றேனே) தானேறிட்டுக்கொண்ட அகலமெல்லாம் நீரிலே ஆழுகைக்குடலாமித்தனையிறே; அவன் கைநெகிழ்ந்தானென்று தோற்ற அடிமட்டையை யுறக்கப்பற்றுமித்தனையிறே. ... ... (௫)

செந்தழலேவந்தழலைச் செய்திடினுஞ்செங்கமலம்
அந்தரஞ்சேர்வெங்கதிரோற் கல்லாலலராவால்;
வெந்துயர்வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா! உன்
அந்தமில்சீர்க்கல்லாலகங்குழையமாட்டேனே. (௬)

ப-ரை.—செம் - சிவந்த, தழல் - நெருப்பானது, வந்து - கிட்டி, அழலைச்செய்திடினும் - உஷ்ணத்தைப் பண்ணினாலும், செம் - அழகிய, கமலம் - தாமரைகளானவை, அந்தரஞ்சேர் - ஆகாசத்திலே வர்த்திக்கிற, வெங்கதிரோர்க்கல்லால் - ஸூர்யனுடைய உஷ்ணத்துக்கல்லது, அலரா - மலராவாம்; வித்துவக்கோட்டம்மா—, வெந்துயர் - என்னுடைய க்ரூரமான துக்கத்தை, வீட்டாவிடினும் - நீபோக்காவிட்டாலும், உன் - உன்னுடைய, அந்த

(அகலமெல்லாம்) மாப்பறவையாகையாலே தன் சிறகின் பரப்பெல்லாம். (அவன்) ஓடக்காரன். (அடிமட்டை) சம்பான்மரத்தின் அடிப்பக்கம். இதுக்கு ஸ்வாபதேசம் - தானேறிட்டுக்கொண்ட ஸ்வயத்நமெல்லாம். பக்ஷிநீரிலே அழுந்திப்போமாபோலே நாசஹேதுவாம். ஆகையாலே ஸ்வயத்நத்தைவிட்டு அவன் திருவடிகளைச் சிக்கெனப்பற்றுகை யென்றபடி. (௫)

மில்-அளவில்லாத, சீர்க்கல்லால்-கல்யாணகுணங்களுக்கல்லது, அகம்குழைய மாட்டேன் - என்னெஞ்சுகளிப்புறு தென்கிறார். (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (செந்தழலேவந்தழலைச் செய்திடினும்) தாஹகமான அக்நிகிட்டி உஷ்ணத்தைப் பண்ணினாலும். (செங்கமலமித்யாதி) தாமரையானது ஆதித்யன் தூரஸ்தனானானே யாகிலும் அவனுடைய கிரணத்துக்கு அலருமத்தனையல்லது அக்நிகிட்டிற்றென்று அதினுடைய உஷ்ணத்துக்கு அலராது.

(வெந்துயர்வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா) அநுபவவிநாஶ்யமான பாபங்களைப்போக்கி இதுக்கு விகாஸத்தை விளைப்பிக்க வந்திருக்கிற நீ உபேக்ஷித்தாயாகிலும். (உன்னந்தமில் சீர்க்கல்லால்) கல்யாணயுக்தமான வுன்குணங்களுக்கல்லது. (அகங்குழையமாட்டேனே) என்னெஞ்சு நெகிழாது. ... (௬)

எத்தனையும்வான்மறந்தகாலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்தமாமுகிலே பார்த்திருக்கும்; மற்றவைபோல்
மெய்த்துயர்வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா! என்
சித்தமிகவுன்பாலே வைப்பனடியேனே. (எ)

ப - ரை.—பை - இளமைதங்கிய, கூழ்கள் - பயிர்களானவை, வான் - மேகமானது, எத்தனைமறந்தகாலத்தும்-பெய்யாமேமிகவும் மறுத்தகாலத்திலும், மைத்து - கறுத்து, எழுந்த - ஆகாசத்திலேயெழுகிற, மாமுகிலே - பெரிய மேகங்களையே, பார்த்திருக்கும் - பார்த்தவண்ணமாயிருக்கும், அவைபோல் - அப்பயிர்களைப்போலே; வித்துவக்கோட்டம்மா—, மெய்த்துயர் - அநுபவித்தே கழியவேண்டும் மெய்யான துःகத்தை, வீட்டாவிடினும் - போக்காவிட்டாலும், அடியேன்—, என்சித்தம் - என்னுடைய மநஸ்ஸை, உன்பால் - உன் விஷயத்திலே, மிகவைப்பன் - மிகவும் வைப்பேனென்கிறார். (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (எத்தனையும் வான்மறந்தகாலத்தும்) கார்காலத்தில் வர்ஷியாதே மேகங்கள் மறுத்தகாலத்திலும், பைங்கூழ்களுண்டு - பயிர்கள். (மைத்தெழுந்தவித்யாதி) ஆகாஶத்திலே கறுத்தமேகங்களைப்பார்த்திருக்குமத்தனையல்லது நீர் நிலந்தேடிப் போகவறியாதாப்போலே.

அரு ;—ஆறாம் பாட்டு. (செந்தழலித்யாதி) தாமரையானது அக்நிக்கு அலராதாப்போலே நீ துக்கத்தை விளைத்தாலும் நெஞ்சுகலங்காமல் உன் குணங்களுக்கே ஈடுபடுமென்றபடி. (௬)

(மெய்த்துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா) (க) "[Grantha] - அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிற பாபத்தைப்போக்கி ஸம்ஸாரஸம்பந்த மறுத்துக்கொடுக்கவந்திருக்கிற நீ அதுசெய்திலையாகிலும். (என்சித்தமிகவுன்பாலே வைப்பனடியேனே) என்ரக்ஷணத்திலே நெகிழ்ந்தாயென்று தோற்ற ஒருக்காலுங் கொருக்கால் உன்பக்கலிலே நெஞ்சு ப்ரவணமாகாநின்றது.

தொக்கிலங்கியாறெல்லாம் பரந்தோடித்தொடுகடலே
புக்கின்றிப்புறம்நிற்கமாட்டாத மற்றவைபோல்;
மிக்கிலங்குமுகில்நிறத்தாய்! வித்துவக்கோட்டம்மா! உன்
புக்கிலங்குசீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே!. (அ)

ப - ரை.—ஆறெல்லாம் - நதிகளெல்லாம், தொக்கு - திரண்டு, இலங்கு - ஒளியையுடைத்தாய், பரந்து - பார்த்தவிடமெங்கும்பரந்து, ஓடி—, தொடு - ஆழமான, கடல் - கடலிலே, புக்கின்றி - சென்று புகலல்லது, புறம் - வேறோரிடத்தில், நிற்கமாட்டாத-நிற்கமாட்டாதவையாயிருக்கின்றன; அவைபோல்- அவ்வாறுகளைப்போலே; மிக்கு இலங்கு - மிகவும் விளங்காநின்றுள்ள, முகில்-மேகம்போன்ற, நிறத்தாய் - திருநிறத்தையுடையனும், வித்துவக்கோடு - திருவித்துவக்கோட்டிலெழுந்தருளியிருக்கிற, அம்மா-ஸர்வஸ்வாமியான, புண்ணியனே—, புக்கிலங்கு - உள்புக உள்புக உஜ்ஜ்வலமாகிற, உன்சீரல்லால் - உன்னுடைய கல்யாணகுணங்களை யொழிய, புக்கிலன்காண் - வேறொரு புகலுடையே னல்லேன்காணென்கிறார். (அ)

வ்யா.—எட்டாம் பாட்டு. (தொக்கிலங்கியாறெல்லாம் பரந்தோடி) ஜலராஶியெல்லாந்திரண்டு ஒளியையுடைத்தாய் பார்த்தவிடமெங்கும் பரந்தோடி. (தொடுகடலிந்யாதி) ஆழ்ந்தகடலிலே சென்று புக்கல்லது புறம்புநிற்கமாட்டாத ஆறுகள்போலே. (ச) "[Grantha] - ஸமுத்ர இவ ஸிந்துபி:" என்னுமாப்போலே, இவைபுக்கால் கடல்நிறையும், இல்லையாகில் குறைபடுகிறது மன்றிறே; இவற்றுக்குப் புறம்புதரிப்பரிதாயிறே புகுகிறன.

(மிக்கிலங்குமுகில் நிறத்தாய்) மிக்கு உஜ்ஜ்வலமான காளமேகம் போலேயிருக்கிற நிறத்தையுடையவனே. (வித்துவக்கோட்டம்மா) அம்மேகம் படிந்தபடியே. (உன் புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண்) உள்புக உள்புக உஜ்ஜ்வலமான கல்யாணகுணங்களிலே யல்லது, உள்புக உள்புக மஸ்ருணமாயிருக்கும் குணங்களிலே அவகாஹித்

திலேன்காண். இதுக்கு நிபந்தநமென்னென்னில் (புண்ணியனே) ப்ரதமஸுக்ருதம் நீயாகையாலே. ... ... (௮)

நின்னையேதான்வேண்டி, நீள்செல்வம்வேண்டாதான்
தன்னையேதான்வேண்டுஞ்செல்வம்போல்; மாயத்தால்,
மின்னையேசேர்திகிரிவித்துவக்கோட்டம்மா!
நின்னையேதான்வேண்டி நிற்பனடியேனே. (௯)

ப - ரை.—நின்னையேதான்வேண்டி - உன்னையேவேண்டி, நீள்செல்வம்-நிரவதிகமான ஸம்பத்தை, வேண்டாதான்றன்னையே - விரும்பாதவனையே, தான்வேண்டும்-தான்மேல்விழுந்து கிட்டுகைக்கு அவஸரம்பார்க்கிற, செல்வம்போல் - ஐஶ்வர்யத்தைப்போலே; மின் - மின்போலே பளபளத்திருந்துள்ள, திகிரி - திருவாழியாழ்வானை, சேர் - இடைவிடாதே தரித்துக்கொண்டிருக்கிற, வித்துவக்கோட்டம்மா—, மாயத்தால்-உன்மாயையாலே, என்னை உபேக்ஷித்தாயாகிலும், அடியேன் - சேஷபூதனான, யான் - நான், நின்னையே - உன்னையே, வேண்டிநிற்பன் - விரும்பியிருப்பேனென்கிறார். (௯)

வ்யா.—ஒன்பதாம் பாட்டு. (நின்னையேதான்வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் றன்னையே தான்வேண்டும் செல்வம் போல்) உன்னையேவேண்டி நிரவதிகஸம்பத்தைக் காற்கடைக் கொண்டவன் றன்னையே அவஸரப்ரதீக்ஷமாய்ப் பார்த்துநிற்கும் ஐஶ்வர்யம்போலே யென்னுதல்; மோக்ஷலக்ஷ்மியைப்போலே யென்னுதல்.

(மாயத்தால் மின்னையே சேர்திகிரிவித்துவக் கோட்டம்மா) மின்போலே பளபளத்திருந்துள்ள திருவாழியை *எப்போதும் கைகழலா நேமியானாய் ஆசிலேவைத்தகையும் நீயுமாய் என்னுடைய ரக்ஷணத்துக்காக இங்கே வந்திருந்துவைத்துக் காற்கடைக் கொண்டாயாகிலும். (நின்னையே யான் வேண்டி நிற்பனடியேனே) தன்னைக் காற்கடைக்கொண்டவனை ஐஶ்வர்யம் விடாதாப்போலே நீ என்னை உபேக்ஷிக்க உபேக்ஷிக்க உன்னையே பற்றுநின்றேன். (௯)

அரு;—ஒன்பதாம்பாட்டு. (நின்னையேயித்யாதி) நீள் செல்வமாகையாலே மோக்ஷத்தைக் காட்டுகிறது. அதுவும், "ஸாவொநாந்ருத்ரஹ்ஹி - பாவோநாந்யத்ரகச்சதி" என்றதிருவடியையும் பின்சென்றது. (௯)

மூ.—வித்துவக்கோட்டம்மா! நீவேண்டாயேயாயிடினும்
மற்றாரும்பற்றிலேனென்று அவனைத்தாள்நயந்த
கொற்றவேல்தானைக் குலசேகரன்சொன்ன
நற்றமிழ்பத்தும்வல்லார் நண்ணார்நரகமே. (௧0)

குலசேகரப்பெருமாள் திருவடிகளே ஶரணம்.

ப-ரை.—வித்துவக்கோடு - திருவித்துவக்கோட்டிலெழுந்தருளியிருக்கிற, அம்மா - ஸர்வேஶ்வரனே, நீ—, வேண்டாயேயாயிடினும் - என்னை உபேக்ஷித்தாயேயாகிலும், மற்றாரும் - வேறொருவரும், பற்றிலேனென்று - துணையாவாரில்லையென்று; அவனை-அவனுடைய, தாள்-திருவடிகளை, நயந்த-ஆசைப்பட்டவராய், கொற்றம் - ஜயப்ரதமான, வேல் - வேலையும், தானை - ஸைந்யத்தையுமுடையரான, குலசேகரன்- ஸ்ரீகுலசேகரப்பெருமாள், சொன்ன-அருளிச்செய்த, நல் - விலக்ஷணமாய், தமிழ் - த்ராவிடரூபமான, பத்தும் - பத்துப்பாட்டுக்களையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், நரகம் - ஸம்ஸாரமாகிற நரகத்தை, நண்ணார் - கிட்டார்களென்கிறார். (௧0)

வ்யா.—பத்தாம்பாட்டு. (வித்துவக்கோட்டம்மா நீ வேண்டாயேயாயிடினும்) இதுக்கென்று வந்திருக்கிற நீ என்னை உபேக்ஷிக்தாயாகிலும். (மற்றாரும்பற்றிலேனென்றவனைத் தாள்நயந்த) வேறொருபுகலில்லை, நான் அநந்யகதியென்று அவன் திருவடிகளையாசைப்பட்டு.

(கொற்றவேல்தானைக் குலசேகரன்சொன்ன) ப்ரதிபக்ஷத்தைப்பக்கவேரோடே வாங்கவற்றான வெற்றியையுடைய வேலையும்ஸேனையையுமுடைய பெருமாள்சொன்னவை; ப்ரதிபக்ஷத்தை வெல்லுகைக்கீடான பரிகரமுடையரானாப்போலேயாய்த்து பகவத்ப்ராப்திக்குப் பரிகரமாக இவருடைய அநந்யகதித்வமும். (நல்தமிழ் பத்தும்வல்லார்) கடல்போலுமா யிருக்கச்செய்தே உள்ளுள்ள பதார்த்தங்கள் தோற்றும்படியா யிருக்குமாப்போலே அர்த்தம் மிக்கிருக்குமாய்த்து இத்திருமொழி; இவைவல்லவர்கள். (நண்ணார்நரகமே) ஸம்ஸாரஸம்பந்தத்துக்கடியான பாபத்தைப் பண்ணினார்களாகிலும் இஸ்ஸம்ஸாரத்திலே வந்து ப்ரவேஶியார்கள். (௧0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

ஆறுந்திருமொழி ஏர் மலர் ப்ரவேசம்.

———(o)———

அ.—† உகந்தருளின தேஸத்தை அநுபவித்தார்-கீழ்; அவ்வநுபவம் அவதாரங்களில் அநுபவாபேக்ஷையைப் பிறப்பித்தது; அதில் தோள்தீண்டியான க்ருஷ்ணாவதாரத்தை அநுபவித்தவர்களுடைய பாசுரத்தாலே அநுபவிக்கிறார்) இத்தலையால் வேறு செய்யலாவதில்லாமையாலே கிலாய்க்கத்தொடங்கினார். பகவத்விஷயத்தில் பாவபந்தத்தில் ஊற்றமிருந்தபடி. பிராட்டிமார் தசையை ப்ராப்தராய், கூடுவது பிரிவது ஊடுவதாம்படியானார்.

நம்மாழ்வாருக்கு (க) *மின்னிடை மடவாரும், திருமங்கையாழ்வார்க்கு (உ) *காதில்கடிப்பும்போலே யிருக்கிறதாய்த்துப் பெருமாளுக்கு இத்திருமொழி. நம்மாழ்வார் பகவத்விஷயத்தில் நின்ற பூற்றமெல்லாந் தோற்றவன்மையுடைத்தாயிருக்கும் *மின்னிடைமடவார்; திருமங்கை யாழ்வார் தம்மார்த்தவ மெல்லாந் தோற்ற மென்மையையுடைத்தாயிருக்கும் *காதில்கடிப்பு. இவர் தம்முடைய ராஜகுலமெல்லாந் தோற்றியிருக்கும் இத்திருமொழி.

க்ருஷ்ணாவதாரம் தோள்தீண்டியாகையாலே "ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப்பெற்றிலோம், பல்லிலேபட்டுத்தெறித்தது" என்று பஞ்சலக்ஷம் குடியிற்பெண்களுக்கு க்ருஷ்ணன் பக்கலுள்ள விடாயெல்லாம் தமக்கொருவர்க் குண்டாகையாலே திருவாய்ப்பாடியில் பெண்கள்பேச்சாலே பேசுகிறார். ... *

அரு ;—ஏர்மலர்ப்ரவேஸம் - அவர்களுடலுக்கும் இவருடலுக்கும் வாசியேதென்ன வருளிச்செய்கிறார் (நம்மாழ்வாரித்யாதி) (வன்மை) நெஞ்சில் காடிந்யம். "போகுநம்பி" "கழகமேறேல்நம்பி" என்றுகாடிந்யம் தோற்றச் சொல்லுகை. (மார்த்தவம்) வெட்டிமை யாயிராதே, "இது வென்னிது வென்னோ" என்றும்ருதுவாகச்சொல்லுகை. (ராஜகுலம்) "உன்வரவுபார்த்தே" என்று தன்மதிப்புத்தோற்றச்சொல்லுகை அவதாராந்தரங்களிருக்க, க்ருஷ்ணாவதாரத்திலே ஊடுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (க்ருஷ்ணாவதாரமித்யாதி).

---

† குண்டலிதமதிகபாடம்.

(க) தி - வாய் சு - உ. (உ) தி - மொ - கo - அ.

அ.—முதற்பாட்டு. ஒருபிராட்டி, யமுனையில் மணலிலேபோய் நில்லு, நான் அங்கேவருகிறேனென்று சொல்லிவிட; அவள் அங்கேபோய் விடியுமளவும் நின்று அவன் வாககாணாமையாலே அவனைக்கண்டபோது ஊடிச்சொல்லுகிற வார்த்தையா யிருக்கிறது.

மூ;—ஏர்மலர்ப்பூங்குழலாயர் மாதரெனைப்பலருள்ளவிவ்வூரில் உன்றன்
மார்வுதழுவுதற்காசையின்மை யறிந்தறிந்தே யுன்றன்பொய்யைக்கேட்டுக்
கூர்மழைபோல்பனிக்கூதலெய்திக் கூசிநடுங்கியமுனையாற்றில்
வார்மணற்குன்றிற்புலரநின்றேன் வாசுதேவா! உன்வரவுபார்த்தே. (க)

ப - ரை.—ஏர் - அழகிய, மலர் - மலரையுடைத்தாய், பூ - இயற்கை வாஸனையை யுடைத்தான, குழல் - மயிர்முடியையுடையரான, ஆயர்மாதர் - இடைப்பெண்கள், எனைப்பலருள்ள - என்னைப்போலே பலபேருள்ள, இவ்வூரில் - இந்தத் திருவாய்ப்பாடியிலே, உன்றன் - உன்னுடைய, மார்வு - திருமார்வோடே, தழுவுதற்கு - அணைகைக்கு, ஆசையின்மை - ஆசையில்லாமையை, அறிந்தறிந்து - நன்றாக அறிந்துவைத்தும், உன்றன் - உன்னுடைய, பொய்யைக்கேட்டு - பொய்யான வார்த்தைகளைக் கேட்டு—, வாசுதேவா - வஸுதேவ புத்ரனே, உன் - உன்னுடைய, வரவு - வருகையை, பார்த்து - எதிர்பார்த்துக்கொண்டு, கூர்மழைபோல் - அடைமழைபோலே பெய்கிற, பனி - பனியாலுண்டான, கூதல்எய்தி - குளிரிலேயகப்பட்டு, கூசி - ஆர்காண்கிறார்களோவென்று கூசி, நடுங்கி - அச்சத்தாலும் குளிராலும் நடுங்கி, யமுனையாற்றில் - பலரும் காணுமிடமான யமுநாநதியிலே, வார் - பெரிய, மணற்குன்றில் - மணற்குன்றிலே, புலரநின்றேன் - விடியுமளவும் நின்றேன். (க)

வ்யா.—(ஏர்மலர்ப் பூங்குழலாயர்மாதர்) அழகிய மலரையுடைத்தாய் மலருக்கும் கூட நாற்றத்தைக் கொடுக்கும் மயிர்முடியையுடைய இடைப்பெண்கள். (எனைப்பலருள்ள விவ்வூரில்) அநேகம்பேர் திரளான விவ்வூரில் - திருவாய்ப்பாடியில். (உன்றன் மார்வுதழுவுதற் காசையின்மை யறிந்தறிந்தே) அநேகம் பெண்களுள்ள ஆருமாய் நீயும் ஸர்வஸாதாரணனுமானால் உன்மார்வை

அரு;—முதற்பாட்டு. (ஏர்மலரித்யாதி) (பூங்குழல்) அழகியகுழல்; குழலுக்கு அழகு பரிமளம், (ஆசையின்மை) ஆசைப்பட யோக்யதையில்லாமை, அறிந்தாலாசைப்படுவானென்னென்ன, (உன்ஸ்வரூபத்தையித்யாதி).

யாசைப்படக்கடவதன்று" என்றறிந்துவைத்து. (உன்றன்பொய்யைக்கேட்டு) உன் ஸ்வரூபத்தை உணரவொட்டாதிறே உன் வார்த்தை. "நீயல்லது புகலுண்டோ. உன்னையல்லது நானறிவேனோ" என்று தாழ்ச்சிதோன்ற நீசொல்லும வார்த்தையைக் கேட்டு.

(கூர்மழைபோல் பனிக்கூதலெய்தி) மிக்க மழைபோலே பெய்கிற பனியால்வந்த குளிரிலே யகப்பட்டு. (கூசி) ஆர்காண்கிறார்களோவென்று கூசி. (நடுங்கி)அச்சத்தாலும் குளிராலும் நடுங்கி. (யமுனையாற்றில்) அதுதான் ஏகாந்த ஸ்தலத்திலேயோ, ஸர்வஸாதாரணமான தேசத்திலே யன்றோ.

(வார்மணல்குன்றில் புலாநின்றேன்) நின்றதுதான் தனியே நிற்கலாந் தேசத்திலே நின்றேனோ, போகத்துக்கே காந்தஸ்தலத்திலேயன்றோ. எல்லாரும்வந்து ஸஞ்சரித்துக் காணும்போது ஸர்வஸாதாரணமான தேசத்திலே வந்தாளென்றிராமே போகத்துக்கேகாந்தமான மணல்குன்றிலே விடியுமளவும் நின்றாளென்னும்படி தோற்ற நின்றேன். (வாசுதேவா) நீ இங்குநிற்கிறதென்னென்னில்; உன்னை விஸ்வஸித்தன்று, உன்பிதாவை விஸ்வஸித்து; - ஒரு வார்த்தையல்ல தறியாத ஸ்ரீ வஸுதேவர்பிள்ளையென்னுமத்தை விஸ்வஸித்து நின்றேன். (உன் வரவு பார்த்தே) உன்னுடைய அழகு காணவேணுமென்னும் நசையாலே. (க)

அ.—இரண்டாம்பாட்டு. வேறொரு பிராட்டி வார்த்தை.

மூ;—கெண்டையொண்கண்மடவாளொருத்தி கீழையகத்துத்தயிர்கடையக்
கண்டொல்லைநானுங்கடைவனென்று கள்ளவிழியைவிழித்துப்புக்கு
வண்டமர்பூங்குழல்தாழ்ந்துலாவ வாண்முகம்வேர்ப்பச்செவ்வாய்துடிப்பத்
தண்டயிர்நீகடைந்திட்டவண்ணந் தாமோதராமெய்யறிவன்நானே. (உ)

ப - ரை.—தாமோதரா - கயிற்றின்தழும்புவயிற்றிலே காணலாம்படியான வடிவையுடையவனே, கீழையகத்து - என்னுடைய அகத்துக்குக் கீழண்டை அகத்திலே, கெண்டை - கெண்டை மத்ஸ்யத்தின்கண்போலே, ஒள் - ஒளி

(பனிக்கூதல்) பனியால்வந்த ஊதல், வார்தல் - நெடுமையாகையாலே, பெரியமணற்குன்றென்றபடி. புலா - விடியுமளவும். (க)

பொருந்திய, கண் - கண்களேயும், மடவாள் - மடப்பத்தையு முடையளான, ஒருத்தி - ஒரு ஸ்த்ரீயானவள், தயிர்கடைய - தனியேநின்று தயிர்கடையாநிற்க, கண்டு - அவளேப்பார்த்து, நானும்—, உன்னுடன்கூடவிருந்து, ஒல்லே கடைவனென்று - சீக்ரமாகக் கடைவேனென்று சொல்லி, கள்ளவிழியை விழித்து - திருட்டுவிழியை விழித்து, புக்கு - அவளருகேசென்று புக்க, வண்டு - வண்டுகள், அமர் - படிந்திருந்துள்ள, பூ - மலர் அணிந்த, குழல் - குழலானது, தாழ்ந்து உலாவ-கணுக்காலளவும் தாழ்ந்தசையவும், வாள்-ஒளியையுடைய, முகம் - முகமானது, வேர்ப்ப - வியர்க்கவும், செவ்வாய் - சிவந்த அதரமானது, துடிப்ப - துடிக்கவும், தண்தயிர் - உன்னெஞ்சுக்குப் பொருந்தின குளிர்ந்ததயிரை, நீ—, கடைந்திட்டவண்ணம்-கடைந்தபடியை, நான்—, மெய் - மெய்யே, அறிவன் - அறிவேனென்கிருள் ஒரு கோபஸ்த்ரீ. (௨)

வ்யா.—(கெண்டையொண்கண் மடவாளொருத்தி) முக்தமான நோக்கையுடையளாய், சொல்லிற்றெல்லாம் மெய்யென்றிருக்கும் பருவத்தையுடையாளொருத்தி. (கிழையகத்து) பாவநாப்ரகர்ஷத்தாலே திருவாய்ப்பாடியில் ஒரு அகமுமுண்டாய் அதுக்குக்கிழையகமுமாய்ச் செல்லுகிறதுகாணும் இவர்க்கு. நீதான் முலைபாடியே நடந்தது வேறேரிடத்தேயோ, என்னகத்துக்குக் கிழையகத்தேயன்றே. (தயிர்கடையக்கண்டு) ஊரெங்கும் அடியொத்தித்திரியுமிறே, தனியே நின்று தயிர்கடைவாருண்டோவென்று; ஒருத்தி தனியே நின்று தயிர்கடையக் கண்டவாறே அலப்யலாபம் பெற்றுனுய் ஓடிச்சென்றுபுக்கான்.

(ஒல்லே நானுங் கடைவனென்று) நீ தனியே நின்று தயிர் கடையில் ஒருகாலும் வெண்ணெய்பட்டதாக மாட்டாது, சடக்கென வெண்ணெய்படுவது நானும் ஒருதலேப்பற்றிக் கடையிலாய்த்தென்று. (௧) "அன்று தேவாசுரர் வாங்க" என்று பிறரைகைவிட்டால் கடைவது பிறர்கார்யமாகிலிறே; இங்கு இவளும் ஒருதலேப்பற்றிலிறே தன் ப்ரயோஜநமாவது. (கள்ளவிழியைவிழித்துப்புக்கு) இவன் கள்ளவிழி; அவள் கெண்டையொண்

அரு;—இரண்டாம் பாட்டு. (கெண்டையித்யாதி) அவளோடேகூட வேணுமோ? தானேதனியேகடைகிறதுக்கென்னென்ன (அன்று தேவரித்யாதி). (௨)

(௧) தி - வாய் எ - ௧ - எ.

கண்மடவாள். நோக்கும் நினைவும் சொல்லும்சொல்லும் ஒருபடிப் பட்டிருக்கும் அவளுக்கு; இவனுக்கு நோக்கொருபடியும் நினைவொருபடியும் சொல்லொருபடியும் செயல் வேறொருபடியுமாயிருக்கும். இவன் நோக்காலே எல்லாம மெய்யென்று அவள் விஸ்வஸித்தாளாய்த்து.

(வண்டமரித்யாதி) மேல்பண்ணின வ்யாபாரங்கள் ஒரு மஹாபாரதமிறே (வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ) உன் குழலை விஸ்வஸிக்க வண்டுகள் என்பட்டனவோ. (வாண் முகம் வேர்ப்ப) தாமரையிலே முத்து படிந்தாப்போலே ஒளியையுடையமுகம்வேர்ப்ப. (செவ்வாய்த்துடிப்ப) அதரஸ்புரணம் பிறக்க. இவையெல்லாம் புணர்ச்சிகுறியிறே. தமிழர் "சுனையாடல்" என்று ஒரு கலவியைச் சொல்லுமாப்போலே.

(தண்டயிர் நீ கடைந்திட்ட வண்ணம்) உன் செஞ்சுக்குப் பொருந்தின தயிர்கடைந்தபடி. இவள் சொன்னவாறே இங்ஙனேயிருப்பன சில எனக்குண்டோமென்ன (தாமோதரா மெய்யறிவன் நானே) உன்னுடம்பில் தழும்பை மறைக்கலாமாகிலன்றோ உன்செயல்களை மறைக்கலாவது. ... ... (௨)

அ.—மூன்றும்பாட்டு. வேறொருத்தி வார்த்தை.

கருமலர்க்கூந்தலொருத்திதன்னைக் கடைக்கணித்தாங்கேயொருத்திதன்பால்
மருவிமனம்வைத்துமற்றொருத்திக் குரைத்தொருபேதைக்குப் பொய்குறித்துப்
புரிகுழலமங்கையொருத்திதன்னைப்புணர்தி; அவளுக்கும்மெய்யனல்லை;
மருதிறுத்தாய்உன்வளர்த்தியூடே வளர்கின்றதாலுன் றன்மாயைதானே. (௩)

ப - ரை.—கரு - கறுத்து, மலர் - மலர்களணிந்த, கூந்தல் - மயிர்முடியையுடைய, ஒருத்திதன்னை - ஒரு கோபஸ்த்ரீயை, கடைக்கணித்து - கடைக்கண்ணாலேபார்த்து, ஆங்கே - அவள்பக்கல்கண் செல்லாநிற்கச்செய்தே, ஒருத்திதன்பால்-மற்றொருத்தி பக்கலிலே, மனம்-மனஸ்ஸை, மருவிவைத்து, பொருந்தவைத்து, மற்றொருத்திக்கு - மற்றொரு கோபஸ்த்ரீக்கு, உரைத்து "உனக்கடியேன்" என்று சொல்லி, ஒருபேதைக்கு - சொன்னவார்த்தையை நம்புமவளான வொருஸ்தரீக்கு, இன்னவிடத்திலேபோய்நில்லு நான் அங்கே வருகிறேனென்று, பொய் - பொய்யாக, குறித்து - இடத்தைக்குறித்து, புரி - ஆசைப்படத்தக்க, குழல் - மயிர்முடியையுடையளாய், மங்கை - யௌவநவயஸ்கையான, ஒருத்திதன்னை - ஒரு ஸ்த்ரீயை, புணர்தி - ஸம்ஶ்லேஷித்து, அவளுக்கும்—, மெய்யனல்லை - பொய்யனாயிராநின்றாய்; மருது - யமளார்ஜுந

மென்னும் மருதமரங்களை, இறுத்தாய் - முறித்தவனே, உன்வளர்த்தியூடே - உன் பிராயத்தோடே, உன்மாயை - உன்னுடைய வஞ்சனையானது, வளர்கின்றது - வளர்ந்து வாராநின்றதென்கிறாள் ஒருத்தி. (௫)

வ்யா.—(கருமலர்க் கூந்தலொருத்திதன்னைக் கடைக்கணித்து) நெய்த்திருண்டு பூவையுடைத்தாயிருக்கிற மயிர்முடியையுடையாளொருத்தியைப், தான் அவள்மயிர்முடியிலே தோற்றமைதோற்றச் சிறுங்கணித்துப்பார்த்து நேரே பார்க்கிலிறே பொதுநோக்கு என்றிருக்கலாவது (ஆங்கேயொருத்திதன்பால் மருவிமனம்வைத்து) இவள் பக்கலிலே கண்செல்லாநிற்க வேறொருத்தி பக்கலிலே "அவளையல்லதறியேன்" என்னும்படி மநஸ்ஸை யங்கேவைத்து. (மற்றொருத்திக்கு உரைத்து) மநஸ்ஸு அவள்பக்கலிலே யிருக்கச் செய்தே வேறொருத்திக்கு "அடியேன்" என்றுசொல்லி. (ஒருபேதைக்குப் பொய்குறித்து) சொன்னவார்த்தையை விஶ்வஸித்து அதுவாயபிராதா வொருமுக்கைநக்த இன்னவிடத்தே போய்நில்லு, நான் அங்கேவருகிறேனென்று இடங்குறித்து.

(புரிகுழல்மங்கையொருத்தி தன்னைப்புணர்ந்து) மயிர்முடி அலைந்து தலைகிபாய்ப்பேணாதே போகயோக்யையா யிருப்பாளொருத்தியோடே ஸம்ஶ்லேஷித்து. (அவளுக்கும் மெய்யனல்லை) அதுவும் மித்யாபரிரம்பணம். அதாவது - பொய்யே தழுவுகை. (மருதிறுத்தாய்) பருவம் நிரம்புவதற்குமுன்னே தீண்டினவைக் கொல்லப்புக்காய். (உன்வளர்த்தியூடே) உன்னுடைய வஞ்சநமும் நீ பிராயப்புக அதுவும் ஒக்கப்பிராயம் புகாநின்றதிறே. (௫)

அ.—காலாம்பாட்டு. ‡ (உகந்தருளின தேஶங்களை யநுபவித்தார் - கீழ்; அவ்வநுபவம் அவதாரங்களை யநுபவிக்கவேணுமென்னுமபேக்ஷைசநிறந்து அதில் தோள்தீண்டியான க்ருஷ்ணாவதாரத்தை அநுபவித்தவர்கள் பாசுரத்தாலே அநுபவிக்கிறார்.)

அரு ;—காலாம்பாட்டு (நாய்மூலையித்யாதி) கீழில் திருமொழிக்கும் இதுக்கும் சொன்ன வளவன்றிக்கே அடிதுடங்கியும் ஸங்கதியருளிச்செய்கிறார் (உகந்தருளினவித்யாதி).

---

‡ குண்டலிதம் அதிகம்.

மூ;—தாய்முலைப்பாலிலமுதிருக்கத் தவழ்ந்துதளர்நடையிட்டுச்சென்று
பேய்முலைவாய்வைத்து நஞ்சையுண்டுபித்தனென்றேபிறரேசநின்றாய்;
ஆய்மிகுகாதலோடியானிருப்ப யான்விடவந்தவென்தூதியோடே
நீமிகுபோகத்தைநன்குகந்தாய்; அதுவுமுன்கோரம்புக்கேற்குமன்றே. (ச)

ப - ரை.—தாய் - தாயாரான யசோதைப்பிராட்டியுடைய, முலையில் - முலையிலே, அமுது - பரமபோக்யமான, பாலிருக்க - பாலிருக்கச்செய்தே, தவழ்ந்து—, தளர்நடையிட்டுச் சென்று - தள்ளம்பாறிச் சென்று, பேய் - பூதனையுடைய, முலை - முலையிலே, வாய்வைத்து - திருப்பவளத்தைவைத்து, நஞ்சை - விஷம்கலந்தபாலை, உண்டு - விரும்பி யமுதுசெய்து, பித்தனென்று - பித்தம்பிடித்தவனென்று, பிறர் - அயலாரெல்லாம்; ஏசநின்றாய் - ஏசும்படி நின்றாய்; யான் - நான், உன்னையணைக்கைக்கு, ஆய்மிகுகாதலோடு இருப்ப - மிகவும் ஆசைப்பட்டுக்கொண்டிருக்க, யான் - நான், விட - அனுப்ப, வந்த - உன்னிடம்வந்த, என்தூதியோடே - என்தூதியோடே, நீ—, மிகுபோகத்தை - மிகுந்தஸுகத்தை, நன்குகந்தாய் - நன்றாக அநுபவித்தாய்; அதுவும் - அச்செய்கையும், உன்கோரம்புக்கு - உன்தீம்புக்கு, ஏற்கும் - ஏற்றிருக்குமென்கிறாள் ஒரு கோபஸ்த்ரீ. (ச)

வ்யா.—(தாய்முலைப்பாலிலமுதிருக்க) உன்னைப் பெறுகைக்கு நோன்புநோற்றுப்பத்துமாஸம் சுமந்து நீ முலையுண்ணில் தரித்தும் முலையுண்ணவிடில் நெறித்து ஆற்றாளாயிருக்கிறவளுடைய, உனக்கு தாரகமாயிருந்த முலைப்பாலிருக்க. (தவழ்ந்து தளர்நடையிட்டுச்சென்று) தவழ்ந்துநடக்கப்புக்கு மாட்டாதே தள்ளம்பாறிச்சென்று. (பேய்முலை வாய்வைத்து நஞ்சையுண்டு) உன்பக்கல் பாவபந்தமில்லாத பூதனையுடைய முலையிலே வாய்வைத்து, விகாரத்தை விளைப்பதான நஞ்சையுண்டு. (பித்தனென்றே பிறரேச நின்றாய்) ராகத்வேஷங்களுக்கு விஷயவிபாகம் பண்ணமாட்டாத அடைவுகேடனென்று நாட்டாரேசும்படி நின்றாய்.

நான் இப்போது விழுக்காடறியாதே செய்ததென்னென்ன (ஆய்மிகுகாதலோடியானிருப்ப யான் விடவந்த வென்தூதியோடே) என் தூதவாக்யங்கொண்டு வந்தவளோடே. (நீ மிகுபோகத்தை நன்குகந்தாய்.) ஆய் - ஆயம்பொன். உன்னை யாசைப்

பட்டு வைவர்ண்யத்தையுடைய நானிருக்க. "ஆய்" என்று கடைக்குறைத்தலாய்க் கிடக்கிறது. என்னோடு பரிமாறும் பரிமாற்றத்துக்கு அவ்வருகே என்னினைவு முன்னினைவுக்கொண்டு பரிமாற நினைத்தாலும் அவனுக்கு அந்நினைவு இல்லாமையாலே மாந்துபவளிறே அவள். (அதுவுமுன் கோம்புக்கேற்றுமன்றே) கோம்பமாவது - தீம்பு. அதாவது - உன் தீம்புக்கேற்று மித்தனையிறே யென்கை. ... ... (௪)

மின்னொத்தநுண்ணிடையாளைக்கொண்டு வீங்கிருள்வாயென்றன்வீதியூடே
பொன்னொத்தவாடைகுக்கூடலிட்டுப்போகின்றபோதுநான்கண்டுநின்றேன்;
கண்ணுற்றவளைநீகண்ணாலிட்டுக் கைவிளிக்கின்றதுங்கண்டேநின்றேன்;
என்னுக்கவளைவிட்டிங்குவந்தாய்; இன்னமங்கேநடநம்பீநீயே. (௫)

ப-ரை.—மின் ஒத்த - மின்போலே, நுண் - நுண்ணிய, இடையாளை - இடையையுடையாளொருத்தியை, கொண்டு - அணைத்துக்கொண்டு, வீங்கிருள்வாய் - மிக்கவிருளிலே, என்றன்வீதியூடே - என்னுடைய வீதியிலே, பொன்னொத்தவாடை - பீதாம்பரத்தை, குக்கூடலிட்டு - முட்டாக்கிட்டுக்கொண்டு, போகின்றபோது - அவளும் நீயுமாகப் போகிறபோது, நான்—, கண்டுநின்றேன் - பார்த்துக்கொண்டிருந்தேன்; அன்றியும், நீ—, கண்ணுற்றவளை - கண்ணில்புலப்பட்ட மற்றொரு ஸ்த்ரீயை, அவள் அந்யார்ஹையாம்படி, கண்ணாலிட்டு - உறைக்கப்பார்த்து, கை - கையாலே இன்னவிடத்துக்கு வாவென்று, விளிக்கின்றதும் - அழைத்துக்கொண்டுபோவதையும், கண்டேநின்றேன் - பார்த்துக்கொண்டேயிருந்தேன்; அவளைவிட்டு - அந்த ஸ்த்ரீயை விட்டு, இங்கு - என்னிடத்துக்கு, என்னுக்குவந்தாய் - எதுக்காக வந்தாய்; நம்பீ - ஸகலகுணபரிபூர்ணனே, இன்னம் - இனிமீதும், அங்கேநட - அவளிடத்திற்கே போவென்றாள் ஒரு கோபஸ்த்ரீ. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு) மின்போலே நுண்ணிய இடையையுடையாளொருத்தியை அவ்விடை நுடங்காதபடி யணைத்துக்கொண்டு. (வீங்கிருள் வாய்) உன்னுடைய முன்னடி தோற்றாதே போகைக்கீடான மிக்க விருளுமுண்டாய்த்திறே. (என்றன்வீதியூடே) கொண்டுபோகிறது

(கடைக்குறைத்தல்) ஆயவென்கிற அகாரம் குறைந்து, ஆய்என்றுகிடக்கிறது. மிதுபோகமென்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (என்னோடுபரிமாறு மித்யாதி). (௪)

மூ;—தாய்முலைப்பாலிலமுதிருக்கத் தவழ்ந்துதளர்நடையிட்டுச்சென்று
பேய்முலைவாய்வைத்து நஞ்சையுண்டுபித்தனென்றேபிறரேசநின்றாய் ;
ஆய்மிகுகாதலோடியானிருப்ப யான்விடவந்தவென்தூதியோடே
நீமிகுபோகத்தைநன்குகந்தாய்; அதுவுமுன்கோரம்புக்கேற்குமன்றே. (௪)

ப - ரை.—தாய் - தாயாரான யசோதைப்பிராட்டியுடைய, முலையில் - முலையிலே, அமுது - பரமபோக்யமான, பாலிருக்க - பாலிருக்கச்செய்தே, தவழ்ந்து—, தளர்நடையிட்டுச் சென்று - தள்ளம்பாறிச் சென்று, பேய் - பூதனையுடைய, முலை - முலையிலே, வாய்வைத்து - திருப்பவளத்தைவைத்து, நஞ்சை - விஷம்கலந்தபாலை, உண்டு - விரும்பி யமுதுசெய்து, பித்தனென்று - பித்தம்பிடித்தவனென்று, பிறர் - அயலாரெல்லாம் ; ஏசநின்றாய் - ஏசும்படி நின்றாய் ; யான் - நான், உன்னையணைக்கைக்கு, ஆய்மிகுகாதலோடு இருப்ப - மிகவும் ஆசைப்பட்டுக்கொண்டிருக்க, யான் - நான், விட - அனுப்ப, வந்த - உன்னிடம்வந்த, என்தூதியோடே - என்தூதியோடே, நீ—, மிகுபோகத்தை - மிருந்தஸுகத்தை, நன்குகந்தாய் - நன்றாக அநுபவித்தாய் ; அதுவும் - அச்செய்கையும், உன்கோரம்புக்கு - உன்தீம்புக்கு, ஏற்கும் - ஏற்றிருக்குமென்கிறாள் ஒரு கோபஸ்த்ரீ. (௪)

வ்யா.—(தாய்முலைப்பாலிலமுதிருக்க) உன்னைப் பெறுகைக்கு நோன்புநோற்றுப்பத்துமாஸம் சுமந்து நீ முலையுண்ணில் தரித்தும் முலை யுண்ணுவிடில் நெரித்து ஆற்றுளா யிருக்கிறவளுடைய, உனக்கு தாரகமாயிருந்த முலைப்பாலிருக்க. (தவழ்ந்து தளர்நடையிட்டுச்சென்று) தவழ்ந்துநடக்கப்புக்கு மாட்டாதே தள்ளம்பாறிச்சென்று. (பேய்முலை வாய்வைத்து நஞ்சையுண்டு) உன்பக்கல் பாவபந்தமில்லாத பூதனையுடைய முலையிலே வாய்வைத்து, விநாசத்தை விளைப்பதான நஞ்சையுண்டு. (பித்தனென்றே பிறரேச நின்றாய்) ராகத்வேஷங்களுக்கு விஷயவிபாகம் பண்ணமாட்டாத அடைவுகேடனென்று நாட்டாரேசும்படி நின்றாய்.

நான் இப்போது விழுக்காடறியாதே செய்ததென்னென்ன (ஆய்மிகுகாத லோடியானிருப்ப யான் விடவந்த வென்தூதி யோடே) என் தூதவாக்யங்கொண்டு வந்தவளோடே. (நீ மிகு போகத்தை நன்குகந்தாய்.) ஆய் - ஆயம்பொன். உன்னை யாசைப்

பட்டு வைவர்ண்யத்தையுடைய நானிருக்க. "ஆய்" என்று கடைக் குறைத்தலாய்க் கிடக்கிறது. என்னோடு பரிமாறும் பரிமாற்றத் தூக்க அவ்வருகே என்னினைவு முன்னினைவுகொண்டு பரிமாற நினைக்கிலும் அவனுக்கு அந்நினைவு இல்லாமையாலே மாந்துபவ ளிறே அவள். (அதுவுமுன் கோரம்புக்கேற்றதன்றே) கோரம்பு ஆவது - தீம்பு. அதாவது - உன் தீம்புக்கேற்றது. மித்தனையிறே யென்கை. ... ... (௪)

மின்னொத்தநுண்ணிடையாளைக்கொண்டு வீங்கிருள்வாயென்றன்வீதியூடே
பொன்னொத்தவாடைகுக்கூடலிட்டுப்போகின்றபோதுநான்கண்டுநின்றேன்;
கண்ணுற்றவளைநீகண்ணாலிட்டுக் கைவிளிக்கின்றதுங்கண்டேநின்றேன்;
என்னுக்கவளைவிட்டிங்குவந்தாய்; இன்னமங்கேநடநம்பிநீயே. (௫)

ப-ரை.—மின் ஒத்த - மின்போலே, நுண் - நுண்ணிய, இடையாளை - இடையையுடையாளொருத்தியை, கொண்டு - அணைத்துக்கொண்டு, வீங்கிருள்வாய் - மிக்கவிருளிலே என்றன்வீதியூடே - என்னுடைய வீதியிலே, பொன்னொத்தவாடை - பீதாம்பரத்தை, குக்கூடலிட்டு - முட்டாக்கிட்டுக்கொண்டு, போகின்றபோது - அவளும்நீயுமாகப் போகிறபோது, நான்—, கண்டுநின்றேன் - பார்த்துக்கொண்டிருந்தேன்; அன்றியும், நீ—, கண்ணுற்றவளை - கண்ணில்புலப்பட்ட மற்றொரு ஸ்த்ரீயை, அவள் அந்யார்ஹையாம்படி, கண்ணாலிட்டு - உறைக்கப்பார்த்து, கை - கையாலே இன்னவிடத்துக்கு வா வென்று, விளிக்கின்றதும் - அழைத்துக்கொண்டுபோவதையும், கண்டே நின்றேன் - பார்த்துக்கொண்டேயிருந்தேன்; அவளைவிட்டு - அந்த ஸ்த்ரீயை விட்டு, இங்கு - என்னிடத்துக்கு, என்னுக்குவந்தாய் - எதுக்காக வந்தாய்; நம்பீ - ஸகலகுணபரிபூர்ணனே, இன்னம் - இனிமேலும், அங்கேநட - அவளிடத்திற்கே போவென்றாள் ஒரு கோபஸ்த்ரீ. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு) மின்போலே நுண்ணிய இடையையுடையாளொருத்தியை அவ்விடை நுடங்காதபடி யணைத்துக்கொண்டு. (வீங்கிருள்வாய்) உன்னுடைய முன்னடி தோற்றாதே போகைக்கீடான மிக்க விருளையுண்டாய்த்திறே. (என்றன்வீதியூடே) கொண்டுபோகிறது

(கடைக்குறைத்தல்) ஆயவென்கிற அகாரம் குறைந்து, ஆய்என்றுகிடக்கிறது. மிதுபோகமென்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (என்னோடுபரிமாறு மித்யாதி). (௪)

தான் வேறொருதெருவேயன்றே கொண்டுபோவது. இது ஆர் தெருவென்றிருந்தாய்; இதென்ன அஞ்சாமைதான்.

(பொன்னொத்தவாடை குக்கூடலிட்டு) மறைத்துக்கொண்டு போகிறதுதான் இருளுக்கு ப்ரகாஶத்தை யிட்டன்றோ தான். போகிறது போகிறாய்த்தான், இன்னாளைக் கொண்டுபோகாநின்றாய், இன்னாள் தெருவே போகாநின்றாய், இன்னகாலத்திலே போகாநின்றாயென்னும் துணுக்குமின்றியிலே யன்றோபோய்த்து. (போகின்றபோது நான் கண்டுநின்றேன்) உன்னைப்போலே அந்யபரையன்றே நான், நீ போனவிடமெங்கும் அடியொத்து மவளாகையாலே கண்டு நின்றேன்.

(கண்ணுற்றவளை) இவளையணைத்துக்கொண்டு போகாநிற்கச் செய்தே வேறொருத்தி கண்ணுக்கு இலக்கானாள். (நீ கண்ணை விட்டு) கண்ணாலே அநந்யார்ஹையாம்படி நோக்கினாய். (கைவிளிக்கின்றதும் கண்டேநின்றேன்) இவளை ஒருகையாலே யணைத்து மற்றைக்கையாலே எதிர்ப்பட்டவளை இன்னவிடத்தே வாவென்று அழைத்துக் கொண்டு போகிறபடியையும் பார்த்துக் கொண்டு நின்றேன்.

(என்னுக்கவளைவிட்டிங்குவந்தாய்) அப்பாவி உன்னையறியாதவளாகையாலே மெய்யென்றிருக்கிறவள் வெறுக்கும்படி அவளை விட்டு இங்கு என்செய்யவந்தாய். அங்ஙனே சில வுண்டோ வெனக்கு, அநந்யகதியன்றோவென்று அவன்சொல்ல; (இன்ன மங்கேநட நம்பிநீயே) குறைவாளரைப்போலே சிலவார்த்தை சொல்லக்கடவீரோ, நீ பூர்ணரல்லீரோ, அங்கே நடவீர். (ரு)

மற்பொருதோளுடைவாசுதேவா! வல்வினையேன்துயில்கொண்டவாறே
இற்றையிரவிடையேமத்தென்னை யின்னணைமேலிட்டகன்றுநீபோய்
அற்றையிரவுமோர்பிற்றைநாளு மரிவையரோடுமணைந்துவந்தாய்;
எற்றுக்குநீயென்மருங்கில்வந்தாய்; எம்பெருமான்! நீயெழுந்தருளே. (சு)

ப - ரை.—மல் - மல்லரோடே, பொரு - பொருத, தோளுடை - திருத்தோள்களையுடைய, வாசுதேவா - வஸுதேவபுத்ரனே, வல்வினையேன் - மஹாபாபத்தைப்பண்ணின நான், துயில்கொண்டவாறே - தூங்கத்தொடங்கின உடனே, இற்றையிரவிடை - அன்றிரவில், ஏமத்து - நடுராத்ரியிலே; இன் - கலவிக்குப் பாங்காயிருப்பதொரு, அணைமேல் - படுக்கையிலே, என்னை—, இட்டு - கிடக்கவிட்டு, நீ—, அகன்றுபோய் - அகன்றுபோன, அற்றையிரவும் -

அன்றிரவும், ஓர் பிற்றைநாளும் - அதுக்கு மறுநாளும், அரிவையரோடும் - பஞ்சலக்ஷம் குடியிற்பெண்களெல்லாரோடும், அணைந்துவந்தாய் - ஸம்ஶ்லேஷித்துவந்தாய்; நீ - இப்படிப்பட்ட நீ, என் மருங்கில் - என்னருகில், எற்றுக்கு வந்தாய் - எதுக்காகவந்தாய்; எம்பெருமான் - என்னுடைய ஸ்வாமியே, நீ—, எழுந்தருள் - அப்பால் எழுந்தருளுமென்கிறாள் ஒரு கோபஸ்த்ரீ. (சு)

வ்யா.— ஆறும்பாட்டு. (மற்பொருதோளுடை வாசுதேவா) உன் செயல்கள், நீ மூலையடி நடந்தாயென்ன வொண்ணுதபடி நிவாரகரில்லாதபிறப்பு. (வல்வினையேன் துயில்கொண்டவாறே) அப்போது உறங்காதிருக்கப்பெற்றிலேன் உன்மிகைச் செயல்களெல்லாங் காணும்படி, நித்ரையும் என்னைப் பகைமீளும்படி பாபத்தைப் பண்ணினேன். (இற்றை யிரவிடையேமத்தென்னை) அற்றையிரவில் நடுச்சாமத்திலே போக போக்யமான காலத்திலேயன்றோ என்னைவிட்டுப்போய்த்து (இன்னணைமேவிட்டகன்று நீபோய்) போக யோக்யமான காலத்திலே படுக்கைவாய்ப்பாலே இவள் உறங்கும், உறங்கினவாறே போவோமென்று, அகன்று நீபோய்.

(அற்றையிரவுமோர்பிற்றைநாளும்) இங்கு நின்று நினைத்துப் போனாப்போலே செய்யவொண்ணுதிறே யங்கு; அகன்ற அன்றிரவும் பிற்றைநாளும். (அரிவையரோடு மணைந்துவந்தாய்) பஞ்சலக்ஷம் குடியில் பெண்களெல்லாரோடும ஸம்ஶ்லேஷித்துவந்தாய். "அரிவையரோடு மணைந்துவந்தாய்" என்றவாறே "இவளை ஆற்றும்போது அணைந்து ஆற்றவேணும்" என்று அவன் கிட்டப் புக (எற்றுக்கு நீ என்மருங்கில் வந்தாய்) ஆரைத்தீண்டி வந்தாயென்று தெரியாது, என்னைத்தீண்டாதே கடக்கநில்லு. (எம்பெருமான் நீ யெழுந்தருளே) பூர்வ வாஸனையாலே வந்தாயென்றவிடம் தப்பச்சொன்னேன் - அத்தைப்பொறுத்து, நீர் முதலிகளன்றே, நீர் எழுந்தருளும். ... ... (சு)

பையரவினணைப்பள்ளியினுய்! பண்டையோமல்லோநாம்; நீயுகக்கும்
மையரியொண்கண்ணினுருமல்லோம் வைகியென்சேரிவரவொழிநீ;
செய்யவுடையுந்திருமுகமுஞ் செங்கனிவாயுங்குழலுங்கண்டு
பொய்யொருநாட்பட்டதேயமையும்; புள்ளுவம்பேசாதேபோகுநம்பீ!. (எ)

அரு;—ஆறும்பாட்டு. (மற்பொருவித்யாதி) "இற்றையிரவு" என்று பாடமானாலும் அர்த்தஸௌசித்யத்துக்காக (அற்றையிரவு) என்கிறது. (சு)

ப - ரை.—பை - படத்தையுடைய, அரவினணை - திருவநந்தாழ்வானாகிற படுக்கையை, பள்ளியினாய் - திருப்பள்ளியாக வுடையனாய், நம்பீ - பூர்ணனானவனே, நாம் - நாங்கள், உன்மாயையில் அகப்படுகைக்கு, பண்டையோமல்லோம் - பழையவர்களன்று ; அன்றியும் ; நீ உகக்கும் - நீ விரும்பத்தக்கவர்களாய், மை - பையணிந்து, அரி - செவ்வரிபடர்ந்து, ஒண்-ஒளிபொருந்திய, கண்ணினாருமல்லோம் - கண்களை யுடையவர்களுமல்லோம் ; நீ—, வைகி - தங்கி, என் - என்னுடைய, சேரி - இருப்பிடத்தில், வரவு ஒழி - வாராதே கொள் ; செய்ய - சிவந்த, உடையும் - திருப்பரியட்டத்தையும், திருமுகமும் - திருமுக மண்டலத்தையும், செம் - சிவந்த, கனி - கோவைக்கனியையொத்த, வாயும் - திருப்பவளத்தையும், குழலும்கண்டு - திருக்குழலையும் கண்டு, பொய் - உன்னுடைய பொய்யானவார்த்தைகளை மெய்யென்று நம்பி, ஒருநாள் பட்டதே - ஒருநாள் பட்டபாடே, அமையும் - போதும், புள்ளுவம்பேசாது - க்ருத்ரிமமான வார்த்தைகளைச்சொல்லமல், போது-இவ்விடம்விட்டுப் போவென்கிறாள்.

வ்யா.—ஏழாம்பாட்டு. (பையரவினணைப் பள்ளியினாய்) நீ எனக்கு நல்லையல்லையாகிலும் நான் உனக்கு நல்லேன். "ஆசைப்பட்டார்க்கு உடம்பு கொடுக்குமவன், எதிர்தலையினுடைய ரக்ஷண சிந்தை பண்ணுமவன் நான்" என்று அவன்சொல்ல (பையரவினணைப் பள்ளியினாய்) என்கிறாள். (பண்டையோமல்லோம் நாம்) அகப்படுத்துகைக்காக நீ முன்பு செய்யுஞ் செயல்களறிந்தவர்களாகையாலே பழையவர்களல்லோங்காண் நாங்கள். (௧) "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றிருக்கும் நிலைதவிர்ந்தோங்காண் நாங்கள். தஞ்சமாக நினைத்திருக்கு மதிலேயும் அதிஸங்கை பண்ணும்படி அவகாஹித்தார்காணும் இவர்.

நீங்கள் பண்டையவர்களன்றாகிலும் நான்றான் பழையவனாகையாலே உகப்பேன் உங்களையென்று அவன்சொல்ல (நீ யுகக்

அரு ;—ஏழாம்பாட்டு. (பையவித்யாதி) அவன்நினைவிலே அவதாரிகை யருளிச்செய்கிறார் (நீ எனக்கித்யாதி). நீ அகப்படுத்துகைக்குப் பண்ணின வஞ்சநமன்றோவென்று வ்யங்க்யமாக அவன்நினைவை யநுவதிக்கிறார் (பையரவித்யாதி). (பண்டையோம்) உன் காபட்யமறியாதே அகப்படும் பழையவர்களல்லோமென்றபடி. முன்புதான் அவனை விஶ்வஸித்திருப்பார்களோவென்ன வருளுகிறார் (நாகணை மிசையித்யாதி).

(௧) தி - வாய் - ௫ - ௧௦ - ௧௧.

ரும்மையரியொண் கண்ணினாருமல்லோம்) நீ இப்போது உகக்கிற வர்களுமல்லோங்காண் நாங்கள். முன்னடி தோற்றாத உன்னை மூலையடியே நடக்கப்பண்ணுகிற அவ்வவ ஸேவையுடையவர்க ளல்லோங்காண் நாங்கள். ஆனால் என்னைச்செய்யச் சொல்லுகிற தென்னென்ன (என்சேரிவா வொழி நீ) எங்களுடைய இருப் பிடங்கள் எங்களுக்கே ஆஜ்ஞை செல்லுவது; எங்களிருப்பிடத்தில் வாராதேகொள். எல்லாரும் பரிமாறுகிற உங்களிடத்தில் நான் வாராதொழிகிற தென்னென்ன (என்சேரிவா வொழி நீ) எல்லா ரும் வரும்போதில் வாரவேண்டா வென்கிறோமன்று; ஆளற்ற போதாகப் போகாநின்றான், இவனுக்கு ஒரு நினைவுண்டென்று ஸங்கிக்கும்போது வரவேண்டா வென்கிறோமத்தனையல்லது ஸர்வ ஸாதாரணமானபோது வாரவேண்டா வென்றிலோமே யென்ன;

இவர்கள் வரவேண்டா வென்றபடி ஆசிலே கைவைத் தான்; இவர்கள் வார்த்தையிலே தான செயலற்றபடியாலே இவர் கள்வாய் மாளும்படி ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம்பண்ணப் பார்த் தான் (செய்யவுடையும் திருமுகமும் செங்கனிவாயுங் குழலுங் கண்டு) திருப்பரிபட்டத்தைப் பேணுவது, இவர்கள் முகங்களிலே முகத்தைக் காட்டுவது, ஸ்மிதம் பண்ணுவது, திருக்குழலைப் பேணுவதானான்; இப்படிச் செய்தவாறே இறாய்த்தாள். ஆதாவது: கண்ணைச் செம்பளித்தாள்.

கண்படைத்த லாபங்காணாதே கண்ணைச் செம்பளிக்கிற தென்னென்று சொல்லக்கண்டு (பொய்யொருநாள் பட்டதே யமையும்) உன்னுடைய செயல்களெல்லாம் மெய்யென்று ஒரு நாள் பட்டதே யமையுங் காணென்கிறாள். "அடியேன் குடி யேன்" என்று சிலவார்த்தைகளைச்சொல்ல (புள்ளுவம்பேசாதே போகு) †காட்சிக்கு முன்னேகாண் ஶ்ரவணமும், அதுவுமெல்லாம்

(மையரியிந்யாதி) மையை அபஹரிக்கிற வழகியகண்ணென்னுதல், மைபோலவும் வண்டுபோலவுமிருக்கிற வழகியகண்ணென்னுதல்.

*(ஶ்ரவணமும்) கேட்டுக் காண்கிறதொழிய, கண்டு கேட்கையுண்டோ?

† (பா) தாழ்ச்சிக்கு.

பண்டேசெய்தற்றதுகாண், இனி நீ சொல்லுகிறவற்றுக்கு ஒரு ப்ரயோஜநமில்லை. புள்ளுவமாவது - வஞ்சநம். வஞ்சநங்களெல்லாம் முடிந்த வெங்கள்பக்கல் ப்ரயோகியாதேபோ. என்னை "போ" என்கிறதென், உங்களைமொழியப் புகவிட முண்டோமென்ன (நம்பீ) பூர்ணராயிருக்கிற நீர் குறைவாளரைப்போலே சிலசொல்லக் கடவீரோ. சோலைக்கும் மசாலுக்கும் அடியில்லை யென்னும் படி நிரபேக்ஷ ரென்றறிந்தபின்பு சில ஸாபேக்ஷரைப்போலே சொல்லக்கடவீரோ, நடவீர். ... ... (௭)

என்னைவருகவெனக்குறித்திட்டினமலர் முல்லையின்பந்தர்நீழல்
மன்னியவளைப்புணரப்புக்குமற் றென்னைக்கண்டுழறு நெகிழ்ந்தாய்;
பொன்னிறவாடையைக்கையில்தாங்கிப் பொய்யச்சங்காட்டிநீபோதியேலும்
இன்னமென்கையகத்தீங்கொருநாள் வருதியேலென்சினந்தீர்வன்நானே. (௮)

ப - ரை.—என்னை—, வருகவென - இன்னவிடத்துக்கு வாவென்று, குறித்திட்டு - இடம் குறித்துவிட்டு, இனம் - குப்பல் குப்பலாக, மலர் - மலர்ந்திருந்துள்ள, முல்லையின்பந்தர்நீழல் - முல்லைப்பந்தலின் நிழலிலே, மன்னிய வளை - குடில்கட்டிக் காத்துக்கிடந்தவளை, புணரப்புக்கு - ஸம்ஸ்லேஷிக்கப் புகுந்து, என்னைக்கண்டு - என்னைப்பார்த்து, உழறு - கலங்கி, நெகிழ்ந்தாய் - அப்பாலே நடந்தாய்; பொன்நிறவாடையை - திருப்பீதாம்பரத்தை, கையில் - கையிலே, தாங்கி - தாங்கிக்கொண்டு, பொய் - பொய்யே, அச்சங்காட்டி - பயப்பட்டதாக பாவித்துகொண்டு, நீ—, போதியேலும் - போவாயேயானாலும், இன்னம் - பின்பொருகாலத்திலாகிலும், நான் ஸம்ஸ்லேஷிக்கும்படி, ஈங்கு - இவ்விடத்து, என்கையகத்து - என்னிடத்தில், ஒருநாள் - ஒருநாளாகிலும், வருதியேல் - வருவாயேயானால், என்சினம் - என்கோபத்தை, நான்—, தீர்வன் - தீர்த்துக்கொள்வேனென்கிறாள். (௮)

வ்யா.—எட்டாம்பாட்டு. (என்னை வருகவெனக் குறித்திட்டு) ப்ரணயித்வத்தாலே ஒருத்தியை அநந்யார்ஹையாக்கினாய்; அவளை யின்னவிடத்திலே வாவென்று இடங்குறித்துவிட்டாய். (இனமலர் முல்லையின் பந்தர்நீழல்) பரப்புமாறப்பூத்த முல்லைப் பந்தலின்

பேசாதேபோம். காட்சிக்குப் பூர்வபாவியானது ஶ்ரவணம். காட்சியில்லாத போது முதலிலே ஶ்ரவணமுமில்லையென்று கருத்து. (௭)

அரு;—எட்டாம்பாட்டு. (என்னையித்யாதி) என்னைவருகவென-என்னை வரச்சொல்லி இடங்குறித்திட்டென்று இவள் தன்னை - ஒருத்தியை யென்று வ்யாக்யாதாவின் வார்த்தை. (௮)

கீழ். (மன்னியவளைப் புணரப்புக்கு) எக்காலத்திலே இடங் குறித்துவிட்டானென்று தெரியாது, அவள் அங்கே குடில் கட்டிக் காத்துக்கிடக்கிறது; அவளோடே ஸம்ஶ்லேஷிக்கப்புக்கு. (மற் றென்னைக் கண்டுழறா நெகிழ்ந்தாய்) ஒரு மஹாபாரதத்தைப் பாரித்துக்கொண்டுபுக்கு இவளைக் கண்டவாறே கலங்கி எழுந் திருந்தான்.

(பொன்னிற வாடையைக்கையில் தாங்கி) திருப்பரியட்டத் தைக் கையிலே தாங்கி. (பொய்யச்சங்காட்டி நீ போதியேலும்) இவளைக் கைகழியப்போய், மெய்யச்சஞ் செய்ததைப் பொய் யாக்கிச் சிரித்தான் போய்நின்று; மெய்யே அஞ்சினானாகில் களவும் மெய்யாமிறே; களவு பொய்யாகைக்காகப் பொய்யே அஞ்சினதைப் பாவித்தான். (போதியேலும்) அப்போதைக்கு இவளைத் தப்பப் போமதிறே உத்தேஶ்யம். அப்படியே கைகழலப்போனான்.

(இன்னமென்கையகத் தீங்கொருநாள்வருதியேல்) நீ நியத ஸ்வபாவனல்லாமையாலே என்கையிலேயும் ஒருநாள் வந்து அகப் படக் கூடுமிறே; அகப்பட்டாயாகில் (என்சினம் தீர்வன்நானே) உஞ்சப்பிள்ளை பாடாநிற்க எம்பார் பார்த்தெழுந்தருளியிருக்க இவ்விடத்துக்கு அபிநயிக்கிறார் - காலாலே பாய்ந்து தள்ளுவதா கக்காட்ட; அத்தைக்கண்டருளி, "கெடுவாய்! அங்ஙனே செய்தா னாகில் அவனுக்குப் பொல்லாதோ, அவனுக்கு அதன்றோ தேட்டம், அங்ஙனன்றுகாணும்" என்று, கையையிட்டுமுகத்தை மறைத்து திரியவைத்தருளிக் காட்டினார். ... ... (௮)

௯.—ஒன்பதாம்பாட்டு. தோல்விதோற்றச் சொல்லுகிறார்கள்.

மங்கலநல்வனமாலைமார்விலிலங்க மயில்தழைப்பீலிசூடிப்
பொங்கிளவாடையரையிற்சாத்திப் பூங்கொத்துக்காதில்புணரப்பெய்து
கொங்குநறுங்குழலார்களோடு குழைந்துகுழலினிதூதிவந்தாய்;
எங்களுக்கேயொருநாள்வந்தூதுவுன் குழலின்னிசைபோதராதே. (௯)

ப - ரை.—மங்கலம் - மங்களங்களுக்கெல்லா மிருப்பிடமாய், நல் - தர்ஶ நீயமான, வநமாலை - வநமாலையானது, மார்வில் - திருமார்பிலே, இலங்க -

ப்ரகாசிக்க, தழை - தழைத்த, மயில்பீலி - மயிலிறகுகளை, சூடி - திருமுடியிலே தரித்து, பொங்கு இளவாடை - மிகவும் மெல்லிதான திருப்பரியட்டத்தை, அரையில் - திருவரையிலே, சாத்தி - சாத்திக்கொண்டும், காதில் - திருச்செவியிலே, பூங்கொத்து - பூங்கொத்துக்களை, புணரப்பெய்து - மிகவும் பொருந்தவிட்டு, கொங்கு - தேனையும், நறும் - நறுநாற்றத்தையுமுடைய, குழலார்களோடு - குழலையுடைய ஸ்த்ரீகளோடே, குழைந்து - ஸம்ஶ்லேஷித்து, அக்கலவியால்பிறந்த ஸந்தோஷத்தாலே, இனிது - இனிதாக, குழல் - வேய்ங்குழலை, ஊதிவந்தாய் - ஊதிக்கொண்டுவந்தாய்; எங்களுக்கு - எங்கள் விஷயத்திலே, ஒருநாள் - ஒருநாளிலே, வந்தூத - வந்து ஊதுகைக்கு, உன் - உன்னுடைய, குழலின் - வேய்ங்குழலினது, இசை - இசையானது, போதராதே - வாராதோ வென்கிறாள். (கூ)

வ்யா.—(மங்கல நல்வனமாலை மார்விலிலங்க) மங்களமென்று சொல்லப்பட்டவை யெல்லாமுடைத்தாய் தாமநீயமாயிருக்கிற வநமாலை. (க) "மைபோல் நெடுவரைவாய் தாழுமருவிபோல் தாரிடப்ப" என்னுமாப்போலே, திருமார்விலே விளங்க. (மயில் தழைப்பீலிசூடி) தழைத்தபீலியைத் திருமுடியிலேசுற்றி. (பொங்கிளவாடை அரையில்சாத்தி) மிகவும் மெல்லிய ஆடையைத் திருவரையிலேசாத்தி. (பூங்கொத்துக்காதில் புணரப்பெய்து கொங்கு நறுங்குழலார்களோடு குழைந்து) பூங்கொத்தைக்காதிலே மிகவும் பொருந்தவிட்டுத் தேனையும் நறுநாற்றத்தையுமுடைய குழலையுடையவர்களோடே, குழைந்து - கலந்து.

(குழலினிதூதிவந்தாய்) நெகிழ்ந்தவர்களோடே ஒருநீராகக் கலந்து அக்கலவியால்பிறந்த ஹர்ஷமெல்லாந் தோற்றும்படியாக இனிதாகக் குழலூதி வந்தாய். (எங்களுக்கே ஒருநாள் வந்தூத உன் குழலின்னிசை போதராதே) நீ ஸர்வஸாதாரணனானபின்பு உன் குழலும் ஸர்வஸாதாரணமாயிருக்க, ஓரோ விடங்களிலேயாய் நாங்கள் கேட்க வூதவேணுமென்றால் நீயூதிலும் இசைபுறப்படாதபடியாய்த்திறே உன் குழலின் ஸ்வபாவம். குழலோசையென்றும் ஸம்ஶ்லேஷமென்றும் - பர்யாயமிறே. எங்களோடு ஸம்ஶ்லேஷம் உனக்குப் பொருந்தாதென்கிறார்கள். ... ... (கூ)

(க) ஈ - திருவ - ருக.

அல்லிமலர்த்திருமங்கைகேள்வன்றன்னை நயந்திளவாய்ச்சிமார்கள்
எல்லிப்பொழுதினிலேமத்தூடி யுள்கியுரைத்தவுரையதனைக்
கொல்லிநகர்க்கிறைகூடற்கோமான் குலசேகரனின்னிசையின்மேவிச்
சொல்லியவின்தமிழ்மாலைபத்துஞ் சொல்லவல்லார்க்கில்லைதுன்பந்தானே.(௧௦)

குலசேகரப்பெருமாள் திருவடிகளே ஶரணம்.

ப-ரை.— இளவாய்ச்சிமார்கள் - சிறிய இடைப்பெண்களானவர்கள், அல்லி - அகவிதழையுடைய, மலர் - செந்தாமரைமலரைப் பிறப்பகமாகவுடையளான, திருமங்கை - பெரியபிராட்டியார்க்கு, கேள்வன்றன்னை - வல்லபனை க்ருஷ்ணனை, நயந்து - ஆசைப்பட்டு, ஏமம் எல்லிப்பொழுதினில் - மத்யராத்ரத்திலே, ஊடி-பிணங்கி, அத்தாலே, உள்கியுரைத்தவுரையதனை-ஈடுபட்டுச் சொன்ன பாசுரங்களை ; கொல்லிநகர்க்கு - கொல்லிநகருக்கு, இறை - தலைவராய், கூடல் - கூடலுக்கு, கோமான் - அரசரான, குலசேகரன்-ஸ்ரீகுலசேகரப்பெருமாள், இன் - இனிய, இசையில் - பண்ணிலே, மேவி - பொருந்தி, சொல்லிய - அருளிச்செய்த, இன் - பரமபோக்யமான, தமிழ் - தமிழாகிய, மாலை - மாலாரூபமான, பத்தும்-இப்பத்துப்பாட்டையும், சொல்லவல்லார்க்கு-சொல்லவல்லவர்களுக்கு, துன்பமில்லை - பகவதநுபவத்துக்கு விச்சேதமாகிற துன்பம்வாராதென்கிறார். (௧௦)

வ்யா.— நிகமத்தில் ; (அல்லிமலர்த் திருமங்கை கேள்வன்றன்னை நயந்து) பரமப்ரணயியான ஸ்ரீ க்ருஷ்ணனை யாசைப்பட்டு. (இளவாய்ச்சிமார்கள்) அவனைப்போலே எறிமறிந்தபருவமன்றியே பாடாற்றமாட்டாத இளவாய்ச்சிமார்கள். (எல்லிப்பொழுதினிலே மத்து) விலக்குவாரில்லாத மத்யராத்ரத்திலே. (ஊடியுள்கியுரைத்த உரையதனை) ஊடி அத்தாலே ஈடுபட்டு அவ்வீடுபாடு தான் சொல்லாய்வழிந்து புறப்பட்ட தென்னலாம்படியான பாசுரத்தை.

(கொல்லிநகர்க்கிறை கூடல்கோமான்) கொல்லியென்று - சோழன் படைவீடு; கூடலென்று - பாண்டியன் படைவீடு; "கோழிக்கோன்" என்று முன்பே சொல்லிவைத்தார். மூன்று

அரு ;—நிகமத்தில். (கோழியானவுறையூர்) சோழன்படைவீடு. அவர்கள் சொன்னத்தை இவருக்குச் சொல்லவேண்டுவா னென்னென்ன. (ஸ்ரீகோபிமாரித்யாதி). அந்தவவஸ்தையில் கர்வத்தாலே, உன்தலைபத்தோ, என்தலைபத்தோவென்று சொல்லும் வார்த்தை. (௧௦)

ராஜ்யத்துக்கும் கடவரான ஸ்ரீ குலசேகரப்பெருமாள். ஸ்ரீ கோபிமார் தங்கள் ஸ்த்ரீத்வாபிமாநமெல்லா மற்றுச்சொன்னாப்போலே இவரும் பெரிய அபிமாநமெல்லா மறுத்தபடி.

(இன்னிசையில் மேவிச்சொல்லிய இன்தமிழ்மாலை பத்தும்) (+) "வாசெயவயோ ... - பாட்யேகேயேசமதுரம்" என்னும்படியான தமிழ்த்தொடைபத்தும். (சொல்லவல்லார்க்கில்லை துன்பந்தானே) இவருடைய பாவபந்த மில்லையாகிலும் இவை கற்றவர்களுக்கு பகவதநுபவத்துக்கு விச்சேதசங்கை பிறவாதே நிரந்தராநுபவமாய்ச் செல்லப் பெறுவர்கள். ஸம்போகமத்யே பிறக்குமதிறே - ஊடலாவது. "உன்தலைபத்து என்தலைபத்து" என்று முடிய ஊடலாய்ச்செல்லு மநுபவத்தைப் பெறுவர்கள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

எழாந்திருமொழி ஆலைநீள்கரும்பு ப்ரவேசம்.

——(०)——

அ.—பிராட்டி, திருவடியைக்கண்டவாறே "ப்ரணயரோஷம் தலையெடுத்து, "பித்ருவசநபரிபாலநம் பண்ணப்போந்தார், என்றிறே பெருமாள் உங்கள்கோஷ்டியிலே ப்ரஸித்தராயிருப்பது; இப்போது அங்ஙனன்றுகாண்; - தம்மை விஶ்வஸித்துக் கைக்கொடுத்த வென்னை விடுகைக்காகக்காண். (௨) "ரக்ஷிதாஜீவ லோகஸ்ய - ரக்ஷிதாஜீவலோகஸ்ய" என்கிறத்தையும் விட்டாரிறே" என்று கிலாய்த்தாப்போலே கிலாய்த்தார் இவரும் -

---

அரு;—ஆலைநீள் ப்ரவேஶம். (௩) "யஸ்ஸாவதேஶாத் த்யஜத்ஸ்வ ராஜ்யம் ஶாஸ்வதாரண்யம் நயதஃ வநாதிஃ । நாஸீத்வ்யா தஸ்ய நஸீந் ஶோகஃ கஶ்சித் ஸ்வயைஹ்ருதயகரோதி - தர்மாபதேசாத்த்யஜதஸ்ச ராஜ்யம் மாஞ்சாப்யரண்யம்நயதஃ பதாகிம் । நாஸீத்வ்யதாஸ்யநபீர்நஶோகஃ கச்சி ஸதைர்யம்ஹ்ருதயேகரோதி" என்கிற ஶ்லோகத்தை யுட்கொண்டருளிச் செய்கிறார் (பிராட்டியித்யாதி).

(க) ரா-பா-ச-அ. (௨) ரா-ஸு-ந-சு-உ-சு. (௩) ரா ஸு-ந-க-எ.

கிழில் திருமொழியிலே; ஸர்வாத்மாக்களுக்கும் பிராட்டிமாரோபாதி ப்ராப்தியுண்டென்னும்படி பகவத்விஷயத்திலே அவகாஹித்தவாஸையாலே இவர் கிலாய்த்தார்;

இப்படி கிலாய்க்கைக்கு ப்ராப்தி யுண்டாயிருக்கிற விஷயத்தை அநாதிகாலம் இழந்தோமென்கிற இழவு வந்து தலையெடுத்து, முன்புக்ருஷ்ணனைப்பெற்றுவைத்து பால்யாவஸ்தையில் அவன்செயல்களை அநுபவிக்கப்பெறாதே இழந்திருந்து கம்ஸவதபர்யந்தமாக முன்புள்ள விரோதிகளையெல்லாம் போக்கி, தங்கள் முகத்திலே விழித்த க்ருஷ்ணனைக்கண்டபோது, கீழ் அநுபவிக்கப்பெறாத இழவுகளைச்சொல்லிக் கூப்பிட்ட தேவகியார் பாசுரத்தாலே அநாதிகாலம் தாம் இழந்த இழவைச் சொல்லுகிறார் - இத்திருமொழியிலே. ... ... *

ஆலைநீள்கரும்பன்னவன்தாலோ! அம்புயத்தடங்கண்ணினன்தாலோ!
வேலைநீர்நிறத்தன்னவன்தாலோ! வேழப்போதகமன்னவன்தாலோ!
ஏலவார்குழலென்மகன்தாலோவென்றென்றுன்னை யென்வாயிடைநிறையத்
தாலொலித்திடுந்திருவினையில்லாத் தாயரில்கடையாயினதாயே. (க)

ப-ரை.—நீள் - நன்றாகமுற்றி, ஆலை - ஆலையிலிட்டுப் பிழிதற்குத்தக்க, கரும்பன்னவன் - கரும்பையொத்தவனே, தாலோ - தாலேலோ, அம்புயம் - தாமரையிதழையொத்து, தடம் - விசாலமாயிருந்துள்ள, கண்ணினன் - கண்களையுடையவனே, தாலோ - தாலேலோ, வேலைநீர்நிறத்தன்னவன் - கடலின் நிறத்தையொத்த திருமேனியை யுடையவனே, தாலோ - தாலேலோ, வேழப்போதகமன்னவன் - யானைக்கன்றையொத்த சரிதங்களை யுடையவனே, தாலோ - தாலேலோ, ஏலம் - பரிமளிதமாய், வார் - நீண்ட, குழல் - திருக்குழலையுடைய, என்மகன் - என்மகனே, தாலோ - தாலேலோ, என்றென்று - இப்படிப் பலகாலுஞ்சொல்லி, உன்னை—, என்வாயிடைநிறைய - என்வாயிலே நிறையும்படி, தாலொலித்திடும் திருவினையில்லா - தாலாட்டும் ஸம்பத்தில்லாத, தாயரில் - தாய்மார்களில், கடையாயின - கடையான, தாய் - தாயாயிரா நின்றேன் நானென்கிறாள். (க)

வ்யா.—முதற்பாட்டு. (ஆலைநீள் கரும்பன்னவன்தாலோ) சரமபவளர்ந்த ஆலைக்கரும்புபோலே ரஸநேந்த்ரியத்துக்கு இனியனானவனே. (அம்புயத்தடங் கண்ணினன்தாலோ) விகாஸம

செவ்வி குளிர்த்தி மென்மையையுடைய தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கண்களைக்கொண்டு என்னைக்குளிர நோக்குகிறவனே யென்று சக்ஷுரிந்த்ரியத்துக்கு இனிதாயிருக்கிறபடி சொல்லுகிறார். (வேலைநீர் நிறத்தன்னவன்தாலேலோ) அவயவங்களைப் பிரிந்துச்சொல்லவேணுமோ? அவயவியான திருமேனி ஶ்யாமஹாமான கடல்போலே யிருக்கிறவனே. (வேழப்போதகமன்னவன்தாலேலோ) ஆனைக்கன்றுபோலே வைத்தகண்வாங்காதே பார்த்தபடியே யிருக்கும்படியான சரிதங்களையுடையவனே.

(ஏலவார்குழலென் மகன்தாலேலோ) இப்படி உபமாநங்களால் சொல்லவொண்ணாமையாலே என்மகனென்னுமித்தனை. (என்றென்றுன்னை யென்வாயிடை நிறையத்தாலொலித்திடும் திருவினையில்லா) இப்படிப்பலகாலும் சொல்லி வாயாரத்தாலாட்டும் ஸம்பத்தில்லாத. (தாயரில் கடையாயினதாயே) பெறுகைக்கு நோன்பு நோற்றுப்பெற்றுவைத்து அநுபவத்தில் குறையநிற்கையாலே, பிள்ளைகளைப்பெற்று அநுபவிக்கும் தாய்மாரெல்லாரிலும் கடையானேனிறேநான். ... ... (க)

வடிக்கொஞ்சனமெழுதுசெம்மலர்க்கண் மருவிமேலினிதொன்றினைநோக்கி
முடக்கிச்சேவடிமலர்ச்சிறுகருந்தாள் பொலியுநீர்முகில்குழவியேபோல
அடக்கியாரச்செஞ்சிறுவிரலனைத்து மங்கையோடணைந்தானையிற்கிடந்த
கிடக்கைகண்டிடப்பெற்றிலனந்தோ கேசவாகெடுவேன்கெடுவேனே. (உ)

ப - ரை.—வடிக்கொள் - கூர்மையையுடையதாய், அஞ்சனமெழுது - மையாலே அலங்க்ருதமாய், செம்மலர் - செந்தாமரை மலரையொத்த, கண் - கண்களாலே, மேல் - மேல்கட்டியிலே தொங்கவிட்டிருக்கும், ஒன்றினை - கிளி முதலியவைகளி லொன்றை, இனிது - இனியதாக, மருவிநோக்கி - பொருந்தப்பார்த்துக்கொண்டும், கரு - கறுத்த, தாள் - புறந்தாளையுடையதாய், மலர் - செந்தாமரை மலரையொத்து, சிறு - சிறியதாய், சேவடி - சிவந்த அகவாயையுடைய திருவடிகளை; முடக்கி - முடக்கிக்கொண்டு, நீர்பொலியும - கழுத்தே கட்டளையாக நீரைப்பருகி விளங்காநின்றுள்ள, முகில்குழவிபோல - மேகஶாபம்போலே, செம் - அழகியதாய், சிறு - சிறுத்துள்ள, விரலனைத்தும் - திருவிரல்களெல்லாவற்றையும், அங்கையோடு - உள்ளங்கையிலே, அடக்கியார - அடங்கும்படி, அணைந்து - மடக்கிப்பிடித்துக்கொண்டு, ஆனையில்கிடந்தகிடக்

கை - ஆனைகிடக்குமாபோலே பள்ளிகொண்டருளுமழகை, கண்டிட - கண்டநுபவிக்க, பெற்றிலேன் - பெறாதபாக்யஹீனையானேன், அந்தோ - ஐயோ, கேசவா - திருக்குழலழகையுடையவனே, கெடுவேன் கெடுவேன் - ஒன்றுமநுபவிக்கப்பெறாத மஹாபாபத்தை யுடையவளானேன். (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வடிக்கொளஞ்சனமெழுது செம்மலர்க்கண்) கூர்மையையுடைய செம்மலர்க்கண்ணென்னுதல். திருக்கண்ணுக்கு ஈடாகவடிக்கப்பட்ட அஞ்ஜநத்தையுடைய கண்ணென்னுதல். செம்மலர் - சிவந்ததாமரைபோலே யிருந்துள்ள, (மருவிமேலினிதொன்றினைநோக்கி) பிள்ளையைத் தொட்டிலிலே வளர்த்தி. அநந்யபராணப் பார்த்துக்கிடக்கைக்காக மேலேயொன்றைத்தூக்கி வைப்பார்களிறே. அத்தை இனியனைக்கொண்டு ஸதாதர்ஶநம்பண்ணிக் கிடக்குமிறே (முடக்கிச்சேவடி மலர்ச்சிறுகருந்தாள்) அங்குக்கிடக்கும்படி சொல்லுகிறது மேல். புறவாய் கறுத்து அகவாய் சிவந்த திருவடிகளை முடக்கி (பொலியுநீர்முகில்குழவியேபோல) கழுத்தே கட்டளையாக நீரைப்பருகிற்றொரு மேகக் கன்றுபோலே.

(அடக்கியாரச் செஞ்சிறுவிரலனைத்தும் அங்கையோடணைந்து) செறிந்து அழகிதான திருவிரல்களை உள்ளங்கையிலே அடங்கும்படி மடித்துப்பிடித்து. (ஆனையில்கிடந்த கிடக்கை கண்டிடப்பெற்றிலேனந்தோ) ஆனைதன் அவயவங்களைப் பொகட்டு ஸ்வைரமாகக் கிடந்தாப்போலே தொட்டிலிலே கிடக்கும்போது அநுபவிக்கப் பெற்றிலேனென்று ஐயோ என்கிறாள். (கேசவா கெடுவேன் கெடுவேனே) அப்போதைத் திருக்குழலழகை அநுபவிக்கவும் பெற்றிலேன்; முன்பு மலடுநின்று இழந்தேன். பின்பு பெற்றுவைத்தே அநுபவிக்கப்பெறாதே இழந்தேன். இரண்டாலும் மஹாபாபியிறேநான். ... ... (உ)

அரு;—இரண்டாம் பாட்டு. (வடிக்கொளித்யாதி) (ஆனையில்) உபமார்த்தே பஞ்சமீ. ஆனைபோலே யென்றபடி

முந்தைநன்முறையன்புடைமகளிர் முறைமுறைதந்தங்குறங்கிடையிருத்தி
எந்தையேயென்றன்குலப்பெருஞ்சுடரே யெழுமுகில்கணத்தெழில்கவரேறே
உந்தையாவனென்றுரைப்பநின்செங்கேழ்விரலினும் கடைக்கண்ணினுங்காட்ட
நந்தன்பெற்றனன்நல்வினையில்லா நங்கள்கோன்வசுதேவன்பெற்றிலனே. (௩)

ப-ரை.—அன்புடை - மிக்கவன்புடையராய், முந்தை - தொன்று தொட்டுவருகிற, நல்முறை - தாய்மார்பாட்டிமாரென்கிற நல்லமுறையையுடைய, மகளிர் - ஸ்த்ரீகளெல்லாரும், தம்தம் - தங்கள் தங்களுடைய, குறங்கிடை - துடைகளிலே, முறைமுறை - அவ்வோ அடைவுகளிலே, இருத்தி - வைத்துக்கொண்டு, எந்தையே - என்றன் தமப்பனே! என்றன்குலம் - எங்கள் குலத்துக்கு, பெருஞ்சுடரே - உஜ்வலமான விளக்கானவனே! எழு - எழுவகைப்பட்ட, முகில்கணத்து - மேகஸமூஹங்களினுடைய, எழில் - அழகை, கவர் - கவர்ந்த, ஏறே - ஸிம்ஹம்போலே மேன்மையுள்ளவனே யென்று இப்படி ஸ்தோத்ரம்பண்ணி, உந்தை - உன்தமப்பனார், யாவனென்றுரைப்ப - யாரென்றுகேட்க, நின் - உன்னுடைய, செங்கேழ் - சிவந்தநிறமுள்ள, விரலினும் - விரலாலும், கடைக்கண்ணினும் - கடைக்கண்ணாலும், காட்ட - காண்பிக்க, (அவ்வழகை) நந்தன் - ஸ்ரீநந்தகோபர், பெற்றனன் - பெற்றார், நல்வினையில்லா - பாக்யஹீனையான, நங்கள்கோன் - என்னுடைய பர்த்தாவான, வசுதேவன் - ஸ்ரீவஸுதேவர், பெற்றிலன் - பெற்றாரில்லை. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (முந்தைநன்முறை யன்புடைமகளிர்) தாய்மார், அவர்களுடைய தாய்மார், பாட்டிமாரெல்லாரும், (முறைமுறை தந்தம் குறங்கிடையிருத்தி) தந்தம் அவ்வோ அடைவுகளிலே குறங்குகளிலே வைத்துக்கொண்டு (எந்தையேயென்றன்குலப் பெருஞ்சுடரே யெழுமுகில் கணத்தெழில் கவரேறே) என்றன்தமப்பனே! எங்கள் குலத்துக்கு விளக்கானவனே எழுவகைப்பட்ட மேகஸமூஹங்களினுடைய அழகைக் கவர்ந்த ஸிம்ஹம்போலே யிருக்கிறவனே!

(உந்தையாவனென்றுரைப்ப) இப்படி ஸ்தோத்ரங்களைப் பண்ணி உங்கள் தமப்பனார் யாரென்று கேட்க, (நினசெங்கேழ்

அரு:—மூன்றாம்பாட்டு. (முந்தையித்யாதி) "முந்தைமகளிர்" என்று பாட்டிமாராய், தாயாருடைய பாட்டியாரைச் சொல்லுகிறது. (௩)

விரலினும் கடைக்கண்ணினும் காட்ட நந்தன் பெற்றனன்; சிவந்த விரலாலும் கண்ணாலும்காட்ட ஸ்ரீநந்தகோபர் பெற்றார். (நல்வினையில்லாநங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே) பாக்யஹீநையான வென்னைக் கைப்பிடிக்கையாலே ஸ்ரீவஸுதேவரும் இழந்தாரே. ... ... (௫)

களிநிலாவெழில்மதிபுரைமுகமும் கண்ணனே திண்கைமார்வுந்திண்டோளும்
தளிர்மலர்க்கருங்குழல்பிறையதுவும் தடங்கொள்தாமரைக்கண்களும் பொலிந்த
இளமையின்பத்தையின்றென்றன்கண்ணால்பருகுவேற்கிவள் தாயெனநினைந்த
அளவில்பிள்ளைமையின்பத்தையிழந்த பாவியேனெனதாவிநில்லாதே. (௬)

ப - ரை.—கண்ணனே - க்ருஷ்ணனே! களி - ஆஹ்லாதகரமான, நிலா - நிலாவையுடைத்தான, எழில்மதிபுரை - பூர்ணசந்த்ரனையொத்த, முகமும் - திருமுகமும், திண் - திண்ணிதான, கையும் - திருக்கைகளும், மார்வும் - திருமார்பும், திண் - வலிமைபொருந்திய, தோளும் திருத்தோள்களும், தளிர் - தளிரையும், மலர் - புஷ்பங்களையுமுடைத்தாய், கரு - கறுத்த, குழல் - திருக்குழலின்கீழே விளங்குகிற, பிறையதுவும், மூன்றாம்பிறையொத்த திருநெற்றியும், தடங்கொள் - விசாலமான, தாமரை - தாமரையிதழ்போன்ற, கண்களும் - திருக்கண்களையுங்கொண்டு, பொலிந்த - விளங்குகிறவுன்னுடைய, இளமை - யௌவநாவஸ்தையின், இன்பத்தை - அழகை, இன்று - இப்போது, என்றன் - என்னுடைய, கண்ணால் - கண்களாலே, பருகுவேற்கு - அநுபவிக்கிறவெனக்கு, இவள் தாயென நினைந்தவளவில் - தாயாரையொழிய மற்றவரையறியாத அதிசைசவதசையிலே, பிள்ளைமையின்பத்தை - அப்பிள்ளைப்பருவத்தின் ஸுகத்தை (அநுபவிக்கப்பெறாதே) இழந்த - இழந்துவிட்ட, பாவியேன் - மஹாபாபியான, எனது - என்னுடைய, ஆவி - ப்ராணனானது, நில்லாது - தரிக்கிறதில்லை. (௬)

வ்யா.—நாலாம்பாட்டு (களிநிலாவெழில் மதிபுரைமுகமும்) செறிந்த நிலாவையுடைய பூர்ணசந்த்ரனைப்போலேயிருக்கிற திருமுகமும் (கண்ணனே திண்கைமார்வும் திண்டோளும்) க்ருஷ்ணனே! சொல்லுகிற விலக்ஷணமாய்த திண்ணிதாயிருக்கிற திருக்கையும் திருமார்பும் திருத்தோளும். (தளிர்மலர்க்கருங்குழல்

அரு;—நாலாம்பாட்டு (களிநிலாவித்யாதி) (சொல்லுகிற) (க) "ஆயதாஸ்ச - ஆயதாஸ்ச" இத்யாதியாலே சொல்லுகிறவென்றபடி. கண்ணனே ஸம்புத்தி. (௬)

(க) ரா - கிஷ்கி

பிறைபதுவும்) தளிரையும் மலரையுமுடைத்தாய் இருண்டிருக்கிற திருக்குழலின்கீழே உக்கேயமான பிறைபோலே விளங்குகிற திருநெற்றியும். (தடங்கொள் தாமரைக்கண்களும்) ஒருதாமரைப்பூவே தடாகமெல்லாம் விழுங்கும்படி அலர்ந்தாப்போலே திருமேனியெல்லாம் பரப்புமாறும்படி யலர்ந்த திருக்கண்களும்.

(பொலிந்த இளமையின்பத்தை இன்றென்றன் கண்ணால் பருகவேற்கு) இவ்வவயவசோபைகளால் விளங்காநின்றுள்ள யௌவனாவஸ்தையிலழகை என்கண்ணாலே யநுபவிக்கிறவெனக்கு. (இவள்தாயென நினைந்தவளவில் பிள்ளைமையின்பத்தை யிழந்தபாவியேன்) தாயொருத்தியையுமல்லது வேறொருத்தரையுமறியாத அதிசைஶவமாயிருக்கிற பருவத்தை யநுபவிக்கப்பெறாமையாலே இப்போது கிட்டியநுபவிக்கச்செய்தேயும் இழவே தலையெடுக்கும்படியான மஹாபாபத்தைப் பண்ணினேன். (எனதாவிநில்லாதே) என்ப்ராணன் தரிக்கிறதில்லை. ... (௪)

மருவிநின்திருநெற்றியில்சுட்டியசைதர மணிவாயிடைமுத்தம்
தருதலுமுன்றன்தாதையைப்போலும் வடிவுகண்டுகொண்டுள்ளமுள்குளிர
விரலைச்செஞ்சிறுவாயிடைச்சேர்த்து வெகுளியாய்நின்றுரைக்குமவ்வுரையும்
திருவிலேனொன்றும்பெற்றிலேனெல்லாம் தெய்வநங்கையசோதைபெற்றாளே

ப - ரை.—நின் - உன்னுடைய, திருநெற்றியில் - லலாடப்ரதேசத்தில், மருவு - ஸஹஜமானதுபோல் பொருந்தியிருக்கிற, சுட்டி - திருச்சுட்டியானது, அசைதர - அசையும்படி, மணி - அழகிய, வாயிடை - வாயில், முத்தம் - முத்தத்தை, தருதலும் - கொடுக்கையும், உன்றன் - உன்னுடைய, தாதையைப்போலும் - தமப்பனைப்போலே, வடிவு - திருவடிவழகை, கண்டுகொண்டு - கண்டு, உள்ளம் - மநஸ்ஸானது, உள்குளிர - உள்ளேகுளிரும்படி, செம் - சிவந்து, சிறு - குவிந்திருந்துள்ள, வாயிடை - திருப்பவளத்திலே, விரலை - திருவிரற்களை, சேர்த்து - சேர்ப்பித்து, வெகுளியாய்நின்று - சீற்றத்தோடே நின்று, உரைக்கும் - சொல்லுகிற, அவ்வுரையும் - மழலைச்சொற்களுமாகிய விவைகளில், ஒன்றும் - ஒன்றையும், திருவிலேன் - பாக்யஹீநையான நான், பெற்றிலேன் - அநுபவிக்கப்பெறவில்லை, தெய்வநங்கை - தேவஸ்த்ரீக்கு ஸத்ருஶையான, அசோதை - யசோதைப்பிராட்டியானவள், எல்லாம் - அந்த பால்ய சேஷ்டிதங்களெல்லாம், பெற்றாள் - அநுபவிக்கப்பெற்றாள். (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு (மருவினின் திருநெற்றியில் சுட்டிய சைதா) திருநெற்றியில் கூடப்பிறந்தாப்போலே யிருக்கும் திருச்சுட்டியானது அசையும்படி, (மணிவாயிடை முத்தம்தருதலும்) அழகியவாயில் முத்தம் - அதாமுக்கம் கொடுத்தலும். (உன்றன் தாதையைப்போலும்) உன் தமப்பனைப்போலே. (வடிவுகண்டு கொண்டுள்ளமுள்குளிர) வடிவழகைக்கண்டுகொண்டு நெஞ்சமானது உள்குளிர.

(விரலைச்செஞ்சிறுவாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்குமவ்வுரையும்) சிவந்துகுவிந்திருந்துள்ள திருப்பவளத்திலே திருவிரலைச்சேர்த்துச் சீற்றத்தோடேநின்று சொல்லுகிற மழலைச்சொற்களும் (திருவிலேனித்யாதி) பால்யாவஸ்தையி லநுபவங்களை யநுபவிக்க பாக்யஹீனையான நானிழந்தேன். இழக்கைக்கு நானொருத்தியுண்டானாப்போலே அநுபவிக்கைக்கு இட்டுப்பிறந்த யசோதைப்பிராட்டி எல்லாம் பெற்றாளிறே. ... (ரு)

தண்ணந்தாமரைக்கண்ணனேகண்ணா தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர்நடையால்
மண்ணில்செம்பொடியாடிவந்தென்றன் மார்பில்மன்னிடப்பெற்றிலேனந்தோ
வண்ணச்செஞ்சிறுகைவிரலனைத்தும் வாரிவாய்க்கொண்டவடிசிலின்மிச்சில்
உண்ணப்பெற்றிலேனோகொடுவினையே னென்னையென்செய்யப்பெற்ற
தெம்மோயே. (சு)

ப-ரை.—தண் - குளிர்ந்தும், அம் - அழகிதான, தாமரை - தாமரை போன்ற, கண்ணனே - திருக்கண்களையுடைய, கண்ணா - க்ருஷ்ணனே! தவழ்ந்து - நீதவழ்ந்துகொண்டு, எழுந்து - எழுந்திருந்து, தளர்ந்ததோர் நடையால் - தள்ளம்பாறுவதான தளர்நடையாலே, செம் - சிவந்த, மண்ணில்பொடி - புழுதிமண்ணிலே, ஆடி - விளையாடி, வந்து - அக்கோலத்தோடேவந்து, என்றன் - என்னுடைய, மார்பில் - மார்விலே, மன்னிட - கட்டிக்கொண்டு பொருந்தும்படிகிடக்க, பெற்றிலேன் - நான்பெறவில்லையே, அந்தோ - ஐயோ, வண்ணம் - அழகிதாய், செம் - சிவந்த, சிறு - சிறிய, கைவிரலனைத்தும் - கையிலேலுவிரற்களாலும், வாரி - வாரிக்கொண்டு, வாய்க்கொண்ட - அமுது செய்த, அடிசிலின் - ப்ரஸாதத்தினுடைய, மிச்சில் - சேஷத்தை, உண்ணப் பெற்றிலேன் உண்ணப்பெறவில்லையே, கொடுவினையேன் - (அப்படிய நுபவிக்கப்பெறாத) மஹாபாபத்தைப் பண்ணினேன், ஓ - ஐயோ, எம்மோய் - என் தாயாரானவள், என்னை - என்னை, என்செய்ய - எதுக்காக, பெற்றது - பெற்றாள். (சு)

வ்யா.—ஆறும்பாட்டு. (தண்ணம் தாமரைக்கண்ணனே) குளிர்ந்து அழகிதான தாமரைப்பூப்போலே அலர்ந்ததிருக்கண்களையுடைய க்ருஷ்ணனே. (தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர்நடையால்) தவழ்ந்தெழுந்திருந்து நடக்கப்புகுவது தள்ளம்பாறுவதான தளர்நடையாலே. (மண்ணில்செம்பொடியித்யாதி) நிலப்பண்பாலே சிவந்தபுழுதியை யாடிவந்து அக்கோலத்தோடே என்மார்பிலே கட்டிக்கொண்டு கிடக்கப்பெற்றிலேன்.

(வண்ணச் செஞ்சிறுவித்யாதி) அழகிதாய்ச் சிவந்ததிருவிரல்களனைத்தாலும் வாரி யமுதுசெய்த சேஷத்தை யுண்ணப்பெறாத மஹாபாபத்தைப்பண்ணினேன். (என்னையென் செய்யப்பெற்றதெம்மோயே) ராஜமஹிஷியாய் பிள்ளைகளளைந்த வெச்சிலுண்ணுமைக்கோ எங்கள் தாயாரென்னைப் பெற்றது. (க) "அமுதினு மாற்றவினிதே தம்மக்கள் சிறுகையளாவியகூழ்" (க) "மக்கள் மெய்தீண்டலுடலுக்கின்பம் மற்றவர் தம்சொல் கேட்டலின்பம் செவிக்கு" ... ... (சு)

குழகனேயென் றன்கோமளப்பிள்ளாய் கோவிந்தாவென்குடங்கையில்மன்னி
ஒழுகுபேரெழிலிளஞ்சிறுதளிர்போலொரு கையாலொருமுலைமுகம்நெருடா
மழலைமென்னகையிடையிடையருளா வாயிலேமுலையிருக்கவென்முகத்தே
எழில்கொள்நின்திருக்கண்ணிணை நோக்கந்தன்னையுமிழந்தேனிழந்தேனே.(எ)

ப-ரை.—குழகனே - எல்லாரோடும் கலக்கும் ஸ்வபாவனாய், என்றன் - என்னுடைய, கோமளப்பிள்ளாய் - அழகியகுமாரனான, கோவிந்தா - கோவிந்தனே! என் - என்னுடைய, குடங்கையில் - உள்ளங்கையிலே, மன்னி - பொருந்தியிருந்து, பேரெழில் - அழகுவெள்ளம், ஒழுகு - ப்ரவஹிக்கும்படியாய், இளம்சிறு, மிகவுமிளசான, தளிர்போல் - தளிரையொத்த, ஒருகையால் - ஒரு திருக்கையாலே, ஒருமுலைமுகம் - ஒருமுலைக்கண்ணை, நெருடா - நெருடிக்கொண்டு, வாயிலே - திருவதரத்திலே, முலையிருக்க - முலையிருக்கச்செய்தேயும், என்முகத்து - என்முகத்திலே, இடையிடை - நடுவில் நடுவில், மழலைமென்னகையருளா - மழலைச்சிரிப்பாகச் சிரித்துக்கொண்டு, எழில்கொள்-அழகிய, நின் - உன்னுடைய, திருக்கண்ணிணை - திருக்கண்களால் கடாக்ஷிக்கிற, நோக்கந்தன்னையும் - கடாக்ஷத்தையும், (அநுபவிக்கப் பெறாமே) இழந்தேன் - பெற்றவன்றே போகவிட்டநான், இழந்தேன் - இன்றுமிழந்தேன். (எ)

அரு;—ஆறும்பாட்டு.(தண்ணமித்யாதி) ராஜமஹிஷிகள் பெற்றவுடனே புறம்பே வளர்க்கவிடுகையாலே எச்சிலுண்ணார்கள். (சு)

வ்யா.—ஏழாம்பாட்டு. (குழகனேயென்றன் கோமளப்பிள்ளாய்) லோகயாத்ரையிலே அந்யபரையாய்த் தனக்குமுகம்கொடாதிருந்தால் லோகயாத்ரையைக் கைவிட்டு உன்னையேபார்க்கவல்லேனும்படி கலக்கவல்லையாய், அதுதான் பொறுதஸௌகுமார்யத்தையுடையவனே! (கோவிந்தா வென்குடங்கையில்மன்னி) கோஸம்ருத்தியையுடையவனே! என்கையிலேயிருந்து. (ஒழுகுபேரெழிலிளஞ்சிறுதளிர்போ லொருகையா லொருமுலைமுகம் நெருடா) அழகுவெள்ளம் படிந்தோடும்படியான தளிர்போலே யிருக்கிற ஒரு திருக்கையாலே இவள் இரங்கி முலைகொடுக்கும்படி ஒரு முலைக்கண்ணை நெருடிக்கொண்டு.

(மழலைமென்னகையிடையிடையருளாவாயிலே முலையிருக்க வென்முகத்தே) வாயிலே முலையிருக்கச்செய்தே முலைசுரக்கும்படியாக என்முகத்திலே இடையிடையே மழலைச்சிரிப்பாகச்சிரியா. (எழில்கொள்நின் திருக்கண்ணிணை நோக்கம்தன்னையு மிழந்தேனிழந்தேனே) அதுக்கு பிரங்காரும் இரங்கும்படி அழகிய திருக்கண்களாலே பார்க்கிற பார்வையையும் பெற்றவன்றே போகவிட்டதுக்குமேலே இவ்வவஸ்தையில் சேஷ்டிதங்களையு மநுபவிக்கப்பெற்றிலேன். ... ... (எ)

மூ ;—முழுதும்வெண்ணெயளைந்து தொட்டுண்ணும்
முகிழிளம் சிறுத்தாமரைக்கையும்
எழில்கொள் தாம்பு கொண்டடிப்பதற்கெள்குநிலையும்
வெண்தயிர்தோய்ந்த செவ்வாயும்,
அழுகையுமஞ்சிநோக்கு மந்நோக்கு
மணிகொள் செஞ்சிறுவாய்நெளிப்பதுவும்
தொழுகையு மிவைகண்டவசோதை
தொல்லையின்பத் திறுதிகண்டாளே. (அ)

ப - ரை.—வெண்ணெய் - வெண்ணெயை, முழுதுமளைந்து - குடத்திலுள்ளவளவும் கையையிட்டளைந்து, தொட்டுண்ணும் - மாளுமென்ற சாபலத்தாலே தொட்டுத் தொட்டுண்ணுகிற, இளமுகிழ் - இளந்தளிர்போலேயும், தாமரை - தாமரைபோல் செவ்வியதாயுமிருக்கிற, சிறுக்கையும் - சிறிய திருக்கைகளும், எழில்கொள் - அழகையுடைத்தான, தாம்புகொண்டு - தாம்பாலே அடிப்பதற்கு - அடிக்க, (அதுக்கு) எள்குநிலையும்-பையாந்து நிற்கும்நிலையும், வெண் - வெளுத்த, தயிர்தோய்ந்த - தயிர்பூசிய, செவ்வாயும் - சிவந்த திருப்

பவளமும், அழுகையும் - அழுகையும், அஞ்சி - பயந்து, நோக்கும் - பார்க்கிற, அந்நோக்கும் - அந்தப்பார்வையும், அணிகொள் - அழகிய, செம் - சிவந்த சிறுவாய் - சிறிய திருப்பவளத்தை, நெளிப்பதுவும் - நெளிக்குமதையும்' தொழுகையுமிவை - அஞ்ஜலிபண்ணுகையுமாகிற விவைகளை, கண்ட-நேரிலே கண்ணால்கண்டநுபவித்த, அசோதை-யசோதைப்பிராட்டியானவள், தொல்லை-அநாதிஸித்தமான, இன்பத்து - பேரின்பத்தினுடைய, இறுதிகண்டாள் - முடிவை யநுபவித்தாள். (அ)

அவ.—எட்டாம்பாட்டு. (முழுதுமித்யாதி) நானிழந்த விழவெல்லாம் யசோதைப்பிராட்டி பெற்றாளென்கிறாள்.

வ்யா—(முழுதும் வெண்ணெயளைந்து) வெண்ணெயிலுண்டான வாதராதிசயத்தாலே திருக்கைகளை வெண்ணெய்க் குடத்திலேயிட்டு அளையுமாய்த்து. (தொட்டுண்ணும்) அதிசாபலத்தாலே மாளுமென்று (க) "விரலொடுவாய்தோய்ந்த" என்னுமாபோலே தொட்டுண்ணுமாய்த்து. (முகிழிளம் சிறுத்தாமரைக்கையும்) இளந்தளிர்போலேயும் நிறத்துக்கு விகாஸம் செவ்விக்குத் தாமரைப் பூப்போலேயுமிருக்கிற திருக்கைகளும். (எழில்கொள்தாப்பு) ஸ்பர்ஶிக்கைக்கு ஆசைப்பட்டிருக்கும் திருமேனியை ஸ்பர்ஶித்ததிறேயென்று, எழில்கொள்தாம்பென்கிறார். "ராஜஜந்மம்வேண்டா அசேதநமாகவமையும் அங்குத்தை ஸ்பர்ஶம்பெறில்" என்றிருக்குமவரிறே (கொண்டடிப்பதற்கு எள்குநிலையும்) இவர் அங்குத்தை ஸ்பர்ஶத்தைநினைத்து எழில்கொள்தாம்பு என்றார். ஆகிலும் கைக்கெட்டிற்றொன்றையிட்டு அவளடிக்க, அதுக்கு ஈடுபட்டுப் பையாந்துநிற்கும் நிலையும். (வெண்தயிர்தோய்ந்த செவ்வாயும்) தயிர்களவுகண்டாயென்ற டிக்கப்புக்கவாறே இல்லை செய்கைக்காக முகத்திலே பூசிக்கொள்ளுமே. வெளுத்ததயிரும் சிவந்த திருப்பவளமுமான பாபாகமிருக்கிறபடி.

(அழுகையும்) இல்லையென்றிருக்கச்செய்தே களவை நாடுவதே நம்மையென்றழுகையும், அழப்புக்கவாறே - வாய்வாயென்

அரு;—எட்டாம்பாட்டு. (முழுதுமித்யாதி) வெண்ணெயைக் கைமுழுதாலுமளைந்து.

(க) க - திருவ - உசு.

னுமே. அத்தாலே பயப்பட்டு அச்சமெல்லாம் தன்னோக்கிலே தோற்றும்படி பார்த்துக்கொண்டு நிற்கும்நிலையும். (அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்) பின்னையு மழாதிருக்கவும்மாட் டான். அழவும்மாட்டான். அழகியதிருப்பவளத்தை நெளிக்கு மத்தனையிறே. (தொழுகையும்) போக்கற்றார் செய்யும்செயலிறே. ஸாபராதானுக்கு அபராதம்போக்குமது அஞ்ஜலியென்னுமிடம் தானறிந்திருக்குமதாகையாலே அஞ்ஜலியைப் பண்ணுமாய்த்து. (இவைகண்ட யசோதை) இவற்றை யிங்கே ஸாக்ஷாத்கரிக்கக் கண்ட யசோதைப்பிராட்டி. (தொல்லை யின்பத்திறுதிகண்டாளே) பரமபதத்தில் நிரவதியான வநுபவத்தை ஸாவதியாக்கினவளிறே. அங்கேசென்றெல்லாரும் தொழவிருக்குமவன் தான் தொழுகை யாலே அபரிச்சிந்நமான வநுபவம் பரிச்சிந்நமாய்த்திறே. (௮)

குன்றினால்குடைகவித்ததும் கோலக்குரவைகோத்ததும்குடமாட்டும்
கன்றினால்விளவெறிந்ததும் காலால்காளியன் தலைமிதித்ததும்முதலா
வென்றிசேர்பிள்ளைநல்விளையாட்ட மனைத்திலுமங்கென்னுள்ளமுள்குளிர
ஒன்றும்கண்டிடப்பெற்றிலேனடியேன் காணுமாறினியுண்டெனிலருளே. (௯)

ப - ரை.—குன்றினால் - (இந்த்ரனாலுண்டான வர்ஷத்தைப்போக்குகைக் காக) கோவர்த்தநத்தை, குடை - குடையாக, கவித்ததும் - தரித்துநின்றதும், கோலம் - அழகிய, குரவைகோத்ததும் - திருக்குரவையில் கோபகந்யகைக ளோடு தன்னைக்கோத்ததும், குடமாட்டும் - குடக்கூத்தாடினதும், கன்றினால் - கன்றாய்வந்த தேநுகாஸுரனாலே, விளவு - விளாவாய்நின்ற வஸுரனை, எறிந் ததும் - எறிந்து இருவரையும் சேரமுடித்ததும், காலால் - திருவடிகளாலே, காளியன்தலை - காளியனென்கிற ஸர்ப்பத்தின் ஶிரஸ்ஸை, மிதித்ததுமுதலா- மர்த்தித்ததும் இவை முதலாக, வென்றி - வீரப்பாட்டுக்கும், பிள்ளை - பால்யத் துக்கும், சேர் - சேர்ந்திருக்கிற, நல் - அதிமநோஹரமான, அங்கு-அவ்விடத்தில் செய்தருளின, விளையாட்டம் அனைத்திலும் - எல்லா விளையாட்டுக்களிலும், என்னுள்ளம் - என்மநஸ்ஸானது, உள்குளிர - உள்ளே குளிரும்படி, அடி யேன் - இவைகாண்கையே ப்ரயோஜநமாயிருக்கிற நான், ஒன்றும் - இந்த சேஷ்டிதங்களிலொன்றையும், கண்டிடப்பெற்றிலேன் - காணப்பெறவில்லை. இனி - இனிமேல், காணுமாறு - நானிவைகளைக் காணும்படியானவழி, உண் டெனில் - உண்டானால், அருள் - க்ருபைசெய்தருளவேணும். (௯)

(தொல்லையின்பம்) தொல்லையானதாய், நிரவதிகமான வின்பம். ஸாவதி யாவதெப்படி யென்னவருளுகிறார் (அங்கே சென்றித்யாதி.) (௮)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (குன்றினால் குடைகவித்ததும்) இடையரும் பசுக்களும் தொலையும்படியாக இந்த்ரன் கல்வர்ஷமாக வர்ஷித்தபடியாலே மலையையெடுத்துக் குடையாக தரித்ததும். (கோலக்குரவை கோத்ததும்) தர்ஶநீயமான குரவைக்கூத்திலே ஸ்ரீகோபிமாரோடொக்கத்தன்னையும் கோத்ததும் (குடமாட்டும் கன்றினால் விளவெறிந்ததும்) ஒருவன் கன்றாய் ஒருவன் விளாவாய்வந்த இருவரையும் சேரமுடித்ததுவும் (காலால்காளியன் தலைமிதித்ததும்முதலா) நான் ஆசைப்பட்டுப்பெறாத திருவடிகளைக்கொண்டு ஆஸுரப்ரக்ருதியான காளியன்தலையிலே மிதித்ததும்முதலாக.

(வென்றிசேர்பிள்ளை நல்விளையாட்டம்) வீரப்பாட்டுக்கும் மௌக்த்யத்துக்கும் சேர்ந்திருக்கிற அதிமநோஹரமான. (அனைத்திலும் மங்கைகன்னுள்ளமுள்குளிர ஒன்றும் கண்டிடப்பெற்றிலேனடியேன்) இவைகாண்கையே ப்ரயோஜநமாகவிருக்கிற நான் ஒன்றும் காணப்பெற்றிலேன். (காணுமாறினியுண்டெனிலருளே) நீ நினைத்தால் செய்யவொண்ணாததில்லை. நானிவைகாணும்படியருளவேணும். ... ... (கூ)

வஞ்சமேவியநெஞ்சுடைப்பேய்ச்சிவாண்டு நார்நரம்பெழக்கரிந்துக்க
நஞ்சமார்தருசுழிமுலையந்தோ சுவைத்துநீயருள்செய்துவளர்ந்தாய்
கஞ்சன்நாள்கவர்கருமுகிலெந்தாய் கடைப்பட்டேன்வெறிதேமுலைசுமந்து
தஞ்சமேலொன்றிலேனுய்ந்திருந்தேன் தக்கதேநல்லதாயைப்பெற்றாயே. (க0)

ப - ரை.—வஞ்சம் - வஞ்சநத்திலே, மேவிய - பொருந்தின, நெஞ்சுடை - மநஸ்ஸையுடையவளான, பேய்ச்சி-பூதனையுடைய, (மாம்ஸமும் உள்ளுண்டான உதிரமும்) வாண்டெழ - கொழித்துக்கொண்டு புறப்படவும், சேஷித்தவுடம்பு, நார்நரம்பு - நாரும் நரம்பும் தோலுமாம்படி, கரிந்து - கருகி, உக்க - உதிரும்படியாக. சுழி - தன்னிலே அகப்படுத்தவற்றாய், ஆர்தரு - மிகுந்த, நஞ்சம் - விஷத்தையுடைத்தான, முலை - முலைப்பாலை, நீ—, சுவைத்து அருள்செய்து - புஜித்தருளி, வளர்ந்தாய் - அத்தையே தாரகமாகக்கொண்டு வளர்ந்தவனாய், கஞ்சன் - கம்ஸனுடைய, நாள் - ஆயுஸ்ஸை, கவர் - அபஹரித்த, கரு - கறுத்த, முகில்-மேகத்தையொத்து, எந்தாய்-என்னை யெழுதிக்கொண்டவனே, முலை -

---

அரு;—ஒன்பதாம்பாட்டு. (குன்றினாலித்யாதி) (மநோஹரமாண) வ்யாபாரமென்று பூரிப்பது. (கூ)

முலையை, வெறிதே - வ்யர்த்தமாக, சுமந்து—, கடைப்பட்டேன் - தண்ணியாரிலும் தாழ்ந்தவளாயிராநின்றேன் ; தஞ்சம் ஒன்று-வேறோர்தாரகம், இலேன்- இல்லாதவளாகையாலே, உய்ந்திருந்தேன் - ப்ராணனைவருந்தி தரித்துக்கொண்டிருந்தேன் ; உனக்கு முலைப்பால் அபேக்ஷிதமானபோது, தக்கது - உனக்குத் தகுதியான, நல்லதாயை - நல்லதாயாரை, பெற்றாய் - பெற்றாயென்கிறார்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (வஞ்சமேவிய நெஞ்சுடைப்பேய்ச்சி) இவனைக்கண்டால் செவ்வியளாக விருக்கவிறே கடவது ; கண்டு வைத்து வஞ்சநத்திலே பொருந்தினபூதனை. (வரண்டு நார்நரம்பெழக்கரிந்துக்க) மாம்ஸமும் உள்ளுண்டான உதிரமும் முலைப்பாலோடே கொழித்துக்கொண்டு புறப்பட, சேஷித்தவுடம்பு நார்நரம்பும் தோலுமாம்படி கரிந்துக்க. (நஞ்சமார்தருசுழிமுலையந்தோ சுவைத்துநீயருள்செய்துவளர்ந்தாய்) கிடந்த ஆஶ்ரயத்தையு மிழக்கவற்றாய் மிக்க நஞ்சையுடைத்தாய் கோபத்தையுமுடைத்தாயிருக்கிற முலையை தாரகமாகவுண்டருளி வளர்ந்தாய்.

(கஞ்சன்நாள் கவர்கருமுகிலெந்தாய்) கம்ஸனுடைய ஆயுஸ்ஸை அபஹரித்து அத்தாலேயேறின புகரையுடைய வடிவையுடையையாய், அச்செயலாலும் வடிவழகாலும் என்னை யெழுதிக்கொண்டவனே. (கடைப்பட்டேன் வெறிதேமுலைசுமந்து) முலை நெறிக்கபோது உண்பானொரு பிள்ளையைப் பெற்றுவைத்துப் பெறுமிதே வ்யர்த்தமாயிருக்கையாலே எத்தனையேனும் தண்ணியாரிலும் தாழ்ந்தேன். (தஞ்சமேலொன்றிலேன் உய்ந்திருந்தேன்) வேறுதாரகமில்லாமையாலே ப்ராணங்களை வருந்தி தரித்திருந்தேன். (தக்கதே நல்லதாயைப்பெற்றாயே) முலைப்பால் அபேக்ஷிதமானபோது உனக்குத் தருகைக்கு நல்லதாயைப்பெற்றாயே. (கo)

அரு ;—பத்தாம்பாட்டு. (வஞ்சமித்யாதி) (கரிந்துக்க) கருகிப்போக. (சுழிமுலை) கோபத்தையுடையமுலை; அவளுக்குண்டாகையாலே முலைக்குமுண்டென்றபடி. (தஞ்சமேல்) தஞ்சமாக, உன்னையொழியவேறு தஞ்சமில்லாமையாலே உன்னைக்காணவேணு மென்றுதரித்திருந்தேனென்றபடி. (கo)

மல்லைமாநகர்க்கிறையவன்றன்னை வான்செலுத்திவந்தீங்கனமாயத்
தெல்லையில்பிள்ளைசெய்வனகாணாத் தெய்வத்தேவகிபுலம்பியபுலம்பல்
கொல்லிகாவலன்மாலடிமுடிமேற் கோலமாங்குலசேகரன்சொன்ன
நல்லிசைத்தமிழ்மாலைவல்லார்கள் நண்ணுவாரொல்லைநாரணனுலகே. (கக)

குலசேகரப்பெருமாள் திருவடிகளே ஶரணம்.

ப - ரை.—மல்லை - மிக்கஸம்பத்தையுடைய, மா- ஶ்லாக்யமான, நகர்க்கு- ஸ்ரீமதுரைக்கு, இறையவன்றன்னை - ராஜாவான கம்ஸனை, வான் - வீரஸ்வர்க்கத்திலே, செலுத்தி - அனுப்பிவிட்டு, ஈங்ஙனம்வந்து - திருவாய்ப்பாடியிலே வந்து கிட்டினவனாய், எல்லையில் - அளவில்லாத, மாயத்து - ஆஶ்சர்யச்செய்கையை யுடையவனான க்ருஷ்ணனுடைய, பிள்ளைசெய்வன - பாலசேஷ்டிதங்களை, காணா - காணாமையாலே, தெய்வம் - இவனைப் பிள்ளையாகப் பெறுகைக்கீடான பாக்யத்தையுடைய, தேவகி - தேவகிப்பிராட்டி, புலம்பியபுலம்பல் - புலம்பிய பாசுரத்தை; கொல்லிகாவலன் - கொல்லியென்கிற படைவீட்டுக்கு நிர்வாஹகராய், கோலமாம்-ஸர்வேஶ்வரன் திருவடிகளைத் தம்முடைய திருமுடிக்கு அலங்காரமாகவுடையரான, குலசேகரன்-ஸ்ரீகுலசேகரப்பெருமாள், சொன்ன - அருளிச்செய்த, நல் - அழகிய, இசை - இசையோடேகூடின, தமிழ்மாலைவல்லார்கள் - தமிழ்த்தொடையை வல்லவர்கள், நாரணன் - ஸர்வஸ்வாமியான நாராயணனுடைய, உலகு - பரமபதத்தை, நண்ணுவார் - கிட்டப்பெறுவர்கள். (கக)

வ்யா.—நிகமத்தில். (மல்லைமாநகர்க் கிறையவன்றன்னை) மிக்க ஸம்பத்தையுடைய ஸ்ரீமதுரைக்கு நிர்வாஹகனான கம்ஸனைத் தான் கைதொட்டு முடிக்கையாலே வீரஸ்வர்க்கத்திலே போகட்டு. (வந்தீங்கனமாயத் தித்யாதி) கம்ஸவதம்பண்ணி இங்கேவந்து கிட்டின ஆஶ்சர்ய சேஷ்டிதங்களுக்கு அவதியின்றியிலேயிருக்கிற க்ருஷ்ணனுடைய பாலசேஷ்டிதங்கள் காணாமையாலே. (தெய்வத்தேவகிபுலம்பிய புலம்பல்) இவன் சேஷ்டிதங்களை யநுபவிக்கப்பெறாத இழவையுமுடையளாய் இவனைப் பிள்ளையாகப் பெறுகைக்கீடானபாக்யத்தைப்பண்ணின தேவகியார் புலம்பியபாசுரத்தை.

"கொல்லி" என்கிற படைவீட்டுக்கு நிர்வாஹகரானவர் (மாலடிமுடிமேல் கோலமாம்குலசேகரன்) ஸர்வேஶ்வரன் திருவடி

களைத் தமக்கு முடிமேல் மாலையாகவுடைய பெருமாள். (சொன்ன நல்லிசைத் தமிழ்மாலைவல்லார்கள்) அழகிய இசையோடே கூடின தமிழ்த்தொடை வல்லவர்கள். (நண்ணுவரொல்லை நாரணனுலகே) இங்கேயிருந்து அவதாரத்திலே ஏகதேஸத்தை யநுபவிக்க ஆசைப்பட்டு அது கிடையாதே யிருந்து புலம்பாதே உபயவிபூதி நாயகனைப் பரமபதத்திலே நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

எட்டாந்திருமொழி மன்னுபுகழ் ப்ரவேசம்.

—(o)—

அ—தேவகியாரிழந்த இழவுமாத்ரமேயோ, ஸ்ரீகௌஸல்யையாராய்த்தான் காணப்பெற்றேனோவென்று அஸ்ஸமகாலத்தில் தாமிழக்கையாலே அவளநுபவத்தைத் திருக்கண்ணபுரத்திலே யநுபவிக்கிறார்.

மன்னுபுகழ்க்கௌசலைதன் மணிவயிறுவாய்த்தவனே!
தென்னிலங்கைக்கோன் முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென்கருமணியே!
என்னுடையவின்னமுதே! இராகவனே! தாலேலோ. (க)

ப-ரை.—மன்னு - நிலைநின்ற, புகழ் - புகழையுடைய, கௌசலைதன் - ஸ்ரீகௌஸல்யையாருடைய, மணி - அழகிய, வயிறு-வயிற்றிலே, வாய்த்தவனே - பிள்ளையாகப் பிறந்தவனாய், தென் - கட்டளைப்பட்ட, இலங்கை - லங்கா நகரத்துக்கு, கோன் - அரசனான ராவணனுடைய, முடிகள் - பத்துத்தலைகளையும், சிந்துவித்தாய் - சிதறும்படி பண்ணினவனாய், செம்பொன்சேர் - செம்பொன்னாற் செய்யப்பட்டதாய், கன்னி - அழிவில்லாததான, மதிள் - மதிள்களாலே, புடை - நாற்புறமும், சூழ் - சூழப்பட்டிருக்கிற, கணபுரத்து - திருக்கண்ணபுரத்திலெழுந்தருளியிருக்குமவனாய், என்கருமணியே - எனக்கு நீலமணி போன்றவனாய், என்னுடைய - எனக்கு, இன் - பரமபோக்யமான, அமுதே - அம்ருதமானவனாய், இராகவனே - ரகுவம்சத்தரசனே, தாலேலோ—. (க)

அ-ரு;—மன்னுபுகழ் ப்ரவேஶம், தேவகியார் இழந்தமாத்ரமேயோ? ஸ்ரீகௌஸல்யையாரநுபவித்தாப்போலே அநுபவிக்கப் பெற்றேனோவென்றபடி.

வ்யா.— முதற்பாட்டு. (மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே) "ஸர்வேஶ்வரனைப் பிள்ளையாகப்பெற்றாள்" என்ற நிலைநின்றபுகழுடைய ஸ்ரீகௌஸல்யையாருடைய அழகிய வயிற்றிலே அவளுக்குப் பிள்ளையாகப்பெற்றவனே. (தென்னிலங்கைக்கோன் முடிகள் சிந்துவித்தாய்) லங்கைக்கு நிர்வாஹகனான ராவணனுடைய முடிகள் பத்தையும் திருச்சரங்களாலே சிதறப் பண்ணினவனே! இத்திருமொழியிறே ராமாவதாரத்தில் மிகை; ஆகையாலே இச்சந்தை.

(செம்பொன்சேர் கன்னிநன் மாமதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே) அழிவில்லாதமதிளாலே சூழ்ந்த திருக்கண்ணபுரத்திலே எனக்கு த்ருஷ்டிக்கு நிர்வாஹகனாய் நிற்கிறவனே. (என்னுடைய இன்னமுதே) தேவர்களம்ருதம்போலன்றியே எனக்கு அம்ருதமானவனே. (இராகவனே தாலேலோ) தேவர்களுடைய அம்ருதம் உப்புச்சாறிறே; அதன்றிறே இவருடைய அம்ருதமிருக்கிறபடி. ... ... (க)

மூ.—புண்டரீகமலரதன்மேற் புவனியெல்லாம்படைத்தவனே!
திண்டிறலாள் தாடகைதனுரமுருவச்சிலைவளைத்தாய்!
கண்டவர்தம்மனம்வழங்குங் கணபுரத்தென் கருமணியே!
எண்டிசையுமாளுடையாய்! இராகவனே! தாலேலோ. (உ)

ப-ரை.—புண்டரீகமலரதன்மேல் - திருநாபீ கமலத்திலே, புவனியெல்லாம் - லோகங்களையெல்லாம், படைத்தவனே - ஸ்ருஷ்டித்தவனாய், திண் - திண்ணிய, திறலாள் - திறலையுடையளான, தாடகைதன் - தாடகையுடைய, உரம் - உரத்தமார்விலே, உருவ - உருவிச்செல்லும்படியாக, சிலைவளைத்தாய் - வில்வளைத்து அம்பெய்தவனாய், கண்டவர்தம் - ஸேவித்தவர்களுடைய, மனம் - நெஞ்சுகளை, வழங்கும் - தாங்கள் இசைந்து கொடுக்கும்படி, கணபுரத்து - திருக்

அரு;— முதற்பாட்டு (மன்னித்யாதி) இத்திருமொழியில் ராமகுணம் மிக்கிருக்கையாலே ப்ரதாந ப்ரயோஜநம் ராவணவதமாகையாலே, "தென்னிலங்கைக்கோன்" என்கிற சந்தையை முந்துறச்சொல்லிற்று, இதுக்கு "திருவவதரித்தவுடனே ராவணவதத்தைச் சொல்லுகிறானென்" என்று ஶங்கை கண்டுகொள்வது ; அதின்மேலே இத்திருமொழியிறே என்கிறவாக்யம். கன்னியாகையாலே அழிவில்லாதமதிளென்கிறது, (க)

கண்ணபுரத்தி லெழுந்தருளியிருக்கிற, என்கருமணியே - எனக்கு நீலமணியை யொத்தவனாய், எண்டிசையும் - எட்டுதிக்கிலுள்ளாரையும், ஆளுடையாய் - அடிமைகொண்டருளுமவனான, இராகவனே தாலேலோ—. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (புண்டரீகமித்யாதி) திருநாபி கமலத்திலே லோகமெல்லாம் ஸ்ருஷ்டித்தவனே. (திவ்ய நகரித்யாதி) ஸ்ருஷ்டிக்கு மகன்றியே, பரிவைச்செய்து களைபிடுங்கு மாப்போலே ஆஸுரவர்க்கத்தைப் போக்கினபடி. திண்ணிய திறலையுடையளான தாடகை உரத்தை மறுபாடுருவ வில்லைவளைத் தவனே.

(கண்டவர் தம்மனம்வழங்கும் கணபுரத் தென்கருமணியே) கண்டவர்கள் நெஞ்சுகளைத் தாங்களபிஸந்து கொடுக்கும்படி திருக்கண்ணபுரத்திலே நிற்கிறவனே. (எண்டிசையுமாளுடையா யிராகவனே தாலேலோ) அவதாரத்தில் பிற்பட்டாரை எட்டுத்திக்கி லுள்ளாரும்வந்து † வாழும்படி நின்றவனே. ... ... (உ)

மூ — கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன் குலமதலாய்!
தங்குபெரும் புகழ்ச் சனகன் திருமருகா! தாசரதீ!
கங்கையிலுந் தீர்த்தமலி கணபுரத்தென் கருமணியே!
எங்கள் குலத் தின்னமுதே! இராகவனே! தாலேலோ. (ங)

ப-ரை—மலி - மிக்க, கொங்கு - பரிமளம் வீசாநின்றுள்ள. கரும் - கறுத்த, குழலாள் - கூந்தலையுடையளான, கௌசலைதன் - ஸ்ரீகௌஸல்யையா ருடைய, குலம் - குலத்துக்கு, மதலாய் - உத்தாரகனாய், தங்கு - புகழொன்று பேர்பெற்றவையெல்லாம் தங்கும்படி, பெரு - பெரிய, புகழ் - புகழையுடைய, சனகன் திருமருகா - ஸ்ரீஜநகராஜனுடைய மருமகனாய், தாசரதீ - தசரதமஹா ராஜன்புத்ரனாய், கங்கையிலும் - கங்காநதியைக்காட்டிலும், தீர்த்தமலி - பரி சுத்தமிக்கிருக்கிற தடாகங்களையுடைய, கணபுரத்தென்கருமணியே—, எங்கள் குலத்து - எங்கள் ராஜவம்சத்துக்கெல்லாம், இன் அமுதே - பரமபோக்யனான, இராகவனே தாலேலோ—. (ங)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (கொங்குமலி கருங்குழலாள் கௌசலை தன் குலமதலாய்) மிக்க பரிமளத்தைப் புறப்பட விடுகிற இருண்ட குழலையுடைய ஸ்ரீகௌஸல்யையாருடைய குலத்துக்கு உத்தாரக

அரு ;—இரண்டாம்பாட்டு. (புண்டரீகமித்யாதி) உரம் - உரஸ்ஸு.

† (பா) வழிபடும்படி.

னானவனே. (தங்குபெரும்புகழ்ச் சனகன்றிருமருகா) புகழென்று பிறந்தவையெல்லாம் தங்கும்படி பெரியபுகழையுடைய ஸ்ரீஜநக ராஜனுக்கு மருமகனானவனே. (தாசரதீ) அவனோடே ஸதருஶ ஸம்பந்தம் பண்ணலாம்படியான பிறப்பையுடையவனே.

(கங்கையிலுந்தீர்த்தமலி கணபுரத்தென்கருமணியே) காதாசித்க ஸம்பந்தத்தாலவரும் ஶுத்திபோகமிறே கங்கைக்குள்ளது, ஸம்பந்தம் நித்யமாகையாலே அதிலும் ஶுத்திமிக்கிருக்கிற திருப்பொய்கையையுடைய திருக்கண்ணபுரத்திலே ஸுலபனானவனே. (எங்கள் குலத்தின்னமுதே இராகவனே தாலேலோ) ராஜவம்ஶத்துக்காக போக்யபூதனானவனே. ... ... (௩)

மூ.—தாமரைமேலயனவனைப்படைத்தவனே! தயரதன்றன்
மாமதலாய்! மைதிலிதன்மணவாளா! வண்டினங்கள்
காமரங்களிசைபாடுங் கணபுரத்தென்கருமணியே!
ஏமருவெஞ்சிலைவலவா! இராகவனே! தாலேலோ (௪)

ப-ரை.—தாமரைமேல் - திருநாபீகமலத்திலே, அயனவனை - ப்ரஹ்மாவை, படைத்தவனே - ஸ்ருஷ்டித்தவனாய், தயரதன்றன் - தசரதமஹாராஜாவின், மாமதலாய் - ஜ்யேஷ்டபுத்ரனாய், மைதிலிதன்மணவாளா - பிராட்டிக்கு வல்லபனாய், வண்டினங்கள் - வண்டினங்களானவை, காமரங்கள் இசை - காமரமென்கிற பண்ணை, பாடும் - பாடுகிற, கணபுரத்தென்கருமணியே—, ஏமருவு - அம்பிலே மீட்டத்தக்க, வெம் - வெவ்விய, சிலை - ஸ்ரீசார்ங்கத்தை வளைத்து அம்பெய்வதிலே, வலவா - வல்லவனான, இராகவனே தாலேலோ—. (௪)

வ்யா.—நாலாம்பாட்டு (தாமரைமேலயனவனைப் படைத்தவனே) கீழ்ச்சொன்ன ஸ்ருஷ்டிபின்னாட்டினபடி. (தயரதன்தன் மாமதலாய்) அறுபதினாயிரமாண்டு மலடுநின்ற சக்ரவர்த்தியினுடைய மலடுதீரப்பிறந்தவனே. (மைதிலிதன்மணவாளா) பிள்ளைபெற்றவேற்றத்தின்மேலும்பிறப்பில்வந்த ஏற்றத்துக்குமேலே (௧) "யஸ்ய ஸா ஜநகாத்மஜா - யஸ்யஸா ஜநகாத்மஜா" என்று பிராட்டியை உனக்கென்றிட்டுப்பிறந்த மேன்மையையுடையவனே.

அரு;—மூன்றாம்பாட்டு. (கொங்குமலியித்யாதி) (மதலை) பிள்ளை. (௩)

அரு;—நாலாம்பாட்டு. (தாமரையித்யாதி, (பிள்ளைபெற்ற) ப்ராஹ்மாவைப் பெற்ற. (ஏவிலே) எய்கையிலே. (௪)

---

(௧) ரா - ஆர - ௩௭ - ௧௧.

(வண்டினங்கள் காமரங்களிசைபாடுங் கணபுரத்தென்கருமணியே) வண்டினங்கள் "காமரம்" என்கிற பண்ணிலே இசை பாடுகிற திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதனானவனே. (ஏமருவெஞ்சிலைவலவா இராகவனே தாலேலோ) ஆச்ரிதரும் பிடிக்கிறும் எளிதிலே மீட்டும் ஸ்ரீசார்ங்கத்தை உன்னினைவிலேவரும்படி செலுத்த வல்லவனே. ... ... (ச)

மூ.—பாராளும்படர்செல்வம் பரதநம்பிக்கேயருளி
ஆராவன்பிளையவனோ டருங்கானமடைந்தவனே!
சீராளும்வரைமார்பா! திருக்கண்ணபுரத்தரசே!
தாராளும்நீண்முடியென் றாசரதீ! தாலேலோ. (ரு)

ப-ரை.—பார் - பூமிப்பரப்பையுடைய, ஆளும் - ஆளக்கடவதான, படர் - பெரிய, செல்வம் - ஸம்பத்தை, நம்பி - பாரதந்த்ர்ய குணங்களால் பூர்ணனாயிருக்கிற, பரதனுக்கு-ஸ்ரீ பரதாழ்வானுக்கு, அருளி-கொடுத்தருளி, "ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னிவழுவிலாவடிமைசெய்யவேண்டும் நாம்" என்கிற படியே - ஸர்வதேசஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அடிமைசெய்கையில், ஆரா அன்பு - மிக்க ஆதரமுடையரான, இளையவனோடு - இளைய பெருமாளோடே, அரும் - ஒருவராலும் ஸஞ்சரிக்கவரிதான, கானம் - தண்டகமுதலான காடுகளிலே, அடைந்தவனே - ப்ரவேசித்தவனே, சீர் ஆளும் - வீர ஸ்ரீக்கு நிவாஸஸ்தானமாய், வரை-மேருமலைபோலே விசாலமாய்த்திண்ணிதான, மார்பா-திருமார்பையுடையனாய், திருக்கண்ணபுரத்தரசே - திருக்கண்ணபுரத்துக்கு நிர்வாஹகனாய், நீள் - எல்லாவுலகுக்கும் தலைவனென்கைக்குக்குறிப்பாய், தார் ஆளும் - மாலையோடுகூடின, முடி - திருவபிஷேகத்தையுடையனாய், என் தாசரதீ - என் சக்ரவர்த்தித்திருமகனே, தாலேலோ—. (ரு)

வ்யா.— அஞ்சாம் பாட்டு. (பாராளும்படர்செல்வம் பரதநம்பிக்கேயருளி) பூமிப்பரப்படையும் ஆளக்கடவதான பெரியஸம்பத்தை பாரதந்த்ர்ய குணங்களால் பூர்ணனாயிருக்கிற ஸ்ரீபரதாழ்வானுக்குக் கொடுத்தருளி. (ஆராவன்பிளையவனோடருங்கானமடைந்தவனே) அவனைப்போலே நியமித்தகடத்தில் பின்நிற்கமாட்டாதே, (க) "ஸ்ம்ருத்வேஷ்டோ - குருஷ்வமாம" என்னும் இளைய பெருமாளோடேகூடி ஒருவராலும் இயங்கவொண்ணாத துஷ்ட ஸத்வப்ரசுரமான காட்டிலே ப்ரவேசித்தவனே.

(க) ரா - அயோ - ௩௧ - ௨௨.

(சீராளும்வரைமார்பா) வீரஸ்ரீக்கு நிர்வாஹகனானவனும். (தாராருநீண்முடியென் தாசரதீ தாலேலோ) ஆதிராஜ்யஸூசகமானமாலையோடுகூடின முடியையுடைய சக்ரவர்த்தித்திருமகனே.

மூ.—சுற்றமெல்லாம்பின்றொடரத் தொல்கானமடைந்தவனே!
அற்றவர்கட்கருமருந்தே! அயோத்திநகர்க்கதிபதியே!
கற்றவர்கள்தாம்வாழுங் கணபுரத்தென்கருமணியே!
சிற்றவைதன்சொற்கொண்ட சீராமா! தாலேலோ. (௬)

ப-ரை.— சுற்றமெல்லாம் - பந்துக்களெல்லாரும், பின் - பின்னே, தொடர - தொடர்ந்துஸேவித்துவர, தொல் - மநுஷ்யஸஞ்சாரமில்லாமல் புதர்மூடிக்கிடக்கிற, கானமடைந்தவனே-காட்டிலே ப்ரவேசித்தவனும், அற்றவர்கட்கு - அஹங்காரமமகாரங்களற்றவர்களுக்கு, அரு - ஒருவராலும்பெறுதற்கரிய, மருந்தே- அருமருந்தானவனும், அயோத்திநகர்க்கு - திருவயோத்யைக்கு, அதிபதியே - அதிபதியானவனும், கற்றவர்கள்தாம் - வேதாந்தங்களைக்கற்று அவன் சேஷி; நாம்சேஷபூதரென்று அறிந்தவர்கள், வாழும் - நித்யவாஸம் பண்ணுகிற, கணபுரத்து - திருக்கண்ணபுரத்திலே, என் - எனக்கு அநுபவிக்கலாம்படி, கருமணியே - நீலமணிபோலே யிருப்பவனும், சிற்றவைதன் - சிறியதாயாரான கைகேயியுடைய, சொல் - "வநவாஸஞ்செய்" என்றசொல்லை, கொண்ட - சிரஸாவஹித்துக் காட்டுக்கெழுந்தருளின, சீராமாதாலேலோ—. (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (சுற்றமெல்லாம்பின்றொடரத் தொல்கானமடைந்தவனே) "எல்லாரும் போனார்களோ, இப்படியே மீண்டாரொருவனின்றே சொல்லிற்று" என்ன;—(௧) "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று சொன்ன எல்லா வடிமையும் செய்யும் இளையபெருமாள் கூடப்போகையாலே எல்லா பந்துக்களும் கூடப்போனார்களாய்த்திறே என்று எம்பெருமானார் அருளிச்செய்தருளினார். (அற்றவர்கட்கருமருந்தே) (௨) "ரக்ஷிதவ்யாஸ்த்வயா ஶச்வத் - கர்ப்பபூதாஸ்தபோதநா:" என்றிருக்குமவர்களுக்கு. (அருமருந்தே) (௩) "ஸவ்ருஹாஜீவிதம் தம்ஜஹ்ரு: - அப்பஹாஜீவிதம் ஜலம்" என்றிருக்குமவர்களுக்கு அருமருந்தானவனே. (அயோத்திநகர்க்கதிபதியே) பரமபதம்போலே அயோத்யையை யிறே இருக்குப்பர்; அப்படிப்பட்ட படைவீட்டுக்கு அதிபதியானவனே.

(௧) ரா - அயோ - ௩௧ - ௨௫. (௨) ரா - ஆர - ௧ - ௨௧.
(௩) ரா - ஆர - ௧௦ - ௧௧.

(கற்றவர்கள் தாம் வாழுங் கணபுரத்தென் கருமணியே!) கற்பது ஒருதேசத்திலேயிருந்து ஒருகாலத்திலேயாய்ப் ப்ராப்யவஸ்துவைக் கிட்டியநுபவிப்பது ஒரு தேசவிசேஷத்திலேயாகாதே, ப்ராப்யவஸ்து தெற்குத்திக்கிலே காணலாம்படி திருக்கண்ணபுரத்திலே நின்றவனே. (சிற்றவைதன் சொல்கொண்ட சீராமா தாலேலோ) பெற்றதாயான நான் உம்மைப்பிரியில் தரியேனென்று ஸ்ரீகௌஸலையார் பின்தொடரச்செய்தேயும் * மாற்றுத்தாயான கைகேயி சொல்லுமாறே வநத்தே போந்தவனே. ... (௬)

மூ.—ஆலினிலைப்பாலகனா யன்றுலகமுண்டவனே!
வாலியைக்கொன்றரசிளைய வானரத்துக்களித்தவனே!
காலின்மணிகரையலைக்குங் கணபுரத்தென் கருமணியே!
ஆலிநகர்க்கதிபதியே! அயோத்திமனே! தாலேலோ. (எ)

ப-ரை.—அன்று - மஹாப்ரளயம் வந்தபோது, ஆலின் இலை - ஓரால்ந் தளிரிலே, பாலகனாய் - குழந்தைவடிவாய்க் கொண்டு, உலகம் - ஸகலலோகங்களையும், உண்டவனே - திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தருளினவனாய், வாலியை - ராஜாவான வாலியை, கொன்று—, அரசு - வாநரராஜ்யத்தை, இளைய வாநரத்துக்கு - ஸுக்ரீவனுக்கு, அளித்தவனே - கொடுத்தவனாய், காலின் - காற்றினாலே, மணி - உள்ளக்கிடக்கிற ரத்நங்களை, கரை - கரையிலே கொடு வந்து, அலைக்கும் - எறிகிற, கணபுரத்தென்கருமணியே—, ஆலிநகர்க் கதிபதியே - திருவாலிக்கு நிர்வாஹகனாய், அயோத்தி - திருவயோத்யைக்கு, மன்னே - அரசனானவனே, தாலேலோ—. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (ஆலினிலைப்பாலகனா யன்றுலகமுண்டவனே) லோகத்தையெல்லாம் திருவயிற்றிலேவைத்து ஒருபாலனான ஆலிலையிலே அதுதான் விஞ்சுமென்னும்படி கண்வளர்ந்தருளின அகடிதகடநா ஸாமர்த்யத்தையுடையவனே (வாலியைக் கொன்றரசிளைய வாநரத்துக்களித்தவனே) வாலி, அவரைத்துணையாக நீ ஸஜ்ஜப்பண்ணின ராவணனை வாலிலேகட்டி வைத்தான்,

ஆ௬;—ஆறும்பாட்டு. (கற்றமித்யாதி) திருக்கண்ணபுரம், அயோத்தி நகர்க்குத் தெற்காகையாலும் மண்டலந்தான் தென்மண்டலமாகையாலும் தெற்குத்திக்கென்று வ்யாக்யாதாவின் வார்த்தை. (அவை) தாயார். (௬)

அவ்வாலியைக்கொன்று அவனுக்கிடைந்து பர்வதகுஹைகளிலே கிடக்கிற மஹாராஜர்க்கு வாநரராஜ்யத்தைக் கொடுத்தவனே.

(காவின்மணியித்யாதி) காற்றிலே உள்ளுக்கிடக்கிற ரத்நங்களைக் கரையிலே யேறிடுமென்னுதல்; கால்வாய்களில் மணிகளைக் கொடுவந்து கரையிலேயேறிடுமென்னுதல். (ஆலிநகர்க்கதிபதியே) திருவாலிக்கு நிர்வாஹகனானவனே. வாலியைக்கொன்று ஆலிதனைத் துணையாகக் கொள்ளப்பெற்றமைக. ... (எ)

மூ—மலையதனாலணைகட்டி மதிளிலங்கையழித்தவனே!
அலைகடலைக்கடைந்தமரர்க் கமுதருளிச்செய்தவனே!
கலைவல்லவர்தாம்வாழுங் கணபுரத்தென்கருமணியே!
சிலைவல்லவா! சேவகனே! சீராமா! தாலேலோ. (அ)

ப - ரை.—மலையதனால் - மலைகளைக்கொண்டு, அணைகட்டி - ஸேதுபந்தம் பண்ணி, மதிள் - மதிளையுடைத்தான, இலங்கை - லங்கையை, அழித்தவனே - அழித்தவனாய், அலை-அலைகளையுடைய, கடலை - திருப்பாற்கடலை, கடைந்து-, அமரர்க்கு - தேவர்களுக்கு, அமுதருளிச்செய்தவனே - அம்ருதம் கொடுத்தருளினவனாய், கலைவல்லவர்தாம் - ஸகலசாஸ்த்ரங்களும் கைவந்திருக்குமவர்கள், வாழும் - நித்யவாஸம்பண்ணுகிற, கணபுரத்தென்கருமணியே—, சிலைவல்லவா - வில்தொழிலில் வல்லவனாய், சேவகனே-ஆஸ்ரிதர் ஏவிற்றுச்செய்யும் ஸேவகனான சீராமா தாலேலோ—. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (மலையதனாலணைகட்டி மதிளிலங்கையழித்தவனே) நிலத்திலே வா † மலையைக்கொண்டு அரணான கடலை யணையாகக்கட்டி ; நீர்தானும் மிகையென்னும்படியான அரணை

அரு ;—ஏழாம்பாட்டு. (ஆலினிலையித்யாதி) (ஆரைத்துணையாக) என்றதுக்குத் தாத்பர்யம். "ஒருதுணையின்றிக்கே ராவணனை வாலிலேகட்டின வாலியைக்கொன்ற தேவரீர் ராவணவதார்த்தமாக வாலிக்கிடைந்த மஹாராஜரைத் துணையாக வரித்ததென்" என்றீடுபாடு. (உள்ளுக்கிடக்கிற) ஸமுத்ரத்துக்குள்ளே கிடக்கிற. (கால்வாய்) ஸமுத்ரக்கழி. (ஆலிதன்னை) திருவாலிதன்னைத்துணையாக வென்றாரோக்தி. (எ)

அரு ;-எட்டாம்பாட்டு. (மலையித்யாதி) (நிலத்திலேவா) நிலந்தோடாக்க.

---

† (பா) ஜலத்திலே யாழக்கடவ.

புடைத்தான லங்கையை மூலையடியே வழிபோக்கினவனே. (அலை கடலைக்கடைந்தமரர்க் கமுத நளிச்செய்தவனே) அகாதமான ஸமுத்ரத்தைக் கடைந்து அம்ருதத்தைவாங்கி அஸுரர்கள் கையிலே தேவர்கள் சாராதபடி அவர்களுக்குக்கொடுத்தவனே.

(சிலைவலவர் தாம்வாழும் கணபுரத்தென்கருமணியே) ஸகல வித்யாஸ்தலங்களும் கைவந்திருக்குமவர்கள் உன்னை அநுபவிக்கும் திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதனானவனே. (சிலைவலவா) ஸ்ரீ பாரங்கம் கைவந்திருக்குமவனே (சேவகனித்யாதி) அது தான் மிகையென்னும்படியான வீரப்பாட்டையுடையவனே. ... (அ)

மூ.—தளையவிழு நறுங்குஞ்சித் தயரதன்றன் குலமதலாய்!
வளையவொரு சிலையதனால் மதிளிலங்கை யழித்தவனே!
களைகழுநீர் மருங்கலரும் கணபுரத்தென் கருமணியே!
இளையவர்கட் கருளுடையாய்! இராகவனே! தாலேலோ.(கூ)

ப-ரை.—தளை அவிழும் - கட்டவிழும்படியான, நறும் - நறுநாற்றம்கமழாநின்றுள்ள, குஞ்சி - மயிர்முடியை யுடையனாய், தயரதன்றன் குலம் - தசரதசக்ரவர்த்தி குலத்துக்கு, மதலாய் - உத்தாரகனாய், வளைய - ப்ரஹ்மாஸ்த்ராதிகள் வாய்மடியும்படி, ஒரு - அத்விதீயமான, சிலையதனால்-வில்லாலே, மதிள்-மும்மதிளையுடைய, இலங்கை - லங்கையை, அழித்தவனே - அழித்தவனாய், களை - களையாகப் பறித்து, மருங்கு - பக்கத்துக்கரைகளிலே பொகட்ட, கழுநீர் - செங்கழுநீர் மொட்டுக்களானவை, அலரும் - மலராநின்றுள்ள, கணபுரத்தென்கருமணியே—, இளையவர்கட் கருளுடையாய் - தம்பிமார் விஷயத்தில் மிக்க அருளையுடையனாய், இராகவனே-ரகுகுலதிலகனானவனே, தாலேலோ-.

வ்யா —ஒன்பதாம்பாட்டு. (தளையவிழுமித்யாதி) கட்டவிழும்படியான நறுநாற்றத்தை யுடைய மயிர்முடியை யுடைய சக்ரவர்த்தி குலத்துக்கு உத்தாரகனானவனே. (வளையவொருசிலையித்யாதி) ப்ரஹ்மாஸ்த்ராதிகள் வாய்மடியும்படி மநுஷ்யத்வத்துக்கு ஏகாந்தமான வில்லாலே அவனுடையவூரை யழியச்செய்தவனே.

(களைகழுநீரித்யாதி) களையாகப்பறித்துக் கரையிலே பொகட்ட செங்கழுநீர்கள் பொகட்டவிடங்களிலே கிடந்து தண்ணிலத்தில் அலருமாப்போலே செல்வம்பெற்றலரும் திருக்கண்ணபுரம். (இளையவர்களித்யாதி) தம்பிமார்க்கு உயிர்ப்பாகாதபோது தன் ப்ராணன்களும் எனக்கு வேண்டாவென்னுமவனிறே. (கூ)

மூ.—தேவரையுமசுரரையுந் திசைகளையும்படைத்தவனே!
யாவரும்வந்தடிவணங்க வரங்கநகர்த்துயின்றவனே!
காவிரிநன்னதிபாயுங் கணபுரத்தென்கருமணியே!
ஏவரிவெஞ்சிலைவலவா! இராகவனே! தாலேலோ. (௰)

ப-ரை—தேவரையும் - தேவதைகளையும், அசுரரையும் - அவர்களுக்குப் பகைவரான அஸுரர்களையும், திசைகளையும் - திகுபலக்ஷிதமான ஸகல பதார்த்தங்களையும் படைத்தவனே - ஸ்ருஷ்டித்தவனாய், யாவரும் - ஸகலசேதநரும், வந்து—, அடிவணங்க - ஆஶ்ரயிக்கும்படிக்கீடாக, அரங்கநகர் துயின்றவனே - கோயிலிலே கண்வளர்ந்தருளுமவனாய், நல் - நீரேறுமேடுகளிலும் ஏறிப்பாயும் நன்மையையுடைய, காவிரிநதி - திருக்காவேரியானது, பாயும் - எங்கும் பரவாநின்றுள்ள, கணபுரத்தென் கருமணியே—, ஏ - பாணத்திலே மூட்டக்கடவதாய், வரி - தர்சநீயமாய், வெம் - பிடித்தபிடியிலே சத்ருக்கள் மண்ணுண்ணும்படியான, சிலைவலவா - ஸ்ரீசார்ங்கத்தை உன் கருத்தின்படி நடத்தவல்லவனே, இராகவனே தாலேலோ—. (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (தேவரையு மசுரரையும் திசைகளையும் படைத்தவனே) ஸஹஜஶத்ருக்களான தேவாஸுரர்முதலான பதார்த்தங்களையும் இவர்களுக்கு அவகாஶப்ரதாநம் பண்ணும் தேஶங்களையும் ஸ்ருஷ்டித்தவனே. (யாவரும் வந்தடிவணங்க அரங்கநகர்த்துயின்றவனே) ஸ்ருஷ்டிப்ரயோஜநமெல்லாம் தன்னை ஆஶ்ரயிக்கைக்கிறே; இதுக்காகக் கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளினவனே.

(காவிரிநன்னதிபாயுங் கணபுரத்தென் கருமணியே) ஒருவர் ஏற்றிப்பாய்ச்சவேண்டாதபடி தானேவந்து எங்கும்பரக்கும் காவேரியையுடைய திருக்கண்ணபுரத்திலே ஸுலபனானவனே. (ஏவரி வெஞ்சிலைவலவா இராகவனே) ஏவிலே மூட்டக்கடவதாய் தர்ஶநீயமாய்ப் பிடித்தபிடியிலே ஶத்ருக்கள் மண்ணுண்ணும்படியான ஸ்ரீஶார்ங்கத்தை உன் கருத்திலே நடத்தவல்லவனே. ... (௧௦)

மூ.—கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென்காகுத்தன்
தன்னடிமேல்தாலேலோ வென்றுரைத்ததமிழ்மாலை
கொன்னவிலும்வேல்வலவன் குடைக்குலசேகரன்சொன்ன
பன்னியநூல்பத்தும்வல்லார் பாங்காயபத்தர்களே. (௧௧)

குலசேகரப்பெருமாள் திருவடிகளே ஶரணம்.

ப-ரை—என் - என்னுடைய, காகுத்தன் றன் - ககுத்ஸ்த குலோத்பவனான சக்ரவர்த்தித்திருமகனுடைய, அடிமேல் - திருவடிவிஷயமாக, தாலேலோவென்றுரைத்தமாலை- தாலாட்டாக கௌஸலையார் சொன்ன பாசுரத்தை, கொல்நவிலும் - வேலின்கொடுமையென்றென்று சொல்லும்படியான, வேல்-வேலை (எய்வதில்) வல்லவன் - ஸமர்த்தராய், குடை - வெண்கொற்றக் குடையையுடைய, குலசேகரன் - ஸ்ரீ குலசேகரப்பெருமாள்; கன்னி - அழியாததாய், நல் - அழகிதான, மாமதிள் - பெரியதிருமதிளாலே, புடை - நாற்புறமும், சூழ் - சூழப்பட்டிருப்பதான, கணபுரத்து - திருக்கண்ணபுரத்திலே, சொன்ன- அருளிச்செய்ததாய், பன்னிய-பரம்பின, நூல்-லக்ஷணசாஸ்த்ரங்களால் குறைவற்றதாய், தமிழ் - த்ராவிட பாஷையாய், மாலை - மாலாரூபமான, பத்தும் - இப்பத்துப்பாட்டுக்களையும், வல்லார்-அப்யஸிக்கவல்லவர்கள், பாங்காய-அவனை அநுபவிக்கைக்குப் பாங்கான, பத்தர்கள் - பக்திமான்களாகப் பெறுவர்கள். (கக)

வ்யா.—நிகமத்தில். (கன்னிநன்மாமதிள் புடைசூழித்யாதி) அழியாத பெரியதிருமதிள்சூழ்ந்த திருக்கண்ணபுரத்திலே நின்றருளின க்ருஷ்ணனையன்றியிலே சக்ரவர்த்தித் திருமகனையாய்த்தாக் கவிபாடிற்று (தன்னடிமேலித்யாதி) சக்ரவர்த்தித் திருமகனுடைய பால்யாவஸ்தையில் ஸ்ரீகௌஸலையார் சொன்ன பாசுரத்தைத் திருக்கண்ணபுரத்திலே சொன்ன தமிழ்த்தொடை.

(கொன்னவிலும்வேல்வலவன் குடைக்குலசேகரன் சொன்ன) வேலைப்பிடித்தபிடியிலே எல்லாரும் "வேலின்கொடுமையே!" என்று சொல்லாநின்றவேலையும் ஐஶ்வர்ய ப்ரகாஶகமான வெண்கொற்றக் குடையையுமுடைய ஸ்ரீகுலஶேகரப்பெருமாள் அருளிச்செய்த. (பன்னியநூல்பத்தும் வல்லார்) பரம்பின லக்ஷணத்தால் குறைவற்ற இப்பத்தும்வல்லார்கள், திருத்தாயாராயும் அடியாராயும் அநுபவிக்கப்பெறுவர்கள். ... ... (கக)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

ஒன்பதாந்திருமொழி வன்றாளினிணை ப்ரவேசம்.

———(०)———

அவ.—ஸ்ரீ கௌஸல்யார் பெற்றபேற்றை யநுபவித்தார் கீழில் திருமொழியில்; பால்யாவஸ்தையெல்லாம் அநுபவித்து ப்ராப்தயௌவநராணவாறே அநுபவிக்கப்பெறாதே யிழந்த சக்ரவர்த்தியோபாதியும் தமக்கு ப்ராப்தியொத்திருக்கையாலே அநுபவிக்கப்பெறாதே யிழந்தேனென்று அவன் சொல்லுகிற பாசுரத்தாலே தம்மிழவைப் பேசுகிறார் இதில். ... ... *

வன்றாளினிணைவணங்கிவளநகரந் தொழுதேத்தமன்னனுவான்
நின்றாயையரியணைமேலிருந்தாயை நெடுங்கானம்படரப்போகு
என்றாளெம்மிராமாவோவுனைப் பயந்தகைகேசிதன்சொற்கேட்டு
நன்றாகநானிலத்தையாள்வித்தேன் நன்மகனேயுன்னைநானே. (க)

ப - ரை.—எம் - எங்களை, இராமா - ரமிப்பிக்கவல்லவனே, நல் - என் சொல்தவறாது நடக்குமவனான, மகனே - புத்ரனே!; வன் - வலிய, தாளினிணை - திருவடிகளை, வணங்கி - வழிப்பட்டு, வளம் - அலங்கரிக்கப்பட்டிருக்கிற, நகரம் - திருவயோத்யையிலுள்ளார், தொழுது - ஸேவித்து, ஏத்த - ஸ்தோத்ரம் பண்ணும்படி, மன்னனுவான் - பட்டாபிஷேகம் பண்ணுகைக்காக, நின்றாயை - திருக்காப்பு நாண்சாத்திநிற்கிறவனாய், அரியணைமேலிருந்தாயை - ஸிம்ஹாஸநத்திலே யிருந்தாயென்னும்படி தோற்றச்சமைந்திருக்கிற - உன்னை, நெடும் - ஒருவராலும் ப்ரவேசிக்கவரிதான, கானம்படரப்போகு என்றாள் - காட்டுவழியிலேயே போகக்கடவாயென்று சொன்னவளாய், உனைப்பயந்த - உன்னைப்பெற்ற, கைகேசிதன் - கைகேயியுடைய, சொல் - சொல்லை, நான்—, கேட்டு - கேட்டு, உன்னை—, நானிலத்தை - பூமிப்பரப்பையெல்லாம், நன்றாக ஆள்வித்தேன் - அழகிதாக ஆள்வித்தேனென்று ஆர்த்தராகிறார். (க)

வ்யா.—முதற்பாட்டு. (வன்றாளினிணைவணங்கி) தானும் ராஜ்யப்பரப்பையெல்லா மாண்டானுயிருக்கச்செய்தே அவ்வளவன்றிக்கே (க) "வண்புகழ்நாரணன் திண்கழல்" என்னுமாப்போலே ஆஸ்ரிதரை எல்லாவவஸ்தையிலும் விடேனென்னும் திருவடிகளை வழிப்பட்டு. (வளநகரந்தொழுதேத்த) திருவபிஷேகத்துக்கு அலங்கரித்திருக்கிற திருநகரியிலே அப்படியிருக்கிற

அரு;—முதற்பாட்டு. (வன்றாளித்யாதி) வன்தாளிணை - வலியதான திருவடிகள். (க)

(க) தி - வாய் - க - உ - கo.

திருநகரி தொழுதேத்த. (மன்னனாவான் நின்றாயை) திருவபிஷேகத்துக்கு முன்புள்ள கர்த்தவ்யங்களெல்லாந் தலைக்கட்டிக் திருவபிஷேகம் பண்ணுகைக்குத் திருக்காப்பு நாண் சாத்தி நிற்கிற வுன்னை.

(அரியணைமேலிருந்தாயை) ஸிம்ஹாஸநத்திலே பதஸ்தனுயிருந்தானென்னும்படி தோற்றச் சமைந்திருக்கிறவுன்னை (நெடுங்கானம் படரப்போகுவென்றாள்) இப்படி ராஜாக்களல்லாதாரும் புகமாட்டாத காட்டை (க) "தேவ நநவ நமெ க்வா - தேவகெந வநம்கத்வா" என்னுமாப்போலே இவ்வூரில் நின்றும் புறப்பட்டு வழியேபோய்க் காட்டிலே புகுமதன்றியே காட்டில் நின்றும் காட்டிலேயே போம்படியாய், கொடியகாட்டிலேயிறே போகச்சொல்லிற்று.

(எம்பிராமாவோ) நினைக்கவும் சொல்லவும் காணவும் தாபம் போம்படியான உம்மையிறே போகச்சொல்லிற்று. (உன்னைப்பயந்தகைகேசிதன் சொல்கேட்டு) திருவபிஷேக கல்யாணவார்த்தை ஸ்ரீ கௌஸல்யையாரிலுங் காட்டில் தனக்கு நான் சென்று சொல்லி ப்ரீதிகாணவேணுமென்னும்படி பெற்றதாயாய்ப்போந்த கைகேயி வார்த்தைகேட்டு.

(நன்றாக நானிலத்தை யாள்வித்தேன்) வஞ்சநபரையென்றறியாதே தாயென்று இவளுக்கு வார்த்தை சொல்லப்புகுந்து அவள் வார்த்தையிலே பகப்பட்டு ப்ரதிப்ரபத்தையெல்லாம் பழுதிதாக உன்னை யாள்வித்தேன். (நன்மகனே யுன்னை நானே) நான் இப்படி செய்தவிடத்திலும் நீர் குணநிகாம்படி நின்றீர், நான் நாணும்படி செய்தேனிறே. ... ... (க)

வெவ்வாயேன்வெவ்வுரைகேட்டிருநிலத்தை வேண்டாதேவிரைந்துவென்றி
மைவாயகளிறொழிந்துதேரொழிந்து மாவொழிந்துவனமேமேவி
நெய்வாயவேல்நெடுங்கண் நேரிழையு மிளங்கோவும்பின்புபோக
எவ்வாறுநடந்தனையெம்மிராமாவோ வெம்பெருமானென்செய்கேனே. (உ)

ப - ரை — வெம் - க்ரூரமான, வாயேன் - வாக்கையுடையனான வென்னுடைய, வெவ்வுரைகேட்டு - கடுஞ்சொற்களைக்கேட்டு, இரு - உம்மைப்

(க) பால - க.

பிரியில் தரியாதபெருமையையுடைய, நிலத்தை - நகரஜநங்களை யெல்லாம், வேண்டாது-கைவிட்டும், விரைந்து - த்வரித்து; வென்றி - ஜயத்தை விளைப்ப தாய், மை - அஞ்ஜநகிரிபோலே, ஆய - பெரியவடிவையுடைத்தான, களிறு ஒழிந்து - யானைகளைவிட்டும், தேர் ஒழிந்து - தேர்களைவிட்டும், மா ஒழிந்து - குதிரைகளைவிட்டும், வநமேமேவி-காட்டிலேயேசென்று பொருந்தி, நெய்வாய - கூர்மை மழுங்காமைக்காக நெய்பூசப்பட்டிருந்துள்ள, வேல் - வேல்போலே கண்டாரை வருத்துமதான, நெடும் - காதளவும் நீண்ட, கண் - திருக்கண்களை யுடையளாய், நேர் - திருத்தமாகப்பண்ணப்பட்ட, இழையும் - ஆபரணங்களை யுடையளான பிராட்டியும், இளங்கோவும் - இளையபெருமாளும், பின்புபோக - பின்னே ஸேவித்துவர, எவ்வாறு நடந்தனை - எப்படி நடந்தாய்; எம் இராமா - என்னை ஸந்தோஷிப்பிக்கவல்லனாய், எம்பெருமான் - எனக்கு உபகாரகனான வனே, என்செய்கேன் - நான் என்னசெய்யப்போகிறேன். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வெவ்வாயேன் வெவ்வுரைகேட்டு) அநலாஸ்யனான என்னுடைய, "காட்டேறப்போம், ராஜ்யத்தைத் தவிரும்" என்ற என்வார்த்தையைக்கேட்டு. (திருநிலத்தை வேண்டாதே) "உன்னைப்பிரியில் முடிவோம்" என்று வளைப்புக் கிடக்கிற நகரஜநங்களையெல்லாம் ஒளித்து அவர்களைக் கைவிட்டு. (விரைந்து) "போகிறோம்" என்று விளம்பிப்போமாகில் "ராஜ்யத் தில் நசையாலே நின்றோமென்று கைகேயி நினைக்கும்" என்று விரைந்து.

(வென்றி மைவாயகளிறொழிந்து) வென்றியை விளைப்பதாய் அஞ்ஜநகிரிபோலே பெரியவடிவை யுடைத்தாயிருக்கிற ஆனை யென்ன, தேரென்ன, குதிரையென்ன, இவற்றையொழிந்து. (வநமேமேவி) இவற்றையொழிந்தால் இந்த தேசத்துக்குப் போலி யானதேசத்திலே போய்ப்புகாதே, வநமேமேவி. (நெய்வாயவேல் நெடுங்கண் நேரிழையுமிளங்கோவும் பின்புபோக) நீபோய்ப் புக்காலும புகுகைக்குத் தகாதவர்களைக் கூடக்கொண்டு. (எவ்வாறு நடந்தனை எம்மிராமா! ஓ! எம்பெருமான்! என்செய்கேனே) கால்நடை நடந்தறியாத நீர் இவர்களையுங் கூட்டிக்கொண்டு பொல் லாதகாட்டிலே போனீர், என்னையனே நானென்செய்கேன். (௨)

கொல்லணைவேல்வரிநெடுங்கண்கௌசலைதன் குலமகனாய்க்குனிவில்லேந்தும்
மல்லணைந்தவரைத்தோளா! வல்வினையேன்மனமுருக்கும் வகையேகற்றாய்
மெல்லணைமேல்முன்துயின்றாயின்றினிப்போய்வியன்கானமரத்தினீழல்
கல்லணைமேல்கண்டுயிலக்கற்றனையோகாகுத்தா! கரியகோவே!. (௫)

ப-ரை.—கொல் - கொலைத்தொழிலை, அணை - மேற்கொண்டிருக்கிற, வேல் - வேல்போன்ற புகரையும், வரி - செவ்வரிகருவரிகளையும், நெடு - பரப்பையு முடைத்தான, கண் - கண்களையுமுடையளான, கௌசலைதன் - ஸ்ரீ கௌஸலையாருடைய, குலம் - குலத்துக்கு, மகனாய் - உத்தாரகனாய், குனி - வளைந்த, வில் - வில்லை, ஏந்தும் - எப்போதும் தரித்தபடியே யிருப்பதாய், வரை - மலையையொத்து, மல்லணைந்த - பெரியமிடுக்கையுடைத்தான, தோளா - திருத்தோள்களையுடையவனே, ஆயுதவழகாலும் - தோளழகாலும், வல்வினையேன்-மஹாபாபியான வென்னுடைய, மநம்-மநஸ்ஸை, உருக்கும் - அழிக்கைக்கீடான, வகையே - வகையையே, கற்றாய் - அப்யஸித்தீர்; முன் - முற்காலமெல்லாம், மெல் - ம்ருதுவான, அணைமேல் - படுக்கையிலே, துயின்றாய் - கண்வளர்ந்தருளினநீர், இன்று இனி - இன்றுமுதல் மேலுள்ளகாலமெல்லாம், போய் - தண்டகாரண்யம் முதலிய காடுகளிலே சென்று, வியன் - இப்படியுமொருகாடுண்டோவென்ற வெருவும்படியான, கானம் - காட்டிலே, மரத்தின் நீழல் - இலையில்லாத மரத்தினுடைய நிழலிலே, கல் அணைமேல் - பாறையாகிற படுக்கையிலே, கண் துயில - கண்வளரும்படி, கற்றனையோ-கற்றீரோ; இச்செயல்கள், காகுத்தா - உம்முடைய கருள்தகுலத்துக்குஞ்சேராது; கரிய கோவே - உம்முடைய வடிவழகுக்கும் சேராது. (௫)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (கொல்லணைவேல்வரிநெடுங்கண் கௌசலைதன் குலமகனாய்) கொலையிலேயணைந்த வேல்போலே புகரையுடைத்தாய், செவ்வரிகருவரியையுமுடைத்தாய் பரப்பையுமுடைத்தான கண்ணையுடைய ஸ்ரீ கௌஸலையாருடைய குலத்துக்கு உத்தாரகனானவனே. (குனிவில்லேந்தும் மல்லணைந்தவரைத் தோளா) வீரர்கள்வில் ஒருக்காலும் நாணி யிறங்காமையாலே வளைந்தபடியே யிருக்குமிறே; அந்தவில்தானும் மிசையொன்னும்படி, மலைபோலே பெரியமிடுக்கையுடைய தோளையுமுடையவனே. (வல்வினையேன்மனமுருக்கும் வகையேகற்றாய்) ஆயுதவழகாலும் தோளழகாலும் என்னெஞ்சையழிக்கவே கற்றவனே.

(மெல்லணைமேல் முன்துயின்றாய்) அழகிய படுக்கையிலே முற்காலமெல்லாம் கண்வளர்ந்த நீ. (இன்றினிப்போய்) பல மாளிகைகளிலே பலபடுக்கைகளிலே கண்வளர்ந்த நீர் இன்றாக

விளிப்போய். (விபன்கானமரத்தினீழல்) காட்டில் வர்த்திப்பார் தாங்களும் வெருவும்படி காட்டிலே இலையில்லாதமரத்தின் நிழலின் கீழே. (கல்லணைமேல்கண் டுயிலக் கற்றனையோ) பாறைகளை யணையாகக் கண்வளரும்படி கற்றீரோ. (காகுத்தா கரியகோவே) இச் செயல்கள் உம்முடைய குடிப்பிறப்புக்கும் சேராது. உம்முடைய வடிவழகுக்கும் சேராது. ... ... (௩)

வாபோகுவாவின்னம்வந்தொருகால்கண்டுபோமலராள்கூந்தல்
வேய்போலுமெழிற்றோளிதன்பொருட்டாவிடையோன்றன்வில்லைச்செற்றாய்
மாபோகுநெடுங்கானம்வல்வினையேன் மனமுருக்கும்மகனேயின்று
நீபோகவென்னெஞ்சமிருபிளவாய்ப் போகாதேநிற்குமாறே. (௪)

ப - ரை.—வா - இங்கேவா என்றும், போகு - அங்கேபோ என்றும், இன்னம் - பின்னையும் போம்போது, வந்து—, ஒருகால்கண்டுபோ - ஒருதரம் கண்டுபோ என்றும்; மலர் புஷ்பங்களை, ஆள்-இடைவிடாதே தரித்துநிற்கிற, கூந்தல் - மயிர்முடியையும், வேய்போலும் - மூங்கில்போலே யிருக்கிற, எழில் - அழகிய, தோளிதன்பொருட்டா - தோளையுடையளான பிராட்டிநிமித்தமாக, விடையோன்றன்வில்லை - பெருமிடுக்கனான ருத்ரனுடைய வில்லை, செற்றாய் - முறித்தவனே, வல்வினையேன் - மஹாபாபத்தைப்பண்ணின வென்னுடைய, மனம் - ஹ்ருதயத்தை, உருக்கும் - நீர்ப்பண்டம்போலே யுருகப்பண்ணுகிற, மகனே—, இன்று—, நீ - நீர், மா - ம்ருகங்கள், போகு - ஸஞ்சரிக்கிற, நெடு - க்ரூரமான, கானம் - காட்டிலே, போக—, என்நெஞ்சம் - என்மநஸ்ஸானது, இருபிளவாய்ப்போகாதே - இரண்டுபிளவாய்ப் போய்விடாமல், நிற்குமாறே - வலிதாயிராநின்றதிறேயென்று ஆர்த்தராகிறார். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (வாபோகுவித்யாதி) சற்றுப்போது காணவிட்டவாறே வரும்படி காண்கைக்காக ஸுமந்த்ரனை விட்டு அழைப்பிக்கும்; பிறகு பின்பும் பிறகுவாளியுங் காண்கைக்காசப் போவென்னும்; பின்னையும் கண்மறையப்போனவாறே வாவென்னும் (இன்னம்வந்தொருகால் கண்டுபோ) வந்தவாறே இன்னம் போம்போது ஒருகால் கண்டுபோவென்னும்; இப்படியாயிற்று இவன் யாத்ரைதானிருப்பது. (மலராளித்யாதி) பூமாறாதேயானும மயிர்முடியையும் (வேய்போலு மெழில்தோளிதன்பொருட்டா) பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் ஒழுகுநீட்சிக்கும் வேய்போலே யிருக்கிற அழகியதோளையுடையளாயிருக்கிற பிராட்டி நிமித்த

பாக. (விடையோன்றன் வில்லைச்செற்றாய்) பெருமிடுக்கனான ருத்ரனுடைய வில்லைமுறித்தவனே.

(பாபோகு நெடுங்கானம்) ஆனைகள் ஸஞ்சரிக்கிற காடு. (வல்வினையேன் மனமுருக்கும்மகனே) பால்யாவஸ்த்தைதொடங்கிப் பதினாலாண்டு உன் ஸௌந்தர்யாதி சேஷ்டிதங்களாலே மஹாபோகங்களை யென்னையநுபவிப்பித்த வுன்னை முடியவநுபவிக்கப் பெறாதே மஹாபாபத்தைப்பண்ணின வென்னுடைய ஹ்ருதயத்தை ஶிதிலமாக்குமவனே. (இன்று நீபோக வென்னெஞ்சம் இருபிளவாய்ப் போகாதேநிற்குமாறே) உன் ஸந்நிதியில் உருகுகிற வென்னெஞ்சானது நீ போனவாறே ஶிதிலமாகாதே வஸிக்கிறாநின்றதீ! இதுக்கு ஹேது வறிகிறிலேன். ... ... (௪)

பொருந்தார்கைவேல்நுதிபோல் பரல்பாயமெல்லடிக்கள்குருதிசோர
விரும்பாதகான்விரும்பிவெயிலுறைப்ப வெம்பசிநோய்கூரவின்று
பெரும்பாவியேன்மகனேபோகின்றாய் கேகயர்கோன்மகளாய்ப்பெற்ற
அரும்பாவிசொற்கேட்டவருவினையே னென்செய்கேனந்தோயானே. (ரு)

ப - ரை.—பொருந்தார்கை - சத்ருக்கள் கையில்தைத்த, வேல் - வேலினுடைய, நுதிபோல் - நுனிபோலே, பரல் - பரற்களானவை, பாய - பாய்வதினால், மெல் - ஸுகுமாரமான, அடிக்கள் - திருவடிகளினின்றும், குருதி - ரக்தமானது, சோர - இடைவிடாதேபெருக, விரும்பாத - கடிநஸ்வபாவரும் கூடப்போக இச்சியாத, கான் - காட்டை, விரும்பி - என்னுஜ்ஞையாலே விரும்பி வெயில் - வெய்யிலானது, உறைப்ப - மேலே உறைக்கவும், (நினைத்தபோது அமுது செய்யக்கிடையாமையாலே,) வெம்பசிநோய் - வெவ்விய பசியாகிற நோயானது, கூர - அதிகரிக்கவும், பெரும்பாவியேன் - மஹாபாபியான வென்னுடைய, மகனே - புத்ரனே, இன்று—, போகின்றாய் - போகிறீர்; கேகயர் கோன் - கேகயமஹாராஜன், மகளாய்ப்பெற்ற - மகளாகப்பெற்ற, அரும்பாவி - மஹாபாபியானவளுடைய, சொல்கேட்ட - வார்த்தையிலே யகப்பட்டவனாய், அருவினையேன்யான் - அதுக்கு ஒரு ப்ரதிக்ரியை பண்ணமாட்டாதான், அந்தோ - ஐயோ!, என்செய்கேன் - என்ன செய்யப்புகுகிறேன். (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பொருந்தார்கை வேல்நுதிபோல் பரல்பாய) ஶத்ருக்கள்கையில் வேல்முனையையிட்டுசேர்ந்தாப்போலே பரற்களானவைபாய. (மெல்லடிக்கள் குருதிசோர) இங்குத்

தரையில் மிதிக்கஸஹியாத ஸுகுமாரமான திருவடிகள் பரற்கள் மேலே மிதிக்கையாலே ரக்தத்தைப் புறப்படவிட. (விரும்பாத கான் விரும்பி) ஸுகுமாரரல்லாதாரும் விரும்பாதகாட்டை நான் போகச்சொன்னேனென்னுமத்தாலே விரும்பி. (வெயிலுறைப்ப வெம்பசிநோய்கூர) மேலே வெய்யிலானது உறைப்ப, நினைத்த போது அமுதுசெய்யக் கிடையாமையாலே வெவ்விய பசியான நோய்மிக.

(இன்று பெரும்பாவியேன்மகனே போகின்றாய்) மஹாபாபியான வென்வயிற்றிலே பிறக்கையாலேயிறே ஸுகுமாரரான நீர் காட்டேறப்போகிறது. (கேகயர்கோன் மகளாய்ப்பெற்ற அரும்பாவி சொல்கேட்ட) கேகயராஜன் மகளாய்ப்பெற்றது ஒரு மஹாபாபத்தையாய்த்து; அவள் வார்த்தையிலே யகப்பட்ட. (அருவினையே னென்செய்கே னந்தோயானே) ப்ரதிக்ரியையில்லாத செயலைச்செய்த வென்றால் செய்யலாம் பரிஹாரமில்லை. (௫)

அம்மாவென்றுகந்தழைக்கு மார்வச்சொற்கேளாதேயணிசேர்மார்வம்
என்மார்வத்திடையழுந்தத்தழுவாதே முழுசாதேமோவாதுச்சிக்
கைம்மாவின்நடையன்ன மென்னடையுங்கமலம்போல்முகமுங்காணாது
எம்மானையென்மகனையிழந்திட்ட இழிதகையேனிருக்கின்றேனே. (௬)

ப - ரை.—அம்மா என்று - ஐயர் என்று, உகந்து அழைக்கும் - உகந்தழைக்கிற, ஆர்வச்சொல் - ஆசையான சொற்களை, கேளாது - கேளாமல், அணிசேர் - ஆபரணங்களாலே அலங்க்ருதமான, மார்வம் - மார்வைக்கொண்டு, என்மார்வத்திடை - என்னுடைய மார்விலே, அழுந்த - அழுந்தும்படி, தழுவாது - தழுவாமலும், முழுசாது - முழுசாமலும், உச்சிமோவாது - உச்சியை மோந்து கொள்ளாமலும், கைம்மாவின் - மத்தகஜத்தினுடைய, நடையன்ன - நடையை யொத்த, மெல்நடையும் - ம்ருதுவான நடையழகும், கமலம்போல் - தாமரை மலரையொத்த, முகமும் - திருமுகத்தினழகையும், காணாது - காணாமலும், எம்மானை - நடையழகால் என்னை யெழுதிக்கொண்ட, என்மகனை - என்னுடைய மகனை, இழந்திட்ட - இழந்துவிட்ட, இழிதகையேன் - தண்ணிய ஸ்திதியையுடைய நான், இருக்கின்றேனே - இருக்கிறேனேயென்று து:க்கிதராகிறார். (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (அம்மாவென்று கந்தழைக்கு மார்வச்சொல்கேளாதே) வேறொன்றைக் கணிசியாதே காரியப்பாடற

“ஐயர்” என்றழைக்கும் ப்ரேமம்வழிந்து புறப்பட்டசொல்லைக் கேளாதே. (அணிசேர்மார்வம் என்மார்வத்திடை யழுந்தத்தழுவாதே) ஆபரணங்களாலே அலங்க்ருதமான திருமார்வைக்கொண்டு, (௧) “ஸம்ஹாஸம்ஹதிஷு ஸ்வஜே - ஸங்காடப்பரிஷ்வஜே” என்னும்படி - ஏகதத்வமென்னும்படி தழுவி முழுசாதே. (மோவாதுச்சி) முழுகி ஆநந்தம் உச்சியை மோந்துகொள்ளாதே.

(கைம்மாவின் நடையன்னமென்னடையும்) (௨) “உத்தமாங்கநாகஸ்ய - மத்தமாதங்ககாமிநம்” என்னும்படி யமைந்திருக்கிற நடையழகும். (கமலம்போல் முகமுங்காணாது) விகாஸம் செவ்விக்குத்தாமரை ஒருபோலியான திருமுகத்தைக் காணாது. (எம்மானை யென்மகனை) நடையழகாலே என்னை யெழுதிக்கொண்ட வென்மகனை. (இழந்திட்ட இழித்தகையேனிருக்கின்றேனே) இப்படி தண்ணியசெயலைச் செய்தக்கால் முடியாவுமாகாதே யிருக்கவும்வேணுமோ நான். ... ... (௬)

பூமருவுநறுங்குஞ்சிப்புன்சடையாப் புனைந்துபூந்துகில்சேரல்குல்
காமரெழில்விழலுடுத்துக் கலனணியாதங்கங்களழகுமாறி
ஏமருதோளென்புதல்வன்யானின்று செலத்தக்கவநந்தான்சேர்தல்
தூய்மறையீர்துதகவோசுமந்திரனே! வசிட்டனே! சொல்லீர்நீரே. (எ)

ப - ரை.—பூமருவு-பூமாறாதேயிருப்பதாய், நறும்-பரிமளிதமான, குஞ்சி-திருக்குழலை, புன் - பார்க்கவொண்ணாதபடி, சடையாப்புனைந்து - ஜடையாக்கி, பூந்துகில்சேர் - அழகியவஸ்த்ரங்களை தரிக்கக்கடவ, அல்குல் - திருவரையிலே, காமர் - காண்கைக்கு ஆசைப்படத்தக்க, எழில் - அழகிய, விழல் - விஶ்வாமித்ரத்தை, உடுத்து - கயிறாக முறுக்கிச்சாத்தி, கலனணியாது - ஆபரணங்களை தரியாமையாலே, அங்கங்கள் - அத்தால் திருமேனிக்குண்டாகும், அழகுமாறி - அழகுகெட்டு, ஏமரு-சத்ருக்கள் கலங்கத்தக்க, தோள்-தோள்களையுடைய, என் - என்னுடைய, புதல்வன் - புத்ரரானவர், யான்—, இன்று செலத்தக்க - இன்று போகத்தக்க, வநம் - காட்டிலே, தான் - போகயோக்யரான தாம், சேர்தல் - போகை, தூய் - பரிசுத்தமான, மறையீர்-வேதத்தை நிரூபகமாகவுடையவர்களே, சுமந்திரனே - சுமந்த்ரனே, வசிட்டனே - வஸிஷ்டபகவானே, இது—, தகவோ - தர்மமோ, நீர் - நீங்கள், சொல்லீர் - சொல்லுங்கோள். (எ)

---

(௧) வி - பு - ௫ - ௧௮ - ௨. (௨)

வ்யா.—ஏழாம்பாட்டு. (பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாப் புனைந்து) பூமாறாதே யிருப்பதாய் பரிமளத்தைப்புறப்பட விடா நிற்கும் திருக்குழலை, மநுஷ்யர்க்குப் பார்க்கவொண்ணாதபடி ஜடையாக்கி. (பூந்துகில்சேரல்குல் காமரெழில்விழலுடுத்து) அறுபதினாயிரமாண்டுமேதடின திருப்பரியட்டங்களில நல்லவையெல்லாம் சாத்தக்கடவ திருவரையிலே, கண்டார்விரும்பும்படி விஸ்வாமித்ரத்தைக் கயிறாக முறுக்கிச்சாத்தி. (கலனணியா தங்கங்களழகுமாறி) ஸ்வாபாவிகமான அழகொழியத் திருவாபரணங்கள் சாத்தாமையாலே அத்தால் வருமழகின்றியே.

(ஏமருதோளென்புதல்வன்) விக்ரம்பண்ணினானை அழியச்செய்து அபிஷேகம் பண்ணவல்ல என்மகன். (யானின்று செலத்தக்க வனந்தான்சேர்தல்) அறுபதினாயிரமாண்டு போகங்களை புஜித்து விதாதகனான நான்போகக்கடவகாட்டிலே, ஸுகுமாரராய் போகயோக்யரான தாம்போகை. (தூமறையீர் இது தகவோ) (க) "வஷிம்விஸ்வஸ்ய - பதிம்விஸ்வஸ்ய" என்று ஓதயிருக்கிற ப்ராஹ்மணரே! நீங்கள் இது சொல்லீகோள், இது தர்மமோ, (சுமந்திரனே வசிட்டனே சொல்லீர்நீரே) ராஜதர்மத்தைப் பழுதறிந்து நடத்தப்போந்த ஸுமந்த்ரனே! சொல்லாய்; இவ்வம்ஸத்துக்கு குருவாய் ராஜதர்மங்களை உபதேசித்துப் போருகிற ஸ்ரீ வஸிஷ்டபகவானே! சொல்லாய். ... ... (எ)

பொன்பெற்றாரெழில்வேதப்புதல்வனையுந் தம்பியையும்பூவைபோலும்
மின்பற்றா நுண்மருங்குல் மெல்லியலென்மருகியையும்வநத்திற்போக்கி
நின்பற்றாநின்மகன்மேற் பழிவிளைத்திட்டென்னையும்நீள்வானிற்போக்க
என்பெற்றாய்கைகேசீ! யிருநிலத்திலினிதாகவிருக்கின்றாயே. (அ)

ப - ரை.—கைகேசீ - கேகயராஜன் புத்ரியே, பொன்பெற்றார் - வித்யாதநத்தையுடைய உபாத்யாயர் கீழேயிருந்து, எழில் - அழகிய, வேதம் - வேதசாஸ்த்ரங்களைக்கற்ற, புதல்வனையும் - பெருமாளையும், தம்பியையும் - அவரையல்லதறியாத இளையபெருமாளையும், பூவைபோலும் - நாகணவாய்ப்புள்ளையொத்த அழகையும், மின்பற்றா - மின்னலுங்கூட ஒப்பாகாத, நுண் - நுண்ணி

அரு;—ஏழாம்பாட்டு. (பூமருவித்யாதி.) ஏமருதோள் - ஏய்கையிலே பொருந்தினதோள். (எ)

(க) தை - நா - க0.

தான, மருங்குல் - இடையையும், மெல் இயல் - ம்ருதுஸ்வபாவத்தையு முடைய ளான, என் மருகியையும் - என் மருமகளான பிராட்டியையும், வநத்தில் போக்கி - காட்டிலே போகவிட்டு, நின் - உன்னையொழிய வேறொருவரை, பற்றா - தாயென்று புத்திபண்ணாத, நின்மகன்மேல் - உன்னுடைய பிள்ளை யான பரதாழ்வானுக்கு, பழிவிளைத்திட்டு - "ப்ராத்ருத்ரோஹி" என்னும் பழியை யுண்டாக்கிவிட்டு, என்னையும்—, நீள்-பெருமைபொருந்திய, வானில்- ஸ்வர்க்கத்திலே, போக்க - போம்படி செய்தத்தாலே, என்பெற்றாய் - என்ன ப்ரயோஜநத்தை யடைந்தாய்; இருநிலத்தில் - இந்த மஹாப்ருதிவியிலே, இனிதாக - ஸந்துஷ்டசித்தையாய்க்கொண்டு, இருக்கின்றாயே - இருக்கிறாயே யென்று துக்கிதராகிறார். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (பொன்பெற்றாரெழில் வேதப்புதல்வனையும் தம்பியையும்) தந்தையென்று எல்லாரும் சொல்லும்படி யிருக்கிற உபாத்யாயர்கள் கீழேயிருந்து அழகிய ஸகலவேத ஸாஸ்த்ரங்களையும் ஓதியிருக்கிற பெருமாளையும், அவரையல்ல தறியாத தம்பியாரையும். (பூவைபோலும் மின்பற்றா நுண்மருங்குல் மெல்லியலென்மருகியையும்) பூவைபோலே யிருப்பாளுமாய் மின்னுக்கு ஒப்பான இடையை யுடையாளுமாய் ம்ருதுஸ்வபாவையுமான என்மருமகளான பிராட்டியையும். (வநத்திற்போக்கி) காட்டிலேபோகவிட்டு.

(நின்பற்றா நின்மகன்மேல் பழிவிளைத்திட்டு) உன்னையல்லது வேறொருவரைத் தாயென்றிராத ‡(பெருமாளையும் இளையபெருமாளையும் வநத்தில்போகவிட்டு.) ஸ்ரீபரதாழ்வான்மேலே ப்ராத்ருத்ரோஹியென்கிற பழியையேற்றிட்டு. (என்னையும் நீள்வானில்போக்க என் பெற்றாய்கைகேசீ) இச்செயல்களெல்லாம் செய்து நீ பெற்ற ப்ரயோஜநமென். (இருநிலத்திலினிதாக விருக்கின்றாயே) ஸம்ஸார ஸாகரமாகிறது - புத்ரர்களோடும் பர்த்தாவோடுங் கூடியிருக்கை யாய்த்து; உனக்குப் புத்ரரான பெருமாளைக் காட்டிலேபோக்கி

அரு;—எட்டாம்பாட்டு. (பொன்னித்யாதி) (பூவைபோலும்) "பூவை பைங்கிளி" என்கிறபடியே பூவையென்று - பக்ஷிவிசேஷம். பெண்களை அழகுக்கு கிளிபோலே யென்னுமாபோலே பூவைப்பாலையு மென்னக்கடவது.

‡ குண்டலிதம் அதிகபாடம்.

எல்லையும் ஸ்வர்க்கத்திலே போக்குகையாலே ஸர்வாபஸாகம் அழகிதாக அநுபவிக்கக்கடவையிறே. ... ... (அ)

முன்னொருநாள்மழுவாளிசிலைவாங்கி யவன்றவத்தைமுற்றுஞ்செற்றாய்
உன்னையுமுன்னருமையையுமுன்மோயின் வருத்தமுமொன்றாகக்கொள்ளாது
என்னையுமென்மெய்யுரையும் மெய்யாகக்கொண்டுவனம்புக்கவெந்தாய்!
நின்னையேமகனாகப்பெறப்பெறுவே னேழ்பிறப்பும்நெடுந்தோள்வேந்தே!. (௯)

ப - ரை.—முன்னொருநாள் - முன்பொருகாலத்திலே, மழுவாளி - பரசுராமாழ்வானுடைய, சிலை - வில்லை, வாங்கி - வளைத்து அம்பேறிட்டு, அவன் - அவனுடைய, தவத்தைமுற்றும் - தபஸ்ஸையெல்லாம், செற்றாய் - அவ்வம்பாலே அழித்துப்போகட்டாய்; உன்னையும் - உன் பெருமையையும், உன் - அருமையையும் - உன்னை நான் பெறப்பட்ட அருமையையும், உன்மோயின் - உன்னைப்பெற்ற தாயாரான ஸ்ரீ கௌஸலையாருடைய, வருத்தமும் - வ்யஸநத்தையும், ஒன்றாகக்கொள்ளாது - ஒருபொருளாக மதியாமல், என்னையும் - உன்பக்கல் அன்புடையனான வென்னையும், என் மெய்யுரையும் - என்னுடைய ஸத்யவசநத்தையும், மெய்யாகக்கொண்டு - ஸத்யமாக்கவேணுமென்று நெஞ்சிற்கொண்டு, வநம்புக்க - காட்டுக்கு எழுந்தருளின, எந்தாய் - என்னுடைய நாதனாய், நெடு - முழங்காலளவும் நீண்ட, தோள் - தோளையுடைய, வேந்தே - அரசனானவனே, நான் அநேகஜந்மங்கள் பிறந்து, எழ்பிறப்பும் - பிறந்த ஜந்மங்கள்தோறும், நின்னையே - உன்னையே, மகனாக - பிள்ளையாக, பெறப்பெறுவேன் - பெறப்பெறுவேனாகவேணும். (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (முன்னொருநாள் மழுவாளி சிலைவாங்கி) முன்னொருகாலத்திலே மழுவை ஆயுதமாகவுடைய ஸ்ரீ பரசுராமன் கையில் ஸ்ரீ ஸார்ங்கத் திருவில்லைவாங்கி. (அவன் தவத்தை முற்றுஞ்செற்றாய்) அவன் லோகாந்தரங்களை ப்ராபிக்கக் கடவதாக ஆர்ஜித்ததபஸ்ஸை அவ்வம்பாலே யழித்துப்போகட்டாய். (உன்னையு முன்னருமையையும்) உன் ஸ்லாக்யதையையும், (க) "ஜஹார தவஸாராரா - மஹாதா தபஸா ராம" என்று - நான் உன்னைப்பெறப்பட்ட அருமையையும். (உன்மோயின் வருத்தமு மொன்றாகக்கொள்ளாது) "உன்னைப்பிரியில் தரியேன்" என்று பின்தொடர்ந்த ஸ்ரீ கௌஸலையார் வ்யஸநத்தையும் ஒன்றாகக் கொள்ளாது.

(க) ரா - ஆ - ௯௯ - ௩.

(என்னையு மென்மெய்யுரையும் மெய்யாகக்கொண்டு வநம் புக்கவெந்தாய்) உன்பக்கல் எனக்குண்டான பாவபந்தத்தை மெய்யாகவறியாதே, என்னைப் பிதாவென்றேநினைத்து, "நெடுநாள் ஸத்யம்சொல்லிப் போந்தவனை நான்தோன்றி அஸத்யப்ரதிஜ்ஞனாக்க வொண்ணாது" என்று என் அஸத்யத்தை ஸத்யமாக்க வேணுமென்று நெஞ்சிலேகொண்டு காட்டேறப்போன வென்னப்பனே. (நின்னையே மகனாகப்பெறப்பெறுவே னேழ்பிறப்பும் நெடுந்தோள்வேந்தே) அநேகஜந்மங்கள் பிறந்து, பிறந்த ஜந்மந்தோறும் நீ எனக்குப் பிள்ளையாய்ப் பிறக்கும்படி பெற்றுடையேனாவேன். (நெடுந்தோள்வேந்தே) ரக்ஷ்யவர்க்கத்தி னளவல்லாத காவல்துடிப்புடைய தோளையுடையவனே. ... ... (கூ)

தேனகுமாமலர்க்கூந்தல்கௌசலையுஞ் சுமித்திரையுஞ்சிந்தைநோவக் [று
கூனுருவிற்கொடுந்தொழுத்தைசொற்கேட்ட கொடியவடன்சொற்கொண்டின்
கானகமேமிகவிரும்பி நீதுறந்தவளநகரைத்துறந்துநானும்
வானகமேமிகவிரும்பிப்போகின்றேன் மநுகுலத்தார்தங்கள்கோவே!. (கo)

ப-ரை.—மநுகுலத்தார்தங்கள்கோவே - மநுகுலத்தரசனானவனே, தேன்நகு - தேனைப்புறப்படவிடாநின்றுள்ள, மா - ஶ்லாக்யமான, மலர் - மலரோடு கூடின, கூந்தல் - மயிர்முடியையுடைய, கௌசலையும் - ஸ்ரீ கௌஸலையாரும், சுமித்திரையும் - ஸுமித்ரையாரும், சிந்தைநோவ - மநம்வருந்த, கூன் - வளைந்த, உருவின் - வடிவையுடையளாய், கொடு - கொடிய மநஸ்ஸையுடையளுமான, தொழுத்தை - வைப்பாட்டியுடைய, சொல் - சொல்லை, கேட்ட—, கேட்டவளாய், கொடியவள்தன் - க்ரூர ஹ்ருதயையுமான கைகேசியுடைய, சொல் - சொல்லை, கொண்டு - சிரஸா வஹித்துக்கொண்டு, கானகமே - வநவாஸத்தையே, மிகவிரும்பி - மிகவும் விரும்பி, நீதுறந்த நீ உபேக்ஷித்துவிட்ட, வளம் - அலங்க்ருதமான, நகரை - நகரத்தை, நானும்—, துறந்து - விட்டு, வானகம் - நீயில்லாத ஸ்வர்க்கத்துக்கு, மிக விரும்பிப்போகின்றேன் - மிகவும் ஆசைப்பட்டுப்போகாநின்றேன். (கo)

வ்யா.—பத்தாம்பாட்டு. (தேனகுமாமலர்க்கூந்த லித்யாதி) தேனைப் புறப்படுவிக்கிற மலரோடேகூடின மயிர்முடியையுடைய ஸ்ரீ கௌஸலையாரும் ஸுமித்ரையாரும் நெஞ்சுநோவ. (கூனுருவித்யாதி) வடிவில் வக்ரம்போலே நெஞ்சும் வக்ரமாய்த் திண்ணி

தான கூனியுடைய வார்த்தையைக்கேட்ட கைகேயியுடைய வார்த்தையிலே யகப்பட்டு.

(கானகமேமிகவிரும்பி நீதுறந்த வளநகரைத்துறந்து) "நான் போகச்சொன்னேன்" என்னுமதத்தையேகொண்டு ஒருவர்க்கும் ஸஞ்சரிக்கவரிதான காட்டைவிரும்பி, திருவபிஷேகத்துக்கு அலங்கரித்திருக்கிறவூரை நீ கைவிட்டாயென்று நானும் திருவயோத்யையைத்துறந்து (வானகமேமிகவிரும்பிப் போகின்றேன்) நீ இல்லாத நகரியிறே; அத்தாலே ஸ்வர்க்கமேயாகிலும் நீ யில்லாதவூரை விட்டுப் போகின்றேன். (மறுதலத்தார் தங்கள்கோவே) மறுகுலோத்பவனானவனே. ... ... (கo)

ஏரார்ந்தகருநெடுமாலிராமனாய் வனம்புக்கவதனுக்காற்றாத்
தாரார்ந்ததடவரைத்தோள்தயரதன்றான் புலம்பியவப்புலம்பல்தன்னைக்
கூரார்ந்தவேல்வலவன்கோழியர்கோன் குடைக்குலசேகரன்சொற்செய்த
சீரார்ந்ததமிழ்மாலையிவைவல்லார் தீநெறிக்கண்செல்லார்தாமே. (கக)

குலசேகரப்பெருமாள் திருவடிகளே ஶரணம்.

ப-ரை.— தாரார்ந்த - வெற்றிமாலை மாறாததாய், தடம் - விசாலமாய், வரை - மலைபோலே திண்ணியதான, தோள் - தோளையுடைய, தயரதன்தான் - தசரதசக்ரவர்த்தியானவர்; ஏர் ஆர்ந்த - ஸகல கல்யாணகுணங்களாலும் பூர்ணனாய், கரு - நீலமணிபோன்ற வடிவழகை யுடையனாய், நெடுமால் - ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன், இராமனாய் - சக்ரவர்த்தித்திருமகனாய் வந்தவதரித்து, வனம் புக்கவதனுக்கு - காட்டுக்கெழுந்தருளியதற்கு, ஆற்றா - ஸஹிக்கமாட்டாமல், புலம்பிய அப்புலம்பல் தன்னை - ப்ரலாபித்த பாசுரத்தை, கூர் ஆர்ந்த - கூர்மைமிக்க, வேல் - வேல்யுத்தத்தில், வலவன் - ஸமர்த்தராய், கோழியர்கோன் - உறையூருக்குத்தலைவராய், குடை - வெண்கொற்றக் குடையையுடையரான, குலசேகரன் - ஸ்ரீ குலசேகரப்பெருமாள், சொற்செய்த - அருளிச்செய்ததாய், சீர் ஆர்ந்த - பெருமைமிகுந்த, தமிழ் - த்ராவிடபாஷையாய், மாலை - மாலாரூபமான, இவை-இப்பத்துப்பாட்டுக்களை, வல்லார்தாம் - அப்யஸிக்க வல்லவர்கள், தீநெறிக்கண் - விஷயாந்தரங்களிலே, செல்லார் - போகாரென்கிறார். (கக)

வ்யா.— நிகமத்தில். (ஏரார்ந்தகருநெடுமாலித்யாதி) எல்லாப்ரகாரத்தாலும் பூர்ணனாய் ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன் கர்மவஶ்யரோடே இதரஸஜாதீயனாய் வந்தவதரித்து, "கர்மவஶ்யரும் போகத்தகாதகாட்டில் புக்கான்" என்றதுக்கு ஆற்றமாட்டாது. (தாரார்ந்தவித்யாதி) அறுபதினாயிரமாண்டு ராஜ்யம்பண்ணுகை

யாலே மாலைமாறாக திண்ணிதான மலைபோலே தோளையுடைய சக்ரவர்த்தி ப்ரலாபித்த பாசுரத்தை.

(கூரார்ந்தவித்யாதி) கூர்மைமிக்க வேலையுடையருமாய் உறை பூர்க்த நியாமகருமாய் ஐஸ்வர்யப்ரகாஶகமான வெண்கொற்றக் குடையையுடையருமான குலசேகரப்பெருமாளருளிச்செய்த (சீரார்ந்ததமிழ்மாலை யிவைவல்லார்) (க) "வாமெறுமெயெ உயருமு - பாட்டயகேயசமதாம்" என்று இவை பூர்ணமான தமிழ்த்தொடைவல்லவர்கள். (தீநெறிக்கண் செல்லார்தாமே) பகவத்விஷயத்தைக் காற்கடைக்கொண்டு விஷயப்ரவணராகார்கள்,

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

பத்தாந்திருமொழி அங்கணெடுமதின் ப்ரவேசம்.

———(௦)———

அவ—அநாதிகாலம் தாம் இழந்த இழவை, தேவகிதேவியார் பெற்றுவைத்து க்ருஷ்ணனுடைய பாலசேஷ்டிதங்களை யநுப விக்கப்பெறுதே யிழந்தவள் பாசுரத்தாலே பேசினர் - * ஆலைநீள் கரும்பில்; * மன்னுபுகழில் - ஸ்ரீ கௌஸல்யார் பெற்றபேற்றை அநுபவித்தார்; பால்யாவஸ்தையிலேயெல்லாமநுபவித்து ப்ராப்த யௌவநரானவாறே அநுபவிக்கப்பெருதேயிழந்த சக்ரவர்த்தி யோபாதி தமக்கு ப்ராப்தியுண்டாகையாலே அவன் பாசுரத்தாலே தம்மிழவைப்பேசினர் - * வன்றாளில்;

இத்திருமொழியில் - கீழ்ப்பிறந்த இழவுகளெல்லாந்தீர சக்ர வர்த்தித்திருமகன் நித்யவாஸம்பண்ணுகிற திருச்சித்ரகூடமாகிற திருப்பதியிலே திருவவதாரந்தொடங்கி அந்தவவதார வ்ருத்தாந் தத்தை ஸ்ரீ வால்மீகிபகவாந் பேசியநுபவித்தாப்போலே தம் முடைய ஜ்ஞாநவைஶத்யத்தாலே ஸமகாலத்தில்போலே யநுப விக்கிறர். ... ... *

(க) ௯ - பா - ௬ - அ.

அ.—முதற்பாட்டு. தேவர்களெல்லாரும் க்ருதார்த்தராம்படி வந்து திருவவதாரம்பண்ணினபடி சொல்லுகிறது.

மூ.—அங்கணெடுமதிள் புடைசூழயோத்தியென்னுமணி
நகரத்துலகனைத்தும் விளக்குஞ்சோதி
வெங்கதிரோன்குலத்துக்கோர் விளக்காய்த்தோன்றி
விண்முழுதுமுய்யக்கொண்ட வீரன்றன்னைச்,
செங்கணெடுங்கருமுகிலை யிராமன்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
எங்கள் தனிமுதல்வனை யெம்பெருமான்றன்னை
யென்றுகொலோ கண்குளிரக்காணுநாளே. (௧)

ப - ரை —அங்கண் - ஆகாசாவகாசமெல்லாம் தானேயாம்படி, நெடு - உயர்ந்த, மதிள் - மதிள்களாலே, புடை - நாற்புறமும், சூழ் - சூழப்பட்ட, அயோத்தியென்னும் - அயோத்யையென்று ப்ரஸித்தமாய், அணி - அலங்காரங்களால் குறைவற்ற, நகரத்து - திருப்படை வீட்டிலே, உலகனைத்தும் - ஸகலலோகங்களையும், விளக்கும் - விளங்கப்பண்ணுகிற, சோதி - தேஜஸ்ஸானது, வெங்கதிரோன் குலத்துக்கு - ஸூர்யவம்சத்துக்கு, ஓர் - அத்விதீயமான, விளக்காய்த்தோன்றி - உஜ்ஜ்வலதீபமாய் வந்தவதரித்து, விண்முழுதும் - தேவஜாதியையடைய, உய்யக்கொண்ட - உஜ்ஜீவிப்பித்தருளின, இராமன்றன்னை - யாவரையும் களிப்பிக்குமவனாய், வீரன்றன்னை - வீரனாய், நெடு - ஸர்வாதிகத்வஸூசகமான, செங்கண் - புண்டரீகாக்ஷனாய், கருமுகிலை - காளமேகத்தையொத்தவனாய், தில்லைநகர் - தில்லைநகரென்று சொல்லப்படுகிற, திருச்சித்திரகூடந்தன்னுள் - திருச்சித்திரகூடத்திலே, எங்கள் - எங்களை உஜ்ஜீவிப்பிக்கைக்கு, தனி - ஒப்பில்லாத, முதல்வனை - காரணபூதனாய், எம்பெருமான்றன்னை - நமக்கு ஸ்வாமியானவனை, கண்குளிரக்காணும் நாள் - என் கண்களின் விடாய்தீரக்காணும் நாள், என்று கொலோ - என்றோ வென்கிறார். (௧)

வ்யா.—(அங்கணித்யாதி) போக்யபோகோபகரண போகஸ்தானங்களையுடைத்தாய், ஆகாஶாவகாஶமெல்லாம் தானேயாம்படி நிமிர்ந்த மதிளாலே சூழப்பட்ட அயோத்யை. "அயோத்யா - அயோத்யா" என்னும், "அபராஜிதா - அபராஜிதா" என்றும் சொல்லப்படுகிற பரமபதம்போலே ஶத்ருக்களுக்குச் சலிக்க வொண்ணாதவூர். (என்னும்) பரமபதம்போலே சிலரறிந்து சிலரறியாதிருக்கையன்றிக்கே ஸர்வலோக ப்ரஸித்தமாயிருக்கை.

(அணிநகரம்) அலங்காரங்களால் குறைவற்ற ஊரென்னுதல். (உலகனைத்தும் விளக்குஞ்சோதி) ஸர்வலோகங்களையும் தன் தேஜஸ்ஸாலே, ‡ (க) "நாராயண பரொஜ்யோதி: - நாராயண பரோ ஜ்யோதி:" என்கிறபடியே - பரஞ்ஜ்யோதிஸ்ஸாயுள்ளது.

(வெங்கதிரோனித்யாதி) ஜகத்திலந்தகாரமெல்லாம் நீக்கக்கடவ ஆதித்யன் வம்சத்திலே, அவனைப்போலே இரவுகலசாதே அத்விதீயமான தேஜஸ்ஸாய் வந்துதித்து. (விண்முழுதுமுய்யக்கொண்டவீரன்றன்னை) தன் வீர்யகுணத்தாலே தேவஜாதியையடைய உஜ்ஜீவிப்பித்தவனை. (செங்கணெடுங்கருமுகிலை) தேவஜாதியைப்பற்றிக்கே ஜகத்தையடைய ரக்ஷிப்பதாகக் கடலிலே பணைலேஸேஷமாகப்பருகின காளமேகத்தினுடையவடிவையும் ஸர்வேஸ்வரத்வ லக்ஷணமான புண்டரீகாக்ஷத்வத்தையுமுடையவனை. (இராமன்றன்னை) வடிவழகாலும் குணழகாலும் அபிராமனாகையாலும் அநுகூல ப்ரதிகூல விபாகமின்றியே தோற்பிக்குமவனை. இதில் "வீரன்" என்கிறதை இங்குமநுவர்த்திக்கக்கடவது. (உ) "ஸதெருநெதராஞ்வச - ஸத்ரோபநெத்பாதிவக்." (தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்) அவ்வவதாரத்தில் ஸமகாலத்தில் அநுபவிக்கப்பெறாத இழவுதீர, பிற்பட்ட காலத்திலுள்ளாரும் முதலாப்படி ஸந்நிஹிதனானவனை.

(எங்கள் தனிமுதல்வனை) அக்காலத்தில் அநுபவிக்கப்பெறாத எங்களை உஜ்ஜீவிப்பிக்கைக்கு ஒப்பில்லாத காரணபூதனானவனை. (எம்பெருமான்றன்னை) வகுத்த சேஷியானவனை. (என்றுகொலோ கண்குளிரக்காணுநாளே) இந்த ராஜ்யதந்த்ரத்திலே படப்பட்டிருக்கிற †நானென்று, அவனைக் காணப்பெறுகேதவிடாய்த்த கண்கள் காணாமையாலகன்று விடாய்த்திருந்த கண்படைத்த ப்ரயோஜநம் பெற

அந;—முற்பாட்டு. (அங்கணியாதி). கோரசிகத்து மென்மைக்கு ஸப்தமித்தன்மை. (இதிலித்யாதி). ராமனென வீரனன்னையென்றும், வடிவழகாலே ஜயித்தானென்கிறது. ரூபகுணத்தாலே ஜயிக்கப்பட்டோமோ வென்ன (ஸத்யேநேத்யாதிவத்) என்று.

(க) தை - நாரா - ௧௧.
(உ) ரா - அயோ - ௧௨ - ௨௧.
† (பா) நான் என்றே.
‡ சிலபதங்களில்லை.

லாவதென்றோ வென்கிறார். "என்றுசொல்லோ" என்று. கால தத்வத்துக்கு ஒரு ‡ அவதிபெற்றாகில் இன்று கண்டதோ டொக்குங்கிடீர். ... ... (௧)

அ.—இரண்டாம்பாட்டு. (வந்தெதிர்ந்த) ராக்ஷஸவதத்துக் கெல்லா மடியாகவும், ரிஷியுடைய அபிமதம் தலைக்கட்டுகைக்கும் தாடகா தாடகேயரை நிரஸித்தபடி சொல்லுகிறது.

மூ.—வந்தெதிர்ந்த தாடகைதனுரத்தைக்கீறி
வருகுருதிபொழிதர வன்கணையொன்றேவி
மந்திரங்கொள்மறைமுனிவன் வேள்விகாத்து
வல்லரக்கருயிருண்ட மைந்தன்காண்மின்,
செந்தளிர்வாய்மலர்நகைசேர் செழுந்தண்சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
அந்தணர்களொருமூவாயிரவரேத்த
வணிமணியாசனத் திருந்தவம்மான்றானே. (௨)

ப-ரை.—செந்தளிர்வாய்-சிவந்ததளிர்கள் நடுவே, நகை-விகஸியா நின்றுள்ள, மலர்சேர் - புஷ்பங்களையுடைத்தாய், செழு - அழகிதாய், தண் - ஶ்ரமஹரமான, சோலை - சோலையாலே சூழப்பட்ட, தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்—, அந்தணர்க ளொருமூவாயிரவர் - அநந்யப்ரயோஜநரான மூவாயிரம் ஸ்ரீ வைஷ்ணவர்கள், ஏத்த - மங்களாசாஸநம்பண்ண, அணி - ஶ்லாக்யமான, மணி - மாணிக்கங்களழுத்திச்சமைத்த, ஆசநத்து இருந்த - ஸிம்ஹாஸநத்திலே யெழுந்தருளியிருந்த, அம்மான் - ஸர்வேஶ்வரன், வந்து - மிகைத்துவந்து, எதிர்ந்த - எதிர்த்த, தாடகைதன் - தாடகியுடைய, உரத்தை - மார்வை, கீறி - பிளந்து, அத்தாலே வரு - புறப்பட்டுவருகிற, குருதி - ரக்தமானது, பொழிதர - மலையருவிபோலே கொழிக்கும்படி, வன் - வலிக்கு, ஒன்று - ஒப்பில்லாத, கணை - திருச்சரத்தை, ஏவி - நடத்தி, மந்திரம் - ஸகல மந்த்ரங்களையும், கொள் - தன்னிடத்திலேயுடைத்தான, மறை - வேதவேதார்த்தங்களை யறிந்தவனாய், முனிவன்-மநநசீலனான விஶ்வாமித்ரனுடைய, வேள்வி-யாகத்தை, காத்து-ரக்ஷித்து, வல்-பெருமிடுக்கரான, அரக்கர்-மாரீசன் ஸுபாஹு-வென்னும் ராக்ஷஸருடைய, உயிருண்ட - ப்ராணனைப் போக்கியருளின, மைந்தன்காண்மின் - பிள்ளைத்தனத்தை யுடையவன் கிடீரென்கிறார். (௨)

---

‡ அவதிபெற்றாகி லென்றது - பெறக்கடவ நாளின்னநாளென்று அவதியிடப்பெற்றாகில் என்றபடி.

வ்யா.—(வந்தெதிர்ந்த) தான்மிகைத்துவந்து மேலிட்ட தாடகையை; † நிக்ருதிக்கொப்பில்லாதவள். * தன்னிகரொன்றில்லாத தாடகையிறே. (தன்னுரத்தைக்கீறி) பெருமாள்பக்கல் பொல்லாங்கு நினைத்தநெஞ்சை மலைபிளந்தாப்போலே பிளந்து. (வருகுருதிபொழிதர) § செம்பாட்டுத்தரையிலே மலையருவிவிழுந்தாப்போலே ருதிரம்வந்துகொழிக்க. (வன்கணையொன்றேவி) வலிக்கு ஒப்பில்லாத திருச்சரத்தைநடத்தி. (மந்திரங்கொள்மறைமுனிவன்) ரிஷிதனுக்குத் தனக்கென்றுதபடி நிர்ப்பயனாய்த் தன்னுடைய அநுஷ்டாநங்களெல்லாம் அடைவே யநுஷ்டித்து யாகத்தைத் தலைக்கட்டும்படி பண்ணி. (வல்லரக்கருயிருண்ட) யஜ்ஞவிக்நகரான மாரீசஸுபாஹுக்களைமுடித்த பிள்ளைத்தனத்தை யுடையவனை. மாரீசன்பட்டானோ வென்னில்; பின்னையிருந்தவிருப்பு மருதப்ராயமென்று கருத்து.

(செந்தளிர்வாய்மலர்நகைசேர்) சிவந்த தளிர்கள்நடுவே விகஸியாநின்றுள்ள புஷ்பங்களையுடைத்தாய் தர்ஸநீயமாய் ஸமஹமான சோலையாலே அலங்க்ருதமானவூரிலே. (அந்தணர்களொருமூவாயிரவர்) அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர் மூவாயிரம்பேர். (ஏத்த) திரண்டுமங்கலாஸாஸநம்பண்ண. (அணிமணியாசனத்திருந்த) (க) "கோப்புடைய சீரியசிங்காசனம்" என்னும்படியே மஹார்க்கங்களான ரத்நங்களையுடைத்தான ஸிம்ஹாஸநத்திலே தன் மேன்மைதோற்ற விருந்த ஸர்வேஸ்வரன் கிடீரென்கிறார். ... ... (௨)

அ.—மூன்றாம்பாட்டு. (செவ்வரிநல்) பிராட்டியோட்டைக் கலவிக்கு விரோதியைப் போக்கினபடி சொல்லுகிறது.

அரு;—இரண்டாம்பாட்டு. (வந்தெதிர்ந்தவித்யாதி). † நிக்ருதி - வஞ்சனம் சாட்யம். § செம்பாட்டுத்தரை - செம்மண் தரை.

(க) திருப்பாவை - உ௩.

மூ.—செவ்வரிநற்கருநெடுங்கண் சீதைக்காகிச்சினை
விடையோன் சிலையிறுத்து மழுவாளேந்தி
வெவ்வரிநற்சிலைவாங்கி வென்றிகொண்டு
வேல்வேந்தர் பகைதடிந்தவீரன்றன்னை,
தெவ்வரஞ்சுநெடும்புரிசை யுயர்ந்தபாங்கர்த்
தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
எவ்வரிவெஞ்சிலைத்தடக்கை யிராமன்றன்னை
யிறைஞ்சுவாரிணையடியே யிறைஞ்சினேனே. (௩)

ப - ரை.—செவ்வரி - செவ்வரிகள் படர்ந்து, நல் - அழகிதாய், கரு - கறுத்து, நெடு - காதளவும் நீண்டிருந்துள்ள, கண் - கண்களையுடைய, சீதைக்காகி - பிராட்டிக்காக, சினம் - கோபத்தையுடைய, விடையோன் - வ்ருஷப வாஹநனான ருத்ரனுடைய, சிலை - வில்லை, இறுத்து - முறித்தும், மழுவாள் ஏந்தி - மழுவாகிற ஆயுதத்தையுடைய பரசுராமாழ்வானுடைய, வெம் - க்ரௌர்யத்தையுடைத்தாய், வரி - அழகிதாய், நல் - ஶ்லாக்யமான, சிலை - வில்லை, வாங்கி - வளைத்து அம்பெய்து, வென்றிகொண்டு - அவரைவென்று, தம்முடைய குலத்தினராய், வேல் - வேலையுடையரான, வேந்தர் - ராஜாக்களுடைய, பகை தடிந்த - விரோதி நிரஸநம்செய்தருளின, வீரன்றன்னை - வீரனாய், தெவ்வர் - சத்ருக்கள், அஞ்சும் - பயப்படும்படியான, நெடும் - உயர்ந்த, புரிசை - மதிளையும், உயர்ந்த—, பாங்கர் - அட்டாலைகளையுமுடைத்தான, தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள் - திருச்சித்திரகூடத்திலே யெழுந்தருளியிருக்குமவனாய், எவ் அரி - எய்யவரிய, வெம் - க்ரூரமான, சிலை - வில்லை, தடம் - பெரிய, கை - திருக்கையிலேயுடைய, இராமன்றன்னை—, இறைஞ்சுவார் - ஸ்தோத்ரம் பண்ணுமவர்களுடைய, இணையடியே - திருவடிகளையே, இறைஞ்சினேன் - வணங்கினேனென்கிறார். (௩)

வ்யா.—(செவ்வரியித்யாதி) (௧) "ஸஹிதே க்ஷணா! - அஸிதேக்ஷணா" என்கிறபடியே கண்ணழகிலே தோற்று, சினத்தையுடைய ரிஷபத்தைத் தனக்கு வாஹநமாகவுடைய ருத்ரனுடைய வில்லாய், ஒருவரால் கிட்டவொண்ணாதே யிருக்கிற வில்லை அநாயாஸேந முறித்து அச்செயலிலே தோற்ற பிராட்டியைத் திருமணம் புணர்ந்தெழுந்தருளாநிற்க, வழியிலே வந்து தோற்றின, தன்

அரு;—மூன்றாம்பாட்டு. (செவ்வரி) கருவரியையுடையகண்கள்.

---

(௧) ரா - ஸு - ௧௧ - ௬.

க்ரௌர்யத்துக்குத்தக்க மழுவாகிற ஆயுதத்தையுடைய ஸ்ரீ பரஶுராமாழ்வானுடைய, வெம்மையை யுடைத்தாய் தர்ஶநீயமான வில்லை வாங்கி அவனை வென்று தான் திருவவதாரம் பண்ணின க்ஷத்ரியகுலத்துக்குப் பகைதீர்த்த வீரத்தையுடையவனை,

(செவ்வரந்த நெடும்புரிசையித்யாதி) ஶத்ருக்கள் அஞ்சும்படியான உயர்ந்தமதிளையும் † அட்டாலைகளையு முடைத்தான வூரிலே வர்த்திக்கிற. (எவ்வரியித்யாதி) (௧) "ஸுவஷ்டு ஹ்ரீவாஹ நாபே அவஷ்டப்ய மஹத்தநு:" என்று - வேறொருத்தரால் அடக்கியாளவொண்ணாதே காணவே ப்ரதிபக்ஷம் முடியும்படியான ஸ்ரீ ஶார்ங்கத்தையுடைய சக்ரவர்த்தித் திருமகனை. (இறைஞ்சுவாரிணையடியே) சக்ரவர்த்தித் திருமகனுடைய வீரத்துக்கும் அழகுக்கும் தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் தோற்று அவர்கள் திருவடிகளிலே, (இறைஞ்சினானை) ஸ்ரீ பரதாழ்வான் குணங்களுக்குத் தோற்ற ஸ்ரீ ஶத்ருக்நாழ்வானைப்போலே. ... (௩)

மூ.—தொத்தலர்பூஞ்சுரிகுழற் கைகேசிசொல்லால்
தொன்னகரந்துறந்து துறைக்கங்கைதன்னைப்
பத்தியுடைக்குகன்கடத்த வனம்போய்ப்
புக்குப்பரதனுக்குப் பாதுகமுமரசுமீந்து,
சித்திரகூடத்திருந்தான்றன்னை யின்று
தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
எத்தனையுங்கண்குளிரக் காணப்பெற்ற
விருநிலத்தார்க் கிமையவர்நேரொவ்வார்தாமே. (௪)

ப - ரை.—தொத்து - கொத்துக்கொத்தாக, அலர் - அலருகிற, பூ-பூக்களையுடைத்தாய், சுரி - சுருண்ட, குழல் - குழலையுடையளான, கைகேசி - கைகேசியுடைய, சொல்லால் - சொல்லாலே, தொல் - தங்கள் முன்னோர் தொடங்கி வருகிற, நகரம் - அயோத்யாநகரத்தை, துறந்து - விட்டு, பத்தியுடை-பக்தியையுடைத்தான, குகன் - ஸ்ரீ குஹப்பெருமாள், கங்கைத்துறைதன்னை - கங்கைக்

(புரிசை) மதிள். (அட்டாலை) தூர்க்கசவாலை (எவ்வரி) எய்யவரியசிலை (ரு.)

---

(௧) ரா - யுத் - ௧௦௦ - ௧௧.

கரையை, கடத்த - தாண்டுவிக்க, வநம் - துஷ்டம்ருகங்கள் ஸஞ்சரிக்கிற காட்டிலே, போய்ப்புக்கு - சென்று புகுந்து, பரதனுக்கு - ஸ்ரீ பரதாழ்வானுக்கு, பாதுகமும் - திருவடிநிலைகளையும், அரசும் ராஜ்யபாரத்தையும், ஈந்து - கொடுத்து, சித்திரகூடத்திருந்தான் றன்னை - சித்ரகூட பர்வதத்திலே யெழுந்தருளி யிருந்தவனை, இன்று தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்—, கண் - உன்னைக் காணப்பெறுதே விடாய்த்தகண்கள், எத்தனையும்குளிர - நன்றாகக்குளிரும்படி, காணப்பெற்ற - கண்டநுபவிக்கப்பெற்றவர்களாய், உகந்தருளின நிலங்களை யுடைத்தாகையாலே, இரு - ஶ்லாக்யமான, நிலத்தார்க்கு - பூமியிலுள்ளவர்களுக்கு, இமையவர் - நித்யஸூரிகள், நேரொவ்வார் - ஸத்ருஶராகார்கள். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (கொத்தலர்) கொத்துக்கொத்தாக அலருகிற பூக்களையுடைய, சுருண்டு அழகிதான குழலையுடைய கைகேயி. இத்தால் - தன்னுடைப்பனையாலும் அழகாலும் சக்ரவர்த்தியைத் தானிட்டவழக்காம்படி பண்ணிப்ரமிப்பிக்க வல்லளான. (கைகேயிசொல்லால்) சக்ரவர்த்தி வாய்திறக்கமாட்டாதிருக்க, "பிள்ளாய்! உங்களையர், உன்னைக் காட்டேறப்போகச் சொல்லாநின்றூர்" என்று கைகேயி சொன்னவார்த்தையாலே. (தொன்னகரந்துறந்து) குலக்ரமாகதமாய்வருகிற படைவீட்டை ஸந்ந்யஸித்து. இவள் சொன்னுளென்று போகைக்கு ப்ராப்தியில்லாமையைக் காட்டுகிறது (துறைக்கங்கைதன்னை) கங்கையின் துறைதன்னை. (பத்தியுடைக் குகன்கடத்த) தம்பிமாரைக் காட்டிலும் ஸ்நேஹத்தையுடையனும், பிரிவில் தரியாதபடியாய், பெருமாள் நியமிக்கையாலே நின்றவனுமாய், ஸ்ரீ பரதாழ்வானையுங்கூட அதிசயிக்கும்படியான ஸ்ரீ குஹப்பெருமாள் கங்கையைக் கடத்த. (வநம்போய்ப்புக்கு) மநுஷ்ய ஸஞ்சாரமின்றியே துஷ்டம்ருகங்களையான காட்டிலேபோய்ப்புக்கு.

(பரதனுக்குப் பாதுகமுமரசுமீந்து சித்திரகூடத்திருந்தான் றன்னை) சித்ரகூடத்திலே எழுந்தருளியிருக்கிற இருப்புக் தான் காணப்பெறுதே பிற்பட்டார்க்கு இழவுதீர ஸர்வகாலத்திலும் அநுபவிக்கைக்காகத் திருச்சித்திரகூடத்திலே வர்த்திக்கிறவனை.

அரு;—நாலாம்பாட்டு. (தொத்து) கொத்து. தொன்மையைப்பற்றவருளிச்செய்கிறூர். (இவள் சொன்னுளென்றித்யாதி).

(எத்தனையுங்கண்குளிர) இவனைக் காணப்பெறாதொழிந்தேனிடாய்த்த கண் குளிரும்படி. (காணப்பெற்ற) கேட்டேபோகையன்றிக்கே கண்டநுபவிக்கப்பெற்ற. (இருநிலத்தார்க்கு) உகந்தருளின தேசங்களையுடையபூலோகமான பூமியிலுள்ளார்க்கு, (இமையவர் நேரொவ்வார்) (க) "ஸதா பஶ்யந்தி - ஸதாபஶ்யந்தி பண்ணியிருக்கையே ஸ்வபாவமான நித்யஸூரிகளும் ஒவ்வார். இங்கு, கண்ணுக்கு விஷயம் புறம்பேயுண்டாயிருக்கச்செய்தே அத்தைத்யஜித்துக் காண்கிறவர்கள்; அவர்கள் - அதுவே யாத்ரையாக விருக்கிறவர்களிறே. ... ... (௮)

மூ.—வலிவணக்குவரைநெடுந்தோள் விராதைக்கொன்று
வண்டமிழ்மாமுனிகொடுத்த வரிவில்வாங்கி
கலைவணக்குநோக்கரக்கி மூக்கைநீக்கிக்
கரனோடு தூடணன்றனுயிரைவாங்கிச்,
சிலைவணக்கிமான்மரிய வெய்தான்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
தலைவணக்கிக்கைகூப்பி யேத்தவல்லார்
திரிதலால்தவமுடைத்துத் தரணிதானே. (௫)

ப- ரை.—வலிவணக்கு - எதிரிகள் வலியைத் தோற்பிக்கக்கடவதாய், வரை - மலைபோலே, நெடு - திண்ணிதான, தோள் - தோள்களையுடைய, விராதை - விராதனை, கொன்று—, வண் - யாவர்க்கும் எளிதில்கற்கலான, தமிழ் - தமிழ்பாஷைக்கு நிர்வாஹகராய், மா - ரிஷிஶ்ரேஷ்டரான, முனி - அகஸ்த்யரிஷியானவர், கொடுத்த—, வரி - தர்சநீயமான, வில் - வில்லை, வாங்கி - வளைத்து, கலை - மானின்நோக்கை, வணக்கு-தோற்பிக்கக்கடவதான, நோக்கு-நோக்கையுடைய, அரக்கி - சூர்ப்பணகியுடைய, மூக்கை—, நீக்கி - அறுத்து, கரனொடுதூடணன்றன்-கரதூஷணர்களுடைய, உயிரை - ப்ராணனை, வாங்கி - முடித்து, மான் - மான்வடிவுகொண்டுவந்த மாரீசன், மரிய - முடியும்படி, சிலைவணக்கி - வில்லைவளைத்து, எய்தான்றன்னை - பாணப்ரயோகம்பண்ணினவனை, தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்—, தலைவணக்கி - தெண்டன் ஸமர்ப்பித்து, கைகூப்பி - அஞ்ஜலிபண்ணி, ஏத்தவல்லார்-ஸ்தோத்ரம்பண்ண வல்லவர்கள், திரிதலால் - ஸஞ்சாரம் பண்ணுகையாலே, தரணி - இந்த பூமியானது, தவமுடைத்து - பாக்யத்தையுடையது. (௫)

ஒவ்வாமைக்கு இவர்களுக்கு வாசியேதென்ன (இங்குக்கண்ணுக்கு த்யாதி) (காண்கிறவர்களென்றிறே - இவர்களென்றும்,) "இருக்கிறவர்களிறே அவர்கள்" என்றும் பூரிப்பது. (௮)

(க) ஸாம - உத்தரகண்டம்.

வ்யா.— அஞ்சாமாட்டு. (வலிவணக்கு) எதிரிகள் வலியைத் தோற்பிக்கக்கடவதாய் மலைபோலே திண்ணியதான தோள்களையுமுடைய விராதனைக்கொன்று. (வண்டமிழ் மாமுனிகொடுத்த) அகஸ்த்யன் கொடுத்த தர்ஸநீயமான வில்லைவாங்கி. (கலைவணக்கு நோக்கரக்கி) கலைநோக்கைத் தோற்பிக்கும்படியான நோக்கையுடைய ஸூர்ப்பணகியுடைய மூக்கைவாங்கி. (கரன்றூடணன்றன் உயிரைவாங்கி) இவளுடைய ரூபவைரூப்யங்கண்டு பொறுக்கமாட்டாதேவந்த கரதூஷணர்கள் ப்ராணன்களை ஹரித்து.

(சிலைவணக்கிமான்மறிய வெய்தான்றன்னை) அதுகேட்டுப் பொறாத ராவணனாலே ப்ரேரிதனாய்வந்த மாரீசனான மாயாம்ருகத்தை யெய்துகொன்றவனை. (தில்லைநகரித்யாதி) அக்காலத்தில் காணப்பெறாத இழவெல்லாந்தீரத் தலையுண்டான ப்ரயோஜநம் பெற வணங்கி, கையுண்டான ப்ரயோஜநம்பெறத் தொழுது, வாயுண்டான ப்ரயோஜநம்பெற ஏத்தவல்லார்திரிதலால். (தவமுடைத்துத் தரணிதானே) இவர்களுடைய ஸஞ்சாரத்துக்கு விஷயமாகையாலே பூமியானது பாக்யத்தையுடையது. ... (௫)

மூ.—தநமருவு வைதேகி பிரியலுற்றுத்தளர்வெய்திச்
சடாயுவை வைகுந்தத்தேற்றி
வநமருவு கவியரசன் காதல்கொண்டுவாலியைக்
கொன்றிலங்கைநக ரரக்கர்கோமான்,
சினமடங்கமாருதியாற் சுடுவித்தானைத்
தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
இனிதமர்ந்தவம்மானை யிராமன்றன்னையேத்
துவாரிணையடியே யேத்தினேனே. (௬)

ப - ரை.—தநம் - ஸ்தநத்தினழகாலே, மருவு - கூடியிருப்பதற்கு யோக்யையான, வைதேகி - விதேஹராஜன் திருமகளான பிராட்டியை, பிரியலுற்று - பிரிகையாலே, தளர்வெய்தி - மனம்வருந்தி, (பிராட்டிக்காக ராவணனோடே எதிர்த்து யுத்தம்செய்து ப்ராணனைவிட்ட) சடாயுவை - ஜடாயுமஹாராஜரை, வைகுந்தத்தேற்றி - பரமபதத் தேறப்போகவிட்டு, வநம்மருவு - வாலிக்கு அஞ்சிக்காட்டிலே மறைந்து வர்த்திக்கிற, கவியரசன் - ஸுக்ரீவமஹாராஜர் பக்கலுண்டான, காதல்கொண்டு - ஸ்நேஹத்தாலே, வாலியைக்கொன்று—, இலங்கைநகர் - லங்காநகரத்திலிருக்கிற, அரக்கர் - ராக்ஷஸர்களுக்கு, கோமான் - அரசனான ராவணனுடைய அபிமாநமும், சினம்-கோபமும், அடங்க - அடங்கும்

படி, மாருதியால் - திருவடிவாலாலே, சுடுவித்தானை - கொளுத்துவித்தவனை, தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்—, இனிது - இனிதாக, அமர்ந்த - எழுந்தருளியிருக்கிற, அம்மானை - ஸர்வேச்வரனை, இராமன் றன்னை - சக்ரவர்த்தித்திருமகனை, எத்துவார் - ஸ்தோத்ரம் பண்ணுமவர்களுடைய, இணையடியே - திருவடிகளையே, எத்தினேன் - ஸ்தோத்ரம் பண்ணப்பெற்றேனென்கிறார். (௬)

வ்யா —ஆறும்பாட்டு. (தனமருவு) திருமுலைத்தடத்தினழகாலும் ஆபிஜாத்யத்தாலும் ப்ரியத்தமாக பிராட்டி பிரிவாலே பெருமாள் தம்மை விலைநோவுபட்டு, பிராட்டிக்காக ராவணனோடே யுத்தம்பண்ணி ப்ராணனைவிட்ட பெரியவுடையாரைப் பரமபதத்தேறப்போகவிட்டு. "தனமருவுவைதேகி" என்று (௧) "விஷ்ணோ ஸ்ரீ: - விஷ்ணோஸ்ஸ்ரீ:" என்கிறபடியே - பெருமாளுக்கு தனமான பிராட்டியென்றுமாம். (வனமருவுகவியரசன்) வாலிக்கு அஞ்சிக் காட்டிலேமறைந்துகிடக்கிற குரங்குகளுக்கு ராஜாவான ஸுக்ரீவனை ஸ்நேஹபூர்வகமாகக் காட்சிகொண்டு, அவர்க்காக அதிபல பராக்ரமனான வாலியை நிரஸித்து.

(இலங்கைநகர்) லங்கைக்கு நிர்வாஹகனென்றும் ராக்ஷஸஸ்வாமியென்றும் மோஹித்திருக்கிறவனுடைய அபிமானமும் சீற்றமுமடங்கும்படி, திருவடிவாலிலே நெருப்பையிட்டுச் சுடுவித்தவனை. (தில்லைநகரித்யாதி) அக்காலத்திலனுபவிக்கப் பெற்றிலோமென்னும் இழவுதீர இங்கே நித்யஸந்நிஹிதனாய் வர்த்திக்கிற ஸர்வேச்வரனை சக்ரவர்த்தித்திருமகனை. (எத்துவார்) அவனுடைய வடிவழகிலும் ஸௌலப்யத்திலு மீடுபட்டேத்துமவர்கள் திருவடிகளையேத்தினேனே. ... ... (௬)

மூ.—குரைகடலையடலம்பால் மறுகவெய்து
குலைகட்டிமறுகரையை யதனாலேறி
எரிநெடுவேலரக்கரொடு மிலங்கைவேந்த
னின்னுயிர்கொண்டவன் றம்பிக்கரசுமீந்து,
திருமகளோடினிதமர்ந்த செல்வன்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
அரசமர்ந்தானடிசூடு மரசையல்லா
லரசாகவெண்ணேன் மற்றரசுதானே. (௭)

---

(௧) வி - பு - ௧ - அ - ௯.

ப - ரை.—குரை - சப்தியாநின்றுள்ள, கடலை - ஸமுத்ரத்தை, அடல் - சத்ருக்களை வருத்தத்தக்க, அம்பால் - அம்பாலே, மறுக - கலங்கும்படி, எய்து -, குலைகட்டி - அணைகட்டி, அதனால் - அந்த அணையாலே, மறுகரையையேறி - அந்தக்கரையிலேபோய், எரி - சத்ருக்களை யெரிக்கக்கடவதாய், நெடு - பெரிய, வேல் - வேலையுடையரான, அரக்கரோடும் - ராக்ஷஸருடைய ப்ராணனையும், இலங்கைவேந்தன் - லங்காதிபதியான ராவணனுடைய, இன் - இனிய, உயிர் - ப்ராணனையும், கொண்டு - அபஹரித்து, அவன் தம்பிக்கு - அவன் தம்பியான ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு, அரசீந்து - ராஜ்யத்தைக்கொடுத்து, (பிரிவெல்லாம் மறக்கும்படி) திருமகளோடு - பிராட்டியோடே, இனிது - இனிதாக, அமர்ந்த - அமர்ந்தருளிய, செல்வன்றன்னை - ஐச்வர்யமுடையவனை, தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள்—, அரசமர்ந்தான் - ராஜ்யம்பண்ணுமவனுடைய, அடிசூடும் - திருவடிகளை சிரஸ்ஸிலே தரிக்கையாகிற, அரசையல்லால் - அரசாட்சியையொழிய, மற்றரசு - ஸ்வாதந்த்ர்யாவஹமான இதரராஜ்யதௌரேயதையை, அரசாகவெண்ணேன் - அரசாட்சியாக நினையேனென்கிறார். (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (குரைகடலை) கோஷத்தையுடைத்தான கடலை, ஶத்ருக்களென்றால் எப்போதோவென்று மேல் விழக்கடவதான அம்பைவிட்டு மறுகும்படியாக வெய்து. (குலைகட்டி) அஞ்சின கடலானது என்மேலே தூர்த்துக்கொள்ளீரென்ன; அதின்மேலே மலைகளையிட்டுத் தூர்த்து வழிசெய்து அந்தக் கரையிலேபோய்.

(எரிநெடுவேல்) ஶத்ருக்களை எரிக்கக்கடவதாய் நெடிதான வேலையுடைய ராக்ஷஸரோடே, லங்காதிபதியான ராவணனை அவனுகந்த ப்ராணனை ஹரித்து, அவன் தம்பிக்கு ராஜ்யத்தைக் கொடுத்து. பிராட்டியோடேகூட, பிரிந்த பிரிவெல்லாம் மறக்கும்படி இனிதமர்ந்தருளிய ஐஶ்வர்யமுடையவன்றன்னை. (தில்லை நகரித்யாதி) ராஜ்யம்பண்ணியிருக்கிறவன் திருவடிகளைச் சூடுகை யாகிற ராஜ்யமொழிய அதுக்கெதிர்த்தட்டாக ஸ்வாதந்த்ர்யத்தைப்பார்க்கும் ராஜ்யத்தை ராஜ்யமாகவெண்ணேன். (௭)

மூ — அம்பொனெடுமணிமாட வயோத்தியெய்தியரசெய்தி
யகத்தியன்வாய்த் தான்முன்கொன்றான்
தன்பெருந்தொல்கதைகேட்டு மிதிலைச்செல்வி
யுலகுய்யத் திருவயிறுவாய்த்தமக்கள்,
செம்பவளத்திரள்வாய்த் தன்சரிதைகேட்டான்
தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
எம்பெருமான்றன்சரிதை செவியாற்கண்ணால்
பருகுவோமின்னமுத மதியோமொன்றே. (அ)

ப - ரை.—அம் - பட்டாபிஷேகத்துக்காக அலங்கரித்து, பொன் - தர்ஸநீயமாய், நெடு - உயர்த்தியையுடைத்தாய், மணி - ரத்நங்களாலே சமைக்கப்பட்ட, மாடம் - மாடங்களையுடைய, அயோத்தி - திருவயோத்யையிலே, எய்தி - மீண்டெழுந்தருளி, அரசு எய்தி - ராஜ்யபாரத்தை யடைந்து, அகத்தியன்வாய் - அகஸ்த்யபகவான்வாக்காலே, வேறுபணியில்லாமையாலே, தான் -, முன் - முன்பு, கொன்றான்றன் - கொன்ற ராவணனுடைய, பெரும் - பெருமை தங்கிய, தொல்கதை - பூர்வவ்ருத்தாந்தங்களை, கேட்டு - கேட்டு, மிதிலைச்செல்வி - ஸ்ரீ ஜநகராஜன் திருமகளான பிராட்டி, உலகு உய்ய - லோகமடைய உஜ்ஜீவிக்கும்படி, திருவயிறுவாய்த்த - பெற்ற, மக்கள் - குசலவர்களுடைய, திரள் - திரண்டு, செம் - சிவந்த, பவளம் - பவளம்போன்ற, வாய் - வாயாலே, தன் - தன்னுடைய, சரிதை - சரித்ரமான ஸ்ரீ ராமாயணத்தை, கேட்டான் - கேட்டருளின சக்ரவர்த்தித்திருமகன் நித்யவாஸம் பண்ணுகிற, தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள் —, எம்பெருமான்றன் - என் நாதனுடைய, சரிதை - வ்ருத்தாந்தத்தை, திருவடியைப்போலே, செவியால் - செவிகளாலும், கண்ணால் - கண்களாலும், பருகுவோம் - அநுபவிக்கப்பெற்ற நாம், இன் அமுதம் - இனிதான தேவாம்ருதத்தை, ஒன்று மதியோம் - ஒருபொருளாக மதியோம்.

வ்யா.—எட்டாம்பாட்டு. (அம்பொன்) திருவபிஷேகத்துக்கிடாக அலங்கரித்து தர்ஸநீயமாய் ஓக்கத்தையுடைத்தாய் நல்ல ரத்நங்களாலே சமைக்கப்பட்ட மாடங்களையுடைய திருவயோத்யையிலே ஜகத்தெல்லாம் உகக்கும்படி மீண்டெழுந்தருளிப் புகுந்து. (அரசெய்தி) (க) "ராஜ்யம் ச அவாப்தவாந்-ராஜ்யம் புநராவாப்தவாந்" என்னும்படியே ஜகத்தெல்லாம் வாழும்படி ஸாம்ராஜ்யத்திலே அதிகரித்து. (அகத்தியன்) வேறு க்ருத்யாபாவ

(க) ரா - பா - க - அக.

மில்லாமையாலே போதுபோக்காகத் தான் முன்கொன்ற ராவணனுடைய பூர்வ வ்ருத்தாந்தங்களை யடைய அகஸ்த்யபகவாந் விண்ணப்பஞ்செய்யக்கேட்டு.

(மிதிலைச்செல்வியித்யாதி) ஸ்ரீஜநகராஜன்றிருமகள், ஜகத்தை யடைய உஜ்ஜீவிக்கும்படி பெற்ற குசலவர்கள்பேசத் தம்முடைய வ்ருத்தமான ஸ்ரீராமாயணகதையைக் கேட்டருளினவர் இன்று திருச்சித்ரகூடத்திலே நித்யவாஸம் பண்ணுகிற, தன்னுடைய நாதனுடைய வ்ருத்தாந்தத்தைத் திருவடியைப்போலே ஸர்வேந்த்ரியங்களாலும் அநுபவிக்கப்பெற்றநாம் தேவஜாதியநுபவிக்கிற அம்ருதத்தை யொன்றாகமதியோமே. ... (அ)

மூ.—செறிதவச்சம்புகன்றன்னைச் சென்றுகொன்று
செழுமறையோனுயிர்மீட்டுத் தவத்தோனீந்த
நிறைமணிப்பூணணியுங் கொண்டிலவணன்றன்னைத்
தம்பியால் வானேற்றிமுனிவன் வேண்டத்,
திறல்விளங்குமிலக்குமனைப் பிரிந்தான்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள்
உறைவானைமறவாத வுள்ளந்தன்னையுடையோம்
மற்றுறு துயரமடையோமன்றே. (௯)

ப-ரை.—செறிதவம் - மிக்க தபஸ்ஸையுடையனான, சம்புகன்றன்னை - ஜம்புகனென்னும் சூத்ரனை, சென்று - அவனிருக்குமிடம் தேடிச்சென்று, கொன்று - அவனை யுருவழித்துப்போகட்டு, செழு - விலக்ஷணனான, மறைபோன் உயிர் - ப்ராஹ்மணனுடைய புத்ரன் ப்ராணனை, மீட்டு—, தவத்தோன் - அகஸ்த்யபகவான், ஈந்த - கொடுத்தருளின, நிறை - ஒளிமிக்கிருந்துள்ள, மணிப்பூணணி - ரத்நஹாரத்தை, கொண்டு - சாத்தியருளி, (திருவயோத்யையிலே புகுந்து) இலவணன்றன்னை - லவணாஸுரனை, தம்பியால் - ஸ்ரீ சத்ருக்நாழ்வானை யிடுவித்து, வான் ஏற்றி - வீரஸ்வர்க்கத்திலே யேற்றுவித்து, முனிவன் வேண்ட - துர்வாஸஸ்ஸாபத்தாலே, திறல்விளங்கும் - பகைவரைவெல்லுகையில் மிக்க ஸாமர்த்யமுடையரான, இலக்குமனை - இளையபெருமாளை விட்டு, பிரிந்தான்றன்னை - பிரிந்த சக்ரவர்த்தித்திருமகனை, தில்லைநகர்த் திருச்சித்ரகூடங்

அரு:—எட்டாம்பாட்டு. (அம்பொனித்யாதி) அகஸ்த்யபகவாந் உத்தர ஸ்ரீராமாயணத்தினுபோத்காதத்திலே ராவணவ்ருத்தாந்தம் சொன்னான். (செம்பவளத்திரள்வாய்) திரண்டசெம்பவளம் போலிருக்கிறவாயாலே தன் சரிதை கேட்டானென்றபடி. (அ)

தன்னுள் உறைவானை - திருச்சித்திரகூடத்திலே நித்யவாஸம்பண்ணுமவனை, மறவாத வுள்ளந்தன்னையுடையோம் - மறவாத மநஸ்ஸையுடையரான நமக்கு, மற்று - இனிமேல், உறு - எம்பெருமானை யநுபவிக்கப்பெறாமையால் வரக்கடவ, துயரமடையோம் - துக்கத்தை யடையமாட்டோமென்கிறார். (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (செறிதவச்சம்புகனித்யாதி) மிக்க தபஸ்ஸை யுடையனாய் ஶூத்ரனான ஜம்புகனைத் தலையறுத்து. (செழுமறையோனுயிர்மீட்டு) விலக்ஷணனான ப்ராஹ்மணனுடைய புத்ரனுடைய ப்ராணனைமீட்டு, அகஸ்த்யபகவான் கொடுத்த பெருவில்லையும் ஹாரத்தையுஞ் சாத்தியருளித் திருவயோத்யையிலே புகுந்து, லவணாஸுரனை ஸ்ரீ ஶத்ருக்நாழ்வானை யிட்டுவித்து விபஸ்வாக்கத்திலே குடியேற்றுவித்து.

(முனிவனித்யாதி) துர்வாஸாவினுடைய ஶாபத்தாலே, (௧) "த்விதீயம்மே நராத்மா நஷ்டம் - தவிதீயம்மே மங்காத்மா நம்" என்கிறபடியே - தம்முடைய ப்ராணபூதரான இளையபெருமாளுக்கு விடைகொடுத்து, அப்படிப்பட்ட தன்னைப் பின்புள்ளார் காணப்பெறாத இழவுதீரத் திருச்சித்ரகூடத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவனை. (மறவாதவுள்ளந்தன்னையுடையோம்) இப்படிப்பட்ட ஸௌலப்யத்தை அநவரதபாவனைபண்ணியிருக்கிற நமக்கு "எம்பெருமானை யநுபவிக்கப் பெற்றிலோம்" என்கிற இழவு இனியில்லை.

மூ.—அன்றுசராசரங்களை வைகுந்தத்தேற்றி யட
லரவப்பகையேறி யசுரர்தம்மை
வென்றிலங்குமணிநெடுந்தோள் நான்குந்
தோன்றவிண்முழுது மெதிர்வரத்தன்றாமமேவி,
சென்றினிதுவீற்றிருந்த வம்மான்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
என்றுநின்றான வனிவனென்றேத்தி
நாளுமிறைஞ்சுமினோ வெப்பொழுதுந்தொண்டீர்காள்.

அரு:—ஒன்பதாம்பாட்டு. (செறிதவமித்யாதி) (ஶாபத்தாலே) ஶபிக்கப் போகிறானென்கிற பயத்தாலே, (எம்பெருமான்) சக்ரவர்த்தித்திருமகன்.

(௧) ரா - அயோ - ௯ - ௩௫.

ப - ரை.—அன்று - தீர்த்தம் ப்ரஸாதித்தருளுகிறவன்று, சராசரங்களை—, வைகுந்தத்து - பரமபதத்திலே, ஏற்றி - போகவிட்டு, அடல் - வலியையுடைய, அரவம் - ஸர்ப்பஜாதிக்கெல்லாம், பகையேறி - சத்ருவான பெரியதிருவடியை மேற்கொண்டு, அசுரர்தம்மை - அஸுரவர்க்கத்தை, வென்று - ஜயிக்கையாலே, இலங்கு - விளங்குகிற, மணி - அழகிய, நெடும் - நீண்ட, தோள்நான்கு - நான்கு திருத்தோள்கள், தோன்ற - தோன்றவும், விண்முழுதும் - பரமபதத்திலுள்ளாரெல்லாம், எதிர்வர - எதிர்கொண்டுவர, தன் - தன்னுடைய, தாமம் - ஸ்தாநத்திலே, மேவிச்சென்று - போய்ப்புக்கு, இனிது - இனிதாக, ஸிம்ஹாஸநத்திலே, வீற்றிருந்த - தன் பெருமைதோற்ற எழுந்தருளியிருந்த, அம்மான் - ஸர்வேச்வரனாய், தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்—, என்றும் நின்றான் தன்னை - நித்யவாஸம்பண்ணுமவனை; தொண்டீர்நீர் - அநந்யப்ரயோஜநரான நீங்கள், அவன் - அப்படிப்பட்டவன், இவன் - இப்படிப்பட்டவன், என்று எப்பொழுதும் ஏத்தி - என்று இடைவிடாதே ஸ்துதித்து, நாளும் - நாள்தோறும், இறைஞ்சுமின் - ஆச்ரயித்து க்ருதார்த்தராகுங்கோளென்கிறார். (௧0)

வ்யா.—பத்தாம்பாட்டு. (அன்று சராசரங்களை) (௧) "அபி வ்ருக்ஷா: பரிம்லாநா: - அபிவ் ருக்ஷா: பரிம்லாநா:" என்று - வ்யதிரேகத்திலே அலைபட்ட தறிந்தருளுகையாலே (௨) "நோவு ஸந்துஷ்டயோத்யாயாம் ஸுஸூக்ஷ்மமபி த்ருஸ்யதே । திர்யக்யோநி கதாஸ்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா: - நோச்ச்வஸத்தத யோத்யாயாம் ஸுஸூக்ஷ்மமபி த்ருஸ்யதே । திர்யக்யோநிகதாஸ்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா:" என்கிறபடியே - இவையபெருமாளோபாதி பரமபதத்துக்குப் போகவிட்டு.

(அடலரவப் பகையேறி) ஸர்ப்பஜாதிக்கு ஜந்மஸத்ருவான பெரியதிருவடியை மேற்கொண்டு அஸுரவர்க்கத்தைவென்று அந்தவீரஸ்ரீவிளங்குகிற திருத்தோள்கள்நாலோடுங்கூட ‡ அங்குள்ளாருக்கும்படி எழுந்தருளி பரமபதத்திலேபோய்ப்புக்கு தன் மேன்மையெல்லாம் தோற்றும்படியான ஏஸ்வரனை. (தில்லைநகரித்யாதி) அவ்விருப்பிலொன்றுங் குறையாமே காலதத்வமுள்ளதனையும் இங்கே நமக்காக நித்யவாஸம்பண்ணுமவனை அநந்யப்ரயோஜநரான நீங்கள் அவனை ஆஸ்ரயித்து க்ருதார்த்தராகுங்கோள். (௧0)

(௧) ரா - அயோ - ௫௯ - அ. (௨) ரா - உத்தர - ௧0௧ - ௨௩.

‡ (பா) அங்குள்ளார்க்குமப்படியே.

மூ.—தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்
திறல்விளங்குமாருதியோ டமர்ந்தான்றன்னை
எல்லையில்சீர்த்தயரதன்றன் மகனாய்த்தோன்றிற்
றதுமுதலாத் தன்னுலகம்புக்கதீறாக்,
கொல்லியலும்படைத்தானைக் கொற்றவொள்வாள்
கோழியர்கோன் குடைக்குலசேகரன்சொற்செய்த
நல்லியலின்றமிழ்மாலை பத்தும்வல்லார்
நலந்திகழ்நாரணனடிக்கீழ் நண்ணுவாரே. (கக)

குலசேகரப்பெருமாள் திருவடிகளே ஶரணம்.

ப - வை.—தில்லைநகர்த் திருச்சித்திரகூடந்தன்னுள்—, திறல்விளங்கு - திறல் விளங்காநின்றுள்ள, மாருதியோடு - சிறியதிருவடியோடே, அமர்ந்தான் றன்னை - நித்யவாஸம்பண்ணுகிறவனை, எல்லையில் - அளவில்லாத, சீர் - நல்ல குணங்களையுடையனான, தயரதன்றன் - தசரதசக்ரவர்த்திக்கு, மகனாய்த்தோன் றிற்றதுமுதலா - பிள்ளையாகப்பிறந்தது முதலாக, தன்னுலகம்புக்கதீறு - தன் னுடைச்சோதிக்கு எழுந்தருளினதுமுடிவாக, கொல்லியலும் - கொலையை முயலாநின்றுள்ள, படை - வேலையுடைய, தானை - ஸேனையையுடையராய், கொற்றம் - வெற்றியையும், ஒள் - அழகையுமுடைய, வாள் - வாளையுடைய ராய், கோழியர் - உறையூரிலுள்ளார்க்கு, கோன் - தலைவராய், குடை - வெண் கொற்றக்குடையையுமுடையரான, குலசேகரன் - ஸ்ரீ குலசேகரப்பெருமாள், சொற்செய்த - அருளிச்செய்ததாய், நல் இயல் - அழகிய இயலையுடைத்தாய், இன் - இனியதாய், தமிழ் - த்ராவிடபாஷையாய், மாலை - மாலாரூபமான, பத்தும் - இப்பத்துப்பாட்டுக்களையும், வல்லார் - சொல்லவல்லவர்கள், நலம் திகழ் - நன்மைவிளங்காநின்றுள்ள, நாரணனடிக்கீழ் - ஸர்வேஶ்வரன் திருவடி களை, நண்ணுவார் - கிட்டப்பெறுவர்கள். (கக)

வ்யா.—நிகமத்தில். (தில்லைநகரித்யாதி) (க) "ஹாவொநா நாஶ்ருஹஷ்தி - பாவோநாந்யத்ரகச்சதி" என்று அங்குப்போகே னென்ற திருவடியை விடமாட்டாமே இங்கேவந்து நித்யவாஸம் பண்ணுகிறவனை. (எல்லையில்சீரித்யாதி) பஹுகுணனான சக்ர வர்த்திக்கு, (உ) "விதாரம்ரோவயாஜாஸ -பிதாரம்ரோசயாமாஸ" என்று பிள்ளையாய்ப்பிறந்தது தொடக்கமாகப் பரமபதம்புக்கது முடிவாகவுண்டான ஸ்ரீராமாயண கதையை.

(க) ரா - உத்தர - ,(உ) ரா - பா -

(கொல்லியலும்படைத்தானை) கொலையை முயலாநின்றுள்ள வேலையுடைய படையையுடையாராய். (கொற்றவொள்வாள்) வெற்றியையும் அழகையுமுடைய வாளையுடைய. (கோழியர்கோன்) கோழியர்க்குக்கோன். கோழி-உறையூர். சோழர்க்குராஜாவானவன் (குடைக்குலசேகரன் சொற்செய்த) வெண்கொற்றக் குடையையுடையரான ஸ்ரீ குலசேகரப்பெருமா ளருளிச்செய்த. (நல்லியலின்தமிழ்மாலை பத்தும்வல்லார்) அழகிய இயலையுடைய தமிழ்மாலை பத்தும்வல்லார். (நலந்திகழ்நாரணனடிக்கீழ் நண்ணுவாரே) பரமபதத்திலே விளங்காநின்றுள்ள ஸர்வேஶ்வரன் திருவடிகளைக் கிட்டப்பெறுவர்கள். ... ... (௧௧)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

பெருமாள் திருமொழி வ்யாக்யாநம்

ஸம்பூர்ணம்.

அரு ;—பத்தாம்பாட்டு. நிகமத்தில் - (படை) ஆயுதம்-(தானை) ஸேனை. (கொற்ற ஒள்வாள்) வெற்றியையு மழகையுமுடைய வாளையுடையரான பெருமாளென்றபடி. (௧௧)